
தேவாரத் திருத்தலங்கள்

சிவக்களஞ்சியம்



புலவர் பி.ரா.நடராசன்

2-2

தேவாரத் தலம் சிவக்களஞ்சியம்

(தேவாரத் தலங்கள், திருவாசகத் தலங்கள், 9ஆம் திருமுறைத் தலங்கள், 11ஆம் திருமுறைத் தலங்களின் விளக்கமும், செல்லும் வழியும்)

ஆசிரியர்
புலவர் பி.ரா. நடராசன்

சகுந்தலை நிலையம்
18, (பழைய எண். 171), பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
போன் : 25250092, 2521 5363.

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	தேவாரத் தலம் சிவக்களஞ்சியம்
உரையாசிரியர்	:	புலவர் பி.ரா. நடராசன்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு - டிசம்பர் - 2003 மூன்றாம் பதிப்பு - செப்டம்பர், 2011
பதிப்புரிமை	:	© சகுந்தலை நிலையம்
தாள்	:	சேஷஷாயி 16 கி.கி. வெள்ளைத்தாள்
நூல் அளவு	:	14 x 22 செ.மீ. டெம்மி
எழுத்து	:	11 புள்ளிகள்
பக்கங்கள்	:	XVI + 320 = 336
பைண்டிங்	:	கலிக்கோ கட்டு
விலை	:	ரூ. 130.00
ஒளி அச்சு	:	விக்னேஷ்வர் கிராபிக்ஸ் சென்னை -600 005.
அச்சிட்டோர்	:	பரமேஸ்வரி கிராபிக்ஸ் சென்னை - 600 005.
நூல் வெளியீடு	:	சகுந்தலை நிலையம் சென்னை - 600 001.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசந்நிதானம்
சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை- 609 803.
(நாகை மாவட்டம்)
தொலைபேசி எண்: 04364-2232021
25.12.1003

''நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க''

உ
திருச்சிற்றம்பலம்

அருள் வாழ்த்து

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

புலவர் திரு. பி.ரா. நடராசன் அவர்களின் 'தேவாரத்தலங்கள் சிவக்களஞ்சியம்' என்ற நூல் வெளியாகும் செய்தி அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

புலவர் பி.ரா. நடராசன் அவர்களின் திருமுறைப்பணி தொடர்ந்து சிறக்கவும் சைவ ஒளி பெருக்கவும் வேண்டி நமது வ்ழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங் கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சிவசிவ

ஆசிர்வாதம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.
திருச்சிற்றம்பலம்

- திருஞானசம்பந்தர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தபரம்பரை

ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதீனம்

இருபத்து ஏழாவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீ லஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

சூரியனார்கோயில் - திருமங்கலக்குடி - 612 102.

உ 28.12.03

திருச்சிற்றம்பலம்.

ஆசிர்வாதம்

4, 5, 6, 7-ஆம் திருமுறைகளுக்கு வரலாற்று முறையில் முதன்முதலில் உரைகண்டும், 9-ஆம் திருமுறையான திருவிசைப்பா - திருப்பல்லாண்டிற்கும் நல்லுரை கண்டவருமான, நம் திருமடத் தொண்டரும், திருச்சிராப்பள்ளி வாழ் பெரும்புலவரும், சிவபூசைச் செல்வருமான திருவாளர் புலவர் சிவ.பி.ரா. நடராசன் அவர்களின் 'தேவாரத்தலம் - சிவக்களஞ்சியம்'- என்ற நூலினை பார்வையிட்டோம். தாமே சென்று வந்த வழிமுறையினைப் பிறர்க்கும் எளிதாக்கி அனைவரும் திருமுறைத் தலங்களைக் கண்டு வணங்கி மகிழ அமைத்துள்ளார்கள். பாராட்டு. சிவநேயச் செல்வர்கள் இந்த நூலினைப் பெற்று தலயாத்திரை செய்தல் மிக எளிது. மூவர் முதலிகள் பாடிய பாடல்களின் திருமுறைகளை நிரல் இட்டுப் பாடல்களின் பட்டியலைத் தனியாகக் கொடுத்தது நல்ல, புதிய முதல் முயற்சி. நூலின் இரண்டாம்பகுதி சிவக் களஞ்சியம் என்ற பெயருக்கேற்ப விளங்குகின்றது. அரிதின் முயன்று பல செய்திகளைப் புலவர் அவர்கள் தந்துள்ளார்கள். மேலும், இதுபோன்ற பல நூல்களைத் தந்துதவவும் வாழ்வாங்கு வாழவும் ஆசீர்வதிக்கின்றோம்.

சிவசிவ.

உ
சிவசிவ

கயிலை மாமுனிவர்
திருவண்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்.

தொலைபேசி எண்: 56655
திருப்பனந்தாள் - 612 504
(தஞ்சை மாவட்டம்)
தேதி: 29.12.03

வாழ்த்துரை

தமிழாசிரியராய்ப் பணிபுரிந்தவரும், தமிழ்நூல் தோய்வு உடையாரும், சமயச் சான்றோர்தம் திருவாய்மொழிகளைப் பல்கால் பயின்றவரும், சமயகுரவர் வழிபட்ட தலங்களை நேரில் சென்று வழிபட்டு அவற்றின் மேன்மை, புதுமை, அருமை, நுண்மை, மகிமைகளைக் கண்டு, போற்றியவருமான திருச்சி புலவர் பி.ரா. நடராசன் அவர்கள், முன்பு அப்பர் தேவாரம்-வரலாற்றுமுறை உரை நூல் வெளியிட்டு, தற்போது;, சகுந்தலை நிலையத்தின் வழியாக, 'தேவாரத் தலங்கள்- சிவக்களஞ்சியம்' (2 பிரிவுகள்) நூலை வெளியிடுவது சிறப்பானது. மகிழ்ச்சி.

நூலின் மெய்ப்பு நிலையில், அதனைப் பார்வை யிட்டோம்.

சோழநாட்டு.... என்பது முதலான பிரிவுகளுக்குள் வகைப்படுத்திப் பிறர் குறிப்பது போலச் சொன்னாலும், ஒரு குறிப்பிட்ட நகரத்தைச் (தலத்தை) சுட்டி அங்கிருந்து அருகிலுள்ள தலங்களைத் தொடக்கத்தில் பட்டியலிட்டுப் பின் விளக்கம் அளிப்பது புதுமையானது பயன்மிக்கது.

தொடக்கத்தில், இறைவன், இறைவி, தீர்த்தம்- பாடியவர்-என்ற பொதுவான குறிப்புகளுடன் தொடங்கினாலும் தொடர்வன பலஅரிய, நுட்பமான, தேவையான செய்திகளாகும். அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடல் தக்கதாம்.

தலங்களின் இருப்பிடம், பேருந்துவழி, மேலும் வழியின் அருமைப்பாடு, பிற பயண வாய்ப்புகள், தலத்தில் அவதரித்த, வழிபட்ட, பணிசெய்த, முத்திப்பேறுற்ற நாயன்மார்கள் பற்றிய குறிப்புகள், தலத்தின் சிறப்பம்சங்கள்- அதாவது, சந்திரனின், சூரியனின் ஒளிக்கதிர்கள் பெருமான் திருமேனிமேல் தீண்டும் நாட்கள், கதிரோன் வழிபட்ட தலங்கள், குடும்பத்தோடு சனி பகவான் காட்சி, துவார பாலகர் இல்லாமை, இலிங்கம் 6 நாழிகைக்கு ஒருமுறை நிறம் மாறும் அற்புதம், நவக் கிரகங்களுக்குப் பதிலாகத் தீப வழிபாடு (பக் 14), அருகிய நிலையிலுள்ள வடக்குப் பார்த்த சந்நிதி (16)- முதலானவை பலநாள் முயன்று தொகுத்து இயம்பப் பெற்றுள்ளன.

தலம் பற்றிய நூல்கள், நாள் வழிபாட்டில் சிறப்பான வழிபாடு, தலத் திருவிழா பற்றிய செய்திகள், (20, 23) சிற்ப நுட்பங்கள், பூஜை செய்வோர் பற்றிய செய்திகள், (21, 23) தலம், பெருமான் கோயில் பெயர் விளக்கங்கள், பெருமான் பெருமாட்டியின் திருக்கோலங்களில் காணப்பெறும் அற்புத அமைப்புகள், (45, 51, 69, 77) தல வழிபாட்டுப் பயன் (திருமணம், புத்திசுவாதீனம் பெறல், கடன் நிவாரணம், தந்தை மகன் பிணக்குத் தீரல்) முதலிய புதுமையான, பலரும் அறிந்திராத குறிப்புகள் கொண்டு, களஞ்சியமாகவே திகழும் நூலின் வெளியீட்டுவிழா சிறப்புற நிகழவும், சைவ சமய நூல் வெளியீட்டுப் பணியில் தோய்ந்து தொண்டாற்றும் அன்பர்தம் பணிகள் மேலும் பல்கிப்பெருகிப் புகழுறவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

'வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்'

சுபம்.

சிவசிவ

சிவம்

அடியேன் உரை

திருமுறைத் தலங்கள் அனைத்தும் சென்று, கண்டு, வணங்கி, மகிழ வேண்டும் என்ற எண்ணத்தின் மீதூரலால் 274 இல் ஐந்து போக மீதமுள்ள 269 திருத்தலங்களையும் கண்டு மகிழ்ந்தேன். கண்டு மகிழச் செய்த குருவருளுக்கும் திரு வருளுக்கும் என்றென்றும் நன்றியுடையேன்.

அடியவனின் ஞான ஆசிரியரான (தமிழாசிரியனாக மாறிய பின்னரும் மெய்கண்ட சாத்திரம், குறள், பெரியபுராணம், அப்பெருந்தகையாளரிடம் மாணாக் கனாக இருந்து பயின்றவன்) பெருஞ்சொல்விளக்கனார் சிவ. அ.மு. சரவண முதலியாரவர்கள் (பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களின் தந்தையார்) 'சைவராய்ப் பிறந்தார் அனைவரும் திருமுறைத் தலங்களைச் சென்று கண்டு வணங்க வேண்டும். எங்ஙேனும் ஒரு சிறு மண் துளி மூவர் பெருமக்களின் காலடிபட்டுக் கிடக்கும். அம் மண்ணின்று வரும் காற்றும், ஒளியும் நம் மீதுபடும். நாம் உய்வோம்' என்பார். எளியேனின் இளமைக்காலத்தில் அப்பெருமகனார் பகன்றவை யவை.

தமிழாசிரியப் பணி ஓய்விற்குப் பின் (1994 மே) மூவர் தமிழுக்கும் உரைகாணும் வேட்கையில், முதன் முதலில் சுந்தரர் பெருமான் தேவாரத்தை எடுத்துக் கொண்டேன். அதற்குக் காரணம் சுந்தரர் தேவார மன்றத் தலைவரும் 200 முறை சுந்தரர் தேவார முற்றோதல் நடத்தியவரும், சிவபூசைச் செல்வரும், எங்களின் இளைய தமையன் மாருமாகிய சிவ.பி.ரா. கந்தன் B.A., அவர்களின் அன்பின் ஆணையே. சுந்தரர் பெருமானின் தேவாரம் முதன் முறையாக வரலாற்று முறையில் மூலமும் உரையுடனும் வெளிவந்தது. பின்னர் 9-ஆம் திருமுறை 4, 5, 6 திருநாவுக்கரசரின் தேவாரத் திருமுறைகள் வரலாற்று முறையில் மூலமும் உரையுமாக வந்தன. இந்நிலையில் மூவர் முதலிகள் குறித்த தலங்களை நேரிற்காண வேட்கை

மிகுந்தது. ஏறக்குறைய ஈராண்டுகளில் 269 தலங்களைக் கண்டு தரிசிக்கும் பேறு பெற்றேன். மகிழ்ந்தேன். அம்மகிழ்வின் முகிழ்வே இந்நூல். இத்தெய்வச் செலவு பற்றி ஒன்று கூறுவல். 'அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க' என்பது போல ஐம்பது அகவைக்குள்ளாக தெய்வச் செலவு முற்றுப்பெறல் நலம். அறுபதுக்குள்ளாவது முழுமையாக முடித்தல் நலம்.

எளியவனின் இச்சிவச் செலவில் பெரும் பகுதி என் வாழ்க்கைத் துணைவியார் S. சுந்தராம்பாள் M.A,B.Ed அவர்கள் கலந்து கொண்டார்கள். சில இடங்களில் சில அன்பர்கள் பங்கேற்றனர். எளியவனின் செலவில் பங்கு கொண்டோரையும், வரவேற்று நல்லுணவும், சிற்றுண் டியும் கொடுத்து விருந்தோம்பிய அடியார் பெருமக்களை மறவாது நெஞ்சார நன்றி கூறுகின்றனன்.

அடியவனின் பணியைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானங்களின் திருவடிகளைப் பன்முறை வணங்குதலன்றி அப்பெரு மக்கட்கு இச்சிறியேன் செய்யும் செய்ந்நன்றிதான் என்னே! என் கணக்கிலடங்கா பலகோடி வணக்கங்களை அப்பெருமக்கட்கு உரிமைப் படுத்துகின்றேன். என்றும் அவர்கள் வழி நிற்பேன்!

தல எண்களை எழுதுங்கால் மூப்பின் வழி மயக்குறு நிலை ஏற்படல் இயல்பே! அந்நிலையில் எண்ணிக்கை களைச் சரிபார்த்து அமைத்தனன் என் இனிய அன்பு மகன். ந. ஸ்ரீராம் B.A. எளியேன் மகிழும் வண்ணம் 269 தலங்களில் உறையும் பிறவாயாக்கை பெரியோனான சிவ்னார் அவனுக்கு நன்னிலையை அளிப்பார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கட்டடத்தின் அஸ்திவாரம் மண்ணிற்குள் புதைந்து பெருங்கட்டடத்தைத் தாங்குகின்றது போல் எளியேன் பணியை ஊக்குவித்து ஒளிந்து- மறந்து - வாழ்கின்ற என் இனிய இளவல் சிவ. இரா. காளத்தீச்சுவரனுக்கு என் அன்பும் வாழ்த்தும்.

வாழ்வில் செம்பாதி கொண்டது போல் அடியேன் நூல்- பணியிலும் பாதி அளவு பணியேற்கும் என்

துணைவியார்க்கு அன்பும் வாழ்த்தும். வழக்கம் போல் புருப்களைச் சரிபார்த்து உதவும் என் இனிய அன்பு மகள் கி. கல்யாணி M.Sc., B.Ed அவர்கட்கு என் அன்பும் வாழ்த்தும்.

இந்நூலினை வெளியிட்டருள வேண்டுமென வினவிய பொழுது மறுமொழி கூறாது ஏற்று வெளியிட்டருளிய சென்னை சகுந்தலை நிலையத்தார்க்கும் என் அன்பான வாழ்த்தும் நன்றியும்.

ஒன்றுக்கும் பற்றாத ஏழையாளனான எளியேனையும் இதுபோன்ற இறைப்பணிகளில் ஈடுபடுத்தி ஆட்கொள்ளும் எங்கள் வயலூரான் திருவடிகளை மன மொழி மெய்களால் வாழ்த்துகின்றேன்.

யாண்டும் சிவம் மல்குக.

பி.ரா. நடராசன்

41, பிரீமியர் பிளாசா
இலட்சுமி வாசம்
கரூர் பைபாஸ் ரோடு
திருச்சி - 620002
தொ/ (0431) 2705776.
31.12.2003

பதிப்புரை

"வையந்தோறும் தெய்வம் தொழு"

– கொன்றை வேந்தன்

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித்திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே"

– திருமந்திரம் – சரியை 3 (1455)

இன்பமுடன் வாழவே நாம் அனைவரும் விரும்புகிறோம். ஆனால் வாழ்வு இன்பமும், துன்பமும் கலந்ததாகவே இருக்கின்றது. அதற்குக் காரணம் நம்வாழ்வு. நாம் முன் செய்த வினைப்படி அமைந்திருப்பதுதான். அவ்வாறு அமைந்த வாழ்வில் இன்பத்தைப் பெருக்கிக் கொள்ளவும், துன்பத்தைச் சுருக்கிக் கொள்ளவும் தக்கவழி கடவுள் வழிபாடே ஆகும்.

தேவாரத் தலங்கள் - சிவக்களஞ்சியம் என்ற இந்நூலை படிப்பவர்கள் எளிதில் அறிந்து கொள்ளும்படி, வகைப் படுத்தி திருத்தமாக செய்யப்பட்டுள்ளது.


சிவத் தலங்களின் அருமை பெருமைகளையும் அவற்றின் வரலாறுகளையும் சுருங்க, விளங்க உரைப்பதோடு தல யாத்திரைபுரியும் அடியார்களுக்கு சிறந்த ஒரு வழிகாட்டியாகவும் அமைந்து தந்துள்ளார் ஆசிரியர், புலவர் பிரா. நடராசன் அவர்கள்.

இந்நூல் ஆன்மீகத்தவருக்கு மட்டுமின்றி ஆய்வாளர்களுக்கும் உகந்த படைப்பாயுள்ளது.

தமிழ் அன்பர்கள், இதனை விருப்பமுடன் வரவேற்று, தமிழ் நலத்தினும், சிவநேயத்தினும், அன்புப் பெரு நெறியினும் திளைப்பார்கள் என நம்புகின்றோம்.

– சகுந்தலை நிலையத்தார்









பொருளடக்கம்

சோழநாடு காவிரி
வட, தென்கரைத் தலங்கள் **பக்கம்**

தேவாரத் திருத்தலங்களின் விளக்கமும் செல்லும் வழியும்

(திருவாசகத்தலங்கள், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, 11-ஆம் திருமுறைத் தலங்களும் அடங்கியுள்ளன)

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் போற்றி வணங்கிய முத்தித் தலங்கள் 274 என்பர். மணிவாசகப் பெருமான் தம் திருவாசகத்தில் குறிப்பிடும் தலங்கள் 48, 9ஆம் திருமுறையான திருவிசைப்பா, திருப்பல்லாண்டில் குறிக்கப் பெறும் தலங்கள் 14. (இப்பதி நான்கில் தேவாரம் பெற்றவை 6. திருவிசைப்பாவின் தனித்தலங்கள் 8)

மேற்குறித்த இத்தலங்களை எளிதில் அனைவரும் நேரிற்கண்டு, மகிழ்ந்து, வணங்கி அம்மூவர் முதலிகளின் திருப்பதிகங்களை அவன் திருமுன்னர் ஓதி உணர்ந்து, பேரின்பப் பெருவாழ்வு பெற்று உய்ய வேண்டும் என்ற எண்ணத்தினால் அடியவன் இந்நூலை எழுத முற்படுகின்றேன். திருவருள் கூட்டுக.

முதற்கண் தேவாரத் தலங்களைக் காண்போம்.

சோழநாட்டுத் தலங்கள்

காவிரியின் வடகரைத்தலங்கள்	63
காவிரியின் தென்கரைத்தலங்கள்	127
பாண்டிநாட்டுத்தலங்கள்	14
தொண்டை நாட்டுத் தலங்கள்	32
நடுநாட்டுத் தலங்கள்	22
கொங்குநாட்டுத் தலங்கள்	7
வடநாட்டுத் தலங்கள்	5
துளுவ நாட்டுத்தலம்	1
ஈழநாட்டுத் தலங்கள்	2
மலைநாட்டுத்தலம்	1
	274

இத்தலங்களைத் தரிசிக்க ஒரு நகரை மையமாக வைத்துப் பிற எந்தெந்தத் தலங்களைச் சென்று, கண்டு, மகிழ்ந்து வணங்கலாம் என்ற முறையில் இத்தொடர் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைகிறது. சுருங்கச் சொன்னால் பிறர் உதவியின்றி இந்நூலினை வழித்துணையாகக் கொண்டு மூவர் வணங்கிய முத்தித்தலங்களைக் கண்டு இன்புறலாம் என்றால் மிகையன்று. முதலில் சோழநாட்டை எடுத்துக் கொள்வோம்.

1. சோழநாட்டுத் தலங்கள்
காவிரி வடகரை 63
தென்கரை 127 190

1. திருச்சி 17
1. திருச்சி
2. திருமூக்கீச்சரம் (உறையூர்)
3. திருவானைக்கா
4. திருக்கற்குடி (உய்யக் கொண்டான் திருமலை)
5. திருவெறும்பூர்
6. திருநெடுங்களம்
7. திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி)
8. திருப்பைஞ்ஞீலி
9. திருப்பாற்றுறை
10. திருப்பராய்த்துறை
11. திருக்கடம்பந்துறை (குளித்தலை)
12. திருவாட் போக்கி (ஐயர்மலை)
13. திருஈங்கோய்மலை
14. திருமாந்துறை
15. திருஅன்பிலாந்துறை
16. திருமழபாடி
17. திருப்பழுவூர் (கீழப்பழுவூர்)

2. திருவையாறு 12.
1. திருவையாறு
2. திருப்பழனம்
3. திருவேதிகுடி
4. திருச்சோற்றுத்துறை
5. திருக்கண்டியூர்
6. திருப்பூந்துருத்தி
7. திருவாலம் பொழில்
8. மேலைத் திருக்காட்டுப்பள்ளி
9. திருநெய்த்தானம் (தில்லை ஸ்தானம்)
10. திருப்பெரும்புலியூர்
11. திருவட குரங்காடுதுறை
12. திருக்கானூர்

3. தஞ்சை 8
1. திருப்புள்ளமங்கை (பசுபதி கோயில்)
2. திருச்சக்கரப்பள்ளி (ஐயன் பேட்டை)
3. திருப்பாலைத்துறை
4. திட்டை
5. திருக்கருகாவூர்
6. பரிதிநியமம்
7. அவளிவநல்லூர்
8. அரதைப்பெரும்பாழி (அரித்துவார மங்கலம்)

4. கும்பகோணம் 25
1. திருக்குடமூக்கு (கும்பேசுவரர் கோயில்)
2. குடந்தைக் கீழ்க்கோட்டம் (நாகேசுவரர் கோயில்)
3. குடந்தைக் காரோணம் (காசி விசுவநாதர் கோயில்)
4. திருவியலூர் (திருவிசைநல்லூர்)
5. திருந்து தேவன்குடி
6. கொட்டையூர்
7. திருநாகேச்சரம்
8. திருவலஞ்சுழி
9. திருப்பட்டீச்சரம்

10. ஆலூர்
11. சத்திமுற்றம்
12. பழையாறை
13. திருக்கலையநல்லூர் (சாக்கோட்டை)
14. திருக்கருக்குடி (மருதாந்தநல்லூர்)
15. அரிசிற்கரைப்புத்தூர் (அளகாபுத்தூர்)
16. நறையூர் சித்தீச்சரம்
17. பேணுபெருந்துறை
18. சிவபுரம்
19. திருநல்லம் (கோனேரி ராஜபுரம்)
20. திருச்சேறை
21. இன்னம்பர்
22. திருப்புறம்பயம்
23. விசயமங்கை
24. திருவைகாவூர்
25. திருநல்லூர்

5. ஆடுதுறை- 6 (தென்குரங்காடுதுறை)

1. ஆடுதுறை
2. திருமங்கலக்குடி
3. கஞ்சனூர்
4. திருநீலக்குடி
5. வைகல் மாடக்கோயில்
6. திருக்கோழம்பம்

6. குத்தாலம்- 5

1. திருத்துருத்தி (குத்தாலம்)
2. திருவேள்விக்குடி
3. திருமணஞ்சேரி
4. எதிர்கொள்பாடி
5. திருவழுந்தூர் (தேரெழுந்தூர்)

7. திருவாவடுதுறை - 4

1. திருவாவடுதுறை
2. திருவிடைமருதூர்
3. திருக்கோடிக்கா
4. திருப்பந்தணைநல்லூர்

8. சீகாழி-12

1. சீகாழி
2. திருக்கோலக்கா
3. திருநல்லூர்ப்பெருமணம் (ஆச்சாள்புரம்)
4. மயேந்திரப்பள்ளி
5. திருக்குருகாவூர் (கடாவூர்)
6. கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை)
7. தென் திருமுல்லைவாயில்
8. திருச்சாய்க்காடு
9. பல்லவனீச்சரம்
10. திருவெண்காடு
11. கீழைத்திருக்காட்டுப் பள்ளி
12. திருவலம்புரம் (மேலப் பெரும்பள்ளம்)

9. வைத்தீஸ்வரன் கோயில் - 5

1. புள்ளிருக்கு வேளூர்
2. கண்ணனார் கோயில் (குறுமாணக்குடி)
3. திருப்புன்கூர்
4. கருப்பறியலூர் (தலை ஞாயிறு, மேலைக்காழி)
5. மண்ணிப் படிக்கரை (இலுப்பைப்பட்டு)

10. சிதம்பரம் - 4

1. சிதம்பரம்
2. திருவேட்களம்
3. திருநெல்வாயில்
4. திருக்கழிப்பாலை

11. மயிலாடுதுறை - 12

1. மயிலாடுதுறை
2. திருநீடூர்
3. குறுக்கை (கொருக்கை)
4. செம்பொனார் கோயில்
5. விளநகர்
6. திருப்பறியலூர் (பரசலூர்)
7. திருநனிபள்ளி (புஞ்சை)
8. கடைமுடி (கீழையூர்)
9. திருநின்றியூர்
10. குரக்குக்கா
11. திருவாழ்கொளிபுத்தூர்
12. அன்னியூர்

12. காட்டு மன்னார்குடி - 4

1. திருஓமாம் புலியூர்
2. திருக்கடம்பூர்
3. திருக்கானாட்டுமுள்ளூர்
4. திருநாரையூர்

13. திருநாகைக்காரோணம் - 4

1. திருநாகப்பட்டினம்
2. சிக்கல்
3. கீழ்வேளூர்
4. திருத்தேவூர்

14. காரைக்கால் - 5

1. திருநள்ளாறு
2. திருவேட்டகுடி
3. திருத்தெளிச்சேரி (கோயிற்பத்து)
4. திருத்தருமபுரம்
5. திருக்கோட்டாறு (திருக்கொட்டாரம்)

15. பூந்தோட்டம் - 7

1. அம்பர் மாகாளம் (கோயில் திருமாகாளம்)
2. அம்பர் பெருந்திருக்கோயில்
3. திருமீயச்சூர்
4. திருமீயச்சூர் இளங்கோயில்
5. திருப்பாம்பரம்
6. திலதைப்பதி (செதலபதி)
7. திருச்சிறுகுடி

16. திருவீழிமிழலை- 3

1. திருவீழிமிழலை
2. கருவிலிகொட்டிட்டை
3. வன்னியூர் (அன்னூர்)

17. திருக்கடவூர் - 4

1. திருக்கடவூர்
2. திருக்கடவூர் மயானம்
3. ஆக்கூர்
4. திருத்தலைச்சங்காடு

18. நன்னிலம் - 10

1. நன்னிலம்
2. திருவாஞ்சியம்
3. திருக்கொண்டீச்சரம்
4. திருப்பனையூர்
5. திருப்புகலூர்
6. திருவர்த்தமானீச்சரம்
7. திருஇராமனதீச்சரம்

8. திருச்செங்காட்டங்குடி
9. திருமருகல்
10. திருசாத்தமங்கை

19. குடவாசல் - 4

1. குடவாயில் (குடவாசல்)
2. திருநல்லூர் மயானம்
3. கொள்ளம்பூதூர்
4. திருக்கடுவாய்க்கரைப் புத்தூர்

20. திருவாரூர் - 22

1. திருவாரூர்
2. திருவாரூர் அரநெறி
3. திருவாரூர் பரவையுள் மண்டலி
4. திருக்காறாயில் (காறவாசல்)
5. திருநெல்லிக்கா
6. திருக்கொள்ளிக்காடு
7. திருத்தெங்கூர்
8. திருக்கைச்சினம் (கச்சனம்)
9. திருவலிவலம்
10. திருக்கோளிலி (திருக்குவளை)
11. திருவாய்மூர்
12. திருவிற்குடி
13. திருப்பயற்றூர்
14. திருப்பள்ளியின் முக்கூடல்
15. திருவிளமர்
16. திருநாட்டியத்தான்குடி
17. திருக்கன்றாப்பூர்
18. திருக்கரவீரம்
19. திருப்பெருவேளூர்
20. திருத்தலையாலங்காடு
21. திருப்பேரெயில்
22. திருச்சிற்றேமம்

21. திருத்துறைப்பூண்டி - 8

1. திருக்களர்
2. திருக்கோட்டூர்
3. திருத்தண்டலச்சேரி
4. திருக்கடிக்குளம் (கற்பகநாதர் குளம்)
5. இடும்பாவனம்
6. திருமறைக்காடு
7. அகத்தியான்பள்ளி
8. கோடிக்குழகர்

22. மன்னார்குடி - 2

1. திருவெண்டுறை
2. பாதாளேச்சரம்

23. முத்துப்பேட்டை - 1

1. திருஉசாத்தானம் (கோயிலூர்)

24. நீடாமங்கலம் - 3

1. திருப்பூவனூர்
2. இரும்பூளை
3. திருவெண்ணியூர்

25. திருப்பனந்தாள் - 3

1. திருப்பனந்தாள்
2. திருஆப்பாடி
3. திருசேய்ஞலூர்

190

முதலில் சோழநாட்டிலிருந்து பயணத்தைத் தொடங்குவோம்.

மையநகரம் திருச்சிராப்பள்ளி

இந்நகரை மையமாக வைத்து நாம் காணும் தலங்கள்17

1. திருச்சி (தென்கரை),
2. திருமூக்கீச்சரம் (உறையூர்),
3. திருவானைக்கா,
4. திருக்கற்குடி (உய்யக் கொண்டான் திருமலை),
5. திருவெறும்பூர்,
7. திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி),
8. திருப்பைஞ்ஞீலி,
9. திருப்பாற்றுறை,
10. திருப்பராய்த்துறை,
11. திருக்கடம்பந்துறை (குளித்தலை),
12. திருவாட்போக்கி (ஐயர் மலை),
13. திருஈங்கோய்மலை,
14. திருமாந்துறை,
15. திருஅன்பிலாந்துறை (அன்பில்),
16. திருமழபாடி,
17. திருப்பழுவூர் (கீழப்பழுவூர்)

(திருச்சி மாநகரை மையமாகக் கொண்டு மேற்குறித்த தேவாரத் தலங்களுடன் ஸ்ரீரங்கம், வயலூர், சமயபுரம், குணசீலம், விராலிமலை, உறையூர் வெக்காளி அம்மன், நாச்சியார் கோவில் போன்ற புகழ்பெற்ற தலங்களிலுள்ள திருக்கோயில்களுக்கும் சென்று மகிழலாம்)

1. திருச்சி - 620002

குறிப்பு: (ஒவ்வொரு தலத்திற்கும் பின்கோடு கொடுக்கப்பட்டுள்ளது. யாத்திரை செல்ல விரும்புவோர், சிவாச்சாரியாருக்கோ செயல் அலுவலருக்கோ முன்கூட்டித் திருக்கோயிலுக்குக் கடிதம் எழுத உதவியாய் இருக்கும்.)

இறைவன் : தாயுமானவர்
இறைவி : மட்டுவார் குழலம்மை
தீர்த்தம் : காவிரி நன்றுடையான் தீர்த்தம்.
தலவிருட்சம்: வில்வம்; (மூங்கில் என்றும் கூறுவர்)

பாடியோர் : திருஞானசம்பந்தர் 11
அப்பர் 4 பாடல்கள்
மணிவாசகர் 2 இடங்கள்

தமிழகத்தின் மைய நகரம் திருச்சி. இம்மாநகரின் இருதயம் போன்று விளங்குமிடத்தில் மலைக்கோட்டை உள்ளது. 'மெயின் கார்டுகேட்' எனப்படும் இடம் அருகே தெப்பக்குளம் உளது. அதன் வழியே சின்னக் கடை வீதி வரும். இச்சாலை திரும்பும் இடத்தில் ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோயிலுக்குச் செல்லும் வழியும், மலைக்கோட்டைக்கு மேல் ஏறிச் செல்லும் வழித்தடமும் காணலாம். மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் சந்நிதி செல்ல 417 படிகள் ஏற வேண்டும். தாயுமானவர் சந்நிதி செல்ல 273 படிகள். தாயுமானவர் திருக்கோயிலில் நுழையும் பொழுதே 63 நாயன்மாரையும், விநாயகரையும், முருகனையும் வணங்கி உட்சென்றால் ஸ்ரீ மட்டுவார் குழலம்மை சந்நிதி. அம்மை மிகக் கம்பீரமாக மேற்குநோக்கி அருள்பாலிக்கிறார். அம்மையை வணங்கி ஐயன் சந்நிதிக்குச் செல்கிறோம். இறைவனும் நீண்டகன்ற நல்மேனியர்; மேற்கு நோக்கியுள்ளார். ஒரு செட்டிப் பெண்ணிற்குப் பிரசவம் பார்க்கத் தாயாயும் மாறியதால் தாயுமானவர் என்ற திருநாமம் கொண்டார். இவ்வரலாற்றைச் சுவரில் பட ரூபமாய்ச் சித்திரம் தீட்டியுள்ளனர். இத்திருவிழா சித்திரையில் நடைபெறுகிறது. வெவ்வேறு திசைகளைப் பார்த்து நிற்கும் நவக் கிரகங்கள் இத்திருக்கோயிலில் சூரியனை நோக்கியே பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளன. இக்காட்சி வேறு கோயில்களில் காண முடியாத ஒன்று. ஸ்ரீ மாணிக்க விநாயகர் சந்நிதி தாண்டி உச்சிப் பிள்ளையார் நோக்கி மலைப்படிகளில் ஏறிவரும் பொழுது மலைக்கோட்டை உள்வீதி சாலை வரும். எதிரில் யானை கட்டியுள்ள மண்டபம் இருக்கும். சாலையின் மேற்கு வளைவில் மலையைக் குடைந்து பல்லவர், குகைக் கோயில் அமைத்துள்ளனர். அவசியம் காண வேண்டும். இந்திரன், நான்முகன், இராமபிரான், நாககன்னியர், அனுமான் போன்றோர் வணங்கிய ஊர்.

1. நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே.

(1-98-1)

2. மட்டுவார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந்தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க்(கு) இன்னரு ளேசெயும்
சிட்டர்போலும் சிராப்பள்ளிச் செல்வரே.

(5-85-1)

(இத்திருப்பதிகத்தில் 4 பாடல்களே உள்ளன)

மட்டுவார் குழல் மங்கையாளை ஓர் பாகம்வைத்த அழகன்
(திரு. சென்னிப்பத்து 2)

3. சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி (திருவாசகம்)

2. திருமுக்கீச்சரம் (உறையூர்) - 620003

இறைவர்	:	பஞ்சவர்ணநாதர்
இறைவி	:	காந்திமதியம்மை
தீர்த்தம்	:	பஞ்சவர்ணதீர்த்தம்
தலவிருட்சம்	:	வில்வம்
பாடியோர்	:	திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

திருச்சி மாநகரின் ஒரு பகுதி. 'ஊரெனப்படுவது உறையூர்' என்பது பண்டைத் தொடர். 'உறையூர்' எனப் பெயரிட்டே நகரப் பேருந்துகள் செல்கின்றன. பஞ்சவர்ண சுவாமி கோயில் நிறுத்தத்தில் இறங்கத் திருக்கோயில் அண்மையில் உள்ளது. தன்னை எதிர்த்து வந்த யானை ஒன்றினைக் கோழி ஒன்று தன் மூக்கால் கொத்திவென்றமையால் முக்கீச்சரம் எனப்பெயர் பெற்றது என்பர். கோழியூர் என்றும் கூறுவர். நான்முகன் இங்கு வந்து பூசை செய்து வணங்கும்போது வேளைக்கு ஒரு வ்ண்ணமாக பெருமான் மாறியதால் 'பஞ்ச வண்ணநாதர்' என வழங்கப்பட்டார். உதங்க முனிவருக்கு ஐந்து காலங்களில் ஐந்து வண்ணமாகப் பெருமான் காட்சியளித்ததால் பஞ்சவண்ணநாதர் எனப்பெயர் பெற்றார் எனவுங் கூறுவர். சூரவாதித்த சோழன் நாகராசன் கன்னி காந்திமதியை மணந்து நாகலோகத்தினின்றும் கொண்டுவந்த ஐந்து இலிங்கங்களை வேறு முறையில் பிரதிஷ்டை செய்ய எண்ணியபோது அவையாவும் ஒன்றாகி மூலலிங்கமாகி பஞ்சவண்ணநாதர் ஆயினர் என்றும் கூறுவர். கோச்செங்கட் சோழனும், புகழ்ச்சோழனாரும் முத்தி பெற்றதலம். மூவேந்தரும் சேர்ந்து வழிபட்ட தலம் என்பதனைத் திருஞான சம்பந்தப் பெருமான்பாடிய பதிகத்தால் (4, 9 பாடல்கள்) அறியலாம். முடியுடைய மூவேந்தரும் திருப்பரங்குன்றம் சென்று வணங்கினர் என்பதனைச் சுந்தரர் தம் திருக்கடைப் காப்பில் 'முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே' எனக் கூறியுள்ளதால் அறியலாம். எனவே முடியுடைய மூவேந்தரும் வணங்கிய தலங்கள் திருமூக்கீச்சரமும், திருப்பரங்குன்றமும் எனத் தெளியலாம்.

நீர்உளா ரும்மலர் மேல்உறை வான்நெடு மாலும்ஆய்ச்
சீர்உளா ரும்கழல் தேடமெய்த் தீத்திரள் ஆயினான்
சீரினால் அங்குஒளிர். தென்னவன், செம்பியன், வில்லவன்
சேரும்மூக் கீச்சரத்து அடிகள்செய் கின்றதுஓர் செம்மையே
(2-120-9. 9)

3. திருவானைக்கா - 620005

இறைவன் : ஜம்புகேசுவரர்
இறைவி : அகிலாண்டநாயகி
தீர்த்தம் : காவிரியாறு
தலவிருட்சம் : வெள்ளை நாவல் மரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 21 பாடல்கள்
திருநாவுக்கரசர் 20 பாடல்கள்
சுந்தரர் 10 பாடல்கள். மாணிக்கவாசகர் ஓரடி.

திருச்சியிலிருந்து ஸ்ரீரங்கம், சமயபுரம், லால்குடி, மண்ணச்சநல்லூர், குணசீலம் போன்ற ஊர்களுக்குச் செல்லும் நகரப்பேருந்துகளிலும் ஏறிச்செல்லலாம். ஸ்ரீரங்கம் பேருந்துகள் அதிகம். திருச்சிக்கு வடக்கே 2 கி.மீ. வெள்ளை யானை வழிபட்டதால் திருஆனைக்கா எனப்பெயர் பெற்றது. சிலந்தியும் யானையும் வழிபட்ட தலம். இறைவன் வெள்ளை நாவல் மரத்தடியில் எழுந்தருளி இருப்பதால் 'ஜம்புகேஸ்வரம்' (ஜம்பு-வெள்ளைநாவல்) எனப் பெயர் பெறலாயிற்று. பஞ்சபூதத் தலங்களில் இஃது அப்புத்தலம் (அப்பு-தண்ணீர்). இறைவன் இருக்கும் கருவறையில் இன்றும் தண்ணீர் ஊற்றுப் பெருக்கெடுத்து வருவதைக் காணலாம். இச்சிறப்பால் 'செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே' என்றார் அப்பரடிகள். முற்பிறப்பில் சிலந்தியாய் இருந்து ஆனைக்கா அண்ணலை வழிபட்ட காரணத்தால் பிற்காலத்தில் கோச்செங்கட் சோழனாய்ப் பிறந்து ஆலயத்தைக் கட்டிய பெருமையுடையது. இச்சோழர் சிவபிரானுக்குரிய எழுபது மாடக்கோயில்களைக் கட்டினார் என்பது செய்தி. இச்செய்தியை வைணவ ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார்,

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய்து உலகம் ஆண்ட
திருக்குலத்து வளர்சோழன்"

எனப் பாராட்டியுள்ளார். ஐந்தாம் பிரகாரமான விபூதி பிரகாரத்திலுள்ள மதிலை 'திருநீற்றான் மதில்' என்பர். இம்மதிலைக் கட்டி முடித்தவுடன் வேலை செய்தார்க்குச் சித்தராய் வந்த சிவபிரான் திருநீற்றினைக் கொடுக்க

அவர்களும் அதனைப் பெற்று கையைத் திறந்து பார்க்குங்கால் பொன்னாக மாறி இருந்த அதிசயத்தைப் பெற்ற இடம். இத்திருக்கோயிலில் நிகழும் பஞ்சப் பிரகார விழா (பங்குனி மாத சித்திரை நட்சத்திரத்தில்) சிறப்புடையது. இறைவனை அம்மன் பூசித்த பண்டை வழக்கினை இன்றும் உச்சிக்கால பூசையில் பண்டிதர் அம்மன் சந்நிதியிலிருந்து பெண்வேடம் புனைந்து ஐயன் சந்நிதி சென்று பூசையை முடித்தபின் காராம்பசுவிற்குப் பூசை செய்வர். இந் நிகழ்ச்சி காண வேண்டிய ஒன்று.

குன்றே அமர்வாய் கொலையார் புலியின்
தன்தோ லுடையாய் சடையாய் பிறையாய்
வென்றாய் புரமூன்(று) ஐவெண்நா வலுளே
நின்றா யருளாய் எனும்நே ரிழையே (2.6)

மாலயன் தேடிய மயேந்திரரும்
காலனை உயிர்கொண்ட கயிலையாரும்
வேலைய(து) ஓங்கும்வெண் ணாவலாரும்
ஆலைஆ ரூராதி ஆனைக்காவே. (3.3)

துன்பம் இன்றித் துயரின்றி என்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
எம்பொன் ஈசன் இறைவனென்(று) உள்குவார்க்(கு)
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே (5.3)

ஊனாகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப்
பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து நல்லன
வும் தீயனவும் காட்டா நின்றாய்
தேனாரும் கொன்றையனே நின்றி யூராய் திருவானைக்
காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப்பெற்றால் அல்லகண்டங்
கொண்டடியேன் என்செய் கேனே (6.2)

தந்தை தாய்உல குக்கோர்
தத்தவன் மெய்த்தவத் தோர்க்குப்
பந்த மாயின பெருமான்
பரிசுடை யவர்திரு வடிகள்
அந்தண் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
எந்தை என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே. (7.4)

தென் ஆனைக்காவானை தென்பாண்டி நாட்டானை
(திருவாசகம் 8. திருவம்மானை 19)

4. திருக்கற்குடி - 620102
(உய்யக் கொண்டான் திருமலை)

இறைவர்	:	உச்சிநாதர்
இறைவி	:	அஞ்சனாட்சி
தீர்த்தம்	:	பொன்னொளி ஓடை, குடமுருட்டி, ஞானவாலி
பாடியவர்	:	திருஞானசம்பந்தர்- 10, அப்பர்- 10, சுந்தரர் - 10 பாடல்கள்.

தலம்

திருச்சியிலிருந்து மேற்கே 3 கி.மீ. தொலைவு. இன்றைய வழக்கு உய்யக் கொண்டான் திருமலை. திருச்சி மாநகரிலிருந்து வயலூர், சோமரசம் பேட்டை போன்ற ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகளில் ஏறிச் செல்லலாம். சிறுகுன்றின் மேல் திருக்கோவில். இரு அம்மன் சந்நிதிகள் உள. பௌர்ணமி நாள் விசேடம். இங்கிருந்து $5^1/_2$ கி.மீ. சென்றால் வயலூர் என்ற சிறந்த முருகன் தலத்தை அடையலாம். ஈழநாட்டரசன் பூசித்து பேறுபெற்றதலம். மேற்குப் பார்த்த சந்நிதி. நந்திவர்மன் திருப்பணி செய்த கோவில்.

தண்டமர் தாமரை யானும்
 தாவியிம் மண்ணை அளந்து
கொண்டவனும் மறிவொண்ணாக்
 கொள்கையர் வெள்விடை யூர்வர்
வண்டிசை யாயினபாட
 நீடிய வார்பொழில் நீழல்
கண்டமர் மாமயில் ஆடும்
 கற்குடி மாமலை யாரே. (2-45-9)

செய்யானை வெளியானைக் கரியான் தன்னைத்
 திசைமுகனைத் திசையெட்டும் செறிந்தான் தன்னை
ஐயனை நொய்யானைச் சீரியானை அணியானைச்
 சேயானை ஆனஞ்சாடும்
மெய்யானைப் பொய்யாது மில்லான் தன்னை
 விடையானைச் சடையானை வெறித்தமான்கொள்
கையானைக் கற்குடியில் விழுமி யானைக்
 கற்பகத்தை கண்ணாரக் கண்டேன் நானே (6-60-2)

நிலனே, நீர், வளி, தீ நெடுவானகம் ஆகிநின்ற
புலனே புண்டரிகத்து அயன்மாலவன் போற்றி செய்யும்
கனலே கற்பகமே திருக்கற்குடி மன்னிநின்ற
அனல்சேர் கையினனே அடியேனையும் அஞ்சலென்னே (7.8)

5. திருவெறும்பூர் - 620013

இறைவன் : எறும்பீசுவரர்
இறைவி : நறுங்குழல்நாயகி
பாடியவர் : அப்பர் - 20 பாடல்கள்

திருச்சி மாநகரிலிருந்து நகரப்பேருந்து உண்டு. பாய்லர் செல்லும் பேருந்துகளிலும் செல்லலாம். தேவர்கள் எறும்பு வடிவம் எடுத்து பூசித்ததலம். பெருமானார் சற்று வடபுறம் சாய்வாக உள்ளார். கோயில் சிறுகுன்றின் மேலுளது. திருமாலும் நான்முகனும் நைமிச முனிவர்களும் வணங்கிய தலம்.

இன்ப மும்பிறப் பும்இறப் பின்னொடு
துன்ப மும்முட னேவைத்த சோதியான்
அன்ப னேஅர னோயென் றாற்றுவார்க்(கு)
இன்ப னாகும் எறும்பியூ ரீசனே (5-74-8)

பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்நிறைந்த கலைகள் ஆய
தன்னையும்தன் திறத்து அறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியும் காட்டி
அன்னையையும் அத்தனையும்போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்து என்னை ஆளாக்கொண்ட
தென்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழும்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. (6-91-1)

6. திருநெடுங்களம் (620015)

இறைவன் : நித்திய சுந்தரர்
இறைவி : ஒப்பிலா நாயகி
தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் (இடர்களையும் பதிகம்)
11 பாடல்கள்

திருச்சி மாநகரிலிருந்து பேருந்து வசதி உண்டு. திருச்சிக்குக் கிழக்கே 13 கி.மீ. தொலைவு. வங்கிய சோழ மன்னனுக்கு அருள்புரிந்ததலம். இடர்களையும் பதிகம் எனப் போற்றப்படும் பதிகத்தை இத்தலத்தில்தான் திருஞானசம்பந்தர் பாடியருளினார்.

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே (1-52-1)

தொட்டுத் தடவித் துடிப்புஒன்றும் காணாது
பெட்டப் பிணம்என்று பேரிட்டுக் - கட்டி
எடுங்கள் அத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை.

(ஐயடிகள் காடவர்கோன்)

7. திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி) - 621216

இறைவன் : மாற்றறிவரதர்
இறைவி : பாலசௌந்தரி
தீர்த்தம் : பிரம தீர்த்தம்
தலவிருட்சம்: வன்னிமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, சுந்தரர் 12 பாடல்கள்.

திருச்சியிலிருந்து குணசீலம் செல்லும் மாநகரப் பேருந்தில் செல்லலாம். கொல்லிமழவன் என்ற அரசனின் மகளுக்கு இருந்த முயலகன் என்னும் நோயை (மிகக் கொடிய வலிப்பு நோய்) திருஞான சம்பந்தர் போக்கி அருளிய தலம். ஆடல் வல்லான் சர்ப்பத்தின்மீது நடனமாடுகின்றார். சுந்தரர் பொன்பெற்ற தலங்களில் இத்தலமும் ஒன்று.

வெஞ்சுட ராடுவர் துஞ்சிருள் மாலை
 வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சுடை கண்டர் நெஞ்சிட மாக
 நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
 லாச்சிரா மத்துறை கின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
 சிதைசெய்வ தோஇவர் சீரே (1-44-3)

ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன்
 அடியவர்க்கு அடியனும் ஆனேன்
உரிமையால் உரியோன் உள்ளமும் உருகும்
 ஒண்மலர்ச் சேவடி காட்டாய்

அருமையாம் புகழார்க்கு அருள்செய்யும் பாச்சி
லாச்சிரா் மத்தெம் அடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில்
இவரலாது இல்லையோ பிரானார் (7.11)

8. திருப்பைஞ்ஞீலி - 621005

இறைவன் : நீலகண்டர்
இறைவி : விசாலாட்சியம்மை
தீர்த்தம் : விசாலாட்சி தீர்த்தம்
தலவிருட்சம்: பசியஞ்ஞீலி (ஒருவகை வாழை)
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் - 10, சுந்தரர் - 11 பாடல்கள்.

திருச்சி மாநகரிலிருந்து இவ்வூருக்குப் பேருந்து வசதி உண்டு.

ஞீலி- வாழை. பசியஞ்ஞீலி- பசுமையான வாழை. திரு அடைமொழி திருமணம் தடையாகும் ஆண், பெண் இருபாலர்க்கும் கல்வாழைக்குப் பூசை செய்து பரிகாரம் காண உடன் மணம் முடியும். இத்தலத்தில் நவக்கிரகங்களுக்குப் பதிலாகத் தீப வழிபாடு நடைபெறுகிறது். அப்பர் பெருமானின் கொடிய வெம்பசியைப் போக்கப் பெருமான் கட்டமுது கொடுத்தருளிய தலம். அந்நிகழ்ச்சி சித்திரை மாதம் நிகழ்கிறது. அப்பரடிகள் ஏற்படுத்திய தடாகமும் தோட்டமும் கோயிலுக்குத் தெற்கே 1 கி.மீ. தொலைவில் உள்ளன. எமனுக்குத் தனி சந்நிதி உள்ளது.

தூயவன் தூயவெண் ணீறு மேனிமேல்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவன் எனைச்செயுந் தன்மை யென்கொலோ. (3.14.7)

ஒன்றி மாலும் பிரமனுந் தம்மிலே
நின்ற சூழ லறிவரி யானிடம்
சென்று பாரிடம ஏத்துபைஞ் ஞீலியுள்
என்றும் மேவி யிருந்த அடிகளே (5.41.4)

செந்த மிழ்த்திறம் வல்லி ரோசெங்கண்
அரவம் முன்கையில் ஆடவே
வந்து நிற்கும் இதுஎன்கோ லோபலி
மாற்ற மாட்ளேழுடாம் இடகிலோம்
பைந்தண் மாமலர் உந்து சோலைகள்
கந்தம் நாறுபைஞ் ஞீலியீர்
அந்தி வானமும் மேனியோ சொலும்
ஆர ணீய விடங்கரே (7.4)

9. திருப்பாற்றுறை - 620005

இறைவன் : திருமூலநாதர்
இறைவி : மோகநாயகி
தீர்த்தம் : கொள்ளிடம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருச்சியிலிருந்து கல்லணைக்கு மூன்று வழிகளில் பேருந்து செல்கின்றது. இவ்வூர் செல்ல காவிரியின் வடகரை திருவளர்சோலை வழியாகச் செல்லும் பேருந்தில் ஏறிப் பனையபுரம் நிறுத்தத்தில் இறங்கிக் கொள்ளிடம் நோக்கி 4 கி.மீட்டர் தொலைவு செல்ல வேண்டும். வழிப்பாதை சற்று கரடு முரடு. மிகச்சிறிய ஊர். பெருமான் சுயம்பு. மார்க்கண்டருக்கு அபிஷேகம் செய்ய ஆவின்பால் கிடைக்காமல் வருந்தியபோது பெருமானே பால் பெருகும்படி அருள் புரிந்த தலம். சிவாச்சாரியார் வீடு அருகில் உள்ளது.

வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
வந்தென் நன்னலம் வௌவினார்
பைந்தன் மாதாவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர் தாமோர் மணாளரே. (1.56.10)

10. திருப்பராய்த்துறை - 623115

இறைவன் : பராய்த்துறைநாதர்
இறைவி : பொன்மயிலம்மை
தீர்த்தம் : காவிரி
தலவிருட்சம்: பராய்மரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் - 11, அப்பர் - 11,
மாணிக்கவாசகர் - 2 அடிகள்

திருச்சி மாநகரிலிருந்து பேருந்து வசதி உண்டு. பெட்ட வாய்த்தலை, குளித்தலை பேருந்துகளில் ஏறி இவ்வூரில் இறங்க மெயின்சாலை அருகே பெரியகோயில். அகண்ட காவிரிக்கரையில் கோயில். ஐப்பசி மாத முதல்நாள் இங்கு காவிரியில் நீராடுவதும் பராய்த்துறைநாதரை வணங்கலும் சிறப்பு. (ஐப்பசி மாதக் கடைசிநாள் மயிலாடுதுறைக் காவிரியில் நீராடல் சிறப்பு) இந்திரனும், குபேரனும், சப்தரிஷிகளும் பூசித்தப் பெருந்தலம்.

நீறு சேர்வதுஓர் மேனியர் நேரிழை
கூறுசேர்வதோர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே (1.135.1)

நெருப்ப ராய்நிமிர்ந் தாலொக்கு நீள்சடை
மருப்ப ராய்வளைந் தாலொக்கும் வாண்மதி
திருப்ப ராய்த்துறை மேவிய செல்வனார்
விருப்ப ராயிருப் பாரை அறிவரே. (5.30.9)

"பராய்த்துறை மேவிய பரனே போற்றி (திருவாசகம் 4. 153)
தென் பராய்த்துறையாய் சிவலோகா".... (திருவாசகம் செத்திலாப்பத்து 4)

11. திருக்கடம்பந்துறை (குளித்தலை) - 639104

இறைவன் : கடம்பவனேசுரர்
இறைவி : முற்றிலா முலையார்
தீர்த்தம் : காவிரி
தலவிருட்சம்: கடம்பு
பாடியவர் : அப்பர் 10 பாடல்கள்

திருச்சியிலிருந்து பேருந்துவசதி உண்டு. தைப்பூசம் விசேடம். சுவாமி வடக்கு பார்த்துள்ளார். வடக்கு பார்க்கும் சந்நிதி குறைவே! கண்ணுவ முனிவருக்கும் தேவர்களுக்கும் சிவபெருமான் கடம்ப விருட்சத்தில் தோன்றிக் காட்சி கொடுத்த இடம். கோயில் காவிரிக் கரையிலுள்ளது.

அரிய நான்மறை ஆறங்க மாய்ஐந்து
புரியன் தேவர்கள் ஏத்தநஞ் சுண்டவன்
கரிய கண்டத்தி னான்கடம் பந்துறை
உரிய வாறு நினைமட நெஞ்சமே (5.18.7)

12. திருவாட்போக்கி (ஐயர்மலை) - 619124

இறைவன் : இரத்தனகிரிநாதர்
இறைவி : சுரும்பார் குழலம்மை
தீர்த்தம் : காவேரி; கௌரிதீர்த்தம்.
பாடியவர் : அப்பர் 10 பாடல்கள்

திருச்சியிலிருந்து குளித்தலை சென்று அங்கிருந்து மணப்பாறை செல்லும் சாலையில் 11 கி.மீ. தொலைவு. பேருந்து வசதி உண்டு. மலையில் 952 படிகள். இரத்தனகிரி, வாட்போக்கி, சிவாயமலை என்ற வேறு பெயர்களும் உண்டு. இரத்தினம் நவ மணிகளுள் ஒன்று. ஆரிய நாட்டு அரசனொருவன் இரத்தினம் வேண்டி பலதலங்கள் சென்றும் கிடைக்காமற்போக இத்தலத்திற்கும் வந்தான். இத்தலத்து உறையும் சிவனும் இவனிடம் வந்து ஒரு நீர்த்தொட்டியினைக் காட்டி அதனைக் காவிரி நீரால் நிரப்பும்படி கூறினார். அரசனும் அப்பணியை மேற் கொண்டு முயன்றான். முயன்றும் அத்தொட்டி நிரம்பாமல் இருப்பது கண்டு சினமுற்றுத் தன் உடைவாளை உறையினின்றும் உருவித் தன்முன் நிற்பாற் மேல்வீசினான். உடன் இறைவனும் அவ்வாளைப் போக்கி விட்டு அவனுக்கு இரத்தினத்தைக் காண்பித்தருளினார்.

இதனால் இரத்தினகிரி, வாட்போக்கி என்ற பெயர்களும் உண்டா யின. பின்னர் ஆரிய நாட்டரசன் உலகினை வெறுத்து அருட்பணி செய்து முக்தி பெற்றான். (இம் மன்னனால் வெட்டப்பட்ட வாட்குறி இன்றும் பெருமான் திருமேனியில் உள்ளது) இத்தலத்தில் அகத்திய முனிவர் நண்பகலில் வழிபாடு செய்து வழிபட்டார். இதனால் நண்பகல் வழிபாடு விசேடம். இதனால் மதியான சுந்தரர் ஏன்ற பெயரும் இறைவனுக்கு உண்டு. இவ்வழக்கால் காலைக் கடம்பர், மதியம் சொக்கர், அந்தி ஈங்கோய்நாதர் என்ற தொடரும் எழுந்தது. (கார்த்திகை சோமவாரம் மிகச்சிறப்பு) காவிரி வடகரைத் தலங்களில் இறுதியாய் இருப்பது திரு ஈங்கோய்மலை. தென்கரைத்தலங்களில் முதன்மையாய் இருப்பது இம்மலை. ஒரே நேர்கோட்டில் அமைந்திருப்பதுபோல் காணலாம். (தஞ்சை மாவட்டத்தில் அதிகாலை திருக்கருகாவூர்; காலை- அவளிவ நல்லூர்; மதியம்- அரித்துவார மங்கலம் (அரதைப் பெரும்பாழி); மாலை- ஆலங்குடி (இரும்பூளை); இரவு- திருக்கொள்ளம்பூதூர் இவை அனைத்தும் ஒரே சாலையில் உள்ளன. (கார், வண்டி வசதி உள்ளவர் எளிதில் செல்லலாம்)

12 வருடத்திற்கு ஒருமுறை இடிபூசை உண்டாம். இடையன் ஒருவன் கொண்டுவந்த பாலைக் காகம் ஒன்று கவிழ்க்க பால் கீழே கொட்டியது. அதனால் அக்காகம் எரிபட்டது. இச்சாபத்தால் காகம் அணுகாது என்பர். 'காகம் அணுகாமலை' என்றும் கூறுவர். மேற்குப் பார்த்த சந்நிதி. ஆதி சேஷனுக்கும் வாயுதேவனுக்கும் உண்டான போரில் வாயுதேவன் மேருமலையினின்று வெளிப்படுத்த வந்ததொரு அரதனத்தால் (அரதனம்-இரத்தினம்;சலம்- மலை) இரத்தன கிரி எனவும் பெயர் பெற்றது. இந்திரன், சயந்தன், வாயு, ஆதித்தன், ஆதிசேடன், அகத்தியர், சப்தகன்னியர் பூசித்தத்தலம். (மலைக் கோயிலில் காலை முதல் மாலை

வரை சிவாச்சாரியர் இருப்பர்) இந்திரனால் உண்டாக்கப்பெற்ற வேப்பமரத்தையும், பெருமாளையும் வணங்கித் திரும்பும்பொழுது வயிரவீரப் பெருமாளையும் (வீரவாகு) வணங்கி வருதல் சிறப்பு.

கூற்றம் வந்து குமைத்திடும் போதினால்
தேற்றம் வந்து தெளிவுற லாகுமே
ஆற்ற வும்மருள் செய்யும்வாட் போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள் நீங்கவே. (5.86.4)

13. திருஈங்கோய்மலை - 621201

இறைவன் : மரகதாசலேசுவரர்
இறைவி : மரகதவல்லியம்மை
தீர்த்தம் : அமிர்த்தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள். திருவாசகத்தில் - 1அடி.

திருச்சி- முசிறி- நாமக்கல் பேருந்துகளில் ஏறி முசிறியில் இறங்கி மேற்கே 5 கி.மீ. முசிறியிலிருந்து பேருந்து வசதி உள்ளது. குன்றின்மேல் கோயில் சுமார் 500 படிகள் செங்குத்தான நிலை. பெருமான் நல்ல பச்சை நிறத்தில் மரகதக் கல்லால் அமைக்கப்பட்டவர் போல் பளபளப்பாக உள்ளார். நக்கீரர் இம்மலை ஈசன்மேல் 'ஈங்கோய் எழுபது' என்ற நூலைப் பாடியுள்ளார். இந்நூல் 11-ஆம் திருமுறை நிரலில் உள்ளது. அகத்திய முனிவர் ஈ வடிவமாகச் சென்று இறைவனை வணங்கியதலம்.

கண்கொள்நுதலார் கறைகள்மிடற்றார் கரியின் உரிதோலார்
விண்கொள்மதிசேர் சடையார் விடையார் கொடியார் வெண்ணீறு
பெண் கொள்திருமார் பதனிற்பூசும் பெம்மான் எமையாள்வார்
எண்கும்அரியுந் திரியுஞ்சாரல் ஈங்கோய் மலையாரே. (1.70.3)

ஈங்கோய் மலைஎம் எந்தாய் போற்றி! (திருவாசகம் 4.158)

14. திருமாந்துறை - 621703

இறைவன் : ஆம்ரவனேசுரர்
இறைவி : அழகிலுயர் நாயகி
தீர்த்தம் : காயத்திரி தீர்த்தம்
தலவிருட்சம்: மாமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருச்சியிலிருந்து 12 கி.மீ. தொலைவு. லால்குடி செல்லும் மாநகரப் பேருந்துகளில் செல்லலாம். சாலையருகே கோயில். சூரியன், திங்கள், கண்ணுவமுனிவர் பூசித்த திருத்தலம்.

நீல மாமணி நித்திலத்
    தொத்தொடு நிரைமலர் நிரந்துந்தி
ஆலி யாவரு காவிரி
    வடகரை மாந்துறை யமர்வானை
மாலு நான்முகன் தேடியுங்
    காண்கிலா மலரடி யிணைநாளும்
கோல மேத்திநின் றாடுமின்
    பாடுமின் கூற்றுவன் நலியானே. (2.110.9)

15. திருஅன்பிலாந்துறை (அன்பில்)-621702

இறைவன் : சத்தியவாகிசர்
இறைவி : சௌந்தரநாயகி
தீர்த்தம் : காயத்திரி தீர்த்தம்
தலவிருட்சம்: ஆலமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் -11, அப்பர் 10 பாடல்கள்

இன்றைய வழக்கு அன்பில். அன்பில் மாரியம்மன் வெகு பிரசித்தம். இக்கோயிலுக்குக் கிழக்கே இக்கோயில் உள்ளது. திருச்சியிலிருந்து அன்பிலுக்கே நகரப்பேருந்து உண்டு. லால்குடி சென்றும் இத்தலம் அடையலாம். நான்முகனும், வாகிச முனிவரும் பூசித்த தலம். கொள்ளிடத்திற்குத் தென்கரையில் நின்ற சம்பந்தர், அப்பர் இவர்களின் பாடல்களை நன்கு கேட்கும் முகத்தான் தன் செவியைச் சாய்த்தபடி கேட்ட பிள்ளையாரின் திருவுரு கோயிலின் பிரகாரத்தில் தென்மேற்கில் உள்ளது. இவரின் திருநாமம் செவி சாய்த்த பிள்ளையார். இத்தலத்திற்கு வடக்கே 3 கி.மீட்டரில் ஆனாய நாயனாரின் திருஅவதாரத்தலமான திருமங்கலம் உள்ளது.

நீடும்புனற் கங்கையுந் தங்க முடிமேல்
கூடும்மலை யாளொரு பகம் அமர்ந்தார்
மாடும்முழ வம்மதி ரம்பட மாதர்
ஆடும்பதி அன்பிலா ல்நதுறை யாரே (1.31.5)

பிறவி மாயப் பிணக்கில் அழுந்தினும்
உறவெ லாஞ்சிந்தித்(து) உன்னி உகவாதே
அறவன் எம்பிரான் அன்பிலா லந்துறை
வணங்கும் நும்வினை மாய்ந்தறும் வண்ணமே (5.80.7)

16. திருமழபாடி-621851

இறைவன் : வச்சிரத்தம்பநாதர்
இறைவி : அழகம்மை
தீர்த்தம் : கொள்ளிடம்
தலவிருட்சம்: பனைமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 33; அப்பர் 17; சுந்தரர் 10 பாடல்கள்.

திருச்சியிலிருந்து பேருந்து வசதி உண்டு. (திருவையாற்றிலிருந்தும் செல்லலாம். வடமேற்கில் 5 கி.மீட்டர்) பிரம்மலோகத்திலிருந்து ஆண் விலங்கு ஒன்று கொணர்ந்து பிரதிஷ்டை செய்யப் பிரமதேவர் அதைப் பெயர்த்தெடுக்க முடியாமற்போக இவர் வஜ்ரஸ்தம்ப மூர்த்தி என்றனர். திருமாலும் இந்திரனும் பூசித்தத் தலம். நந்தியம்பெருமான் சுயசாம்பிகை தேவிக்கும் திருமணம் செய்த தலம். இத்திருமணம் பங்குனித் திங்கள் வளர்பிறை, புனர்பூச நட்சத்திரத்தில் நிகழ்கிறது. இக்கோவிலுள்ள தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் கண்டு இன்புறத்தக்கது. (தட்சிணா மூர்த்திக்கு இரு அழகிய சிற்பங்கள் உள. முயலகனைத் தன் திருவடியில் தென்முகக் கடவுள் மிதித்துக் கொண்டிருக்கிறார். ஒரே கல்லில் அமைந்த பெரிய சோமாஸ் கந்தர் வடிவம் அற்புதமானது)

பள்ள மார்சடை யிற்புடை யேயடை யப்புனல்
வெள்ளம் ஆதரித் தான்விடை யேறிய வேதியன்
வள்ளல் மாமழ பாடியுள் மேயம ருந்தினை
உள்ளம் ஆதரி மின்வினை யாயின ஓயவே (2.9.4)

ஆலாலம் உண்டுகந்த ஆதி கண்டாய் அடையலர்தம்
புரமூன்றும் எய்தான் கண்டாய்
காலாலக் காலனையுங் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க்(கு) அருள்செய்த காளை கண்டாய்
பாலாரும் மொழிமடவாள் பாகன் கண்டாய்
பசுவேறிப் பலிதிரியும் பண்பன் கண்டாய்
மாலாலும் அறிவரிய மைந்தன் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் தானே (6.39.9)

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே (7.1)

17. திருப்பழுவூர் (கீழப்பழுவூர்) - 621707

இறைவன் : வடமூலநாதர்
இறைவி : அருந்தவநாயகி
தீர்த்தம் : பிரமதீர்த்தம், கொள்ளிடம்
தலவிருட்சம்: ஆலமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருச்சி- அரியலூர் சாலை வழியில் கீழப்பழுவூர் பஸ் ஸ்டாப்பில் இறங்கினால் எதிரே திருமானூர்-திருவையாறு தஞ்சைக்குச் செல்லும் சாலை தெரியும். அச்சாலையில் 10 அடி செல்ல திருக்கோயில். கருங் கற்களால் நன்முறையில் கட்டப்பட்ட கோயில். பரசுராமர் தம் தாயைக் கொன்ற பழிநீங்க பூசித்தத் தலம். அவரின் உருவம் முன் வாயிலில் உள்ளது. இறைவன் சந்நிதிக்குச் செல்லும் பொழுது மேற்சுவரில் பள்ளி கொண்ட பெருமாளின் திருவுருவம் காணப்படுகிறது. இக்கோயிலைப் பூசை செய்வோர் மலையாள அந்தணர் என்பது சம்பந்தர் பெருமானின் 'அந்தணர்களான மலையாளர் அவர் ஏத்தும்' (11) என்ற பாடலால் அறியலாம்.

கோடலொடு கோங்கவை குலாவுமுடி தன்மேல்
ஆடரவம் வைத்தபெரு மானதிட மென்பர்
மாடமலி சூளிகையி லேறிமட வார்கள்
பாடலொலி செய்யமலி கின்றபழு வூரே (2.34.2)



2. திருவையாறு

காணும் தலங்கள்

1. திருவையாறு
2. திருப்பழனம்
3. திருவேதிகுடி
4. திருச்சோற்றுத்துறை
5. திருக்கண்டியூர்
6. திருப்பூந்துருத்தி
7. திருவாலம் பொழில்
8. மேலைத்திருக்காட்டுப்பள்ளி
9. திருநெய்த்தானம் (தில்லைத்தானம்)
10. திருப்பெரும்புலியூர்
11. திருவட குரங்காடுதுறை
12. திருக்கானூர் (ஆடுதுறை பெருமாள் கோயில் வழக்கு)

1. திருவையாறு - 613204

இறைவன்	:	ஐயாறப்பர் (பஞ்ச நதீஸ்வரர்)
இறைவி	:	அறம் வளர்த்த நாயகி
தீர்த்தம்	:	ஐந்துநதி தீர்த்தம், சூரிய தீர்த்தம்
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 56, அப்பர் 126, சுந்தரர் 11 பாடல்கள், மணிவாசகர் நான்கு இடங்கள்

தஞ்சை நகரத்திலிருந்து நகரப்பேருந்து உண்டு. 1. காவிரி 2. குடமுருட்டி 3. வெண்ணாறு 4. வெட்டாறு 5. வட வாறு என ஐந்து ஆறுகள் இவ்வூரினுள் செல்வதால் ஐயாறு எனப் பெயர் பெற்றது. 'ஆனிடை ஐந்தும் வைத்தார் ஆட்டுவார்க்கு அருளும் வைத்தார் ஐயன் ஐயாறனாரே' என அப்பரடிகள் திருவாக்கின்படி பஞ்ச கவ்வியத்தால் அபிஷேகம் செய்யப்படுவதால் 'ஐயாறு' எனப் பெயர் கொண்டது எனவும் கூறுவர். ஏற்பது கொள்க. சித்திரைத் திங்கள் முழுநிலவு நாளில் சப்தஸ்தானம் என வழங்கும் ஏழு தலங்களின் திருவிழா மிகச் சிறப்பானது. அத்தலங்களாவன 1. திருவையாறு 2. திருப்பழனம் 3. திருச்சோற்றுத் துறை 4. திருவேதிகுடி 5. திருக்கண்டியூர் 6. திருப்பூந் துருத்தி 7. திருநெய்த்தானம் (தில்லைத்தானம்) சிவராத்திரி அன்றும் இந்த ஏழூர்த் தலங்களைச் சென்று கண்டு வணங்குதல் சிறப்பே! சுசரிதன் என்ற அந்தணச் சிறுவனைக் கூற்றுவன் தொடர்ந்து வந்ததாகவும், அப்போது

இறைவன் வெளிப்பட்டுக் கூற்றுவனை விலக்கி அச்சிறுவனைச் சோதி ரூபமாய் ஆட்கொண்டான். ஆதலால் அவர் சந்நிதிக்கெதிரில் (திருக் கோயிலின் நுழைவாயிலில்) ஒரு சிறு குழி ஏற்படுத்தி அதில் குங்கிலியம் போட்டு வழிபடும் வழக்கத்தை இன்றும் காணலாம். அச்சந்நிதியே ஆட்கொண்டார் சந்நிதியாகும். திருமகள் பூசித்துத் தவம் செய்யும் தலம். இப்பொழுதும் திருமகள் இரண்டாம் மதில் சுற்றில் தவஞ்செய்து கொண்டி ருப்பதால் அங்கு ஒருவரும் செல்வதில்லை. 'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே' என்ற நாவுக்கரையரின் கூற்றுக்கு ஏற்ப கோயிலின் 3ஆம் பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் நின்று வடக்கு நோக்கி 'ஐயாறா' எனக் கூவினால் ஏழு முறை அது இங்கு எதிரொலிக்கும். தம்மைப் பூசை செய்யும் சைவர் ஒருவர் காசி சென்று குறித்த காலத்தில் வராததால் இறைவனே அவர் வடிவம் தாங்கித் தம்மைத் தாமே பூசை செய்து கொண்ட தலம். இந்நிகழ்ச்சியைத் திருவாசகம் 'ஐயாறு அதனில் சைவனாகியும்' (2.85) எனக் குறிக்கும். இந்திரன், வாலி போன்றோர் பூசித்தத்தலம். திருநாவுக்கரசர் திருக்கயிலாய தரிசனத்திற்காக வடதிசை சென்றபோது இறைவன் ஆணைப்படி அங்குள்ள நீர்நிலையில் மூழ்கி இத்தலத்திலுள்ள திருக்குளத்தில் (உப்பங்கோட்டைப் பிள்ளையார் குளம் எனவும், சமுத்திர தீர்த்தம் என வழங்கப்படும். இக்குளம் கோயிலுக்கு வடமேற்கில் உள்ளது.) எழுந்திருந்து கயிலை தரிசனம் கண்டு அக மகிழ்ந்து 'மாதர்பிறை' என்னும் தீந்தமிழ்த் தேவாரம் பாடியத் திருத்தலம். இன்றும் இவ்வுற்சவம் ஆடி அமாவாசையன்று இரவு 9 மணிக்கு மேல் நிகழ்கின்றது. அன்பர்கள் சென்று கண்டு இன்புறுக. மூர்த்தி தெற்குப் பிரகாரத்தில் இருக்கிறார். அவருக்குத் தனி சந்நிதி. அப்பரடிகளும் அங்குள்ளார். இறைவன் சுயம்பு, மண். அபிஷேகம் இல்லை. ஆவுடைக்கு மட்டுமே அபிஷேகம் இலிங்கத் திருமேனிக்குப் புனுகுச் சட்டம்தான். காஞ்சியும் இதே நிலை. ஐயாற்றுத் திருத்தாண்டகத்தில் அப்பரடிகள் 'எல்லா உலகும் ஆனாய் நீயே! ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே!' என இத்தலத்துடன் காஞ்சியை இணைத்துப் பாடிய இன்பங்காண்க. தம்பிரான் தோழர் சேரமானுடன் இத்தலம் வர காவிரியில் பெருவெள்ளம் பெருகி வருவதைக் கண்ட சுந்தரரும் தென்கரையிலிருந்து 'ஐயாறுடைய அடிகளே!' என்றழைக்க இறைவனும் கன்றை நினைந்து கதறுகின்ற ஆவைப் போல 'ஓலம்' என்றழைத்து வெள்ள நீரைத் தடுத்து வழிபடச் செய்த பெருந்தலம். இத்திருக்கோயிலில் முருகன் வேலின்றி வில்லுடன் காட்சி தருகின்றார். இங்குள்ள தியான மண்டபம் விசேடம். ஒரு மணித் துளியாவது அமர்ந்து தியானம் செய்ய வேண்டும். கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராசர் பலநாட்கள் பலமணி நேரங்கள் தியானித்ததால் இறவாப் புகழ்

கொண்டார். அவரின் சமாதி இங்கு உள்ளது. இவர் இறையடி சேர்ந்த மார்கழி பஷ்ய பகுண பஞ்சமி நாளில் அவர் நினைவாக நிகழும் இசைவிழா தொடர்ந்து மூன்று நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட்(டு) ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்(று) அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவை யாறே. (1.130.1)

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்(து) ஏத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா(று) அடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறி யாதனகண்டேன் (4.3.1)

எங்கே போவேன் ஆயிடினும்
அங்கே வந்தென் மனத்தீராய்ச்
சங்கை ஒன்றும் இன்றியே
தலைநாள் கடைநாள் ஒக்கவே
கங்கை சடைமேல் கரந்தானே
கலைமான் மறியும் கனல்மழுவும்
தங்கும் திரைக்கா விரிக்கோட்டத்(து)
ஐயா(று) உடைய அடிகளோ. (7.2)

சீர்ஆர் திருவையாறா போற்றி (திரு. 4.148)

2. திருப்பழனம்-613204

இறைவன் : ஆபத்சகாயநாதர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : மங்களதீர்த்தம், காவிரியாறு
தலவிருட்சம்: வாழை
பாடியவர் : திருஞானசம்பந்தர் - 11, அப்பர் - 50 பாடல்கள்.

திருவையாறு- கும்பகோணம் பேருந்து வழியில் உள்ளது. ஐயாற்றினின்றும் கிழக்கே 4 கிலோமீட்டர் தொலைவு. பேருந்து வசதி உண்டு. (வடகுரங்காடுத்துறைக்கு மேற்கே 3 கி.மீட்டர்) இவ்வூருக்கு அருகிலுள்ள

திங்களூரில் அப்பூதி அடிகள் என்ற அந்தண அடியார் வாழ்ந்த ஊர. திருநாவுக்கரசரிடம் நீங்காப் பேரன்பு கொண்ட அடியார் அவர். அவர் பெருமையை அறியார் யார்? அவர் மகனை அரவம் தீண்டி இறக்க அப்பரடிகள் பதிகம்பாடி உயிர்ப்பித்தார். அவர் பெருமையை தம் தேவாரத்தில் பாடியுள்ளார். திங்களூர் சந்திரனுக்குரிய தலம். சந்திரனின் ஒளிக்கதிர்கள் பங்குனி, புரட்டாசி பௌர்ணமியின் முன்பின் நாட்களில் சுவாமியின் மீது விழுகின்றன.

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியின் உரிதோலார்
நாதாஎனவும் நக்கா எனவும் நம்பா எனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே. (1.67.1)

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே ஆயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாயள்நின்ற சேவடியாய் கோடியையே. (4.12.10)

3. திருவேதிகுடி - 613202

இறைவன் : வேதபுரியீசர்
இறைவி : மங்கையர்க்கரசியம்மை
தீர்த்தம் : சுந்தரதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்.

ஐயாறுக்கு அருகில் உள்ளது. நகரப்பேருந்து வசதி உண்டு. திருவேதிகுடி, சோற்றுத்துறை, கண்டியூர் மிக அருகிலுள்ள தலங்கள். வாழை மடுவில் பெருமான் தோன்றியதால் வாழைமடுநாதர் என்ற பெயரும் பெருமானுக்கு உண்டு. வேதம் கேட்பதில் விருப்பமுள்ள பிள்ளையார் இங்கு ஒருபுறம் சாய்ந்து காணப்படுகிறார். இவர் வேதப் பிள்ளையார் என அழைக்கப்படுகின்றார் இத்தலத்திலுள்ள அர்த்த நாரீசுவரர் வலப்புறத்தில் அம்மையையும் இடப்புறத்தில் ஐயனுமாகக் காட்சி தருகின்ற அற்புதக் கோலம். பங்குனி 13, 15 நாள்களில் சூரியன் உதிக்கும்போது அவனின் கதிர்கள் பெருமான் மீது விழுகின்றன.

உன்னிஇரு போதும்அடி பேணும்அடி
யார்தமிடர் ஒல்கஅருளித்
துன்னியொரு நால்வருடன் ஆல்நிழலில்
இருந்ததுணை வன்றனிடமாம்

கன்னியாரொ(டு) ஆடவர்கள் மாமணம்
விரும்பியருு மங்கலமிகு
மின்னியலும் நுண்ணிடைநன் மங்கையரி
யற்றுபதி வேதிகுடியே. (3.78.7)

வருத்தனை வாளரக் கன்முடி தோளொடு பத்திறுத்த
பொருத்தனைப் பொய்யா அருளனைப் பூதப் படையுடைய
திருத்தனைத்தேவர் பிரான்திரு வேதி குடியுடைய
அருத்தனைஆரா அமுதினை நாமடைந் தாடுதுமே. (4.90.10)

4. திருச்சோற்றுத்துறை - 613202

இறைவர் : தொலையாச் செல்வநாதர்
இறைவி : ஒப்பிலாவம்மை
தீர்த்தம் : காவிரியாறு
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11; அப்பர் 41; சுந்தரர்: 10 பாடல்கள்

ஐயாற்றிலிருந்து நகரப் பேருந்து வசதி உண்டு. இந்திரன், சூரியன், கௌதமர் முதலியோர் பூசித்தத்தலம். அருளாளன் என்னும் அந்தணனின் அழிபசியைப் போக்க இறைவன் அவனுக்கு அமுதசுரபி கொடுத்து அருள் பாலித்தத் தலம். ஊருக்குத் தெற்கே 'சோறுடையான் வாய்க்கால்' என்ற ஒரு வாய்க்கால் ஓடுகிறது. துறந்தவர் இத்தலத்தை நாடி வருவர் என்பது தோன்ற சுந்தரரும் தம் தேவாரத்தில் 'துறந்தார் சேரும் சோற்றுத்துறையே' (7) என்று பாடியுள்ளார். கௌதமரின் திருவுருவம் திருவாயிலின் தென் கீழ்ப்பால் கோயிலினுள் உள்ளது. சோறு என்ற சொல் வீடு பேற்றினையும் குறிக்கும் சொல். துறை- இடம். எனவே வீடு பேற்றினை நல்கும் நற்றலம் திருச்சோற்றுத்துறையாம்.

பிறையும் அரவும் புனலும் சடைவைத்து
மறையும் ஓதி மயானம் இடமாக
உறையுஞ் செல்வம் உடையார் காவிரி
அறையுஞ் சோற்றுத் துறைசென்(று) அடைவோமே. (1.28.5)

ஓதியே கழிக்கின் றீர்கள் உலகத்தீர் ஒருவன் தன்னை
நீதியால் நினைய மாட்டீர் நின்மலன் என்று சொல்லீர்
சாதியா நான்மு கனுஞ் சக்கரத் தானுங்காணாச்
சோதியாய்ச் சுடர தானார் திருச்சோற்றுத் துறைய னாரே. (4.41.9)

இறந்தார் என்பும் எருக்கும் சூடிப்
புறங்காட் டாடும் புனிதன் கோயில்
சிறந்தார் சுற்றம் திருஎன்று இன்ன
துறந்தார் சேரும் சோற்றுத் துறையே. (7.7)

5. திருக்கண்டியூர் - 613202

இறைவர் : வீரட்டானநாதர்
இறைவி : மங்கலநாயகியார்
தீர்த்தம் : காவிரி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்.

ஐயாற்றிலிருந்து தெற்கே 2 கி.மீ. தொலைவு. நகரப்பேருந்து வசதிகளும் உண்டு. அட்டவீரட்டாலத்தலங்களில் இத்தலம் ஒன்று. நான்முகன் தலையைக் கொய்தது. நான்முகன், சரசுவதி இவர்களின் திருவுருவங்கள் கோவிலினுள் உள்ளன. மேற்குப் பார்த்த சந்நிதி.

இயலு மாறெனக்(கு) இயம்பு மின்னிறை
வன்னு மாய்நிறை செய்கையைக்
கயல்நெ டுங்கண்ணி னார்கள் தாம்பொலி
கண்டி யூருறை வீரட்டன்
புயல்பொ ழிந்திழி வானு ளோர்களுக்
காக வன்றயன் பொய்ச்சிரம்
அயன கவ்வ தரிந்து மற்றதில்
ஊனு கந்த வருந்தியே. (3.38.6)

பண்டங் கறுத்ததொர் கையுடை யான்படைத் தான்தலையை
உண்டங் கறுத்ததும் ஊரொடு நாடவை தானறியும்
கண்டங் கறுத்த மிடறுடை யான்கண்டி யூரிருந்த
தொண்டர் பிரானைக்கண் டீரண்ட வாணர் தொழுகின்றதே.
(4.93.3)

6. திருப்பூந்துருத்தி-613103

இறைவர் : புஷ்பவனவாதர்
இறைவி : அழகார்ந்த நாயகி
தீர்த்தம் : காசீபதீர்த்தம் (கிணறு); காசிக் கங்கை எனவும் கூறுவர்.
பாடியவர் : அப்பர் 30 பாடல்கள்.

ஐயாற்றிலிருந்து நகரப்பேருந்து உண்டு. கண்டியூர்க்கு மேற்கே 3 கி.மீ. இரண்டு ஆறுகட்கு இடையிலுள்ள தலம் துருத்தி என்று கூறப் பெறும். திருஞானசம்பந்தர் பாண்டிநாடு சென்று சமணரை வென்று திரும்பி வரும்பொழுது திருநாவுக்கரசரின் பெருமையைக் கேள்வியுற்று

அவர் இங்கு தங்கியிருந்து பணி செய்வதையும் அறிந்து அவரைக் காண பல்லக்கில் வர, சம்பந்தர் அறியாவண்ணம் நாவுக்கரையர், அவர் வந்த சிவிகையைத் தாங்கி வர, சம்பந்தர் 'அப்பர் எங்குற்றார்.' என வினவ பணிவின் அணிகலனரான நாவரையரும் 'இங்குற்றேன்' என விடை கூறியதாக சேக்கிழார் சுவாமிகள் குறிப்பர். திருநாவுக்கரசருக்கு அப்பர் என்ற பெயர் இத்தலத்தில் திருஞானசம்பந்தரால் சூட்டப் பெற்றது. அப்பரடிகள் ஒரு மடம் அமைத்து, தொண்டு செய்த இடம். அம்மடம் இன்று நல்ல முறையில் பெரிதாக்கப்பட்டுள்ளது. அப்பரும் சம்பந்தரும் இணைந்து அளவளாவிய அற்புதத் திருத்தலம். சம்பந்தரின் வருகை பெருமானுக்கு மறைக்க, பெருமான் ஆணை வழி பட்டீஸ்வரம் போல் நந்திகள் விலகி இருப்பதைக் காணலாம். 9ஆம் திருமுறையில் திருவிசைப்பா பாடிய பூந்துருத்தி நம்பி காடநம்பியின் அவதாரத்தலம். இந்திரனும், காசிப முனிவரும் பூசித்தத் தலம்.

அதிரர் தேவர் இயக்கர் விச்சாதரர்
கருத நின்றவர் காண்பரி தாயினான்
பொருத நீர்வரு பூந்துருத் திந்நகர்ச்
சதுரன் சேவடிக் கீழ்நா மிருப்பதே (5.32.8)

7. திருவாலம் பொழில் - 613103

இறைவன் : ஆத்மநாதேசுரர்
இறைவி : ஞானம்பிகை
தீர்த்தம் : திருப்பாற்குளம், குடமுருட்டி
தலவிருட்சம்: ஆலமரம்
பாடியவர் : அப்பர் 9 பாடல்கள்

திருவையாறு சப்தத்தானதில் இத்தலம் சேராது. கண்டியூரிலிருந்து 3கி.மீ. திருப்பூந்துருத்தி அங்கிருந்து $1^1/_2$ கி.மீ. சென்றால் இத்தலம். அஷ்டவசுக்கள் பூசித்தத்தலம். மேற்குப் பார்த்த சந்நிதி.

பொல்லாத என்அழுக்கில் புகுவான் என்னைப்
புறம்புறமே சோதித்த புனிதன் தன்னை
எல்லாரும் தன்னையே இகழ அந்நாள்
இடுபலிஎன்று அகம்திரியும் எம்பி ரானைத்
சொல்லாதார் அவர்தம்மைச் சொல்லா தானைத்
தொடர்ந்துதன் பொன்னடியே பேணுவாரைச்
செல்லாத நெறிசெலுத்த வல்லான் தன்னைத்
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே. (6.86.7)

8. மேலைத்திருக்காட்டுப்பள்ளி - 613104

இறைவன் : தீயாடியப்பர்
இறைவி : வார்கொண்ட முலையம்மை
தீர்த்தம் : காவிரியாறு
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்

திருக்காட்டுப்பள்ளி என்பதே இன்றைய வழுக்கு. ஐயாற்றிலிருந்து நகரப்பேருந்து உண்டு. ஐயாற்றிலிருந்து மேற்கே 18 கி.மீட்டர் தொலைவு. உறையூர் நந்தவனத்தில் செவ்வந்தி மலரைத் திருடிய மன்னன் அம் மலர்களைத் தன் மனைவிகளுக்குக் கொடுக்க, அவர்களில் மூத்தவர் மட்டும் பெற்று அணிந்து திருக்கோயில் வர உறையூரில் மண்மாரி பெய்து அனைவரும் இருந்த இடம் தெரியாமல்போக, மலர் பெற்ற அம்மூத்த மனைவி மட்டும் தப்பித்து மேலைத் திருக்காட்டுப்பள்ளிக்குவர, அப்பெண்ணிற்காகப் பெருமான் இறங்கி வெப்பம் தணித்தார் என்பர். கணங்கள் பூசித்தத் தலம். பெருமான் திருஆனைக்காபோல் பள்ளமான நிலையில் காட்சி தருகின்றார். இத்தலம் ஐயாற்று ஏழு ஊரில் சேராது.

வேதனார் வெண்மழு ஏந்தினார் அங்கமுன்
ஓதினார் உமையொரு கூறனார் ஒண்குழைக்
காதினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நாதனார் திருவடி நாளும்நின் றேத்துமே. (3.29.6)

மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே. (5.84.2)

9. திருநெயத்தானம் (தில்லைத்தானம்) - 613203

இறைவன் : நெய்யாடியப்பர்
இறைவி : பாலாம்பிகை
தீர்த்தம் : காவிரி ஆறு
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 50 பாடல்கள்

தில்லைத்தானம் என்பதே இன்றைய வழக்கு. ஐயாற்றிக்கு மேற்கே $1\frac{1}{2}$ கி.மீ. சப்தத்தானத்தில் இது ஏழாவது தலம். சரசுவதி பூசித்தத்தலம். தட்சிணாமூர்த்தி நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார். அவர்திருமுன்னே அமர்ந்த கோலத்திலும் தென்முகக் கடவுளை பிரதிஷ்டை செய்துள்ளனர்.

பறையும்பழி பாவம் படு துயரம்பல தீரும்
பிறையும் புனல் அரவும்படு சடைஎம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி அலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில் நெய்த்தானம் எனீரே. (1.15.2)

வானவர் வணங்கியேத்தி வைகலு மலர்கள் தூவத்
தானவர்க் கருள்கள் செய்யுஞ் சங்கரன் செங்கண்ஏற்றன்
தேனமர் பொழில்கள் சூழத் திகழுநெய்த் தானமேய
கூனிள மதியினானைக் கூடுமா றறிகி லேனே (4.37.6)

10. திருப்பெரும்புலியூர் - 613203

இறைவன் : வியாக்கிரபுரீசுரர்
இறைவி : சௌந்திரநாயகி
தீர்த்தம் : கொள்ளிடம் (காவிரியும் உண்டு).
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருநெய்த்தானத்திற்கு 2கி.மீ. தொலைவு பழமையான கோவில். வியாக்கிரபாதர் பூசித்தது. இறைவன் இருக்குமிடத்திலுள்ள கற்கள் தாமரைபோல் வட்டமாய் அமைந்துள்ளன. (இக்கோயிலுக்கு மேற்கில் திருமிசையாழ்வாரின் பெருமையை உலகினருக்கு அறிவித்த பெருமாள் கோயில் உள்ளது.)

தோடுடை யார்குழைக் காதிற் சுடுபொடி யாரன லாடக்
காடுடை யாரெரி வீசுங் கையுடை யார்கடல் சூழ்ந்த
நாடுடை யார்பொரு ளின்பம் நல்லவை நாளு நயந்த
பீடுடை யார்பெரு மானார் பெரும்புலியூர்பிரி யாரே. (2.67.5)

11. வட குரங்காடுதுறை - 614202

இறைவன் : அழகுசடை முடிநாதர்
இறைவி : அழகுசடை முடியம்மை
தீர்த்தம் : காவிரியாறு
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்

(ஐயம்பேட்டை- திருச்சக்கரப்பள்ளியிலிருந்தும் செல்லலாம்)

ஐயாற்றிலிருந்து 10 கி.மீ. வாலி பூசித்த தலம் (தென் குரங்காடுதுறை ஆடுதுறை. சுக்கிரீவன் வழிபட்டது.) நடராசர் உருவம், சிவகாமியம்மை உருவம் கற்சிலைகளில் உள்ளன. கர்ப்பிணி ஒருத்தியின் நீர் வேட்கையைத் தீர்க்கத் தென்னங்குலையைப் பெருமான் வளைத்துக் கொடுத்ததால் 'குலை வணங்கீசுவரர்' என்ற பெயரும் உண்டு.

நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடல்க
வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்
ஏலமோ டிலையில வங்கமே யிஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை யடைகுரங் காடுதுறையே. (3.91.8)

12. திருக்கானூர் - 613105

இறைவன் : செம்மேனிநாதர், கரும்பேசுவரர்
இறைவி : சிவயோகநாயகி, சௌந்திரநாயகி
பாடியோர் : திருஞானசம்பந்தர்: 11. அப்பர்: 9 பாடல்கள்.

சுந்தரர் ஊர்த்தொகையில் 'கானூர்க்கட்டியே' (5) என்பார். திருக்காட்டுப் பள்ளிக் கடைத்தெருவில் பிரபலமாய் விளங்கும் முருகன் திருக்கோயில் சிவாச்சாரியார் (கோயிலருகே வீடு. சிவத்திரு. செம்மேனி நாதன் திருக்கானூர் இறைவன் திருப்பெயர்) அவரை அணுக வேண்டும். அவரே பரம்பரை பரம்பரையாக திருக்கோயில் பணியை மேற்கொண்டு விளங்குகின்றனர். இவரே சிரமம் பாராது கோயிலுக்கு அழைத்துச் செல்கின்றார்.

திருக்காட்டுப்பள்ளி-திருவையாறு நெடுஞ்சாலையில் விஷ்ணம் பேட்டைக்குச் செல்லும் தனிச்சாலையில் சுமார் 3 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். கடைசிப் பாதை மண்ணாக உள்ளது. கொள்ளிடக்கரை, பனங் காடு. பெருமான் மக்கள் சந்தடிக்கு அஞ்சித் தனித்து உறைவார் போல் உள்ளார். நல்ல அழகிய கோயில். அதிகமான மணல்மேடுகள் காணப்படுகின்றன. இப்பகுதி 'மணல் மேடு' எனவும் வழங்கப் படுகின்றது. இங்கிருந்து அரைகிலோ மீட்டர் திருக்கோயில். உமையம்மை சிவயோகம் செய்து கொண்டிருக்கும் பொழுது சிவபிரான் அக்கினி வடிவாய்க் காட்சி தந்த தலம்.

அந்தமாதி அயனும்மாலும் ஆர்க்கும் அறிவரியான்
சிந்தையுள்ளும் நாவின்மேலும் சென்னியு மன்னினான்
வந்தென்னுள்ளம் புகுந்துமாலை காலை யாடுவான்
கந்தமல்கு கானூர்மேய எந்தை பெம்மானே (1.73.9)

நீரும் பாரம் நெருப்பும் அருக்கனும்
காரும் மாருதம் கானூர் முளைத்தவன்
சேர்வும் ஒன்றுஅறி யாது திசைதிசை
ஓர்வும் என்றிலர் ஓடித் திரிவரே (5.76.7)

3. தஞ்சை

1. திருப்புள்ள மங்கை (பசுபதி கோயில்)
2. திருச்சக்கரப்பள்ளி (ஐயன்பேட்டை)
3. திருப்பாலைத்துறை
4. திருக்கருகாவூர்
5. திட்டை
6. அரதைப் பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்)
7. அவளிவநல்லூர்
8. பரிதிநியமம்

1. திருப்புள்ள மங்கை (பசுபதி கோயில்) - 614206

இறைவன் : ஆலந்தரித்த ஈசுவரர்; பசுபதி நாதர்
இறைவி : அல்லியங்கோதை; பால்வளை நாயகி.
தீர்த்தம் : சிவதீர்த்தம், காவிரியாறு
பாடியவர் : திருஞானசம்பந்தர் - 11 பாடல்கள்

தஞ்சை-கும்பகோணம் செல்லும் பேருந்து சாலையில் பசுபதி கோயில் நிறுத்தத்தில் இறங்கி அங்கே உள்ள அறிவிப்புப் பலகை பார்த்து $2^1/_2$ கி.மீட்டர் உள் செல்ல வேண்டும். தஞ்சையிலிருந்து நகரப்பேருந்து வசதி உண்டு. புள்-பறவை. திருக்கோயிலிலுள்ள கோபுரத்தில் கழுகுகள் தங்கி வாழ்கின்றன. புள்ள மங்கை என்ற பெயருக்கு இது ஒரு குறிப்பு எனலாம். பாற்கடலை அசுரர்களும் தேவர்களும் கடைந்த பொழுது முதன் முதலில் வெளிவந்த ஆலகால நஞ்சினை எடுத்துச் சிவபிரான் உண்டு தன் மிடற்றில் அடக்கிய ஊர். ஆலந்துறை என்ற பெயரும் உண்டு. சக்கரப்பள்ளியைச் சுற்றியுள்ள ஏழு ஊர்களில் இதுவும் ஒன்று. அவையாவன.

புள்ளமங்கை- சாமுண்டி; தாழைமங்கை-மகேந்திரி;
பசுபதிமங்கை-வாராகி; நந்திமங்கை-வைஷ்ணவி;
சூலமங்கை-கௌமாரி; அரிமங்கை- மாகேசுவரி; சக்கரப்பள்ளி-பிராமி.

கறையார்மிட(று) உடையான்கமழ் கொன்றைச்சடை முடிமேல்
பொறையார்தரு கங்கைப்புன லுடையான்புற மங்கைச்
சிறையார்தரு களிவண்டறை பொழில்சூழ்திரு ஆலந்
துறையானவன் நறையார்கழல் தொழுமின்துதி செய்தே. (1.16.3)

2. திருச்சக்கரப்பள்ளி (ஐயன்பேட்டை)-614201

இறைவன் : ஆலந்துறைநாதர்
இறைவி : அல்லியங்கோதை, தேவநாயகி
தீர்த்தம் : காவிரியாறு, காகதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

பசுபதி கோயிலுக்குக் கிழக்கே $2^1/_2$ கி.மீ. தஞ்சையிலிருந்து நகரப் பேருந்தும் உண்டு. கோயிலடி நிறுத்தத்தில் இறங்கி கிழக்கே 15 அடி நடக்க சாலையில் சக்கரப்பள்ளிக் கோயிலின் பெயர் வளைவு பார்த்து அதனுள் 20அடி செல்லத் திருக்கோயில். கோயிலைச் சுற்றி அநேகமாய் முகமதியரே வாழ்கின்றனர். இந்திரன் மகனான சயந்தனும், தேவர்களும் பூசித்தத்தலம். திருமால் பெருமானை வணங்கிப் பூசித்துச் சக்கரம் பெற்றதால் 'சக்கரப்பள்ளி' எனப் பெயர் பெற்றது. இதனைத் தேவாரமும் ''வண்சக்கர மாலுறைப்பா வடிபோற்றக் கொடுத்த பள்ளி'' எனக் குறிக்கும். விநாயகர் மற்றும் பிற வடிவங்கள் கவினுறகாட்சியாய் உள்ளன. (இங்கிருந்தும் வட குரங்காடுதுறை (ஐயாறு)க்குச் செல்லலாம்.)

மின்னினார் சடைமிசை விரிகதிர் மதியமும்
பொன்னினார் கொன்றையும் பொறிகிளர் அரவமும்
துன்னினார் உலகெலாம் தொழுதெழ நான்மறை
தன்னினார் வளநகர் சக்கரப் பள்ளியே. (3.27.3)

3. திருப்பாலைத்துறை - 614202

இறைவன் : பாலைவனநாதர்
இறைவி : தவள வெண்ணகையம்மை
தீர்த்தம் : காவிரியாறு
பாடியவர் : அப்பர் 11 பாடல்கள்.

தஞ்சையிலிருந்து பசுபதிகோயில், ஐயன்பேட்டை, பாபநாசம் இதன் பின் பாலைத்துறை. பாபநாசமும் பாலைத்துறையும் இரட்டை ஊர்கள். சாலையருகே திருக்கோயில். பெரியகோயில். கோயிலின் நுழை வாயிலருகே அக்காலத்தில் 3000 கலம் நெல் கொட்டி வைத்தற்குரிய செங்கல்கட்டடத்தாலான பெரிய நெற்களஞ்சியத்தைக் காணலாம். அக்களஞ்சியம் நன்றாக பராமரிக்கப்பட வேண்டும். பேணுவாரின்றி கிடக்கின்ற அரிய பொக்கிஷம். தாருகா முனிவர்கள் ஏவிய புலியைச் சிவபிரான் தடுத்து உரித்து அதன் தோலை இடையில் ஆடையாக உடுத்திய

தலம். வசிட்டர், இராமர், இலக்குவன், சீதை, கௌமியர், அருச்சுனன் முதலியோர் வணங்கிய தலம். (இதன் அருகே 108 சிவாலயக் கோயில் உள்ளது. கண்டு மகிழ்க).

கவள மாகளிற் றின்உரி போர்த்தவர்
தவள வெண்ணகை மங்கையொர் பங்கினர்
திவள வானவர் போற்றித் திசைதொழும்
பவள மேனியர் பாலைத் துறையரே (5.51.2)

4. திருக்கருகாவூர் - 614102

இறைவன் : முல்லைவனேசுவரர்
இறைவி : கரும்பனையாளம்மை; கரும்பன வல்லியம்மை
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 11 பாடல்கள்

தஞ்சை, கும்பகோணம் போன்ற ஊர்களிலிருந்து நகரப் பேருந்து வசதி உண்டு. பெரியகோவில். மக்கட்பேறு அற்றவர் சென்று வர மக்களைப் பெறுவர். ஆதரவற்ற அனாதையான ஒருத்தியின் கருவினைக் காத்த படியால் 'திருக்கருகாவூர்' என்ற பெயரும், அம்மைக்கு 'கர்ப்ப ரட்சகி' என்ற பெயரும் வழங்கலாயின. பெருமான்மீது முல்லைக்கொடி சுற்றிய அடையாளம் உள்ளது. பிருதுவிலிங்கம் சந்திரன் பூசித்தது.

பஞ்ச ஆரண்யத் தலங்கள்

ஆரண்யம்	தலம்	தரிசிக்க வேண்டிய பொழுது
1. முல்லை வனம்	திருக்கருகாவூர்	அதிகாலை
2. பாதிரி வனம்	அவளிவநல்லூர்	காலை
3. வன்னி வனம்	அரதைப் பெரும்பாழி (அரித்துவார மங்கலம்)	மதியம்
4. பூளை வனம்	இரும்பூளை (ஆலங்குடி)	மாலை
5. வில்வ வனம்	கொள்ளம்பூதூர்	இரவு

விநாயகர், நந்தி, இலிங்கம் மூன்றும் சுயம்புவாம்.

மாசில் தொண்டர்மலர் கொண்டு வணங்கிட
ஆசை யாரஅருள் நல்கிய செல்வத்தர்
காய்சி னத்தவிடை யார்கரு காவூரெம்
ஈசர் வண்ணம்எரி யும்எரி வண்ணமே. (3.46.6)

குருகாம் வயிரமாம் கூறும் நாளாம்
கொள்ளும் கிழமையாம் கோளே தானாம்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணாம்
ஒருகால் உமையாளோர் பாக னுமாம்
உள்நின்ற நாவிற்(கு) உரையா டியாம்
கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும்
கண்ணாம் கருகாவூர் எந்தை தானே. (6.15.1)

5. தென் குடித்திட்டை (திட்டை) - 614206

இறைவன் : பசுபதீசுரர்
இறைவி : உலக நாயகியம்மை
தீர்த்தம் : சக்கரதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

தஞ்சைக்கு வடகிழக்கே 9 கி.மீட்டர். தஞ்சையிலிருந்து நகரப்பேருந்து வசதி உண்டு. (தஞ்சை- கும்பகோணம் சாலையில் தஞ்சையிலிருந்து 6 கி.மீட்டர் தொலைவில் திட்டைக்குச் சாலை பிரிகிறது. அவ்வழி சென்றால் ஆவூர், சக்திமுத்தம், பட்டீஸ்வரம் செல்லலாம்) வெண்ணாறு, வெட்டாறு இவற்றுக்கிடையில் திட்டாய் இருப்பதால் 'திட்டை' எனப்பெயர் பெற்றது. சிறிய கோயில். பெருமான் உறையும் கருவறையின் மூலத்தானத்தின் மேலிருந்து 35 மணித்துளிகளுக்கு ஒருமுறை நீர்ச் சொட்டு விழுகிறது. சிவாச்சாரியார் துணை கொண்டு இவ்வற்புதத்தைக் காணலாம். விதானத்தில் சந்திரக் காந்தகல் உள்ளதாகக் கூறுகின்றனர். கோபுரமும் கருங்கல்லால் அமைந்ததே. கௌதமர், ஆதிசேடன், காமதேனு பூசை செய்த திருத்தலம்.

கருவினா லன்றியே கருவெலாம் ஆயவன்
உருவினா லன்றியே உருவுசெய் தானிடம்
பருவநாள் விழவொடும் பாடலோ(டு) ஆடலும்
திருவினார் மிகுபுகழ்த் தென்குடித் திட்டையே (3.35.3)

6. அவளிவ நல்லூர்-612802

இறைவன் : சாட்சிநாயகேசுரர்
இறைவி : சௌந்தரநாயகி
தீர்த்தம் : சந்திரபுஷ்கரணி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11. அப்பர் 10 பாடல்கள்.

தஞ்சை சாலியமங்கலத்திலிருந்த 10கி.மீ. தஞ்சையிலிருந்து பேருந்து வசதி உண்டு. கோயில் சிவாச்சாரியார் ஒருவர் தான் தன் ஆதி சைவகுலத்தில் தோன்றிய மூத்த மகள் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்ட பின்னர், தீர்த்த யாத்திரை சென்றார். பின்னர் திரும்பி வரும் போது அவர் மனைவி அம்மைநோய் கண்டு கண்களை இழந்திருந்தாள். வந்த சிவாச்சாரியாரோ மூத்தவளின் தங்கையே தன் மனைவியென சாதித்தார். பெருமான் உண்மையை உரைக்க 'உன் மனைவி அவளே இவள்' எனச் சான்றுகூறி அவளின் கண்ணொளியை மீண்டும் கொடுத் தருளினார். அவ்வழக்கால் இவ்வூர் 'அவள் இவள் நல்லூர்' என வழங்கலாயிற்று.

நீறுடைய மார்பில்இம வான்மகளொர் பாகம்நிலை செய்து
கூறுடைய வேடமொடு கூடியழ காயதொரு கோலம்
ஏறுடைய ரேனுமிடு காடிரவில் நின்றுநட மாடும்
ஆறுடைய வார்சடையி னான்உறைவ தவளிவணல் லூரே. (3.82.3)

நன்மைதான் அறிய மாட்டான் நடுவிலா அரக்கர் கோமான்
வன்மையே கருதிச்சென்று வலிதனைச் செலுத்த லுற்றுக்
கன்மையான் மலையை யோடிக் கருதித்தான எடுத்து வாயால்
அன்மையோ வென்ன வைத்தார் அவளிவ ணல்லூ ராரே. (4.59.6)

7. திருஅரதைப் பெரும்பாழி
(அரித்துவாரமங்கலம்) - 612802

இறைவன் : பாதாளேசுரர்
இறைவி : அலங்காரநாயகி
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

தஞ்சைக்கு கிழக்கே 14 கி.மீ. தொலைவிலுள்ள சாலியமங்கலம் சென்று (தஞ்சை நீடாமங்கலம் பாதை) அங்கிருந்து அவளிவநல்லூர் சென்று $1^1/_2$ கி.மீட்டா கிழக்கே சென்றால் இவ்வூரை அடையலாம்.

தஞ்சையிலிருந்து பேருந்து வசதி உண்டு. பெருமான் சந்நிதிக்கு முன் சுரங்கம் ஒன்று கல்லால் மூடப்பட்டுள்ளது. இப்பெருங்குழி, திருமால் பன்றிவுரு எடுத்து நிலத்தைத் தோண்டிச் சென்றதாகவும் இறைவன் வராகத்தின் கொம்பினை முறித்துத் தம் மார்பில் அணிந்ததாகவும் கூறுவர்.

மறையர்வா யின்மொழி மானாடு வெண்மழுக்
கறைகொள்சூ லம்முடைக் கையர்கா ரார்தரும்
நறைகொள்கொன் றைநயந் தார்கரும் சென்னிமேல்
பிறையார்கோ யில்லர தைப்பெரும் பாழியே. (3.30.5)

8. பரிதிநியமம் - 614904

இறைவன் : பரிதியப்பர்
இறைவி : மங்கள நாயகி
தீர்த்தம் : சூரியதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

தஞ்சை சாலியமங்கலத்திற்குத் தென்மேற்கு 13 கி.மீ. தஞ்சையிலிருந்து ஒரத்தநாடு போகும் வழியில் 13 கி.மீ உள்ள உழுவூருக்குக் கிழக்கே 3 கி.மீ. தஞ்சையிலிருந்து நகரப்பேருந்து உண்டு. பரிதிவனம், பரிதிக்காடு, பரிதிகேசுவரம் போன்ற பெயர்களும் உண்டு. சூரியன் பூசித்தத் தலம். பங்குனி 18, 19, 20ஆம் நாள்களில் காலை 6.30 மணி அளவில் சூரியனின் ஒளிக்கதிர்கள் பெருமான் மேல்படுகின்ற. சித்தப்பிரமை, மனஉளைச்சல் போன்ற பிணிகள் இத்திருக்கே ல் சென்றுவர நீங்கும். தமிழகத்தில் சூரியன் வழிபட்டத் தலங்கள. 1.பரிதிநியமம் 2. தலைஞாயிறு 3. திருச்சிறுகுடி 4. திருமங்கலக்குடி 5. சென்னை செங்குன்று 6. சூரியனார் கோவில் 7. திருமீயச்சூர்.

நீர்புல்கு புன்சடை நின்றிலங்க நெடுவெண் மதிசூடித்
தார்புல்கு மார்பில்வெண் ணீறணிந்து தலையார் பலிதேர்வார்
ஏர்புல்கு சாய லெழில்கவர்ந்த இறைவர்க்(கு) இடம்போலும்
பார்புல்கு தொல்புக ழால்விளங்கும் பரிதிந் நியமமே. (3.104.5)



4. கும்பகோணம்

1. திருக்குடமூக்கு (கும்பகோணம் கும்பேசுவரர் திருக்கோயில்)
2. குடந்தைக் கீழ்க்கோட்டம் (நாகேசுவர சுவாமி கோயில்)
3. குடந்தைக் காரோணம் (காசி விசுவநாதர் கோயில்)
4. திருவியலூர் (திருவிசைநல்லூர்)
5. திருந்துதேவன்குடி
6. கொட்டையூர்
7. நாகேச்சரம்
8. திருவலஞ்சுழி
9. பட்டீச்சரம்
10. சத்திமுற்றம்
11. ஆவூர்
12. பழையாறை
13. கலையநல்லூர் (சாக்கோட்டை)
14. மருந்தாநல்லூர்
15. அரிசிற்கரைப் புத்தூர் (அளகாபுத்தூர்)
16. நறையூர் சித்தீச்சரம்
17. பேணுபெருந்துறை
18. சிவபுரம்
19. திருநல்லம் (கோனேரிராஜபுரம்)
20. திருச்சேறை
21. இன்னம்பர்
22. திருப்புறம்பயம்
23. விசயமங்கை
24. திருவைகாவூர்
25. திருநல்லூர்

1. திருக்குடமூக்கு - 612001

இறைவன் : கும்பேசுரர்
இறைவி : மங்களநாயகி
தீர்த்தம் : காவிரியாறு, மகாமகக்குளம்,
தலவிருட்சம்: வன்னி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 1 பாடல்.

கும்பகோணமே திருக்குடமூக்காம். தமிழகத்தில் திருக்கோயில்கள் மிகுந்த நகரங்கள் இரண்டு 1. கும்பகோணம் 2. காஞ்சிபுரம். ஸ்ரீ கும்பேச்சுரர் திருக்கோயிலே திருக்குடமூக்காம். நீண்டகன்ற பெரிய கோயில்.

கும்பகோணம் என்றாலே மகாமகம் நினைவிற்கு வருதல் இயல்பே! நீண்டகன்ற மகாமகக்குளம். பன்னிரண்டாண்டிற்கு ஒருமுறை இப் பெருமகாமகம் நடைபெறும். ஏனைய ஆண்டுகளில் மாசி மகத்தன்றும் ஸ்ரீகும்பேசுரர் திருக்குளம் வந்து தீர்த்தவாரி செய்வர். அன்றும் பத்தாயிரம் மக்கள் புனித நீராடி மகிழ்வர். புனித குளத்தில் தீர்த்தவாரி தருபவர் ஸ்ரீகும்பேசுவரரே! காலையில் சூரியனுக்கும், மாலையில் சந்திரனுக்கும் தீபாராதனை நிகழ்கின்றது. மங்களநாயகி சந்நிதி பெருஞ்சிறப்புடையது.

வடிவுடை வாள் தடங்கண் உமை அஞ்சவோர் வாரணத்தைப்
பொடியணி மேனிமூட வுரிகொண்டவன் புன்சடையான்
கொடிநெடு மாடமொங்குங் குழகன்குட மூக்கிடமா
இடிபடு வானமேத்த இருந் தானவன் எம்மிறையே. 3.59.5

நக்க ரையனை நாடொறும் நன்னெஞ்சே
வக்க ரையுறை வானை வணங்கு நீ
அக்க ரையோ டரவரை யார்த்தவன்
கொக்க ரையுடை யான்குட மூக்கிலே. 5.22.5

2. குடந்தைக் கீழ்க்கோட்டம் - 612001

இறைவன் : நாகேசுவர சுவாமி
இறைவி : பெரியநாயகி அம்மை
தீர்த்தம் : மகாமகக்குளம்
பாடியவர் : அப்பர் 11 பாடல்கள்.

குடந்தை நகரின் மையத்தின் அமைந்துள்ள நாகேசுவர சுவாமி கோயிலே குடந்தைக் கீழ்க்கோட்டமாம். பெரிய கோயில். கோயில் நுழைவாயிலின் அருகேவுள்ள காளிசந்நிதி மக்களால் போற்றப்படுகிறது. மாரியம்மன் சந்நிதியும் அப்படியே! நடராசப் பெருமான் சந்நிதி வெகு சிறப்பு. ஆடல்வல்லான் கோனேரிராஜபுரம் (திருநல்லம்) நடராசர் அமைப்பில் முக்கால் பங்கு இருப்பர். ஆதிசேடனும், சூரியனும் பூசித்த தலம். ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் 11, 12, 13 நாட்களின் காலையில் கதிரவன் ஒளி இறைவன் மேல்படுகிறது.

தக்கனது பெருவேள்வி தகர்த்தார் போலுஞ்
சந்திரனைக் கலைகவர்ந்து தரித்தார் போலும்
செக்கரொளி பவளவொளி மின்னின்சோதி செழுஞ்
சுடர்த்தீ ஞாயிறெனச் செய்யர் போலும்
மக்கதிறல் மறையவரால் விளங்கு வேள்வி
மிகுபுகைபோய் விண்பொழியக் கழனி யெல்லாம்
கொக்கினியி கனிசிதறித் தேறல் பாயுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே. (6.75.4)

3. குடந்தைக் காரோணம் - 612001

இறைவன் : காசி விசுவநாதர்
இறைவி : காசி விசாலாட்சி
தீர்த்தம் : காசிபதி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

மகாமகக்குளத்தின் வடகரையிலுள்ள காசுவிசுவநாதர் கோயிலே குடந்தைக் காரோணமாம். நவநதிகளும், நவகன்னிகைகளும் பூசித்தத் தலம். அவர்களின் உருவங்கள் கோயிலினுள் உள்ளன.

முடியார் மன்னர் மடமான் விழியார் மூவுலகும் மேத்தும்
படியார் பவள வாயார்பலரும் பரவிப் பணிந்தேத்தக்
கொடியார் விடையார் மாடவீதிக் குடந்தைக் குழகாருங்
கடியார் சோலைக் கலவமயிலாக காரோணத்தாரே. 1.72.2

4. திருவியலூர் (திரு விசைநல்லூர்) - 612005

இறைவன் : யோகாநந்தர்
இறைவி : சௌந்திரநாயகி
தீர்த்தம் : சடாயுதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

கும்பகோணத்திற்குக் கிழக்கே 6 கி.மீ. இன்று திருவிசைநல்லூர் என்று வழங்கப்படுகிறது. திருவிசைநல்லூர் 'ஐயாவாள்' மிகப் பிரசித்தி. அவரிடம் ஊரின் உள் உள்ளது. திருமங்கலக்குடித் திருக்கோயில் திருப்பணி செய்து இறந்து போன ஓர் அடியாரை இத்தலத்திற்குக் கொண்டு வரும்போது மங்கலக்குடி இறைவியின் திருவருளால் உயிர்த்தெழுந்தார் என்பர். பெரியகோயில். நான்முகன் விஷ்ணுசர்மா என்பவருக்கு மகனாகப் பிறந்த ஏழுபேருடன் சிவராத்திரியன்று இலிங்க

மூர்த்திக்குப் புகுந்தனர். அவ்வெண்மருடைய சடைகள் இன்றும் பெருமான் திருமுடியில் காணப்படுகின்றன. சிவராத்திரிதோறும் அகத்தியர் பூசிப்பதாக ஐதீகம். 'விரிநீர் வியலூரே' என்று திருஞான சம்பந்தப் பெருமான் பாடியதற்கேற்ப ஊரில் எங்கு நோக்கினும் நீரும், வளமும் மிகுந்து காணப்படுகின்றது.

செம்மென்சடை யவைதாழ்வுற மடவார்மனை தோறும்
பெய்மின்பலி யெனநின்றிசை பகர்வாரவ ரிடமாம்
உம்மென்றெழும் அருவித்திரள் வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல் விரிநீர்விய லூரே. (1.13.3)

5. திருந்துதேவன் குடி - 612105

இறைவன் : கர்க்கடேசுவரர்
இறைவி : அருமருந்தம்மை
தீர்த்தம் : பங்கயதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

திருவிசைநல்லூர் கோயிலிலிருந்து சுமார் $1^1/_2$ கி.மீ. இங்கு ஊர் இல்லை. இடிந்த நிலையில் சிறிய கோவில் மட்டுமே காணப்படுகிறது. சுற்றி வயல்கள். கோயிலைச் சுற்றி ஓர் ஓடை போன்ற பொய்கை உள்ளது. நண்டு பூசித்த ஊர் (கர்க்கடகம்-நண்டு). நண்டு பூசை செய்த நிலை ஒரு கற்றூணில் காணப்படுகிறது. ஒரே வண்ணம் கொண்ட பசுக்களின் பத்துக் கலப்பால் சேர்த்து இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்ய லிங்கத்தின் முடிமீது பொன்னிறமுடைய ஒரு நண்டு ஊர்தல் போன்ற காட்சி கிட்டும். லிங்கப் பெருமான் உருவம் முன்பக்கத்தில் வெட்டுப்பட்டு இருபகுதிகளாகக் காணப்படுகின்றது. மன்னனொருவன் பிணியால் பீடிக்கப்பட்டு வருந்த, இறைவன் மூப்பான மருத்துவர் வேடந்தாங்கி மருந்து கொடுத்தார். மேலும் மன்னன் மருந்து வேண்ட மருத்துவர் இங்கு அழைத்துவந்து லிங்கம் இருக்கும் இடத்தைக் காட்டி வெட்டச் சொல்ல அவனும் வெட்டினான். குருதி வெளிப்பட்டது. வந்த மருத்துவர் மறைந்தார். பெருமான் வெட்டுண்ட நிலை கொண்டார்.

மருந்துவேண் டில்லிவை மந்திரங் கள்ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்ளிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே. (3.25.1)

6. கொட்டையூர் - 612002

இறைவன் : கோடீசுரர்
இறைவி : பந்தாடு நாயகி
தீர்த்தம் : கோடி தீர்த்தம்
விருட்சம் : கொட்டை
பாடியவர் : அப்பர் 10 பாடல்கள்.

கும்பகோணம் நகருக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவு. காவிரியைத் தாண்டிச் செல்ல வேண்டும். திருவையாறு- கும்பகோணம் பேருந்து வழியில் வந்தால் வட குரங்காடுதுறை, திருவிசைநல்லூர், திருந்து தேவன்குடி, இவ்வூரான கொட்டையூர் என்ற தலங்களைக் கண்டு வணங்கி மகிழலாம். திருவலஞ்சுழி காவிரியில் இறங்கிய ஏரண்ட முனிவர் இங்கு வெளியே வந்ததாகக் கூறுவர். இவரின் திருவுருவம் கோயிலில் உள்ளது. அப்பர் பெருமான் இத்தலத்துடன் திருவலஞ் சுழியையும் இணைத்துப் பாடியுள்ளார். பண்டு, ஊர் முழுவதும் ஆமணக்குச் செடிகள் அடர்ந்த காடாக இருந்ததாகவும், அக்கொட்டைச் செடியின் கீழ் சிவபிரான் தோன்றினமையால் ஊருக்குக் கொட்டையூர் என்று பெயர் வந்ததாகவும் கூறுவர். சோழமன்னன் ஒருவனுக்கு ஓரிரவில் கோடிலிங்கமாகத் தரிசனம் கொடுத்தமையால் இத்திருக்கோயிலுக்குக் கோடீச்சரம் என்ற பெயரும் வந்தது. கருவறையில் எழுந்தருளியுள்ள பெருமானின் திருமேனியில் பல அநேக சிறிய லிங்கங்கள் அமைந் துள்ளன. (இவ்வூருக்கு மேற்கே 3 கி.மீட்டரில் பிரசித்திபெற்ற முருகன் திருக்கோயிலான சுவாமி மலை உள்ளது)

பொடியாடு மேனிப் புனிதன் கண்டாய்
புட்பாகற் காழி கொடுத்தான் கண்டாய்
இடியார் கடுமுழக்கே ஊர்ந்தான் கண்டாய்
எண்திசைக்கும் விளக்காகி நின்றான் கண்டாய்
மடலார் திரைபுரளுங் காவி ரிவாய்
வலஞ்சுழியின் மேவிய மைந்தன் கண்டாய்
கொடியாடு நெடுமாடக் கொட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. (6.73.4)



7. திருநாகேச்சரம் - 612204

இறைவன்	:	சண்பகாரணியேசுரர்
இறைவி	:	குன்றமுலைநாயகி
தீர்த்தம்	:	நாகதீர்த்தம், சூரியபுட்கரணி
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 22, அப்பர் 30, சுந்தரர் 11 பாடல்கள்.

கும்பகோணத்திற்குக் கிழக்கே 6 கி.மீ. அரவரசனாகிய ஆதிசேடன் பூசித்தத் தலமாதலின் இப்பெயர் பெற்றது. இராகுத்தலம். கும்பகோணத் திலிருந்து நகரப்பேருந்து வசதி உண்டு. (அண்மையில் ஒப்பு இல் அப்பன் என அழைக்கப்படும் திருமால் ஆலயம் பிரசித்தி.) இராகு காலங்களில் இங்கு எழுந்தருளியுள்ள ராகுவிற்குப் பால் அபிஷேகம் செய்ய, அப்பால் கண்டத்திற்குக் கீழே வரும்போது நீலநிறமாக மாறும் அற்புதக் காட்சியை இன்றும் உற்று நோக்கின் கண்டு மகிழலாம். பெரியகோயில் சேக்கிழார் பெருமானின் ஆன்மார்த்த தலம். இதற்குச் சான்றாகத் தம் ஊராகிய குன்றத்தூரில் திருக்கோயில் ஒன்று எழுப்பி அதற்குத் திருநாகேச்சரம் என்றே பெயரிட்டனர். சேக்கிழாரின் திருவுருவமும் கோயிலிலுள்ளது. சுந்தரரின் திருவுருவம் அருகில் பரவையார் திருமேனியும் இங்குள்ளது.

கலைமான் மறியுங் கனலும் மழுவும்
நிலையா கியகை யினனே நிகழும்
நலமா கியநா கேச்சர நகருள்
தலைவா எனவல் வினைதான் அறுமே (2.24.5)

நாவ லம்பெருந் தீவினில் வாழ்பவர்
மேவி வந்து வணங்கி வினையொடு
பாவ மாயின பற்றறு வித்திடும்
தேவர் போற்றிரு நாகேச் சரவரே (5.52.2)

அரைவிரி கோவணத்தோடு அரவார்த்தொரு நான்மறைநூல்
உரைபெரு கவ்வுரைத்தன்று உகந்தருள் செய்ததென்னே
வரைதரு மாமணியும் வரைச்சந்தகி லோடும் உந்தித்
திரைபொரு தண்பழனத் திருநாகேச் சரத்தானே. (7.5)

8. திருவலஞ்சுழி - 612302

இறைவன் : கற்பக நாதேசுரர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : காவிரி
தலவிருட்சம்: வில்வம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 33, அப்பர் 1 பாடல்.

முருகனின் சுவாமி மலைக்கு மிக அருகில், கும்பகோணத்திலிருந்து நகரப்பேருந்து உண்டு. வெள்ளை விநாயகர். இவர் வீற்றிருக்கும் மண்டபம் கலைச் சிறப்புக் கொண்டது. பிலத்திற் சென்றுவிட்ட காவிரியாறு வெளிப்பட ஏரண்ட முனிவர் தம்மையே பலிகொடுக்க; ஆறு மேலேயெழும்பி வலமாகச் சுழித்துக் கொண்டு வந்த காரணத்தால் இவ்வூர் திருவலஞ்சுழி எனப்பட்டது என்பர். இம்முனிவரின் திருவுருவமும் கோயிலில் உள்ளது. அஷ்டபுஜகாளி, பைரவர் சிறப்புடையோர். பெரியகோயில்.

பொன்னிய லுந்திரு மேனிதன்மேற் புரிநூல் பொலிவித்து
மின்னிய லுஞ்சடை தாழவேழ வுரிபோர்த் தரவாட
மன்னிய மாமறை யோர்கள் போற்றும் வலஞ்சுழி வாணர்தம்மேல்
உன்னிய சிந்தையி னீங்ககில்லார்க் குயர்வாம் பிணிபோமே. 3.106.3

அலையார் புனற்கங்கை நங்கை காண
அம்பலத்தில் அருநட்ட மாடி வேடந்
தொலையாத வென்றியார் நின்றி யூரும்
நெடுங்களமும் மேவிவிடை யைமேல் கொண்டு
இலையார் படை கையி லேந்தி யெங்கும்
இமையவரும் உமையவளும் இறைஞ்சி யேத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமா மருவி னாரே. 6.72.1

9. பட்டீச்சரம் - 612703

இறைவன் : பட்டீச்சுரர்
இறைவி : பல்வளை நாயகி
தீர்த்தம் : ஞான தீர்த்தம்
தலவிருட்சம்: வன்னிமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

கும்பகோணத்திற்குத் தெற்கே 6 கி.மீ. நகரப்பேருந்து வசதி உண்டு. அஷ்ட துர்க்கை மிக விசேடம். மகிஷாசுரன் தலைமேல் காலை ஊன்றி

சிம்ம வாகனத்தில் அற்புதக் காட்சி. நந்திகள் பெருமானுக்கு நேராக இல்லாமல் விலகி உள்ளன (திருப்பூந்துருத்திபோல்). திருஞானசம்பந்தர் வருகைக் காண பெருமான் நந்திகளை விலகச் சொன்னாராம். இராமர் வழிபட்ட தலம். *(பிளசர் இருப்பின் பட்டீச்சரம், ஆவூர், பழையாறை, குருத்தலமான திட்டை போன்ற தலங்களைக் கண்டு வணங்கி மகிழலாம்.)*

பிறவிபிணி மூப்பினொடு நீங்கியிமை
யோருலகு பேணலுறுவார்
துறவியெனு முள்ளமுடை யார்கள்கொடி
வீழியழ காயதொகுசீர்
இறைவனுறை பட்டிசர மேத்தியெழு
வார்கள்வினை யேதுமிலவாய்
நறவவிரை யாலுமொழி யாலும்வழி
பாடுமற வாதவவரே. 3.73.7.

10. சக்திமுற்றம் (சக்தி முத்தம்) - 612703

இறைவன் : சிவக்கொழுந்தீசுவரர்
இறைவி : பெரியநாயகியம்மை
தீர்த்தம் : சூலதீர்த்தம்
பாடியவர் : அப்பர் -10 பாடல்கள்.

பட்டீச்சுரத்திற்கு மிக அருகில் முற்றம்- திறந்தவெளி. சத்திமுத்தம் என்பதே பிரசித்தம். பெருமான் தீ வடிவாக அவதரித்ததால் சிவக் கொழுந்தீசர் எனப்பட்டார். அம்மை இறைவனுக்கு முத்தம் கொடுத்த தலம் என்பர். அம்மை ஒற்றைக் காலைத் தரையில் ஊன்றி மற்றொரு காலை ஆவுடைமீது மடக்கி, தன் இரு கைகளால் லிங்கத்தைத் தழுவி இருக்கும் கோலம் வேறெங்கும் காண இயலாத அற்புதத்திருக்கோலம். கண்டு மகிழ்ந்து வணங்க வேண்டும். இத்திருமேனியைக் கண்டு வணங்குவாரின் திருமணம் தடையின்றி நிகழ்வுறும். பிரிந்தவர் கூடுவர். பிணக்குகள் அறும்.

கோவாய் முடுகி யிடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவார டிச்சுவடு என்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்து உறையுஞ் சிவக்கொழுந்தே. 4.96.1

வெம்மை நமன்தமர் மிக்குவிரவி விழுப்பதன்முன்
இம்மைஉன் தாள்என்றன் நெஞ்சத்து எழுதிவை யீங்கிகழில்
அம்மை அடியேற்கு அருளுதி என்பதிங்கு யாரறிவார்
செம்மை தருசத்தி முற்றத்து உறையுஞ் சிவக்கொழுந்தே. 4.96.6

11. திரு ஆவூர் பசுபதீச்சுரம் (ஆவூர்) - 612701

இறைவன் : பசுபதீச்சுரர்
இறைவி : மங்கள நாயகி
தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
தலவிருட்சம்: அரசமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

பட்டீச்சுரத்திலிருந்து 6கி.மீ. ஊர்ப்பெயர்- ஆவூர், கோயிலின் பெயர்- பசுபதீச்சுரம். பசுக்கள் பூசித்த தலம். இருதேவிமார் உள்ளனர் (மங்கள நாயகி, பங்கயவல்லி) கந்தவேள் வில்லுடன் மிகக் கம்பீரமாக வள்ளி தெய்வயானையுடன் காட்சி தருகின்றான். காணவேண்டிய அற்புதத் திருக்கோலம் (பிளசர் இருப்பின் பட்டீச்சரம், சத்தி முத்தம், பழையாறை வடதளி, ஆவூர், திருவைகாவூர், திட்டை முதலிய தலங்களைத் தரிசிக்கலாம்.)

நீறுடை யார்நெடு மால்வணங்கு நிமிர்சடை
யார்நினை வார்தமுள்ளம்
கூறுடை யாருடை கோவணத்தார் குவலய
மேத்த இருந்தவூராம்
தாறுடை வாழையிற் கூழைமந்தி தருகனி
யுண்டுமிண் டிட்டினத்தைப்
பாறிடப் பாய்ந்துப யிலுமாவூர்ப் பசுபதி
யீச்சரம் பாடு நாவே. 1.8.7

12. பழையாறை வடதளி - 612703

(பழையாறை வடதளிக்குச் செல்லும் முன் பம்பைப் படை எனும் ஊர் அருகே துறையூர்- சிவப்பிரகாச சுவாமிகளின் சமாதிக் கோயில் உள்ளது. கண்டு வணங்கலாம்.)

பட்டீச்சுரத்திலிருந்து 2 கி.மீட்டரிலுள்ள வடதளி, பம்பப்படை எனும் ஊர்களைத் தாண்டி., தெற்கே திரும்பினால் திருமலைராயன் ஆற்றின் பாலத்தைக் கடந்து பழையாறை எனும் ஊரை அடையலாம்.

இறைவன் : தர்மபுரீசுவரர்
இறைவி : விமலநாயகி
தீர்த்தம் : சோமதீர்த்தம்
தலவிருட்சம்: நெல்லிமரம்
பாடியவர் : அப்பர்-10 பாடல்கள்.

ஆலயம் மேட்டின் மேலுள்ளது. மாடக்கோயில். அமர்நீதி நாயனார் வாழ்ந்த தலம். சந்திரன் பூசித்தது. இறைவன், இறைவி வடிவங்களைத் தவிர வேறு விக்கிரகங்கள் ஒன்றும் இல்லை.

குண்ட ரைக்குண மில்லரைக் கூறையில்
மிண்ட ரைத்துரந் தவிம லன்றனை
அண்ட ரைப்பழை யாறை வடதளிக்
கண்ட ரைத்தொழுது உய்ந்தன கைகளே. 5.58.3

13. கலய நல்லூர் (சாக்கோட்டை) - 612401

இறைவன் : அமிர்தகலேசுரர்
இறைவி : அமிர்தவல்லி
தீர்த்தம் : நால்வேத தீர்த்தம்
தலவிருட்சம்: வன்னி
பாடியவர் : சுந்தரர் 11 பாடல்கள்.

கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலம் போகும் சாலையில் 4 கி.மீ. அரிசிலாற்றின் தென்கரையிலுள்ளது. நகரப்பேருந்து வசதி உண்டு. சிறிய கோயில். இத்தலத்திற்குத் தென்கிழக்கே $1^1/_2$ கி.மீ. திருக்கருக்குடி உள்ளது (மருதாந்த நல்லூர்). உயிர்களைச் சேமித்த கலயம் பிரளயத்தில் தங்கியதால் இத்தலம் இப்பெயர் பெற்றது என்பர்.

இண்டைமலர் கொண்டுமணல் இலிங்கமது இயற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி யண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கனதூர் வினவில்
மண்டபமுங் கோபுரமும் மாளிகைசூ ளிகையும்
மறையொலியும் விழவொலியும் மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கண் மனம்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே. 7.3

14. திருக்கருக்குடி (மருதாந்த நல்லூர்) - 612402

இறைவன் : சற்குணலிங்கேசுவரர்
இறைவி : சர்வாலங் கிருதமின்னம்மை
தீர்த்தம் : ஏமதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

இராமன் பூசித்து வணங்கியதாகக் கூறுவர். இறைவன், இறைவி உருவங்கள் மிகச் சிறியன. பெருமான் மணலால் ஆனவர். இடிபாடுகள் அதிகம். திருக்குடமுழக்குச் செய்ய வேண்டும்.

ஊனுடைப் பிறவியை அறுக்க உன்னுவீர்
கானிடை ஆடலான் பயில்க ருக்குடிக்
கோனுயர் கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழுகழல் வாழ்த்தி வாழ்மினே. 3.21.4

15. திரு அரிசிற்கரைப் புத்தூர் - 612401
(அளகாபுத்தூர்)

இறைவன் : படிக்காசு அளித்த ஈசுவரர்
இறைவி : அழகாம்பிகை
தீர்த்தம் : அரிசிலாறு
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10, சுந்தரர் 11 பாடல்கள்.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்காக 7 கி.மீ. மேலும் 2 கி.மீ. சென்றால் திருநறையூர் சித்தீச்சுரம். கும்பகோணம்- நாச்சியார் கோயில் சாலையில் உள்ளது. நகரப்பேருந்து உண்டு. சாலையின் ஓரத்தில் கோயில் அழகிய சிறிய கோயில். புகழ்த்துணை நாயனார் இறைவனைப் பூசித்து முக்தி அடைந்த தலம். இக்கோயிலிலுள்ள முருகன் தன் கரங்களில் சங்கு சக்கரம் பெற்றுள்ளான்.

வள்ளி முலைதோய் குமரன் தாதை வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன்று உடையான் மேவுமூர்
தெள்ளி வருநீ ரரிசில் தென்பாற் சிறைவண்டும்
புள்ளும் மலிபூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே. 2.63.6

அரிசி லின்கறை மேலனி யார்தரு
புரிசை நந்திருப் புத்தூர்ப் புனிதனைப்
பரிசொ டும்பர விப்பணி வார்க்கெலாம்
துரிசில் நன்னெறி தோன்றிடுங் காண்மினே. 5.61.3

அகத்தடி மைசெய்யும் அந்தணன்தான்
அரிசிற் புனல்கொண்டு உவந்தாட்டு கின்றான்
மிகத்தளர் வெய்திக் குடத்தையும் நும்முடி
மேல்விழுத் திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்கு நித்தற் படியும்
வருமென்று ஒருகாசி னைநின்ற நன்றிப்
புகழ்த்துணை கைபுகச் செய்து கந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே. 7.6

16. திருநறையூர் சித்தீச்சரம் - 612102

இறைவன் : சித்த நாதேசுவரர்
இறைவி : அழகாம்பிகை
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: பவளமல்லிகை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 33, சுந்தரர் 11 பாடல்கள்.

பிரசித்தி பெற்ற நாச்சியார் கோவிலிலிருந்து 3/4 கி.மீ. இங்கிருந்து பேணுபெருந்துறையான திருப்பந்துறை 2 கி.மீ. கும்பகோணத்திலிருந்து நகரப்பேருந்து வசதி உண்டு. பௌர்ணமியன்று இத்திருக்கோவிலுள்ள சித்தர் சிலைக்குப் பால் அபிஷேகம் நடைபெறும். அப்பாலைப் பருகின் பலப் பிணிகள் நீங்கும். அன்று நல்ல கூட்டம் இருக்கும்.

இவ்வூரிலேயே பிறிதோரிடத்தில் ஒரு சிவாலயம் உள்ளது. (சிதில் அடைந்த நிலை) இக்கோயில் சனி சந்நிதி மிக விசேடம். சனி தன் குடும்பத்தோடு காட்சியளிக்கின்றார். இடப்பக்கம் மக்கள்; (குளிகன் மந்தா) வலப்பக்கம் மனைவி ஜேஷ்டா. தசரதனும் காட்சி தருகின்றார் சமீபகாலமாக இக்கோயில் பிரசித்தி பெற்று வருகின்றது.

ஆழி யானும் மலரின் உறைவானும்
ஊழி நாடி உணராத் திரிந்துமேல்
சூழ நேட வெரியா மொருவன்சீர்
நீழல் சித்தீச் சரமே நினைநெஞ்சே. 1.29.!

நீரும் மலரும் நிலவுஞ் சடைமேல்
ஊரும் அரவம் உடையான் இடமாம்
வாரும் அருவி மணிபொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச் சரமே. 7.

17. பேணுபெருந்துறை - 612602 (திருப்பந்துறை)

இறைவன் : சிவானந்தேசுவரர்
இறைவி : மலையரசி
தீர்த்தம் : மங்களதீர்த்தம்
தலவிருட்சம்: வன்னிமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, மணிவாசகர் இரு இடங்களில்.

நாச்சியார் கோவிலையடுத்த எரவாஞ்சி பாதையில் உள்ளது. சிறிய கோயில். இத்தலத்தில் முருகன் மூகைத் தன்மை நீங்கப்பெற்றதாகக் கூறுவர்.

நிலனொடுவானும் நீரொடுதீயும் வாயுவும் ஆகியோர் ஐந்து
புவனொடுவென்று பொய்ம்மைகள்தீர்ந்த புண்ணியர் வெண்பொடிப்பூசி
நலனொடு தீங்குந் தானலதின்றி நன்கெழு சிந்தைய ராகி
மலனொடுமாக மில்லவர்வாழும் மல்கு பெருந்துறையாரே. 1.42.4.

பெண் ஆளும் பாகனை பேணுபெருந்துறையில். திருவாசகம் 8-10
பின்னானை பிஞ்ஞகனை பேணு பெருந்துறையின். திருவாசகம் 8.19

18. சிவபுரம் - 612401

இறைவன் : சிவபுரநாதர்
இறைவி : சிங்காரவல்லி
தீர்த்தம் : சூர்யதீர்த்தம்
தலவிருட்சம்: சண்பகமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 33, அப்பர் 8 பாடல்கள்.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 5 கி.மீ. திருமால் வராகமாகப் பூசித்தத் தலம்.

மலைமகள் மறுகிட மதகரியைக்
கொலைமல்க வுரிசெய்த குழகன்நகர்
அலைமல்கு மரிசிலி னதனயலே
சிலைமல்கு மதிளணி சிவபுரமே. 1.112.3..

வானவன்காண் வானவர்க்கும் மேலா னான்காண்
    வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி னான்காண்
    ஐயன்காண் கையிலன லேந்தி யாடும்

கானவன்காண் கானவனுக்கு அருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத்தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் தான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெம் செல்வன்தானே. 6.87.1

19. திருவல்லம் (கோனேரி ராஜபுரம்) - 612201

இறைவன் : உமாமகேசுவரர்
இறைவி : மங்களநாயகி
தீர்த்தம் : சக்தி தீர்த்தம்
தலவிருட்சம்: அரசு
பாடியவர் : திருஞானசம்பந்தர், அப்பர் 10 பாடல்கள்.

கருவிலிக் கொட்டிட்டைக் கோயிலிலிருந்து வடகிழக்கில் 2 கி.மீ. திருவீழிமிழலையிலிருந்தும் செல்லலாம். திருவிடைமருதூரிலிந்து தென்கிழக்கே $9^{1}/_{2}$ கி.மீ; திருநீலக் குடியிலிருந்து 2 கி.மீ. (பிளசர், ஆட்டோ மூலம் ஆடுதுறை, திருமங்கலக்குடி, சூரியனார்கோயில், திருக்கோடிக்கா, கஞ்சனூர், நீலக்குடி, திருநல்லம், வைகன் மாடக் கோயில், கோழம்பம் போன்ற தலங்களுக்குச் சென்று வரலாம்.) மேற்குப் பார்த்த சந்நிதி. இத்தல நடராசப் பெருமானின் திருவுருவம் போல் வேறெங்கும் காண முடியாத அற்புதத் திருமேனி. ஏறக் குறைய 6 அடி உயரம்.

அந்த மதியோடு மரவச் சடைதாழ
முந்தி யனலேந்தி முதுகாட்டு எரியாடி
சிந்தித்து எழவல்லார் தீராவினைதீர்க்கும்
நந்தி நமையாள்வான்நல்ல நகரானே. 1.85.3

பொன்னம்பேசிப் பொழுது கழியாதே
துக்கம் தீர்வகை சொல்லுவான் கேண்மினோ
தக்கன்வேள்வி தகர்த்த தழல்வண்ணன்
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே. 5.43.2

20. திருச்சேறை - 612605

இறைவன் : செந்நெறியப்பர்
இறைவி : ஞானவல்லியம்மை
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்
தலவிருட்சம்: மாவிலங்கை
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 19 பாடல்கள்.

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 14 கி.மீ. இவ்வழியில் அளகாபுத்தூர், நறையூர், குடவாசல் போன்ற தலங்கள் உள. குடந்தையிலிருந்தும் திருவாரூரிலிருந்தும் பேருந்து வசதி உண்டு.

உடையார் கோயில் என மக்களால் வழங்கப்படுகிறது. மனிதனுக்குச் செம்மையான நெறியை அளிப்பதால் பெருமான் செந்நெறியப்பர் என வழங்கப்படுகிறார். தக்கன் செய்த வேள்வியில் தான் செய்த தவறுக்குக் கழுவாய் தேட (பிராயச்சித்தம் செய்ய) பல இடங்கள் சென்று வழிபட்டான் கதிரோன். அவன் வழிபட்ட இடங்கள் 126 என்பர். அதில் சரபேசுவரர் திருக்கோயிலும் ஒன்று. ஆண்டுதோறும் மாசி மாத நாட்களில் சரபேசுவரர் திருமேனியிலும் இறைவி ஞானம்பிகையின் திருவடியிலும் அவனின் கதிர்கள் படுகின்றன. அப்போது சிறப்பான பூசைகள் நிகழும். மூலவர் சரபேசுவரர் கருவறைக்குப் பின்புறம் ரினவிமோசன லிங்கேசுவரர் எழுந்தருளியுள்ளார். ரின்-கடன். விமோசனம்- நிவர்த்தி. கடன் தீர்க்கும் பெருமான் அருள் பாலிக்கின்றார். ஒவ்வொரு திங்கட் கிழமையும் திருக்கோயில் காலையிலிருந்து இரவு 10.30 மணிவரை மக்கள் கூட்டம் மிகுந்து காணப்படும். இவரின் வலப்பக்கம் இலிங்கத் திருமேனியுடன் அபிராமி, மார்க்கண்டேயன் சந்நிதி. இடப்பக்கம் பாலமுருகன். கடன் தீர்க்கும் பெருமானை வணங்கிய பின் கஜலட்சுமியை வணங்கல் வேண்டும். இத்திருமகளுக்கு எதிரே சிவ, வைஷ்ணவி, விஷ்ணு என மூன்று துர்க்கைகள் காட்சி தருகின்றனர். அபூர்வக் காட்சி. காலபைரவர் அழகாக எழுந்தருளியுள்ளார். அஷ்டமி திதிகளில் திருமஞ்சனம் செய்து வடமாலை சாற்றி வழிபடுவது மிகச்சிறப்பு. கடன் கொடுத்து அப்பணம் வராதவர்கள் இங்கு தொடர்ந்து மூன்று திங்கட்கிழமைகள் வந்து இறைவனை வேண்ட அப்பணம் வந்து சேரும். தௌமியரிஷி பூசித்தத் தலம். இக்கோயில் எதிரே பிரபலமான சாரநாதன் பெருமாள் கோயில் உள்ளது.

துடிபடு மிடையுடை மடவர லுடனொரு பாகமா
இடிபடு குரலுடை விடையினர் படமுடை யரவினர்
பொடிபடு முருவினர் புலியுரி பொலிதரு மரையினர்
செடிபடு சடைமுடி யடிகள்தம் வளநகர் சேறையே. 3.86.4

அஞ்சையும் அடக்கி ஆற்றல்
உடையனாய் அநேக காலம்
வஞ்சமில் தவத்துள் நின்று
மன்னிய பகீரதற்கு
வெஞ்சின முகங்களாகி
விசையொடு பாயும் கங்கை
செஞ்சடை யேற்றார் சேறைச்
செந்நெறிச் செல்வ னாரே. 4.73.4

21. இன்னம்பர் - 612303

இறைவன் : எழுத்தறிநாதர்
இறைவி : நித்தியக்கல்யாணி
தீர்த்தம் : ஐராவத்தீர்த்தம்
தலவிருட்சம்: சண்பகம், பலா
பாடியோர் : திருஞான சம்பந்தர் 11, அப்பர் 40 பாடல்கள்

சூரியன் வழிபட்டதால் இனன் நம்பர் என்ற பெயரெய்தி பின்னாளில் மருவி இன்னம்பர் என ஆயிற்று. அகத்தியர் பூசித்தது. பெருமான் பெரிய திருமேனியராக விளங்குகின்றார். சிவபிரான் கணக்கராய்ப் பணியாற்றிக் கோயிற் கணக்கை அரசனிடம் ஒப்படைத்த தலம். சிறிய கோவில் ஐராவதம் பூசித்தது. இரண்டு அம்மன் சந்நிதிகள்.

எண்ணரும் புகழுடை யின்னம்பர் மேவிய
தண்ணருஞ் சடைமுடி யீரே
தண்ணருஞ் சடைமுடி யீருமைச் சார்பவர்
விண்ணவ ரடை வுடை யோரே. 3.95.6

சனியும் வெள்ளியும் திங்களும் ஞாயிறும்
முனிவ னாய்முடி பத்துடை யான்றனைக்
கனிய வூன்றிய காரணம் என்கொலோ
இனிய னாய்நின்ற இன்னம்பர் ஈசனே. 5.21.10



22. திருப்புறம்பயம் - 612303

இறைவன் : சாட்சிநாதேசுரர்
இறைவி : கரும்பன்ன சொல்லியம்மை
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: வன்னி (புன்னை என்றும் கூறுவர்)

கும்பகோணம், கொட்டையூரிலிருந்து வடக்கே சுமார் 4 கி.மீ. பிரளயத்திற்குப் புறம்பாய் இருந்தமையால் புறம்பயம் எனப்பட்டது. செட்டிப்பெண் ஒருத்திக்கு இறைவன் சாட்சி சொன்னதால் இறைவன் திருநாமம் சாட்சி நாதர் என்றாயிற்று. புன்னை மரத்திற்கு மேற்பால் 4 லிங்கங்கள் உள்ளன. தட்சிணாமூர்த்திக்கு மேலிடத்தில் சட்டைநாதர் சந்நிதி உள்ளது. திருக்கோயில் அமைந்துள்ள முதல் மண்டபத்தில் விநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். அவரின் திருநாமம் பிரளயங் காத்த பிள்ளையார் என்பதாகும். வெண்மையாக உள்ளார். விநாயக சதுர்த்தி அன்றுதான் விநாயகருக்குத் தேன் அபிஷேகம் நடைபெறும். அபிஷேகிக்கப்படும் தேன் வெளிவராது. பிறநாட்களில் அபிஷேகம் இல்லை. மூவரும் பாடிய தலம். திருவாசகமும் கொண்டது.

விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை
திரிந்தனை குருந்தொசி பெருந்தகையு நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பய மமர்ந்தோய். 2.30.3

ஆகாத நஞ்சுண்ட அந்தி வண்ணர்
ஐந்தலைய மாசுணங்கொண் டம்பொற் றோண்மேல்
ஏகாச மாவிட்டோ டொன்றேந்திவந்
திடுதிருவே பலியென்றார்க் கில்லே புக்கேன்
பாகேதுங் கொள்ளார் பலியுங் கொள்ளார்
பாவியேன் கண்ணுள்ளே பற்றி நோக்கிப்
போகாத வேடத்தார் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 6.13.3

முன்னைச் செய்வினை இம்மையில் வந்து
மூடுமாதலின் முன்னமே
என்னை நீதியக் காதெழுமட
நெஞ்சமேயெந்தை தந்தையூர்
அன்னச் சேவலோடு ஊடிப்பேடைகள்
கூடிச்சேரும் அணிபொழில்
புன்னைக்கன்னி கழிக்கண் நாறும்
புறம்பயந்தொழப் போதுமே. 7.35.7

புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்- 8.2.90

23. விசயமங்கை - 612301

இறைவன் : விசயநாதர்
இறைவி : மங்கைநாயகி
தீர்த்தம் : அர்ச்சுன தீர்த்தம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்.

திறப்புறம்பயத்திலிருந்து 4 கி.மீ. சிறிய கிராமம். சிறிய கோயில் சுவாமி மலையிலிருந்து பேருந்து உண்டு. பட்டவர்த்தி செல்லும் மினி பஸ்ஸில் ஏறி துரும்பூர் பிள்ளையார் கோவில் நிறுத்தத்தில் இறங்கி 2 கி.மீ. நடக்க வேண்டும். அருச்சுனன் தவஞ்செய்து வழிபாடு செய்ததலம்.

மண்ணினை யுண்டவன் மலரின் மேலுறை
அண்ணல்கள் தமக்களப் பரிய அத்தனூர்
தண்ணறுஞ் சாந்தமும் பூவு நீர்கொடு
விண்ணவர் தொழுதெழு விசய மங்கையே 3.17.9

கொள்ளி டக்கரைக் கோவந்த புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விச யமங்கை
உள்ளி டத்துறை கின்ற வுருத்திரன்
கிள்ள டத்தலை யற்ற தயனுக்கே. 5.71.3

24. திருவைகாவூர் - 612304

இறைவ்ன் : வில்வவனேசுரர்
இறைவி : வளைக்கை நாயகியம்மை
தீர்த்தம் : எமதீர்த்தம்
தலவிருட்சம்: வில்வமரம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்

சுவாமி மலையிலிருந்து நகர பஸ் வசதி உண்டு. விசயமங்கை யிலிருந்து மேற்கே 2$^1/_2$ கி.மீ. வில்வவனத்தலம். சிவராத்திரிக்கு மிக முக்கியமான தலம். வேடன் ஒருவன் இரவில் புலிக்கு அஞ்சி வில்வமரம் என்று அறியாது அம்மரத்தில் ஏறினான். புலி கீழே படுத்திருந்தது. வேடன் உறங்காமல் இருக்கவும், மரத்திலிருந்து கீழே விழாதிருப்பதற் காகவும் ஒவ்வோர் இலையாகப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந் தான். கீழே ஒரு சிவலிங்கம் இருக்க அவ்விலைகள் லிங்கத்தின்மீது விழுந்தன. இரவு முழுவதும் கண் துஞ்சாது வில்வப்பத்திரத்தை லிங்கப் பெருமான் மீது அருச்சிக்க பெருமான் அவனுக்கு அருள் பாலித்தார்.

இச்செயல் நடந்தது சிவராத்திரி அன்று. கோயிலில் துவார பாலகர்கள் இல்லை. எல்லா நந்திகளும் திரும்பியே உள்ளன. விக்கிரகங்கள் அழகாகப் காணப்படுகின்றன. முருகன் அற்புதமாக விளங்குகின்றார்.

வேதமொடு வேள்விபல வாயினமி குத்துவிதி யாறுசமயம்
ஓதியுமு ணர்ந்துமுள தேவர்தொழ நின்றருள்செ யொருவனிடமாம்
மேதகைய கேதகைகள் புன்னையொடு ஞாழலவை மிக்க அழகால்
மாதவிம ணங்கமழ வண்டுபல பாடு பொழில் வைகாவிலே. 3.71.5

25. நல்லூர் - 614208

இறைவன் : கலியாணசுந்தரேசுரர்
இறைவி : கலியாணசுந்தரி
தீர்த்தம் : சப்தசாகர தீர்த்தம்
தலவிருட்சம்: வில்வம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 33, அப்பர் 22 பாடல்கள்.

தஞ்சை -கும்பகோணம் பேருந்து வழியில் பாபநாசத்திற்குக் கிழக்கே 'வாழைப்பழக்கடை' என்னும் நிறுத்தத்தில் இறங்கி 2 கி.மீ. தொலைவு. வலங்கைமானின்றும் செல்லாம்.

இலிங்கம் சுயம்பு. தாமிரவண்ணத்தில் உள்ளார். காலையில் கதிரவன் தோன்றி மறைவதற்கு இடைப்பட்ட 30 நாழிகையில் ஆறுநாழிகைக்கு ஒரு முறையென ஐந்து தடவை வண்ணம் மாறுகின்றார். 'நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்' என்ற மணிவாசகர் வாக்கிற்கிணங்கப் பெருமான் மாறுகின்றார். இதனால் இத்தலத்து இறைவர் பஞ்சவர்ணேசுவரர் என்ற காரணப் பெயரால் அழைக்கப்படுகின்றார். ஒவ்வொரு நாளும்,

காலை	6- 8.15	தாமிரவண்ணம்
	8.16-11.30	இளஞ்சிவப்பு
மதியம்	11.31-2.30	உருக்கிய தங்கவண்ணம்
	2.31-5	நவரத்தின பச்சை
மாலை	5.01- 6	கூறமுடியா வண்ணம்.

உத்தராயணத்தில்- செம்மையாகவும்
தட்சிணாயத்தில்- வெண்மையாகவும் மாறும்.

இதே போன்ற நிலையை தொண்டை நாட்டுத் திருத்தலமான திருஊறல் எனப்படும் தக்கோலத்தில் காணலாம்.

அகத்தியருக்குக் கல்யாண காட்சியை இறைவன் காட்டியதால் கல்யாண சுந்தரேசுவரர் என அழைக்கப்படுகின்றார். இத்திருவுருவில் ஆவுடையில் பிரதான லிங்கத்தின் தென்பக்கம் மற்றொரு சிறிய லிங்கம் போன்றுள்ளது. வேறு எங்கும் காண முடியாத அற்புதத் திருக்கோலம். இக்கருவறையில் சுதை அமைப்பில் அமர்ந்த கோலத்தில் பெருமானும் பெருமாட்டியும் வீற்றிருக்க, ஒருபுறம் திருமாலும் நான்முகனும் உள்ளனர். கோயிலின் வாசலில் சப்தசாகரம் என்ற ஏழுகடல் நீரைக் கொண்ட ஏழு கிணறுகள் உள்ளன.

'நல்லூரில் வாவா என்றே அருள் செய்ய' வணங்கி மகிழ்ந்த வாகீசரின் வேண்டுகோளினை ஏற்று 'நீ நல்லூர் வருக' எனப் பணித்தவாறு நன்மை பெருகு அருள் நெறியே வந்து அணைந்த நல்லூரில்

மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும் பொழுதில்
உன்னுடைய நினைபதனை முடிக்கின்றோம் என்று அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

என்று சேக்கிழார் சுவாமிகள் கூறுவதற்கிணங்க வைணவக் கோயில்களில் சடாரி சூட்டுவது போல இத்திருக்கோவிலில் வழிபாட்டிற்குப் பின் நமக்கும் இறைவன் திருவடியைச் சூட்டுகின்றனர். அப்பொழுது நாம் மனமார நினைப்பது நடக்கும். லிங்கத்தில் சில துவாரங்கள் காணப் படுவதாகவும், வண்டு (பிருங்கி முனிவர்) பூசித்ததாகவும் கூறுவர். சாலிக்கிராமத்தால் செய்த விநாயகர் சிலை அற்புதமாக உள்ளது. அமர்நீதி நாயனாரைப் பெருமான் ஆட்கொண்டு அவர்தம் மனைவிக்கும், மகனுக்கும் முத்தியருளிய தலம். இவர்களின் உருவச்சிலைகள் உள. மாடக்கோயில். 'திருநல்லூர் மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே' (சம்பந்தர் தேவாரம்) என சம்பந்தரும் பாடியுள்ளார். 'வடபாற்கயிலையும் தென்பால் நல்லூரும் தம்வாழ்பதியே' என்பது அப்பரின் அருந்தமிழ். காளி சந்நிதியும் உள்ளது.

வண்ண மலரானும் வைய மளந்தானும்
நண்ண லரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ண மலர்தூவித் தாள்கள் தொழுதேத்த
எண்ணு மடியார்கட் கில்லை யிடுக்கணே. 1.86.9

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்

இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பல்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 6.14.1.

5. ஆடுதுறை
(தென் குரங்காடுதுறை)

1. ஆடுதுறை. (சூரியனார் கோயில்; திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தபரம்பரை ஆதீனம், சூரியனார் கோயில்)
2. திருமங்கலக்குடி
3. கஞ்சனூர்
4. திருநீலக்குடி
5. வைகல்மாடக்கோயில்
6. திருக்கோழம்பம். (குழம்பியம்)

ஆடுதுறையில் ஓர் ஆட்டோ ஒன்றினை வாடகைக்குப் பேசிக் கொண்டால் மேற்கூறிய ஆறுதலங்களையும் ஒரே நாளில் பார்த்து மகிழலாம்.

1. ஆடுதுறை - 612101

இறைவன் : ஆப்த்சகாயேசுரர்
இறைவன் : பவளக்கொடியம்மை
தீர்த்தம் : சகாயதீர்த்தம், காவிரியாறு
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 11 பாடல்கள்.

கும்பகோணம்- மயிலாடுதுறை சாலையிலுள்ளது. பெரியகோவில் சுக்கிரீவனும் அனுமனும் பூசித்த தலம். சுக்கிரீவன் பயத்தால் அஞ்சி, நடுங்கி, ஆடி இறைவனை வழிபட்டதால் ஆடுதுறை எனப் பெயர் பெற்றது என்பர். இத்திருக்கோயில் வந்து வழிபடின் தந்தை மகனுக்குள்ள பிணக்குத் தீரும் என்பர்.

பழகும் வினைதீர்ப் பவன்பார்ப் பதியோடும்
முழவங்க குழல்மொந் தைமுழங் கெரியாடும்
அழகன் அயில்மூ விலைவேல் வலனேந்தும்
குழகன் நகர்போல் குரங்கா டுதுறையே (2.35.7)

ஆட்டி னான்முன் அமணரோடு என்தனைப்
பாட்டி னான்தன் பொன்னடிக்கு இன்னிசை
வீட்டி னான்வினை மெய்யடி யாரொடும்
கூட்டி னான்குரங் காடு துறையனே. (5.63.6)

ஆடுதுறை ஆண்டவனை வணங்கியபின் மயிலாடுதுறைக்குச் செல்லும் சாலை வழி சென்றால் காவிரியின் குறுக்கே பாலம் உள்ளது. பாலத்தைத் தாண்டி $1^1/_2$ கி.மீட்டரில் சூரியனார் கோயில். சூரியபகவான் தன் இருமனைவிமார்களுடன் திருக்கல்யாண வடிவினனாய்க் காட்சி தருகின்றான். சூரியனைச் சுற்றி பிற கிரகங்கள். கண்டு வணங்கிய பின் திருக்கோயிலின்முன் திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீகந்த பரம்பரை ஆதினத் திருமடம் உள்ளது. மடம் சென்று ஸ்ரீ-ல-ஸ்ரீ குரு மகாசந்நிதானத்தையும் வணங்கி ஆசி பெறலாம். இத்திருமடத்தில் ஏழு இலைகளைக் கொண்ட அதிசய, அபூர்வ வில்வமரம் உள்ளது.

2. திருமங்கலக்குடி - 612102

இறைவன் : புராணேசுரர்
இறைவி : மங்களநாயகி
தீர்த்தம் : மங்கள தீர்த்தம், காவிரி;
தலவிருட்சம்: கோங்கிலவம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்

சூரியனார் கோயிலிருந்து எதிர்ப்புறமாக சுமார் 1 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. அழகிய சிறுகோயில். மாகாளி, சூரியன், திருமால், நான்முகன் அகத்தியர் இவர்கள் பூசித்தத் தலம். மகளிர் தம் திருமாங்கல்ய பாக்கியத்திற்காகப் பிரார்த்தனை மேற்கொள்ளப்படும் திருக்கோயில். மன்னன் ஒருவனின் தண்டலர் ஒருவர் அரசனின் ஆணையின்றி அரசுப் பணத்தில் இத்திருக்கோயிலில் திருப்பணி செய்தார். இதனை அறிந்த அம்மன்னன் அவரை வரச்செய்ய, அவரும் அஞ்சி தம் உயிரைத் துறந்தார். மன்னன் தண்டலரின் உடலைத் திருமங்கலக்குடிக்கு அப்பால் எடுத்துச் சென்று அடக்கம் செய்ய ஆணையிட்டான். தண்டலரின் வெற்றுடல் திருமங்கலக்குடி வர அவரின் மனைவி பெருமானையும் பெருமாட்டி யையும் வேண்ட அவர் மீண்டும் உயிர் பெற்றான். இதுபற்றியே அம்மை மங்களநாயகி என வழங்கப்படுகின்றாள்.

பொலியும் மால்வரை புக்கெடுத் தான்புகழ்ந்து ஏத்திட
வலியும் வாளொடு நாள்கொடுத்தான் மங்க லக்குடிப்
புலியின் ஆடையின் னானடி யேத்திடும் புண்ணியர்
மலியும் வானுல கம்புக வல்லவர் காண்மினே. (2.10.8)

செல்வ மல்கு திருமங் கலக்குடி
செல்வ மல்கு சிவநிய மத்தராய்ச்
செல்வ மல்கு செழுமறை யோர்தொழச்
செல்வன் தேவி யொடுந்திகழ் கோயிலே. (5.73.5)

3. கஞ்சனூர் (சுக்கிரன் தலம்) - 609804

இறைவன் : அக்கினீசுவரர்
இறைவி : கற்பகநாயகி
தீர்த்தம் : அக்கினிதீர்த்தம்
தலவிருட்சம்: புரசு.
பாடியோர் : அப்பர் 10 பாடல்கள்.

திருமங்கலக்குடி சென்று வந்து சூரியனார் கோயில் சாலை வர 'சுக்கிரத்தலம் கஞ்சனூர்' என்னும் அறிவிப்புப் பலகை சாலை வழியே 2 கி.மீ. சென்றால் கஞ்சனூர். பூம்புகார் மெயின் சாலையினின்று 2 கி.மீ. உள்ளே செல்ல வேண்டும். நவக்கிரகங்களில் சுக்கிரனுக்குரியதலம். ஆடல்வல்லான், சிவகாமியம்மை இவர்களின் உருவங்கள் சிலை வடிவமாக உள்ளன. அக்கினியும், நான்முகனும் பூசித்த தலம். அரதத்த சிவாச்சாரியார் தீயில் பழுக்கக் காய்ச்சிய முக்காலியின்மீது அமர்ந்து 'சித்தாந்த சைவமே' உயர்ந்தது என உலகிற்கு உணர்த்திய தலம். அவருக்குத் தனிக் கோயிலும் அவர் பூசித்த இலிங்கமும் அருகில் உள்ளது. நந்தியின்முகம் திரும்பி இருப்பதைக் காணலாம்.

கஞ்சன்- தாமரையில் இருப்போன்- அவன் வழிபட்ட தலம் கஞ்சனூர்.

வானவனை வலிவலமும் மறைக்கா டானை
மதிசூடும் பெருமானை மறையோன் தன்னை
ஏனவனை யிமவான்தன் பேதை யோடும்
இனிதிருந்த பெருமானை ஏத்து வார்க்குத்
தேனவனைத் தித்திக்கும் பெருமான் தன்னைத்
தீதிலா மறையோனைத் தேவர் போற்றும்
கானவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்த் தேனே. (6.90.8)

4. திருநீலக்குடி (தென்னல்குடி வழக்கு) - 612108

இறைவன் : நீலகண்டேசுரர், நல்ல நாயகேசுரர்
இறைவி : உமையம்மை, அழகம்மை
தீர்த்தம் : வன்னீலம்
பாடியவர் : அப்பர் 10 பாடல்கள்.

ஆடுதுறை இரயில்வே கேட் தாண்டிச் செல்ல வேண்டும். சுமார் 5 கி.மீட்டர் இருக்கும். ஊர் தாண்டிச் செல்லத் திருக்கோயில். வருணனும், தேவ கன்னிகைகளும் பூசித்தத் தலம். தேவி சந்நிதிகள் இரண்டு. ஒரு தேவி ஐயனை மணந்தவள். மற்றொரு தேவி தவம் செய்து கொண்டிருக் கின்றாள். நல்லெண்ணெய்யை எத்துணை அளவு பெருமான் மீது ஊற்றுகின்றோமோ அதில் பாதியைப் பெருமான் சுவறுவார். கண் கூடாகக் காணலாம். புத்திசுவாதீனமற்றவர் சென்று நலம் பெறுகின்றனர். கோயில் அருகில் சிவாச்சாரியார் இல்லம்.

கற்றைச் செஞ்சடைக் காய்கதிர் வெண்திங்கள்
பற்றிப் பாம்புடன் வைத்த பராபரன்
நெற்றிக் கண்ணுடை நீலக்குடியரன்
சுற்றித் தேவர் தொழுங்கழற் சோதியே. (5.73.9)

5. வைகல் மாடக்கோயில் - 619101

இறைவன் : கோமளேசுவரர் (மாடக்கோயில்)
இறைவி : இளங்கோதையம்மை
இறைவன் : வைகல் நாதேசுவரர் (வைகல்)
இறைவி : வைகல் அம்பிகை
இவ்விரண்டிற்கும் சேர்ந்து திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் : 11

திருநீலக்குடி பெருமானை வணங்கி Sபுதூர் நோக்கிச் செல்லும் சாலை வழி சென்று பழியஞ்சிய நல்லூர் ஊர்வர அங்கிருந்து 1 கிலோ மீட்டர் (ஆற்றுப் பாலம்) செல்ல வைகல் என்னும் ஊர். இங்கு ஆய்த எழுத்துப்போல ஃ மூன்று இடங்களில் சிவாலயங்கள் உள்ளன. வலப்பக்கம் உள்ளதும், நெற்றிக் கண்போல் உள்ளதும் (மாடக் கோயில்) சம்பந்தர் பெருமானால் பாடப் பெற்றதாகும். இடப்பக்கமும் ஒரு மிகச்சிறிய சிவன் கோயில் உள்ளது. கேட்பாரற்று பெருமானின் இடங்கள் உள்ளன. மூவர் பாடிய திருக்கோயில்களைக் காண வேண்டுமென்ற பேராசை கொண்டாரே இக்கோயில்கள் போன்றவற்றைக் கண்டு மகிழ்ந்து செல்கின்றனர். சிவாச்சாரியார் கோயில் அருகே உள்ளார். அவர் துணை கொண்டு மூன்று கோயில்களையும் காணலாம்.

மாலவன் மலரவன் நேடி மால்கொள
மாலெரி யாகிய வரதர் வைகிடம்
மாலைகொ டணிமறை வாணர் வைகலில்
மாலன மணியணி மாடக் கோயிலே. (3.23.9)

6. திருக்கோழம்பம் (குழம்பியம் வழக்கு) - 612205

இறைவன் : கோகிலேசுரர்
இறைவி : சௌந்தரநாயகி
தீர்த்தம் : மதுதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 11 பாடல்கள்.

பழியஞ்சிய நல்லூர் வந்து திருக்கோழம்பம் செல்ல வேண்டும். சுயம்புலிங்கம். பசுவின் குளம்பு பட்ட வடுவினை பெருமான் திருமேனியில் காணலாம். சந்தன் என்னும் விண்ணுலகத்தான் இந்திரனால் குயிலாய்ப் போகும்படி சாபம் பெற்று, பல இடங்கள் சுற்றித் திரிந்து இத்தலம் வந்து பூசித்துத் தன் பழைய உருப்பெற்றான் என்பர்.

நீற்றானை நீள்சடை மேல்நிறை வுள்ளதோர்
ஆற்றானை அழகமர் மென்முலை யாளையோர்
கூற்றானைக் குளிர்பொழிற் கோழம்பம் மேவிய
ஏற்றானை யேத்துமின் நும்மிடர் ஏகவே (2.13.1)

முன்னை நான்செய்த பாவம் முதலறப்
மின்னை நான்பெரி தும்மருள் பெற்றதும்
அன்ன மார்வயற் கோழம்பத் துள்ளமர்
பின்னல் வார்சடை யானைப் பிதற்றியே. (5.64.7)



6. குத்தாலம்

1. திருத்துருத்தி (குத்தாலம்)
2. திருமணஞ்சேரி
3. எதிர் கொள்பாடி
4. வேள்விக்குடி
5. திருவழுந்தூர் (தேரெழுந்தூர்)

1. திருத்துருத்தி (குத்தாலம்) - 609801

இறைவன் : வேதேசுரர்
இறைவி : முகிழாம்பிகை
தீர்த்தம் : காவிரியாறு; சுந்தர தீர்த்தம்
தலவிருட்சம்: உத்தால மரம் (ஆத்தி மரத்தில் ஒருவகை).
பாடியோர் : திருஞான சம்பந்தர் 11, அப்பர் 10, சுந்தரர் 10 பாடல்கள். மணிவாசகர் 2 இடம்.

கும்பகோணம்-மயிலாடுதுறை சாலையில் உள்ளது. சத்தியம் தவறிய சுந்தரர் இருகண்களையும் இழந்ததோடு உடலிலும் கொடிய பிணியைப் பெற்றார். இந்த ஊரை அடைந்த சுந்தரர் இக்கோயிலில் வடபாலுள்ள ஒரு குளத்தில் நீராட பழைய பொன்மேனியைப் பெற்றார். கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமையில் இக்குளத்தில் மக்கள் நீராடி மகிழ்கின்றனர். அக்குளக்கரையில் சுந்தரர் கோயில் உள்ளது. சிவபிரான் பிரமசாரியாய் இருந்து மறை ஓதினமையால் உத்தவேதேசுரர் என்றும், தாம் அருளிய மறையைத் தாமே ஓதியதால் 'சொன்னவாறு அறிவார்' என்ற திருநாமமும் பெற்றார்.

கங்குல் கொண்ட திங்களோடு கங்கைதங்கு செஞ்சடைச்
சங்கிலங்கு வெண்குழை சரிந்திலங்கு காதினாய்
பொங்கிலங்கு பூணநூ லுருத்திரா துருத்திபுக்
கெங்குநின் னிடங்களா வடங்கிவாழ்வ தென்கொலோ. 2.98.3

உடல்தனைக் கழிக்க லுற்ற உலகத்து
ளுயிர்கட் கெல்லாம்
இடர்தனைக் கழிக்க வேண்டி இறைவனை
ஏத்து மின்னோ
கடல்தனில் நஞ்ச முண்டு காண்பரி
தாகி நின்ற

சுடர்தனைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. 4.42.5

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங்
கொய்புன ஏனலோ டைவனஞ்சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமா றறிகிலே னெம்பெரு மானைப்
பழவினை யுள்ளன பற்றறுத் தானை. 7.74.2

துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும் 8.2.86

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து என்உளம் மன்னி
கருத்திருத்தி ஊன்புக்கு கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானை தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லைக் கண்டேனே. 8.31.3

2. திருமணஞ்சேரி - 609813

இறைவன் : அருள் வள்ளல் நாதர்
இறைவி : யாழின் மென்மொழியம்மை
தீர்த்தம் : சமுத்திர தீர்த்தம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்.

கும்பகோணம் மயிலாடுதுறை சாலையிலுள்ள குத்தாலத்திலிருந்து 18 கி.மீ. திருமணமாகாத ஆடவர், பெண்டிர் என்ற இருதிறத்தவரும் இக்கோவிலுக்கு வந்து வழிபட்டுச் செல்லின் உடன் திருமணம் கூடும். என்றுமே மக்கள் கூட்டம் நிறைந்து காணப்படும். மன்மதன் பூசித்தத் தலம். வணிகக் குலத்தில் பிறந்த நாத்திகள் இருவர் ஒரே காலத்தில் கருவுற்றிருந்தனர். தமக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒருவருக்கு ஒருவர் கொண்டும் கொடுத்தும் சம்பந்தம் செய்து கொள்வதாக உறுதி கொண்டனர். பேறுகாலத்தில் ஒருத்தி ஆமையை ஈன்றாள். மற்றொருத்தி தான் பெற்ற பெண்ணை அவ்வாமைக்கு மணம் முடிக்க மறுத்தாள். ஆமையும் சிவபிரானைப் பூசித்து அப்பெண்ணையே மணந்து ஆமையுரு நீங்கி மனித உருவம் பெற்றது.

விடையானை மேலுலகும் ஏழுமிப் பாரெல்லாம்
உடையானை ஊழிதோ றூழி யுளதாய
படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி
அடைவானை யடையவல் லார்க்கு இல்லை அல்லலே. 2.16.4

துன்ன வாடையர் தூமழு வாளினர்
பின்னு செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்பொழில் சூழ்மணஞ் சேரியெம்
மன்ன னார்கழ லேதொழு வாய்க்குமே. 5.87.8.

3. எதிர்கொள்பாடி (மேலத் திருமணஞ்சேரி) - 609813

இறைவன் : ஐராவதேசுவரர்
இறைவி : மலர்க்குழல் நாயகி
பாடியவர் : சுந்தரர் 11 பாடல்கள்.

மயிலாடுதுறையிலிருந்த நகரப்பேருந்து வசதி உண்டு. இப்பதிகப் பாடல்கள் அனைத்தும் யாக்கை நிலையாமையை அறிவுறுத்தும். இந்திரனின் யானையான ஐராவதம் பூசித்துப் பேறு பெற்ற தலம். அரசகுமாரன் ஒருவன் திருமணம் முடித்தபின் தன் மனைவியுடன் தன் ஊர் செல்லுங்கால் இப்பதிப்பிரானார் மணமகனின் மாமனைப்போல எதிர்தோன்றி அவனை எதிர்கொண்டு அழைத்து விருந்தோம்பியதால் 'எதிர்கொள்பாடி' எனப் பெயர் பெற்றது என்பர். திருமணஞ்சேரி அருகில்.

இன்பம் உண்டேல் துன்பம் உண்டு ஏழைமனை வாழ்க்கை
முன்பு சொன்ன மோழைமையான் முட்டை மனத்தீரே
அன்பர் அல்லால் அணிகொள் கொன்றை அடிகள்அடி சேரார்
என்பர் கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே. 7.8

4. வேள்விக்குடி - 609801

இறைவன் : கலியாணசுந்தரேசுவரர்
இறைவி : பரிமளசுகந்த நாயகி
தீர்த்தம் : கௌதுகாபந்தன தீர்த்தம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 10, சுந்தரர் 10 பாடல்கள்

கும்பகோணம்- மயிலாடுதுறையிலுள்ள குத்தாலத்திலிருந்து 5 கி.மீ. திருமணஞ்சேரியிலிருந்து 1 கி.மீ. சிவபிரானின் திருமணவேள்வி நடந்த தலமாதலின் இப்பெயர் பெற்றது. ஓர் அரசிளங்குமாரனுக்குத் திருமணம். நிச்சயித்திருந்த பெண்ணின் மணம் நிறைவேறும் முன்னே அவளின் தாய் தந்தையர் இறக்கவே, அரசிளங்குமாரன் இறைவனை வேண்ட, இறைவனும் அப்பெண்ணை ஒரு பூதத்தால் எடுத்து வரச் செய்து அவனுக்குத் திருமண வேள்வி செய்த தலம் எனவும் கூறுவர். இறைவன் பகற் காலத்தில் திருவேள்விக்குடியிலும் இரவுக்காலத்தில் திருத் துருத்தியிலும் எழுந்தருளியிருப்பதாகத் திருஞானசம்பந்தர் தம் பாடலில் கூறியுள்ளார்.

கரும்பன வரிசிலைப் பெருந்தகைக்
காமனைக் கவினழித்த
சுரும்பொடு தேன்மல்கு தூமலர்க்
கென்றையஞ் சுடர்ச்சடையார்
அரும்பன வனமுலை யரிவையோடு
ஒருபக லமர்ந்த பிரான்
விரும்பிடந் துருத்தியா ரிரவிடத்து
உறைவர்வேள் விக்குடியே. 3.90.4

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பதில்லை
சேர்ப்பது காட்டாகத் தூரினும் ஆகச்சிந் திக்கி னல்லால்
காப்பது வேள்விக் குடிதண் துருத்திஎங் கோன்அரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே.
7.1

5. திருவழுந்தூர் (தேரெழுந்தூர்) - 609808

இறைவன் : வேதபுரீசுவரர்
இறைவி : சௌந்தராம்பிகை
தீர்த்தம் : வேததீர்த்தம்
தலவிருட்சம்: சந்தன மரம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்

குத்தாலத்திலிருந்து 4 கி.மீ. மயிலாடுதுறையிலிருந்து 12 கி.மீ. ஊர்த்துவரதன் என்னும் அரசன் தேர் இங்கு மேலே செல்லாது அழுந்தின மையால் 'தேர்அழுந்தூர்' எனப்பெயர் பெற்றது.

மாடக்கோயில். மறைகளும், விண்ணவர்களும், அஷ்டதிக்குப் பாலர்களும் பூசித்தத் தலம். அழுந்தை மறையவரின் பெருமையை ஆளுடை பிள்ளையார் 'அழுந்தைமறையோர் வழிபாடு செய் மாமட மன்னினையே' என்று சிறப்பித்தார். மேற்குப் பார்த்த சந்நிதி. இத்திருக்கோயிலுக்கு 1 கி.மீ. மேற்புறத்தில் பிரசித்தி பெற்ற பெருமாள் கோயில் உள்ளது.

வானே மலையே யெனமன் னுயிரே
தானே தொழுவார் தொழுதாள் மணியே
ஆனே சிவனே யழுந்தை யவரெம்
மானே யெனமா மடமன் னினையே. 2.20.4

7. திருவாவடுதுறை

1. திருவாவடுதுறை - 609803

இறைவன் : மாசிலாமணீசுரர்
இறைவி : ஒப்பிலா முல்லையம்மை
தீர்த்தம் : கோமுத்தி தீர்த்தம்
தலவிருட்சம்: படர் அரசு.
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 51, சுந்தரர் 15 பாடல்கள்.

கும்பகோணம்- மயிலாடுதுறை பேருந்து சாலையில் திருவாவடுதுறை மடத்தார் அமைத்துள்ள வளைவு வழியே சென்றால் திருக்கோயில். கோயில் வழியே சென்றால், திருமடத்தையும், மடஅதிபரையும் கண்டு வணங்கலாம். ஆண்டிற்கு ஒரு பாடலாக 3000 பாடல்களான திருமந்திரத்தைப் (10ஆம் திருமுறை) பாடிய திருமூலரின் திருச்சந்நிதி. தமிழகத்தில் இக்கோவிலில்தான் உள்ளது. திருவிசைப்பா (9ஆம் திருமுறை) பாடிய திருமாளிகைத்தேவர் வாழ்ந்த பகுதி. இவரின் சமாதி திருமடத்தின் தோற்றுவாயிலேயே உள்ளது. திருஞானசம்பந்தர் தன் தந்தையார் செய்யும் வேள்விக்குப் பொருள் வேண்டி நந்தியம்பெருமான் அருகில் 'இடரினும் தளரினும்' எனும் திருப்பதிகம் பாடிட பூதகணம் ஒன்று பொற்கிழிதந்த இடம். இதனை நாவுக்கரையரும் தம் தேவாரத்தில் குறித்துள்ளார். அப்பீடமருகே இன்றும் பலர் பொருள் வேண்டி தங்களிடமுள்ள பொருளை வைத்துப் பதிகம் பாடி எடுக்கும் வழக்கம் உள்ளது. பசுவடிவுடன் அம்மை பூசித்த காரணத்தால் 'ஆவடுதுறை' எனப்பெயர் பெற்றது.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோவுன் இன்னருள் ஆவடுதுறை அரனே. 3.4.1.

மாயிரு ஞாலமெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க்கு அம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 4.56.1

திகழும் மாலவன் ஆயிரம் மலரால்
ஏத்து வானொரு நீண்மலர் குறையப்
புகழி னாலவன் கண்ணிடந் திடலும்
புரிந்து சக்கரங் கொடுத்தல் கண்டடியேன்
திகழும் நின்றிருப் பாதங்கள் பரவித்
தேவதேவநின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை யாதி யெம்மானே. 7.3

2. திருவிடை மருதூர் - 612104

இறைவன் : மகாலிங்கம்
இறைவி : பெருநன்முலை நாயகி
தீர்த்தம் : காவிரி, கருணாநதி
தலவிருட்சம்: மருது
பாடியோர் : திருஞானசம்பந்தர் 66, அப்பர் 47, சுந்தரர் 10. மணிவாசகர் 5 இடங்கள்.

கும்பகோணம்- மயிலாடுதுறை சாலையோரப் பெருங்கோயில். 'திருவிடைமருதூர் தெரு அழகு' என்பது உலக வழக்கு. வடக்கே மல்லிகார்சுனம் (ஸ்ரீசைலம்) தெற்கே ஸ்புடார்ஜுனம் (திருநெல்வேலி அம்பாசமுத்திரத்திலிருந்து 5 கி.மீ) இருபுறமும் அமைய இடையில் இத்தலம் அமைந்துள்ளதால் மத்தியார்ச்சுனம்(திருவிடைமருதூர்) எனப்பெயர் பெற்றது என்பர் வட நூலார். தைப்பூசத்திருவிழா அன்று இங்கு காவிரியில் நீராடல் மிகவும் சிறந்தது. இச்சிறப்பினைத் திருஞான சம்பந்தர் 'வருந்திய மாதவத்தோர் வானோரேனோர் வந்தீண்டிப் பொருந்திய தைப்பூச மாடியுலகம் பொலி வெய்த' (2.56.5) எனவும், அப்பர்பிரான்,

ஈச னெம்பெரு மான்இடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே

எனவும் கூறியுள்ளனர். வரகுண பாண்டியனுடைய பிரமஹத்தியைப் போக்கியருளிய தலம். அவரும் அநேக தொண்டுகள் செய்துள்ளார். இப்பிரமஹத்தி முதற்கோபுர வாசலின் வலப்புறத்தில் உள்ளது.

இப்பக்கமாகச் செல்பவர் மீண்டும் இந்த வழியில் திரும்பிவரமாட்டார். கிழக்குக் கோபுர வாயிலிற் பட்டினத்தார் திருவுருவமும், மேற்குக் கோபுர வாயிலிற் பத்திரகிரியார் திருவுருவமும் உள்ளன. அம்பாள் மௌனமாய் இருந்து தவஞ்செய்ய அவ் அம்மையையே மூகாம்பிகை அம்மன் என அழைக்கின்றனர். பலர் வழிபட்டு ஏத்திய பெருஞ்சிறப்புடையது. திருவாசகத்தில் மாணிக்கவாசகரும் இத்தலத்தை 5 இடங்களில் குறித்துள்ளார். புத்தி சுவாதீனம் இல்லாதவர், மனக்கவலை உடையோர் போன்ற பிற நோயாளர்கள் இக்கோயிலில் தங்கி தம் பிணி நீங்கி நலம் பெற்றுச் செல்கின்றனர்.

பொங்குநூல் மார்பினீர் பூதப்படையீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாமவேதம் ஓதினீர்
எங்கு மெழிலா மறையோர்கள் முறையாலேத்த இடைமருதில்
மங்குல்தோய் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 2.56.1.

கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 5.14.10

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன்
சிறுச்சிறி தேஇரப் பார்கட்கொன் றீயேன்
அந்தி வெண்பிறை சூடுமெம் மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தை நீயெனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை யெந்தை பிரானே. 7.4

இடைமருது அதனில் ஈண்ட இருந்து 8.2.75

3. திருக்கோடிக்கா - 609802

இறைவர் : கோடீச்சுரர்
இறைவி : வடிவாம்பிகை
தீர்த்தம் : அகத்திய தீர்த்தம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 15 பாடல்கள்.

சூரியனார் கோயிலுக்கு அருகில் மூன்று கோடி தேவர்கள் பூசித்தத்தலம். இக்கோயிலிலுள்ள சரசுவதி கையில் வீணை இல்லை.

இன்று நன்று நாளை நன்று என்று நின்று இச்சையால்
போன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே. 2.99.1

வாடி வாழ்வதென் னாவது மாதர்பால்
ஓடி வாழ்வினை யுள்கிநீர் நாடொறும்
கோடி காவனைக் கூறிரேற் கூறினேன்
பாடி காவலிற் பட்டுக் கழிதிரே. 5.78.2

4. திருப்பந்தணை நல்லூர் - 609807

இறைவன் : பசுபதீசுரர்
இறைவி : காம்பன தோளியம்மை
தீர்த்தம் : புட்கரிணி
தலவிருட்சம்: சரக்கொன்றை
பாடியோர் : திருஞானசம்பந்தர் 10, அப்பர் 10 பாடல்கள்.

கஞ்சனூர்-கதிராமங்கலம்-திருப்பந்தணை நல்லூர்

பெரியகோயில். இறைவன் திருமேனியில் வடு உள்ளது.

ஒலிசெய்த குழலின் முழவம தியம்ப
வோசையா லாடல றாத
கலிசெய்த பூதங் கையினா லிடவே
காலினாற் பாய்தலு மரக்கன்
வலிகொள்வர் புலியி னுரிகொள்வ ரேனை
வாழ்வுநன் றானுமோர் தலையில்
பலிகொள்வர் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதி யாரே. 3.121.8

தொண்டர் தொழுதேத்துஞ் சோதி யேற்றார்
துளங்கா மணிமுடியார் தூய நீற்றார்
இண்டைச் சடைமுடியா ரீமஞ் சூழ்ந்த
இடுபிணக்காட் டாடலா ரேமந் தோறும்
அண்டத்துக் கப்புறுத்தா ராதி யானார்
அருக்கனா யாரழலா யடியார் மேலைப்
பண்டை வினையறுப்பார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே. 6.10.5

8. சீகாழி

1. சீகாழி
2. திருக்கோலக்கா
3. திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்)
4. மயேந்திரப்பள்ளி
5. திருக்குருகாவூர் (கடாவூர்)
6. கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை)
7. தென் திருமுல்லைவாயில்
8. திருச்சாய்க்காடு
9. பல்லவனீச்சரம்
10. திருவெண்காடு
11. கீழைத்திருக்காட்டுப்பள்ளி (கீழ்ப்பெரும்பள்ளம்- ராகுதலம்)
12. திருவலம்புரம் (மேலப்பெரும்பள்ளம்)

1. சீகாழி - 609110
இன்றைய வழக்கு சீர்காழி

இறைவன் : பிரமபுரீசுவரர்
இறைவி : திருநிலைநாயகி
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: பாரிஜாதமரம்
பாடியோர் : திருஞான சம்பந்தர் 694, அப்பர் 21, சுந்தரர் 10 பாடல்கள், மாணிக்கவாசகர் 1 இடம்

பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த்தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னுஞ்சிரபுரம் புறவஞ்சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவயம் உள்ளிட்டங் காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலம் நாம் பரவும் ஊரே

எனக்காழிப் பெருமானே திருவாய் மலர்ந்துள்ளார்.

1. பிரமனூர்: (பிரமபுரம்) நான்முகன் வழிபட்டதால் அமைந்த பெயர்.
2. வேணுபுரம்: மூங்கில் அடியில் இறைவன் தோன்றியதால் வழங்கியபெயர்.
3. புகலி : தேவர்களுக்குப் புகலிடமாய் அமைந்தது.

4. வெங்குரு: குருபகவான் வழிபட்டது
5. தோணிபுரம்: பிரளயகாலத்தில் இறைவன் தோணியில் காட்சி அளித்தல்
6. பூந்தராய்: பூமியைப் பிளந்த இரணியாக்கதனை அழித்த வராக மூர்த்தி (திருமால்) வழிபட்டது
7. சிரபுரம் : இராகு பூசித்தது.
8. புறவம்: புறாவின் உருவில் வந்த அக்கினியால் சிபிச்சக்கரவர்த்தி நன்னிலை அடைந்தது.
9. சண்பை: சண்பை எனும் ஒருவகைக் கோரைப் புல்லால் மடிந்த தம் குலத்தினரால் தனக்குற்ற பழிபற்றாத வாறு கண்ணன் வழிபட்டது.
10. காளிபுரம்: ஸ்ரீகாளி-சீகாழி காளி வழிபட்டதால்
11. கொச்சைவயம்: மச்சகந்தியை விரும்பிய பழிச்சொல் நீங்க பராசரர் வழிபட்டதால்
12. கழுமலம்: மலப்பகுதி விலகுமாறு உரோமச முனிவர் வழிபட்டது.

சைவமும் தமிழும் செய்த தவப்பயனாய் அவதரித்த திருஞானசம்பந்தப் பெருமானின் அவதாரத்தலம். இப்பெருமான், அம்மை தந்த ஞானப்பால் பருகிய இடம். இப்பெருமான் அவதரித்த இல்லம் உள்ளது.

சிவனின் வீரச்செயல்கள் பெற்ற திருக்கோலம் பைரவர் கோலம். இக்கோலம் 64 வகைப்படும். இவற்றுள் மிகச் சிறந்தவை எட்டு. இவ்வெட்டு பைரவத் திருக்கோலங்கள் இத்திருக்கோயிலில் அமைந்துள்ளன. வெள்ளிக்கிழமை பைரவ வழிபாட்டிற்கு ஏற்ற நாள். இத்திருக்கோயிலில் மூன்று திருமூர்த்தங்களை வழிபட வேண்டும்.

முதல்: மலைபோல் அமைந்துள்ள பெரியநாயகி உடனுறை திருத்தோணியப்பர். இவரே குருமூர்த்தம். சம்பந்தப் பெருமானுக்கு ஞானோபதேசம் அருளியவர். இந்த இலிங்கத்தை பிரம்மபுரீச்வரர் எனப் புராணங்கள் புகலும்.

இரண்டு: பிரம்மபுரீச்வரர் வீற்றிருக்கும் மேல்தளத்தில் தோணியப்பர் திருக்கோயில் தோணியப்பரை வழிபடுக.

மூன்று: தோணியப்பர் திருக்கோயிலுக்கு மேலே குறுகலான மரப்படிக்கட்டுகளின் வழியாகச் சென்றால் சட்ட நாதரைக் காணலாம். ஆண்கள் சட்டையைக் கழற்றியே செல்ல வேண்டும். மகளிர் தம் தலையில் சூடிய மலரை எடுத்துச்

சட்டநாதரை வணங்கிய பின் மீண்டும் பூவினைச் சூடிட வேண்டும். இது மரபு. சுமார் ஐந்தடியில் சட்ட நாதர் காட்சி தருகின்றார். அத்திமரத்தாலான அற்புதத் திருவுருவம். ஆடைகள் ஏதுமின்றி அமைந்த கோலம். புனுகு பூசுவர். அபிஷேகம் இல்லை.

கணநாதநாயனார் வசித்திருந்த தலம்.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பூசியென் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் உனை நான் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 1.1.1

சிந்தித்து எழுமனமே நினையாமுன் கழுமலத்தைப்
பந்தித்த வல்வினை தீர்க்க வல்லானைப் பசுபதியைச்
சந்தித்த கால மறுத்துமென்று எண்ணி இருந்தவர்க்கு
முந்தித் தொழுகழல் நாடொறும் நந்தம்மை ஆள்வனவே. 4.82.5

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தஎம் மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள் பிரானைக்
காதில்வெண் குழையானைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே. 7.1

'கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்' 8.2.88

2. திருக்கோலக்கா - 609110
(தாளமுடையார் கோவில்)

இறைவன் : திருத்தாளமுடையார்
இறைவி : ஓசை கொடுத்த நாயகி
தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
தலவிருட்சம்: கொன்றை
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, சுந்தரர் 10 பாடல்கள்.

சீகாழி இரயில் நிலையத்திற்குத் தென்கிழக்காகவும், சீகாழி பெரிய கோயிலுக்கு மேற்காகவும் 3/4 கி.மீ. தொலைவில் உள்ளது.

சம்பந்தர் பெருமானுக்குப் பொற்றாளம் அளித்த தலம்.

மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பஹ்றயும் பாவமே. 1.23.5

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக்கு இரங்கும்
தன்மையாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
அங்க ணன்தனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப் பெருங்கோயிலுள் ளானைக்
கோலக் காவினில் கண்டு கொண்டேனே. 7.8

3. திருநல்லூர்ப் பெருமணம் - 609101
(ஆச்சாள்புரம்)

இறைவன் : சிவலோகத்தியாகேசர்
இறைவி : வெண்ணீற்று உமைநங்கை
தீர்த்தம் : பஞ்சாட்சர தீர்த்தம்
தலவிருட்சம்: மா.
பாடியோர் : திருஞான சம்பந்தர் 1 பாடல்

சிதம்பரத்திலிருந்து 11 கி.மீ. மேலும் 3 கி.மீ. சென்றால் பாடல்பெற்ற தலமான மகேந்திரப்பள்ளி. சிதம்பரத்திலிருந்து நகரப்பேருந்து உண்டு. கொள்ளிடத்திலிருந்து 5 கி.மீ.

திருஞானசம்பந்தரின் திருமணம் முடிந்தவுடன் பெருமான் தன் மனைவியாருடனும் அடியார்களுடனும் ஆலயத்தினுள் செல்ல ஆண்டு ஒரு சோதி தோன்றிட அதனுள் 'காதலாகி' எனத் தொடங்கும் நமச் சிவாயப் பதிகம்பாடி மறைந்தார். சிவக்கன்றுக்கென தனிச்சந்நிதி உள்ளது. காக புசுண்ட ரிஷி முத்தி பெற்ற தலம்.

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
இன்புறு மெந்தை இணையடி ஏத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. 3.125.3

4. மயேந்திரப்பள்ளி - 609101
(கோயிலடிப் பாளையம்)

இறைவன் : திருமேனியழகர்
இறைவி : வடிவாம்பிகை
தீர்த்தம் : மந்திரப்புட்கரணி
தலவிருட்சம்: தாழை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

சிதம்பரம், கும்பகோணம், தஞ்சை, சீர்காழி போன்ற ஊர்களிலிருந்தும் செல்லலாம். சந்திரன், சூரியன், இந்திரன், நான்முகன் போன்றோர் வழிபட்ட தலம்.

கொண்டல்சேர் கோபுரங் கோலமார் மாளிகை
கண்டலுங் கைதையுங் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியிற்
செண்டுசேர் விடையினான் திருந்தடி பணிமினே. 3.31.2

5. திருக்குருகாவூர் (கடாவூர்) - 609115

இறைவன் : வெள்ளடையீசுவரர்
இறைவி : காவியங்கண்ணியம்மை
தீர்த்தம் : பால்கிணறு தீர்த்தம்

சீர்காழியிலிருந்து நகரப்பேருந்து உண்டு. சீர்காழியினின்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவருடன் வந்த திருக்கூட்டத்தாரும் மிக்க நீர்வேட்கையோடும், கொடிய பசியோடும் வருந்த, உடன் சிவபிரான் வழியில் தண்ணீர்ப்பந்தலும், கட்டமுதும் அளிக்க, அதனை ஏற்று உண்டு மகிழ்ந்த திருக்கூட்டத்தார் அயற்சியினால் சற்று உறங்கவும், பெருமானார் பந்தரோடு மறைந்தருளினார். துயில் நீங்கிய தம்பிரான் தோழர் 'இத்தனையா மாற்றையறிந்திலேன்' எனப்பதிகம் பாடிக் கொண்டே திருக்கோயிலுக்குள் சென்றார். பதிகத்தில் 'பாடுவார் பசி தீர்ப்பாய்' என்ற குறிப்பினையுங் காண்க. இன்றும் இவ்விழா சித்திரை பௌர்ணமியில் நிகழ்கின்றது. கோயிலுக்கு வெளியே 'பாற்கிணறு' எனும் தீர்த்தம் உளது. தை அமாவாசை அன்று சுவாமி தீர்த்தம் கொடுக்கும் நிலையில் பால் நிறமாக மாறுகின்றது. மிக அற்புதம். அன்று அனைவரும் சென்று கண்டு மகிழ வேண்டும். ஊரின் பெயர் குருகாவூர். கோயிலின் பெயர் வெள்ளடை.

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினில் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுஇருள் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 7.6

6. கலிக்காமூர் - 609106
(அன்னப்பன் பேட்டை)

இறைவன் : சுந்தரேசுவரர்
இறைவி : அழகம்மை
தீர்த்தம் : அம்புலி தீர்த்தம்
பாடியோர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்.

சீர்காழியிலிருந்து 15 கிமீ. திருமுல்லைவாயிலிலிருந்து 5 கி.மீ. திரு திருவெண்காட்டிற்கு வடக்கே 5 கி.மீ.

பராசரரிஷி பூசித்து வழிபட்ட தலம்.

அருவரை ஏந்திய மாலுமற்றை அலர்மேல் உறைவானும்
இருவரு மஞ்ச எரியுருவா யெழுந்தான் கலிக்காமூர்
ஒருவரை யான்மகள் பாகன்றன்னை யுணர்வால் தொழுதேத்த
திருமருவும் அஞ்சிதை வில்லைச் செம்மைத் தேசுண் டவர்பாலே.
3.105.9

7. தென் திருமுல்லைவாயில் - 609113

இறைவன் : முல்லைவனநாதர்
இறைவி : கோதையம்மை
தீர்த்தம் : சக்கரதீர்த்தம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்.

சென்னை ஆவடி அருகே ஒரு திருமுல்லைவாயில். அதுவட திருமுல்லைவாயில். தெற்கே இது தென்திருமுல்லைவாயில். கடற்கரை யோரக் கோயில். தேவேந்திரனும், கார்க்கோடகனும், சுதர்மனும் பூசித்தத் தலம். சீர்காழியிலிருந்து 11 கி.மீ.

ஊனேறு வேலி னுருவேறு கண்ணி
ஒளியேறு கொண்ட ஒருவன்
ஆனேற தேறி யழகேறு நீற
னரவேறு பூணு மரனூர்

மானேறு கொல்லை மயிலேறி வந்து
குயிலேறு சோலை மருவித்
தேனேறு மாவின் வளமேறி யாடு
திருமுல்லை வாயில் இதுவே. 2.88.6

8. திருச்சாய்க்காடு (சாயாவனம்) - 609105

இறைவன்	:	சாயாவனேசுவரர்
இறைவி	:	குயிலினு நன்மொழியம்மை
தீர்த்தம்	:	காவிரி, ஐராவதம்
தலவிருட்சம்:		பைஞ்சாய்
பாடியவர்	:	திருஞான சம்பந்தர் 22, அப்பர் 30 பாடல்கள்.

சீர்காழி-பூம்புகார் சாலையில் உள்ளது. மிக அண்மையில் பல்லவனீச் சுரமும், திருவெண்காடும் உள்ளன. உபமந்யு பூசித்த தலம். காசிக்குச் சமமாகச் சொல்லப்படும் ஆறுதலங்களில் இத்தலமும் ஒன்று. கோயிலுக்கு எதிரில் ஐராவதத் தீர்த்தம் உளது. கோயிலையொட்டித் தேர்போன்ற விமானமொன்று சக்கரத்துடன் உள்ளது. இந்திரன் இக் கோயிலை விண்ணுலகிற்கு எடுத்துச் செல்ல முயன்றார் என்பர். 'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்' எனச் சுந்தரர் விதந்தோதிய இயற்பகை நாயனார் முக்திபெற்ற திருத்தலம். சிலம்பு போற்றும் சம்பாதியம்மன் திருக்கோவிலும் இதுவே! இயற்பகையார், அவரின் உற்சவ விக்கிரகங்களும் உள்ளன. முருகன் வில்லூன்றி நிற்கும் அற்புத வடிவு அமைப்புக் கொண்ட திருமேனி அறுகோண பீடத்தில் உள்ளது.

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைமைப்ப புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 2.41.3

தோடுலா மலர்கள் தூவித்தொழதெழு மார்க்கண்டேயன்
வீடுநாள் அணுகிற்சென்று மெய்கொள்வான் வந்தகாலன்
பாடுதான் செல்லும் அஞ்சிப் பாதமே சரணம் என்னச்
சாடினார் காலன்மாளச் சாய்க்காடு மேவினாரே. 4.65.1

9. பல்லவனீச்சரம் - 609105

இறைவன் : பல்லவனேசுரர்
இறைவி : சௌந்தரநாயகி
தீர்த்தம் : பஞ்சாட்சரதீர்த்தம்
தலவிருட்சம்: மா.
பாடியவர் : திருஞானசம்பந்தர் 22 பாடல்கள்.

பூம்புகாருக்கு மிக அருகில். பிளசரோ, ஆட்டோவோ இருப்பின் சீர்காழியைத் தலைமையகமாகக் கொண்டு இதிற்குறித்துள்ள 12 திருத்தலங்களையும் தரிசிக்கலாம்.

பல்லவராசன் பூசித்தத் தலம். இயற்பகையார், பட்டினத்தடிகள் இவர்களின் ஜனனபூமி. சாய்க்காட்டிற்கும் இக்கோயிலுக்கும் இடைப் பட்ட தொலைவு 1/2 கி.மீட்டரே.

அங்கமாறும் வேதநான்கும் ஓதும்அயன் நெடுமால்
தங்கணாலும் நேடநின்ற சங்கரன் தங்குமிடம்
வங்கமாரு முத்தமிப்பி வார்கடலூட லைப்பர்
பங்கமில்லார் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. 1.65.9

10. திருவெண்காடு - 609114

இறைவன் : சுவேதாரணியேசுரர்
இறைவி : பிரமவித்தியாநாயகி
தீர்த்தம் : சூரிய, சந்திர, அக்கினி தீர்த்தங்கள் (முக்குளம்)
பாடியோர் : திருஞான சம்பந்தர் 33, அப்பர் 21, சுந்தரர் 10 பாடல்கள்.
மணிவாசகர்- 1 இடம்

மயிலாடுதுறையிலிருந்து நகரப்பேருந்து உண்டு. சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து 10 கி.மீ. மயிலாடுதுறை - மங்கை மடம் நகரப் பேருந்திலும் வரலாம்.

ஆதி சிதம்பரம், சுவேதனம், சுவேதாரண்யம் என்றும் கூறப்பெறும். கோயிலின் வெளிச்சுற்றில் அக்கினி மூலையில் அக்கினி தீர்த்தமும் தெற்குச் சுற்றில் சூரிய தீர்த்தமும், வடக்குச் சுற்றில் தேவிகோயில் தீர்த்தம் (இக்கரையில் மெய்கண்டார் கோயில் உள்ளது.) என வழங்கும் சந்திரதீர்த்தமும் உள்ளன. இதனை முக்குளம் என வழங்குவர். இத்தீர்த்த மகிமை எண்ணிறந்தன. எண்ணியதை எண்ணி நீராடி அவற்றைத் தப்பாது

பெறலாம். திருப்பெண்ணாடகத்து அச்சுதக் களப்பாளர் தம் ஆசிரியரான அருணந்தி சிவாச்சாரியாரின் அறிவுரைப்படி இங்கு வந்து முக்குளத்தில் விதிமுறையில் மூழ்கி 'சுவேதவனப் பெருமான் என்னும் பெயர் கொண்ட மெய்கண்ட தேவரைப் பெற்றனர்' என்பது வரலாற்று உண்மையாகும். இத்தீர்த்த மகிமையை 'பேயடையா பிரிவெய்தும்' (2.2) என்னும் தன் தேவாரத் திருப்பாடலில் திருஞானசம்பந்தப் பெருமான் குறிப்பார்.

'வெண்காட்டு முக்குளநீர் தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாந் தீவினையே' என்றும், 'முக்குளம் நன்குடையானும், முக்கணுடை இறைவனே', 'தட மூன்றுடையான்' என மேலும் சம்பந்தப் பெருமானார் குறிப்பர். முக்குள நீரில் நீராடி சந்திர தீர்த்தத்தின் கரையிலுள்ள பூவின்கீழ் மக்கள் தம் முன்னோர்க்கு வழிபாடாற்றி இறைவனையும் இறைவியையும் வணங்கி மகிழ்ந்து, புதன்கிரகத்தையும் (இத்தலம் புதனுக்குரியது) வணங்கி மகிழ்வர். இத்திருக்கோவிலில் இறைவன் சந்நிதிக்கு நேர் எதிரில் இறைவி சந்நிதி அமைந்துள்ளது. இத்திருகாட்சி வேறு எங்கும் காண முடியாதது. இறைவன் சந்நிதிக்கு வலப்பக்கமோ இடப்பக்கமோ அம்மை வீற்றிருப்பாள்.

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் தீக்கனா கண்ட கண்ணகி, தன் பார்ப்பனத் தோழியாகிய தேவந்தியிடம் செய்தியைச் சொல்ல, அவளும், 'சோமகுண்டம், சூரிய குண்டம்,' ஆகியவற்றில் நீராடி காமவேள் கோட்டத்தில் வழிபாடு செய்யின் இப்பிறப்பில் கணவரோடு பிரிவின்றி வாழ்ந்து மறுபிறப்பினும் அவருடனிருந்து இன்பம் நுகரலாம்; ஆதலால் யாமும் அவ்வாறே செய்வோம் என்றாள். இங்கே கூறிய சோமகுண்டம், சூரிய குண்டம் முறையே திருவெண் காட்டிலுள்ள சோமதீர்த்தமும், சூரிய தீர்த்தமும் எனச் சில பெரியோர் கூறுகின்றனர்' என்பர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்கள்.

பிறக்க ஆரூர்; தரிசிக்க தில்லை; நினைக்க அண்ணாமலை; இறக்கக் காசி என்பர். இவை அனைத்தும் ஒருங்கே ஓரிடத்தே தருவது வெண்காடே! அதனால் 'முத்தி வெண்காடு; முத்தி வாயில்; முத்தி நகர்' எனப் பெயர் பெற்றது. உட்பிரகாரத்தில் அகோரவீரபத்திரமூர்த்தி கையிற் சூலத்துடன் தென்முகம் நோக்கிக் காட்சி தருகின்றார். அற்புதத்திருமேனி வேறெங்கும் காணற்கரிய கவினுரு; எதிரே காளிசந்நிதி. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இரவில் தரிசனம் விசேடம். ஆடல்வல்லான் சந்நிதி சிதம்பரம் போலவே உள்ளது. மனமகிழ்வுடன் கண்டுகளிக்கலாம்.

இத்தலத்தில் மூன்று தீர்த்தங்கள், மூன்று மூர்த்திகள் (இறைவன், அகோரர், ஆடல்வல்லான்), மூன்று விருட்சங்கள் (வில்வம், கொன்றை,

ஆல்) சிறப்பானவை. வெள்ளையானை பூசை செய்து பேறுபெற்ற தலம். வானவர் தலைவனான இந்திரன் வழிபட்டு பூசித்தத் தலம். இச் செய்தியைச் சம்பந்தர் 'விண்ணவர் கோன்வழிபட' (2.2) எனக் குறிப்பர்.

'கூற்றந்தன்னைக் குறிப்பினால் மால்வித்தவனை' (2.2.7)

என்று காலனைச் சம்ஹரித்ததையும் கூறுவர்.

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே. 2.48.1

கூடி னான்உமை யாளொரு பாகமாய்
வேட னாய்விச யற்கருள் செய்தவன்
சேட னார்சிவ னார்சிந்தை மேயவெண்
காட னாரடி யேயடி நெஞ்சமே. 5.49.6

காத லாலே கருதுந் தொண்டர்
கார ணத்த ராகி நின்றே
பூதம் பாடப் புரிந்து நட்டம்
புவனி யேத்த ஆட வல்லீர்
நீதி யாக ஏழி லோசை
நீத்த ராகிச் சித்தர் சூழ
வேத மோதித் திரிவ தென்னே
வேலை சூழ் வெண் காட னீரே. 7.7.

விருந்தினன் ஆகி வெண்காடு அதனில் 8.2.60

11. கீழைத்திருக்காட்டுப்பள்ளி - 609114

இறைவன் : ஆரணிய சுந்தரேசுவரர்
இறைவி : அகிலாண்டநாயகி
தீர்த்தம் : அமிர்தப் பொய்கை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்.

திருவெண்காட்டின் மேலைக் கோபுரத்திற்கு மேற்கே சுமார் 3/4 கி.மீ. சிறிய கோயில். விருத்திராசுரனைக் கொன்ற இந்திரன் அப்பழி அகன்று இந்திரலோகத்தை ஆள வேண்டும் என்று இரந்து தேவர்கள் பூசை செய்த கோயில். மேற்குப் பார்த்த சந்நிதி. தட்சிணாமூர்த்தி சந்நிதிக்கு மேற்கே கடல்ஒலி போன்ற ஒலி மதிற் சுவரிலிருந்து கேட்கப்படுகிறது.

தோலுடை யான்வண்ணப் போர்வையினான் சுண்ணவெண்
ணீறு துதைத்திலங்கு
நூலுடை யானிமை யோர்பெருமான் நுண்ணறி
வால்வழி பாடுசெய்யுங்
காலுடை யான்கரி தாயகண்டன்
காதலிக்கப்படுங் காட்டுப்பள்ளி
மேலுடை யானிமை யாதமுக்கண் மின்னிடை
யாளொடும் வேண்டினானே. 1.5.3

12. திருவலம்புரம் (மேலப்பெரும்பள்ளம்) - 609107

இறைவன் : வலம்புரநாதர்
இறைவி : வடுவகிர் கண்ணம்மை
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 20, சுந்தரர் 11 பாடல்கள்.

திருத்தலைச்சங்காட்டிற்கு வடகிழக்கே 2 கி.மீ. திருவெண் காட்டிலுலிருந்து 2 கி.மீ. சென்றால் இவ்வூரை அடையலாம். கீழப்பெரும் பள்ளம் - இத்திருக்கோவில் கேது பரிகாரத்தலம். இதற்கு அண்மையில் உள்ளது மேலப்பெரும்பள்ளம் எனும் திருவலம்புரம். மூவர் பாடிய திருக்கோயில். திருமால் பூசித்து வலம்புரிச்சங்கு பெற்ற தலம். பிட்சாடன் உருவம் அழகாய் உள்ளது. திருவலஞ்சுழி காவிரியில் ஏரண்ட முனிவர் இறங்கி இங்குக் கரையேறினார். இவர் முடியில் உண்டான பள்ளம் இறைவன் முடியிலும் உள்ளது. திருஞானசம்பந்தருடன் அப்பரடிகள் தலங்கள் தோறும் சென்று வணங்கியபோது, சிவபெருமான் அப் பரடிகளை இத்தலத்திற்கு வரச் செய்து தரிசனம் தந்தார்.

நொய்யதொர் மான்மறி கைவிரலின் நுனைமேல் நிலையாக்கி
மெய்யெரி மேனிவெண் ணீறுபூசி விரிபுன் சடைதாழ
மையிருஞ் சோலை மணங்கமழ இருந்தா ரிடம்போலும்
வைகலும் மாமுழ வம்மதிரும் வலம்புர நன்னகரே. (3.103.3)

நினைக்கிறேன் நெஞ்சு தன்னால் நீண்டபுன் சடையினானே
அனைத்துடன் கொண்டு வந்தங்(கு) அன்பினால் அமைய ஆட்டிப்
புனைக்கின்றேன் பொய்ம்மை தன்னை மெய்ம்மையைப் புணரமாட்டேன்
எனக்குநான் செய்வ தென்னே இனிவலம் புரவனீரே. (4.55.6)

நீறணி மேனியன் நெருப்புமிழ் அரவினன்
கூறனி கொடுமழு ஏந்தியோர் கையினன்
ஆறணி அவிர்சடை அழல்வளர் மழலைவெள்
ஏறணி அடிகள் இடம்வலம் புரமே. (7.3)

9. வைத்தீஸ்வரன் கோயில்

1. புள்ளிருக்கு வேளூர்
2. கண்ணனார் கோயில் (குறுமாணக்குடி)
3. திருப்புன்கூர்
4. திருக்கருப்பறிய நல்லூர் (தலைஞாயிறு, மேலைக்காழி)
5. திருமண்ணிப்படிக்கரை (இலுப்பைப்பட்டு)

1. புள்ளிருக்க வேளூர் - 609117
(வைத்தீஸ்வரன் கோயில்)

இறைவன் : வைத்தியநாதர்
இறைவி : தையல்நாயகி
தீர்த்தம் : சித்தாமிர்த தீர்த்தம்
தலவிருட்சம்: வேம்பு
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 19 பாடல்கள்.

புள்-பறவை (சடாயு) (சம்பாதி); இருக்கு- ரிக்வேதம்; வேள்-முருகன்; ஊர்- சூரியன். மேற்சொன்னவர்கள் இறைவனை வணங்கிய தலம். வைத்தீஸ்வரன் சந்நிதி மிக விசேடம். தருமை ஆதீனத்திற்குட்பட்ட திருக்கோயில். தூய்மைக்குக் கேட்க வேண்டுமா! கோவிலினுள் திருக்குளம். அதில் மக்கள் வெல்லத்தினையும் உப்பினையும் தங்கள் துன்பம் கரைய கரைக்கின்றார்கள். நீராடி மகிழ்கின்றனர். பல ஊர் மக்களுக்கு இத்திருக்கோயில் குலதெய்வம். மொட்டை போடுவதும், தையல் நாயகி முன் மாவிளக்கு வைத்துப் படைத்து வழிபடுவதும் கண் கொள்ளாக்காட்சி. சுற்றில் செல்வமுத்துக் குமரன் சந்நிதி. தன் பெயருக் கேற்பச் செல்வத்திற்கு அதிபதியாய் இருந்து திருக்கோயிலையும் மக்களையும் புரந்து வருகின்றான். கார்த்திகை மிக்ச் சிறப்பு. செல்லமுத்துக் குமரன் தனி மண்டபத்திற்கு எழுந்தருளி காட்சி தருகின்றான். சண்முகர் சந்நிதியும் உண்டு. செவ்வாய் கிரகத்திற்கு வைத்தீஸ்வரன் கோயில் சிறப்பு. செவ்வாய்க்குத் தனிச்சந்நிதி. ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளில் திருக்கோயில் பகல் 1 மணி வரை திறந்திருக் கும். திருக்கோயிலில் சந்தன உருண்டை மிளகு அளவில் விலைக்குத் தருகின்றனர். அவ்வுருண்டை பிணிகளை அகற்றும் மாமருந்து.

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தை தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. (2.43.5)

அரும றையனை ஆணொடு பெண்ணனைக்
கருவி விடம்மிக வுண்டவெங் கண்டனைப்
புரிவெண் ணூலனைப் புள்ளிருக்கு வேளூர்
உருகி நைபவர் உள்ளங் குளிருமே. (5.79.3)

2. கண்ணார் கோயில் - 609117
(குறுமாணக்குடி)

இறைவன் : கண்ணாயிரநாதர்
இறைவி : முருகுவளர் கோதைநாயகி
தீர்த்தம் : இந்திர தீர்த்தம், மணிகர்ணிகை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

வைத்தீஸ்வரன் கோயிலுக்குத் தென்கிழக்கில் 2$^1/_2$ கி.மீ. தொலைவு. இந்திரன் தன் சாபம் நீங்கப் பெற்று ஆயிரம் கண்பெற்ற இடம். வாமனர் பூசித்த இடம். கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகளில் கோயில் எதிரிலுள்ள குளத்தில் மக்கள் நீராடி மகிழ்வர்.

தண்ணார் திங்கள் பொங்குஅர வம்தாழ் புனல்சூடிப்
பெண்ஆண்ஆயபேர்அரு ளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழு வோர்கட்கு இடர்பாவம்
நண்ணா ஆகும் நல்லினை யாய நல்குமே. (1.101.1)

3. திருப்புன்கூர் - 609112

இறைவன் : சிவலோகநாதர்
இறைவி : சொக்கநாயகியம்மை
தீர்த்தம் : கணபதி தீர்த்தம்
தலவிருட்சம்: புங்கமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 1, அப்பர் 10, சுந்தரர் 10 பாடல்கள்.

வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து மேற்கே 5 கி.மீ. தொலைவு. சீர்காழியிலிருந்தும் செல்லலாம். திருநாளைப் போவார் என்னும் நந்தனார், பெருமானைத் தரிசிக்கும் பொருட்டு, இறைவனே நந்தியைச் சற்றே விலகி இருக்கச் செய்த திருத்தலம் (திருப்பூந்துருத்தி, பட்டீஸ்வரம் போன்ற ஊர்களிலும் இவ்வமைப்பினைக் காணலாம்). கையில் கஞ்சிக் கலயமும், மண்வெட்டியுடனும் கொண்ட நந்தனார் திருவுருவம்

கோபுரத்திற்கு அருகில் உள்ளது. புங்கமரமும், குளமும் கோவிலருகில் உள்ளன. இக்குளத்தை நந்தனார் அமைத்தாரென்பர்.

சுந்தரருடன் வெகுண்ட ஏயர்கோன் கலிக்காமர் இத்திருக் கோயிலுக்கு மழை வேண்டியும், பெய்தமழை அளவிற்கு மீறி வெள்ளம் வந்ததாலும் முறையே பன்னிருவேலி நிலங்கள் தந்த பெருமை பெற்றது. சுந்தரருடன் நண்பராகி கலிக்காமர் இத்திருக்கோயிலுக்கு வந்து இறைவனை வணங்கி பல திருப்பணிகள் செய்தார். கலிக்காமர் ஊராகிய திருப்பெருமங்கலம் இங்கிருந்து வடக்கே 2 மீட்டர் தொலைவிலும், நந்தனார் ஊரான ஆதனூர் தெற்கே 2 மீட்டர் தொலைவிலும் உள்ளன.

பெருமான் கவசம் சார்த்தப் பெற்றுள்ளார். புனுகுசட்டம் சாத்தினால் மட்டும் பெருமானைக் கவசமின்றித் தரிசிக்கலாம். திரிபுரம் எரிபட்ட போது எஞ்சிய மூவரில் ஒருவன் பெருமான் நடனமாடும் பொழுது மண்முழு முழக்குவன் என சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்துத் தேவாரத்தில் கூறியபடி ஆடல்வல்லானின் தென்பால் ஓர் உருவம் மண்முழா முழக்குவதைக் காணலாம். *(சுந்தரர் தேவாரம் 8)*

பவள.வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ணம் உறையும் திருப்புன்கூர்
அழக ரென்னும் அடிகள் அவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே. (1.27.5)

இல்லானை எவ்விடத்தும் உள்ளான் தன்னை
இனிய நினையாதார்க்குகின்னா தானை
வல்லானை வல்லடைந்தார்க்(கு) அருளும் வண்ணம்
மாட்டாதார்க்(கு) எத்திறத்தும் மாட்டா தானைச்
செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நெல்லால் விளைகழனி நீடுரானை
நீதனேனென்னே நான் நினையா வாறே. (6.11.3)

வையக முற்றும் மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந்(து) எங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்
பெயர்த்தம் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. (7.2)

4. திருக்கருப்பறியலூர் - 609203
(தலைஞாயிறு, மேலைக்காழி)

இறைவன் : குற்றம் பொறுத்தநாதர்
இறைவி : கோல்வளையம்மை
தீர்த்தம் : இந்திர, சூரியதீர்த்தங்கள்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, சுந்தரர் 11 பாடல்கள்.

வைத்தீஸ்வரன்கோயில் - திருப்புன்கூர் வழியாக 5 கி.மீட்டர் தொலைவு. இன்று தலைஞாயிறு என்றும், மேலைக்காழி என்றும் வேறு பெயர்கள் வழக்கில் உள்ளன. திருக்கோயிலுக்குக் 'கொகுடிக் கோயில்' என்று பெயர். கொகுடி முல்லை படரும் மரமும் லிங்கமும் பிரகாரத்தில் உள்ளன. இத்தல அந்தணர்களைத் தேவாரம் சிறப்பித்துப் பாடியுள்ளது.

விண்ணவர்கோன் ஒருகால் கயிலைக்குச் செல்ல, சிவபிரான் பூதவடிவமாய் அவன்முன் தோன்றினார். இதனை உணராத இந்திரன் குலிசத்தை அவர்மேல் எறிய பெருமான் பெருஞ்சினங் கொண்டார். உண்மையறிந்த இந்திரனும் தன் குற்றத்தைப் பொறுத்தருள வணங்கிப் பூசித்த தலம். இக்காரணத்தால் இறைவன் குற்றம் பொறுத்த நாதர் என அழைக்கப்பட்டார்.

இங்கும் சீர்காழிபோல மேலே ஏறி பார்வதி பரமேசுரரையும் மீண்டும் மேல் ஏறி சட்ட நாதரையும் தரிசிக்கலாம். தெற்குப் பிரகாரத்தி லிருந்தும் சட்ட நாதரைத் தரிசிக்கலாம்.

சீகாழிக்கு மேல் இருப்பதால் மேலைக்காழி என்றும்; சூரியன் பூசித்ததால் தலைஞாயிறு என்ற பெயரும் உண்டாயிற்று.

வேதமொடு வேதியர்கள் வேள்விமுத லாகப்
போதினொடு போதுமலர் கொண்டுபுனை கின்ற
நாதனென நள்ளிருண்முன் ஆடுகுழை தாழும்
காதவ னிருப்பது கருப்பறிய லூரே. (2.31.3)

முட்டாமே நாள்தோறும் நீர்மூழ்கிப்
பூப்பறித்து மூன்று போதும்
கட்டார்ந்த இண்டைகொண் டடிசேர்த்தும்
அந்தணர்தங் கருப்ப றியலூர்க்
கொட்டாட்டுப் பாட்டாகி நின்றானைக்
குழகனைக் கொகுடிக்கோயில்
எட்டான மூர்த்தியை நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே. (7.3)

5. திருமண்ணிப்படிக்கரை - 609202
(இலுப்பைப்பட்டு)

இறைவன் : நீலகண்டர்
இறைவி : அமிர்தகரவல்லியம்மை
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்
தலவிருட்சம்: இலுப்பை மரம்
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்.

வைத்தீஸ்வரன் கோயிலுக்கு மேற்கே 13 கி.மீ. இத்தலத்திற்கு வடக்கே 7 கி.மீட்டரில் திருக்குறுக்கையும், கிழக்கே 11 கி.மீ. தொலைவில் திருப்பந்தணைநல்லூரும் உள்ளன. இத்திருக்கோயிலில் வலம்புரி விநாயகர் உள்ளார். பஞ்சபாண்டவர் பூசித்த லிங்கங்கள் உள்ளன. பெருமான் ஆலகால நஞ்சினை உண்டபொழுது, அம்மை அவரின் கண்டத்தைப் பிடிக்க, பெருமான் தன் கண்டத்தில் நஞ்சினைக் காட்டிய தலம். சுந்தரர் இத்தலத்தைப் 'பழ மண்ணிப்படிக்கரை' என்றே பாடுகின்றார்.

உங்கைக ளாற்கூப்பி
        உகந்தேத்தித் தொழுமின்தொண்டீர்
மங்கையொர் கூறுடையான்
        வானோர்முத லாயபிரான்
அங்கையில் வெண்மழுவன்
        அலையார்கதிர் மூவிலைய
பங்கைய பாதனிடம்
        பழமண்ணிப் படிக்கரையே. (7.5)



10. சிதம்பரம்

1. சிதம்பரம்
2. திருவேட்களம்
3. திருநெல்வாயில்
4. திருக்கழிப்பாலை

1. சிதம்பரம் - 608001

இறைவன் : திருமூலநாதர், சபாநாயகர்
இறைவி : உமையம்மை, சிவகாமியம்மை
தீர்த்தம் : சிவகங்கை, பரமாநந்த கூடம்
தலவிருட்சம்: ஆலமரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 22, அப்பர் 82, சுந்தரர் 10, மாணிக்கவாசகர் 30 இடங்களில்

'பூலோக கயிலாயம்' எனப் போற்றப்படும் சிதம்பரத்திற்கு அளவிடற்கரிய பெருமைகள் உள்ளன. சைவ உலகில் கோயில் என்றால் சிதம்பரத்தையும், வைணவ உலகில் ஸ்ரீரங்கத்தையும் குறிக்கும் பெருமை பெற்றது. பெருமான் நடனமிடும் காட்சியைக் காண 'மனித்தப் பிறப்பும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்றார் அப்பர் பெருமான். இவர் நடனமிடும் இடமே சபா மண்டபம். இது பொன்வேய்ந்த கூரையாகும். இந்த பொன்னம்பலத்திற்கும் நம் உடலிற்கும் ஒற்றுமைகள் உள்ளன.

பொன்னம்பலத்தின் மேலேவுள்ள ஒன்பது தங்கக்கலசங்கள் ஒன்பது சக்திகளைக் குறிக்கின்றன; இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள 64 மரத்துண்டுகள் ஆயகலைகள் 64ஐக் குறிக்கும்; இங்குள்ள 21600 ஓடுகள் ஒரு நாளில் நாம் உள் இழுக்கும் மூச்சுக்காற்றினை உணர்த்தும்; இவற்றின் அடிக்கப்பட்டுள்ள 72 ஆயிரம் ஆணிகள் நம் உடலிலுள்ள நரம்புகளின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும். இக்கோயிலில் இடப்பக்கம் கருவறை உள்ளது. அது நம்முடம்பில் இதயம் இடப்புறம் உள்ளதை இயம்பும்.

தமிழகத்தின் பஞ்ச சபைகளின் ஒன்றில் ஆடல்வல்லான் அற்புத நடனம் ஆடுகின்றான். இத்தலம் பொன்சபை. பஞ்ச பூதத்தலங்களில் இத் தலம் ஆகாயத்திற்குரியது. சிதம்பரத்தில் வாழ முத்தி. அம்மட்டோ! இச் சிதம்பரத்திலே பஞ்ச சபைகளும் உள. பெயர்தான் மாற்றம். 1. சிற்சபை (சிற்றம்பலம்) 5 தூண்களைக் கொண்டது. ஐம்பொறிகளைக் குறிக்கும். 2. ஆடல்வல்லான் அபிஷேகம் கொள்ளும் சபை- கனக சபை. இங்கு 18

தூண்கள். இவை பதினெண் புராணங்களையும், 5 வெள்ளிப்படிகள்- திருவைந்தெழுத்தினையும், 96 பலகணி- 96 தத்துவங்களை உணர்த்தும்; 3. உற்சவமூர்த்திகள் எழுந்தருளி இருக்கும் சபை- தேவசபை (பேரம்பலம்) 4. கொடிமரத்தின் தென்புறமுள்ள இடம்- நிருத்தசபை 5. இராஜசபை- ஆயிரக்கால் மண்டபம். ஆடல்வல்லானே மூலவரும் உற்சவரும் ஆவார். நால்வரும் வணங்கிப் போற்றிய நற்றலம். 9-ஆம் திருமுறையில் மிகுதியாகப் போற்றிப் பாராட்டப்பட்ட பெருந்தலம். சிதம்பரத்தின் நான்கு கோபுரவாயில்களான கிழக்கில்- மணிவாசகப் பெருமானும்; மேற்கில்- அப்பர் பெருமானும்; தெற்கில்- திருஞானசம்பந்தப் பெருமானும்; வடக்கில்- சுந்தரமூர்த்தி சுவாமிகளும் வருகை புரிந்து சிறப்பித்த பெருமை கொண்ட புண்ணிய பூமி. சிவபிரான் பஞ்ச பூதங்களிலும் உள்ளான். அவன் ஒருவனே ஐந்திலும் கலந்துள்ளான். இதனால் சிவனை பஞ்ச பூதஸ்வரூபி என்பர். இறைவனின் விராட் புருஷ வடிவத்தில் சிதம்பரம் முதன்மை பெறுகிறது.

திருவாரூர்	-	மூலாதாரம்
திருவானைக்கா	-	உந்தி
திருவண்ணாமலை	-	மணிபூரகம்
திருக்காளத்தி	-	கழுத்து
காசி	-	புருவமத்தி
திருத்தில்லை	-	இதயம்

(சித்+அம்பரம்) சிதம்பரம்.

சித்-அறிவு; அம்பரம்- வெட்டவெளி

தில்லை, புலியூர் என்ற வேறுபெயர்களும் சிதம்பரத்திற்கு உண்டு.

தமிழ் மறையான தேவாரம் எழுதப்பட்ட ஓலைகள் இத்தில்லையில் தான் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அவ்வேடுகளை நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு அபய குலசேகர சோழமன்னன் வெளிப்படுத்தி னான். அநபாய சோழமன்னன் காலத்தில் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தை அரங்கேற்றிய இடம். 'தில்லை பாதி திருவாசகம் பாதி' என்ற சிறப்புக் கொண்ட திருப்பதி. சபாநாயகனின் திருவடிகளே நமக்குப் பெருந்துணை என்று நம்பிப் பூசித்து வந்த சேரமான் பெருமானின் பூசை முடிவில் சபாநாயகர் தம் திருச்சிலம்பொலியை ஒலிக்கச் செய்த பெரும்பதி. மெய்ப்பொருள் நாயனார் தாம் உயிர் நீங்குங் காலத்து இப்பெருமானைத் தியானித்தே முத்தி பெற்றார்.

ஏனைய சிவத்தலங்களிலுள்ள சிவகலைகள் அனைத்தும் நடு இரவில் இச்சிதம்பரத்தில் வந்து சேரும் ஒப்புயர்வற்ற தலம். நால்வரோடு திருநீலகண்ட நாயனார், கோட்செங்கண், கணம்புல்லர், மறைஞான

சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார், தில்லை மூவாயிரவர் போன்ற எண்ணற்ற அடியார்கள் முத்தி பெற்ற தலம்.

நீண்டகன்ற பெரியகோயில். சிவகங்கை தீர்த்தம் கோயிலின் வடகிழக்கில் உள்ளது. அம்மையின் சந்நிதி தனியாக உள்ளது. பெருமான் சந்நிதியில் அபிஷேகம், ரகசியம் போன்றன தரிசிக்க வேண்டியன. பகல் உச்சிக்காலத்தில் ஆத்மலிங்கமான ஸ்படிக லிங்க அபிஷேகம், பூஜை பார்க்க வேண்டிய ஒன்று. அர்த்தசாம பூசையைக் கண்டு வழிபடலும் சிறப்பே! புலியூர் சிதம்பரம் அல்லவா! இப்புலியூர் பெருமை பற்றி வழங்கும் தலங்கள் 1. பெரும்பற்றப் புலியூர். 2. திருப்பெரும்புலியூர் 3. திருஓமாம்புலியூர் 4. திருப்பாதிரிப்புலியூர் 5. திரு எருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரபட்டினம் என்பது இன்றைய வழக்கு) இத்தலப் பெருமைகள் அளவிடற்கரியன. பொன்வேய்ந்த கூரையில் கூத்தனின் கூத்தைக் காணாத கண்ணும் கண்ணா? தில்லை அறியார் யார்?

அலையார் புனல்சூடி யாகத் தொருபாகம்
மலையான் மகளொடு மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால் எயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. (1.80.7)

பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ இகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே. (4.23.1)

முட்டாத முச்சந்தி மூவா
யிரவர்க்கும் மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார்
பாவமும் வினையும் போக
விட்டானை மலைஎடுத்த இராவணனைத்
தலைப்பத்தும் நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாம் அன்றே. (7.7)

'தில்லையுள் கூத்தனே' (திருவாசகம். சிவபுராணம் 90)

2. திருவேட்களம் - 608002

இறைவன் : பாசுபதேசுவரர்
இறைவி : நல்லநாயகி
தீர்த்தம் : சிவகங்கை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்.

சிதம்பரத்திற்குக் கிழக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. (திருவேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை இம்மூன்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக அருகே அமைந்துள்ளன) இன்றைய அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அழகிய சிறுகோயில். திருஞானசம்பந்தர் சிதம்பரத்தில் தங்கி இருப்பதற்கு அஞ்சி இத்திருத்தலத்திலேயே இருந்து கொண்டு சிதம்பரம் சென்று சபா நாயகரைக் கண்டு தரிசித்து வந்தார். இத்திருக்கோயிலும், திருநெல் வாயில் எனப்படும் சிவபுரி சிவாலயமும் ஒரே அமைப்பாயும் அளவினவாயும் உள்ளன. அருச்சுனனுக்குப் பெருமான் பாசுபதாஸ்திரம் வழங்கியதலம். பாசுபதாஸ்திரத்தைக் கையிலேந்திய உற்சவரைக் காணலாம். வைகாசி விசாகத்தில் இவ்விழாச் சிறப்பாக நடைபெறுகிறது.

அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல்
    ஆரழல் அங்கை அமர்ந்திலங்க
மந்த முழவம் இயம்ப
    மலைமகள் காணநின் றாடிச்
சந்த மிலங்கு நகுதலை கங்கை
    தண்மதி யம்மய லேததும்ப
வெந்தவெண் ணீறுமெய் பூசும்
    வேட்கள நன்னக ராரே (1.39.1)

அல்லல் இல்லை அருவினை தானில்லை
மல்கு வெண்பிறை சூடும் மணாளனார்
செல்வ னார்திரு வேட்களங் கைதொழ
வல்ல ராகில் வழியது காண்மினே. (5.42.4)

3. திருநெல்வாயில் (சிவபுரி) - 608002

இறைவன் : உச்சிநாதர்
இறைவி : கனகாம்பிகை
தீர்த்தம் : கிருபாசமுத்திரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

திருநெல்வாயில் இன்று சிவபுரி என வழக்கில் உள்ளது. திரு வேட்களத் திருக்கோயிலினின்று 2 கி.மீ. இத்திருக்கோயிலில் பெருமான் பின் ஐயன், அம்மை திருவுருவங்கள் உள்ளன (இத்தலத்தில் இரு ஆலயங்கள் உள. வடக்கே இருக்கும் திருக்கோயில் திருநெல்வாயிலுக்கு உரியது; தெற்கே உள்ளது திருக்கழிப்பாலை பால்வண்ண நாதரின் கோயிலாம்.)

மறையி னார்மழு வாளி னார்மல்கு
பிறையி னார்பிறை யோடி லங்கிய
நிறையி னாரநெல் வாயி லார்தொழும்
இறைவ னாரெம் துச்சி யாரே. (2.4)

4. திருக்கழிப்பாலை (காரைமேடு) - 608002

இறைவன் : பால்வண்ணநாதர்
இறைவி : வேதநாயகி
தீர்த்தம் : பஞ்சாக்கர தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 22, அப்பர் 42, சுந்தரர் 10 பாடல்கள்.

இன்று கழிப்பாலை காரைமேடு என வழங்குகின்றது. கொள்ளிடம் ஆற்றங்கரையில் கழிப்பாலைத் திருக்கோயில் இருந்ததாகவும், வெள்ளத்தால் அக்கோயில் அழிந்துவிட மக்கள் சிவபுரிக்கு அருகே இக்கோயிலைக் கட்டியதாகவும் கூறுவர்.

கொடிகொள் ஏற்றினர் கூற்றை உதைத்தனர்
பொடிகொள் மார்பினிற் பூண்டாதா ராமையர்
கடிகொள் பூம்பொழில் சூழ்கழிப் பாலையுள்
அடிகள் செய்வன ஆர்க்கறி வொண்ணுமே. (3.44.3)

வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிலள்
எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
அண்ண லேயறி வானிவள் தன்மையே (5.40.1)

எங்கே னும்இருந்துன் அடியேன் உனைநினைந்தால்
அங்கே வந்(து)என்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என்வினையை அறுத்திட்(டு) எனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே. (7.2)

11. மயிலாடுதுறை

1. மயிலாடுதுறை
2. திருநீடூர்
3. குறுக்கை *(கொருக்கை)*
4. செம்பொனார் கோயில்
5. விளநகர்
6. திருப்பறியலூர் *(பரசலூர்)*
7. திருநனிபள்ளி *(புஞ்சை)*
8. அன்னியூர் *(பொன்னூர்)*
9. திருநின்றியூர்
10. குரக்குக்கா
11. திருவாழ்கொளி புத்தூர் *(வாளப்புத்தூர்)*
12. கடைமுடி

1. மயிலாடுதுறை - 609001

இறைவன் : மயூரநாதர்
இறைவி : அபயாம்பிகை
தீர்த்தம் : காவிரி
தலவிருட்சம்: மா, வன்னி
பாடியோர் : திருஞானசம்பந்தர் 22, அப்பர் 11 பாடல்கள்.

மயிலாடுதுறை ஊரின் கோடியில் கோவில் உள்ளது. பெரியகோயில் அம்மை மயிலாக இருந்து இறைவனைப் பூசித்தத்தலம். ஐப்பசி மாதத்தின் கடைசிநாள் இந்நீர்த் தீர்த்தத்துறையில் நீராடல் சிறப்பு. இவ்வூரின் கடைசியில் தருமை ஆதீனம் உள்ளது. காவிரியின் வடகரையில் வள்ளலார் கோயில் (மயிலாடுதுறை கோயிலுக்கு நேர்வடக்காக உள்ளது. இவ்வாலயத்திலுள்ள தட்சிணாமூர்த்தி விசேடமானவர். அமாவாசை களிலும் குருவாரமான வியாழன் நாட்களிலும் சிறப்பான வழிபாடு உண்டு. இவ்வூர் அருகே 'சித்தர்காடு' என்றோர் ஊர் உண்டு.) அங்கு 'திருச்செந்தூர் அகவல்' பாடிய திருச்சிற்றம்பல அடிகளாரின் சமாதி உள்ளது. வணங்கலாம்.

ஊனத்து இருள்நீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண்டு அடிபேணும்
தேனொத்து இனியான் அமருஞ்சேர்
வானம் மயிலாடுதுறையே 1.38.1

வெஞ்சி னக்கடுங் காலன் விரைகிலான்
அஞ்சிறப்புப் பிறப்பும் அறுக்கலாம்
மஞ்சன் மாமயி லாடு துறையுறை
அஞ்சொ லால்உமை பங்கன் அருளிலே 5.39.4

2. திருநீடூர் - 609203

இறைவன் : அருட்சோமநாதர், கானநிர்த்த சங்கரர்
இறைவி : வேயுறு தோளியம்மை
தீர்த்தம் : செங்கழுநீரோடை
தலவிருட்சம்: மகிழமரம்
பாடியவர் : சுந்தரர் 11 பாடல்கள்.

எக்காலத்தும் அழிவில்லாது நீடித்திருத்தலின் 'நீடூர்' எனப் பெயர் பெற்றது.

இந்திரன், சூரியன், நண்டு, காளி இவர்கள் பூசித்தத்தலம். முனையாடுவார் நாயனார் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்து முத்திபெற்ற தலம். இவருடைய திருமேனி கோயிலுள் உள்ளது. ஆவணி மாத ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியபூசை நிகழ்கின்றது. வருணாரண்யம், மகிழவனம் என்றும் இத்தலத்திற்கு வேறு பெயர்கள் உண்டு.

அல்லல் உள்ளன தீர்த்திடு வானை
அடைந்த வர்க்(கு)அமு தாயிடு வானைக்
கொல்லை வல்லர வம்அசைத் தானைக்
கோல மார்கரி யின்உரி யானை
நல்ல வர்க்(கு)அணி ஆனவன் தன்னை
நானும் காதல்செய் கின்றபி ரானை
எல்லி மல்லிகை யேகமழ் நீடூர்
ஏத்தி நாம்பணி யாவிட லாமே. (7.10)



3. திருக்குறுக்கை - 609205

இறைவன் : வீரட்டேசுரர்
இறைவி : ஞானாம்பிகை
தீர்த்தம் : சூலதீர்த்தம்
தலவிருட்சம்: கடுக்காய் மரம்
பாடியவர் : அப்பர் 12 பாடல்கள்.

திருமண்ணிப்படிக்கரைக்குச் சமீபம். திருநீடூருக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவு. தீர்க்கவாகு என்னும் முனிவர் இறைவனுக்கு திருமஞ்சனம் செய்ய தம் நீண்ட கைகளை உயரத் தூக்கிய நிலையில் கரங்கள் குறுகின. (தீர்க்கவாகு-நீண்ட கை) ஆதலால் இத்தலம் குறுக்கை எனலாயிற்று.

அட்டவீரட்டத் தலத்தில் இத்தலமும் ஒன்று. காமனை எரித்த ஊர். கோயில் எதிரில் சூலதீர்த்தம் உள்ளது. தெற்குச்சுற்றில் விநாயகரும், குறுங்கைகளைப் பெற்ற முனிவரும் உள்ளனர். இவர்கட்கு எதிரில் கடுக்காய் மரம் உள்ளது. பெருமானின் பின்புறமும் நந்தி உள்ளது. இது வேறெங்கும் காண முடியாத ஒன்று.

வேதாரணிய புராணத்தில் சபை சருக்கத்தில் கூறப்பட்டுள்ள சபைகளுள் இத்தலச்சபை 'காமாங்க நாசனி சபை' அல்லது 'சம்பு விநோதசபை' எனக்கூறப்பட்டுள்ளது. கோயிலிலிருந்து சற்றுத் தொலைவில் திருநீறுபோல் வெள்ளை மணல் உள்ளது. அவ்விடமே மன்மதன் எரிந்த இடம் என்பர்.

இத்தல இத்திருக்கோயிலுக்குப் பெண்கள் அவசியம் சென்று வரவேண்டும். சென்றுவரும் மகளிர் நீண்ட காலம் தம் துணைவருடன் வாழ்வதோடு இல்லறத்தில் இடர் இல்லாமலும் வாழ்வர் என்பது உறுதி.

நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டும் அந்தண னாரைக்கொல்வான்
சாற்றுநாள் அற்றதென்று தருமரா சற்காய்வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கைவீ ரட்டனாரே. 4.49.2



(செம்பொன் பள்ளி)

4. செம்பனார் கோயில் - 609309

இறைவன் : சொர்ணபுரீசுரர்
இறைவி : மருவார்குழலி
தீர்த்தம் : வீரபத்திரதீர்த்தம்
தலவிருட்சம்: வன்னி, வில்வம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11, அப்பர் 20 பாடல்கள்.

மயிலாடுதுறை- பொறையாறு 6வது கி.மீ. விளநகர்; 10. கி.மீ. செம்பனார் கோயில் இந்திரனும் குபேரனும் பூசித்தத்தலம்.

மழுவா ளேந்தி மாதோர் பாகமாய்ச்
செழுவார் செம்பொன் பள்ளி மேவிய
எழிலார் புரிபொன் சடையெம் மிறைவனைத்
தொழுவார் தம்மேற் றுயர மில்லையே. 1.25.4

பூவு லாஞ்சடை மேற்புனல் சூடினான்
ஏவ லாலெயின் மூன்றும் எரித்தவன்
தேவர் சென்றிறைஞ்சும் செம்பொன் பள்ளியான்
மூவ ராய்முத லாய் நின்ற மூர்த்தியே. 5.36.5

5. விளநகர் - 609305

இறைவன் : துறைகாட்டும் வள்ளலார்
இறைவி : வேயுறு தோளியம்மை
தீர்த்தம் : காவிரி
பாடியவர் : சம்பந்தர் 11 பாடல்கள்.

மயிலாடுதுறை- சிதம்பரம் சாலையில் 4 கி.மீ. செம்பொனார் கோயில் அருகில்.

அருள்வித்தன் என்னும் ஓர் அந்தணன் இறைவனுக்காக மலர்க் கூடையை எடுத்துக் கொண்டு ஆற்றில் வரும் பொழுது, வெள்ளம் அவனை அடித்துக் கொண்டு செல்ல, அவன் மலர்க்கூடையை விடாது பெருமானையே தியானித்து வந்தான். அவனின் அன்புக்கு இரக்கங் கொண்ட இறைவனும் ஒருதுறையைக் காட்டிக் கரையேற விட்டதோடு ஞானோபதேசமும் செய்தார். இக்காரணத்தால் சுவாமிக்குத்துறை காட்டும் வள்ளல் என்ற பெயர் உண்டாயிற்று. முருகனின் உருவம் சிறியதாய் உளதென்றாலும் அழகாய் உள்ளது.

சொற்றரும்மறை பாடினார் சுடர்விடுஞ்சடை முடியினார்
கற்றருவ்வடங் கையினார் காவிரித்துறை காட்டினார்
மற்றருந்திரள் தோளினார் மாசில்வெண்பொடிப் பூசினார்
விற்றரும்மணி மிடறினார் மேயதுவிள நகரதே. 2.78.7

6. திருப்பறியலூர் (கீழ்ப்பரசலூர்) - 609309

இறைவன் : வீரட்டேசுவரர்
இறைவி : இளங்கொம்பனையாள்
தீர்த்தம் : உத்தரவேதி தீர்த்தம்
தலவிருட்சம்: வில்வம், பலா.
பாடியவர் : சம்பந்தர் 11 பாடல்கள்.

அட்டவீரட்டானங்களில் ஒன்று.

செம்பொனார் கோவிலிலிருந்து (நான்கு ரோடு பிரியுமிடம் அண்ணாசிலை அருகில்) நாகப்பட்டினம் செல்லும் சாலையில் 2 கி.மீ. சென்று பின்னர் கீழப்பரசலூர் கைகாட்டி பார்த்து சிறிய சாலையில் 5 கி.மீ. செல்ல வேண்டும். சிறிய கோயில் அருகிலேயே சிவாச்சாரியார் இல்லம். மேற்குப் பார்த்த சந்நிதி. வணங்குவார்க்கு வீரமும் புகழும் கிட்டும். தக்கன் தலையைக் கொய்த தலம். உற்சவர் விக்கிரகத்தில் பெருமான் திருவடியில் தக்கன் உள்ள அற்புதக் காட்சியைக் காணலாம். (அட்ட வீரட்டானங்களில் திருக்குறுக்கையினும் இத்திருக்கோயிலுக்கு அடியார் வரவு மிகக் குறைவு. (திருக்கடவூர், திருக்குறுக்கை, பறியலூர், இம்மூன்றும் தருமை ஆதீனக் கோயில்களே)

குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தா னடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறிய லூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. (1.134.3)



7. திருநனிபள்ளி (புஞ்சை) - 609304

இறைவன் : நற்றுணையப்பர்
இறைவி : மலையமான் மடந்தை
தீர்த்தம் : சொன்ன தீர்த்தம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 9, சுந்தரர் 11 பாடல்கள்.

செம்பொனார் கோவிலிலிருந்து திருவெண்காட்டிற்குச் செல்லும் பாதையில் 5 கி.மீட்டர்.

திருஞானசம்பந்தரின் தாயார் பிறந்த தலம். தம் தந்தையின் தோள் மேலிருந்து பெருமானார் பதிகம் பாடிய தலம். அடியார்களின் வேண்டு கோளுக்கிணங்கி, பாலையாய் இருந்த இத்தலத்தைச் சம்பந்தர் நெய்தலாகப் பாடினார். 'பாலை நெய்தல் பாடியதும்' -திருக்களிற்றுப் படியார். திருநாவுக்கரசர் தம் நேரிசை (4.70.5) யில் 'வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே' எனச் சமணர்கள் தமக்குக் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றினை அமுதாக்கிய வரலாற்றின் அகச்சான்று இத்தலத்திற்கு உரியது. நல்ல வேலைப்பாடுடன் கூடிய கோவில் கட்டடம். திரு ஆவுடையார் கோயில் கொடுங்கையும், திருநனிபள்ளி கோடி வட்டமும், போரூர்ச் சிற்பங்களும், திருவீழிமிழலை வௌவானத்தி மண்டபமும் சிறப்பு வாய்ந்தன.

பெறுமலர் கொண்டு தொண்டர் வழிபாடு செய்ய
லொழிபா டிலாத பெருமான்
கறுமலர் கண்டமாக விடமுண்ட காளை
யிடமாய காதல் நகர்தான்
வெறுமலர் தொட்டுவிட்ட விசைபோன கொம்பின்
விடுபோ தலர்ந்த விரைசூழ்
நறுமல ரல்லிபுல்லி யொலிவண் டுறங்கு
நனிபள்ளி போலு நமர்காள். 2.84.3

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்து ஓதில் நாளும் அரனடிக்கு அன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமும் அமுதாக்கு வித்தா நனிபள்ளி யடிகளாரே. 4.70.5)

ஆதியான் ஆதிரை யான்அயன்
மால்அறி தற்கு அரிய
சோதியன் சொற்பொரு ளாய்ச் சுருங்
காமறை நான்கினையும்

ஓதியன் உம்பர்தங் கோன்உல
கத்தினுள் எவ்வுயிர்க்கும்
நாதியான் நம்பெரு மான் நண்ணும்
ஊர்நனி பள்ளியதோ. 7.1

8. அன்னியூர் (பொன்னூர்) - 609203

இறைவன் : ஆபத்சகாயேசுவரர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்
தலவிருட்சம்: எலுமிச்சை மரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 19 பாடல்கள்.

நீடூருக்கு மேற்கே 5 கி.மீ.

சூரியன் தன் ஒளிக்கதிர்களை பங்குனி 24-25 தேதிகளில் இறைவன் மேல் செலுத்துகின்றான். (இத்தலத்திற்கு மேற்கே 4 கி.மீ. திருவேள்விக் குடி உள்ளது) வருணன் பூசித்தத் தலம்.

நிறைவு வேண்டுவீர் அறவன் அன்னியூர்
மறையு ளான்கழற் குறவு செய்மினே. 1.96.5.

வெந்த நீறுமெய் பூசுநன் மேனியர்
கந்த மாமலர் சூடுங் கருத்தினர்
சிந்தை யார்சிவ னார்செய்ய தீவண்ணர்
அந்த ணாளர்கண் டீரன்னி யூரரே. 5.8.6

9. திருநின்றியூர் - 609118

இறவைன் : மகாலட்சுமீசுரர்
இறைவி : உலகநாயகி
தீர்த்தம் : இலட்சுமி தீர்த்தம்
தலவிருட்சம்: விளாமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10, அப்பர் 10, சுந்தரர் 18 பாடல்கள்.

மயிலாடுதுறைக்கு வடக்கிலுள்ள ஆனந்தத்தாண்டவ புரத்தி (ஆனை தாண்டபுரம்)லிருந்து 3 கி.மீ.

இலக்குமி பூசித்தத் தலம். திரு+நின்ற+ஊர். பரசுராமன் உருவம் உள்ளது. பெருமானின் வெட்டுப்பட்ட பள்ளம் உள்ளது. ஓர் அரசனுக்காக நிகழ்ந்தது என்பர்.

குழலின்னிசை வண்டின்னிசை கண்டு குயில்கூவும்
நிழலின்எழில் தாழ்ந்தபொழில் சூழ்ந்தநின்றி யூரில்
அழலின்வல னங்கையது ஏந்தியன லாடுங்
கழலின்னொலி யாடும்புரி கடவுள்களை கண்ணே. 1.18.5

பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் மல்கி யயலெலாம்
நிறையும் பூம்பொழில் சூழ்திருநின்றியூர்
உறையும் ஈசனை யுள்குமென் உள்ளமே. 5.23.4

வஞ்சங்கொண் டார்மனம் சேரகில் லார்நறு நெய்தயிர்பால்
அஞ்சுங்கொண் டாடிய வேட்கையி னாரதி கைப்பதியே
தஞ்சங்கொண் டார்தமக் கென்றும் இருக்கை சரணடைந்தார்
நெஞ்சங்கொண் டார்க்கிட மாவது நந்திரு நின்றியூரே. 7.5.

10. திருக்குரக்குக்கா (குரக்காவல்) - 609201

இறைவன் : குந்தளநாதர்
இறைவி : குந்தளநாயகி
தீர்த்தம் : கணபதி தீர்த்தம்
பாடியோர் : அப்பர் 10 பாடல்கள்.

மேலைக்காழி, தலைஞாயிறு இத்தலத்திலிருந்து 8 கி.மீ. அநுமனின் அருந்தவால் வளர்ந்த இடம். சிறிய கோயில். மாதந்தோறும் அமாவாசையன்று யாகங்கள் நிகழ்கின்றன. சிவாச்சாரியார் வீடு அருகிலேயே உள்ளது. ஆண்டுக்கொருமுறை சித்திரை, வைகாசி மாதங்களில் ஒரு நாளில் குரங்குகளே பூசை செய்யும் திருத்தலம்.

ஆல நீழல் அமர்ந்த அழகனார்
கால னையுதை கொண்ட கருத்தனார்
கோல மஞ்ஞைக ளாலுங் குரக்குக்காப்
பால ருக்கருள் செய்வர் பரிவொடே. 5.75.7

11. திருவாழ்கொளிபுத்தூர் (வாளப்புத்தூர்) - 609205

இறைவன் : மாணிக்கவண்ணர்
இறைவி : வண்டார்பூங்குழலி
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: வாகை
பாடியவர் : திருஞான சம்பந்தர் 22, சுந்தரர் 12 பாடல்கள்

இன்று வாளப்புத்தூர் என வழங்கப்படுகின்றது. வைத்தீஸ்வரன் கோயிலுக்கு மேற்கே 3 கி.மீ. சென்று திருப்புன்கூர் அடைந்து மேற்கே 2 கி.மீ சென்று இலப்பைப்பட்டியிலிருந்து 5 கி.மீ. செல்ல வேண்டும். மயிலாடுதுறை-மணல்மேடு சாலையில் உள்ளது. சிறிய கோயில் திருமால் மாணிக்கத்தை வைத்துப் பூசித்தத் தலம். அருச்சுனனின் வாளை இறைவன் ஒரு புற்றில் ஒளித்து வைத்ததால் வாள்ஒளி புத்தூர் எனப் பெயர் வந்தது என்பர். துர்க்கை சந்நிதி விசேடம்.

தண்டும் தாளமும் குழலும்
    தண்ணுமைக் கருவியும் புறவில்
கொண்ட பூதமும் உடையார்
    கோலமும் பலபல உடையார்
கண்டு கோடலும் அரியார்
    காட்சியும் அரியதோர் கரந்தை
வண்டு வாழ்பதி யுடையார்
    வாழ்கொளி புத்தூர் உளாரே. 2.94.6

திருவின் நாயகன் ஆகிய மாலுக்
    கருள்கள் செய்திடும்தேவர் பிரானை
உருவி னானைஒன் றாஅறி வொண்ணா
    மூர்த்தி யைவிச யற்கருள் செய்வான்
செருவில் ஏந்திஓர் கேழற்பின் சென்று
    செங்கண் வேடனாய் என்னொடும் வந்த
மருவி னான்தனை வாழ்கொளி புத்தூர்
    மாணிக்கத் தைமறந்து என்நினைக்கேனே. 7.6



12. திருக்கடைமுடி (கீழையூர்) - 609304

இறைவன்	:	கடைமுடிநாதர்
இறைவி	:	அபிராமி
தீர்த்தம்	:	கருணாதீர்த்தம்
தலவிருட்சம்	:	கிளுவை மரம்
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருநின்றியூருக்குத் தென்கிழக்கே 6 கி.மீ. நனிபள்ளிக்கு வடமேற்கே 1¾ கி.மீ. மயிலாடுதுறை பூம்புகார் 10 கி.மீ. செம்பொனார் கோயிலிலிருந்து 5 கி.மீ.

கிளுவை மரத்திற்குக் கீழும் ஓர் இலிங்கத்திருமேனி அமர்ந்துள்ளார். மூலவர் மேற்குப் பார்த்துள்ளார். பிரமன் பூசித்தத் தலம். சிறிய கோவில். கோவில் அருகிலேயே சிவாச்சாரியார் வீடு உள்ளது.

கொய்யணி நறுமலர்க் கொன்றையந்தார்
மையணி மிடறுடை மறையவனூர்
பையணி யரவொடு மான்மழுவாள்
கையணி பவனிடங் கடை முடியே. 1.111.4



12. காட்டு மன்னார்குடி

1. திருஓமாம்புலியூர்
2. திருக்கடம்பூர்
3. திருக்கானாட்டு முள்ளூர்
4. திருநாரையூர்

1. திருஓமாம்புலியூர் - 608306

இறைவன் : துயர்தீர்த்த நாதர்
இறைவி : பூங்குடிநாயகி
தீர்த்தம் : கொள்ளிடம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10, அப்பர் 9 பாடல்கள்.

சிதம்பரத்திற்குத் தென்மேற்கே 30 கி.மீ. காட்டுமன்னார்குடிக்குத் தெற்கே 6 கி.மீ. ஜெயங்கொண்டம் சென்று காட்டுமன்னார்குடி செல்லலாம். தட்சிணாமூர்த்தி சந்நிதி விசேடம். தட்சிணாமூர்த்தி பெருமானின் சுற்றில் தனித்தே இல்லாமல் கோயிலினுள்ளேயே காட்சி தருகின்றார். பிரணவமந்திரத்தை அம்மையிடம் தென்முகக்கடவுள் உபதேசம் பெற்ற தலம். இதனால் 'பிரணவ வியாக்கிரபுரம்' என்னும் பெயரும் உண்டு.

புலி ஒன்றுக்கு அஞ்சிய வேடனொருவன் வில்வமரத்தில் ஏறி இரவு முழுவதும் உறக்கம் வராதிருக்க வில்வ இலையைப் பறித்துக் கீழே போட, அவ்விலைகள் சிவலிங்கத்தின்மேல் விழ பொழுது புலர்ந்ததும் பெருமான் மனம் விரும்பி அவனுக்கு அருள் புரிந்ததாக வரலாறு.

கோயிலுக்குக் கீழ்ப்பாக்கத்தில் 'வடதளி' என்னும் கோயில் ஒன்று உள்ளது.

மணந்திகழ் திசைகள் எட்டும்ஏ ழிசையும்
மலியுமா றங்கம்ஐ வேள்வி
இணைந்தநால் வேதம் மூன்றெரி யிரண்டு
பிறப்பென வொருமையா லுணரும்
குணங்களும் அவற்றின் கொள்பொருள் குற்றம்
மற்றவை யுற்றது மெல்லாம்
உணர்ந்தவர் வாழும் ஓமாம் புலியூர்
உடையவர் வடதளி யதுவே. (3.122.6)

மலையானை வருமலையன் றுரிசெய் தானை
மறையானை மறைாலும் அறிய வொண்ணாக்
கலையானைக் கலையாருங் கையி னானைக்
கடிவானை அடியார்கள் துயர மெல்லாம்
உலையாத அந்தணர்கள் வாழு மோமாம்
புலியூரெம் உத்தமனைப் புரம்மூன் றெய்த
சிலையானை வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே. (6.88.7)

2. திருக்கடம்பூர் - 608304

(மேலைக்கடம்பூர், காரக்கோயில்)

இறைவன்	:	அமுதகடேசர்
இறைவி	:	சோதிமின்னம்மை
தீர்த்தம்	:	ஆசிதீர்த்தம்
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 11, அப்பர் 21 பாடல்கள்.

ஊரின் பெயர் திருக்கடம்பூர் திருக்கோவிலுக்குக் காரக்கோயில் என்று பெயர். ஓமாம்புலியூர்க்கு வ.மேற்கே 6 கி.மீ. கரம்-கை. இந்திரன் வழிபட்டு அமிழ்தம் பெற்ற ஊர். இக்கோயிலின் மூலத்தானம் ரதம் போன்றும் அதனை இழுத்துச் செல்லுதல்போல் குதிரையுடனும் சக்கரத்துடனும் அமைந்து காணப்படுகின்றது. இந்திரன் தன்கைகளால் பெருமானை அகழ்ந்து கொண்டு போக முயன்றான். முயற்சி பலன் அளிக்கவில்லை. சிவகணங்கள் பூசித்தத் தலம்.

இளிபடும் இன்சொலி னார்கள் இருங்குழல் மேலிசைந் தேறத்
தெளிபடு கொள்கை கலந்த தீந்தொழி லார்கடம் பூரில்
ஒளிதரு வெண்பிறை சூடி யொண்ணுத லோடுட னாகிப்
புளியத ளாடை புனைந்தான் பொற்கழல் போற்றுதும் நாமே.
(2.68.3)

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. (5.19.9)

3. திருகானாட்டு முள்ளூர் (கானாட்டம் புலியூர்) - 608306

இறைவன் : பதஞ்சலி நாதேசுரர்
இறைவி : கானார் குழலி; கோல்வளைக்கையம்மை
தீர்த்தம் : புட்கரணி
பாடியவர் : சுந்தரர் 11 பாடல்கள்.

ஓமாம் புலியூரிலிருந்து வ.கிழக்காகக் கொள்ளிடைக் கரையோரமாய் 5 கி.மீ. பதஞ்சலி முனிவர் பூசித்த ஊர். அத்திமரமும், வெள்ளெருக்கஞ் செடியும் உள்ளன.

விடை அரவக்கொடி ஏந்தும் விண்ணவர்தம் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுத லானும்
அடியிணையும் திருமுடியும் காணஅரி தாய
சங்கரனைத் தத்துவனைத் தையல்மட வார்கள்
உடைஅவிழக் குழல்அவிழக் கோதைகுடைந் தாடக்
குங்குடங்கள் உந்திவரும் கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள்விடு வார்குவளை களைவாருங் கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டுதொழு தேனே. (7.6)

4. திருநாரையூர் - 608303

இறைவன் : சௌந்தரேசுரர்
இறைவி : திரிபுரசுந்தரியம்மை
தீர்த்தம் : காருண்யதீர்த்தம்
தலவிருட்சம்: புன்னாகம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 33, அப்பர் 20 பாடல்கள்.

திருமுறையைத் தொகுத்தவரும் தேவாரம் வெளிவரக் காரணமாய் இருந்தவருமான நம்பியாண்ட நம்பிகள் பிறந்த திருவூர். அவரால் வழிபடப்பெற்ற பொல்லாப்பிள்ளையார் திருக்கோயிலில் உள்ளார். சங்கடகரசதுர்த்தி இப்பிள்ளையார்கது வெகுப்பிரசித்தம். ஆயிரக் கணக்கில் மக்கள் கூடுவர். நாரை ஒன்று வழிபட்ட தலம். (சிதம்பரத்தி னின்றும் நகரப்பேருந்து உண்டு)

தீவினை யாயின தீர்க்கநின்றான் திருநாரை யூர்மேயான்
பூவினை மேவு சடைமுடியான் புடைசூழப் பலபூதம்
ஆவினில் ஐந்துங்கொண் டாட்டு கந்தான் அடங்கார் மதில்மூன்றும்
ஏவினை யெய்தழித் தான்கழலே பரவா எழுவோமே. (3.102.2)

பிறவாதும் இறவாதும் பெருகி னானைப்
பேய்பாட நடமாடும் பித்தன் தன்னை
மறவாத மனத்தகத்து மன்னி னானை
மலையானைக் கடலானை வனத்து ளானை
உறவானைப் பகையானை உயிரானானை
உள்ளானைப் புறத்தானை ஓசை யானை
நறவாரும் பூங்கொன்றை சூடி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே. (6.74.6)



13. திருநாகைக்காரோணம் (நாகை)

1. நாகப்பட்டினம்
2. சிக்கல்
3. கீழ்வேளூர்
4. திருத்தேவூர்

1. நாகப்பட்டினம் (திருநாகைக்காரோணம்) - 611001

இறைவன் : காயாரோகணேசுரர், ஆதிபுராணேசுவரர்
இறைவி : நீலாயதாட்சியம்மை
தீர்த்தம் : தேவ, சர்வ, புண்டரிக, அக்கினி, காக, பிரம, முனி, வச்சிர தீர்த்தங்கள்
தலவிருட்சம்: மாமரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 22, அப்பர் 30, சுந்தரர் 11 பாடல்கள்.

இன்றைய மாவட்டத்தின் தலைநகர். ஆதிசேடன் பூசித்ததால் நாகை என்றும்; (காய+ ஆரோகணர்) சிவபெருமான் புண்டரிக மகரிஷியைக் காயத்தோடு (உடம்போடு) தம்மிடம் ஏற்றுக் கொண்டார். அதனால் காயாரோகணர் என்னும் பெயர் வந்தது. பின்னர் மருவி காரோணம் என ஆயிற்று என்பர். சக்தி பீடம் 64இல் இத்தலமும் ஒன்று. சப்தவிடத் தலங்களில் ஒன்று. சுந்தரவிடங்கர் பாராவாரதடங்க நடனம், அதிபத்த நாயனார் அவதரித்த முத்தி அடைந்ததலம். கோயிலில் தியாகேசருக்கு எதிரே சுந்தரர் பரவையாருடன் காட்சியளிக்கிறார். சுந்தரர் இத்தலத்தில் இறைவனிடம் பொன்னும், நவமணியும், திருவாபரணங்களும், பட்டு, குதிரை, உடைவாள் போன்ற பிறவும் பெற்ற தலம். (செல்வம் வேண்டுவோர் நாள்தோறும் இத்திருப்பதிகத்தைப் பாடிப் பயன் அடையலாம்) பெருமான் கருவறையில் ஸ்படிக லிங்கம் உள்ளது. அந்த லிங்கத்திற்கு அபிஷேகமும், தீபாராதனையும் நடைபெறும். இந் நிகழ்ச்சியைத் தவறாது தரிசிக்க வேண்டும். அம்மன் சந்நிதி விசேடம். காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி; காசி விசாலாட்சி; நாகை நீலாயதாட்சி என்பது உலக வழக்கு. நாகை ஊர்ப்பெயர், காயாரோகணம் கோயிலின் பெயர்.

நல்லா ரறஞ்சொல்லப் பொல்லார் புறங்கூற
அல்லா ரலர்தூற்ற அடியார்க் கருள்செய்வான்
பல்லார் தலைமாலை யணிவான் பணிந்தேத்தக்
கல்லார் கடல்நாகைக் காரோ ணத்தானே. (1.84.10)

மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்ற மென்னும்
வினையுளே விழுந்த ழுந்தி வேதனைக் கிடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகில் உய்யலாம் நெஞ்சி னீரே. (4.71.1)

மறிஏறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர்
மாநிதியம் தருவன்என்று வல்லீராய் ஆண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீர் அடிகேள்
கிறியும்மாற் படுவேனோ திருவாணை உண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. (7.10)

2. சிக்கல் - 611108

இறைவன் : வெண்ணெயிலிங்கேசுரர்
இறைவி : வேல்நெடுங்கண்ணி
தீர்த்தம் : பாற்குளம்
தலவிருட்சம்: குடமல்லிகை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

நாகைக்கு மேற்கே $4^1/_2$ கி.மீ. இறைவன் கோயிலும், முருகன் கோயிலும் கட்டுமலைபோல் உள்ளன. மல்லிகை மிகுதி. வசிட்ட முனிவர் தன் காமதேனுவைப் பெறும் பொருட்டுப் பூசித்தத் தலம். காமதேனு எனும் பசுவின்பால் பெருகி எங்கும் வெண்ணெய்யாய் உறைந்தன. அவ்வெண்ணெய் அனைத்தையும் எடுத்து வசிட்டர் இலிங்கமாக்கிப் பூசித்தார். அதனால் வெண்ணெய் லிங்கேசுரர் எனும் பெயர் உண்டாயிற்று. அந்த லிங்கத்தை வேறிடத்தில் வைக்க எடுக்கும் பொழுது அது வராமற் சிக்கிக் கொண்டதால் ஊருக்குச் சிக்கல் என்ற பெயர் உண்டாயிற்று.

தங்கத்தாலான ஆட்டுக்கிடா வாகனம் ஒன்று சிங்காரவேலருக்கு உண்டு என்பர். சூரசம்கார விழா இங்கு வெகு சிறப்பு. சூரனுக்குப் பெருவாழ்வு தந்து மீளும் சிங்காரவேலவனின் மேனியில் வியர்வைத் துளிகள் காணப்படும். அதனால் 'வியர்வை சிந்தும் வேலவன்' என வேலவன் அழைக்கப்படுவார். இன்றும் இவ்வற்புதத்தைக் காணலாம். கோவிலின் வடபுறத்தில் கோலவாமனப்பெருமாள் சந்நிதி உள்ளது.

(இக்கோயில் அருகே பொருள்வைத்தசேரி என்றோர் ஊர் உளது. அவ்வூர் திருக்கோயிலில் கொலுவீற்றுள்ள முருகன் திருமேனியை அவசியம் அனைவரும் கண்டு, மகிழ்ந்து, வணங்க வேண்டும். இவ் வமைப்புப் போல எட்டுக்குடி, எண்கண் ஊர்களில் முருகன் அமைந்துள்ளார். இதுபற்றி ஒரு வரலாறும் உண்டு. அதனை ஆசிரியரின் 'எழில் முருகனின் 80 தலங்கள்' என்ற நூலிற் காண்க.)

மடங்கொள்வா ளைகுதி கொள்ளும் மணமலர்ப் பொய்கைசூழ்
திடங்கொள் மாமறையோரவர் மல்கிய சிக்கலுள்
விடங்கொள் கண்டத்துவெண் ணெய்ப்பெரு மானடி மேவிய
அடைந்துவா மும்மடி யாரவர் அல்லல் அறுப்பரே. (2.8.2)

3. கீழ்வேளூர் (கீவளூர்) - 611104

இறைவன் : கேடிலியப்பர், அட்சயலிங்கேசுரர்
இறைவி : வனகமுலை நாயகியம்மை
தீர்த்தம் : சிவஞானதீர்த்தம்
தலவிருட்சம்: இலந்தை மரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்.

சிக்கலிலிருந்து மேற்கே 5 கி.மீ. பெருமான் சந்நிதி கட்டு மலைமேல் உள்ளது. அனைத்தும் கருங்கல் கட்டடம். ஸ்தூபியும் கருங்கல் கட்டடமே. பெரியகோயில். எந்தைக் கந்தவேள் பூசித்தத்தலம். அவர் சந்நிதி விசேடம். அவரின் சந்நிதிக்கும், பூசைக்கும், தலத்திற்கும் இடையூறு நிகழாவண்ணம் ஐந்து திக்கிலும் காவல் பூண்டு விளங்குகின்றாள் ஐந்து வட்டத்து அம்மன். இவ்வம்மையின் சந்நிதி முதற்பிரகாரத்தில் வடபாகத்தில் உள்ளது. சந்நிதி விசேடம். குளக்கரையின் மேற்பாகத்தில் சிவாலயம் ஒன்று உளது. இரண்டாம் பிரகாரத்தில் இலந்தை மரம் உள்ளது. இதற்கு வடக்கில் அகத்தியர் பூசை செய்த இலிங்கம் உள்ளது. இத்தல ஆடல்வல்லான் தன் வலக்கால் திருவடியை அகத்தியருக்குக் காட்டி அருள் புரிந்தவர் குபேரன், சுந்தரகணபதி, தேவேந்திரன் சந்நிதிகளும் உள்ளன.

மின்னு லாவிய சடையினர் விடையினர்
    மிளிர்தரும் அரவோடும்
பன்னு லாவிய மறையொளி நாவினர்
    கறையணி கண்டத்தர்
பொன்னு லாவியகொன்றையந் தாரினர்
    புகழ்மிகு கீழ்வேளூர்
சீரு லாவிய சிந்தையர் மேல்வினை
    யோடிட வீடாமே. (2.105.1)

நல்லானை நரைவிடையொன் றூர்தி யானை
நால்வேதத் தாறங்கம் நணுக மாட்டாச்
சொல்லானைச் சுடர்மூன்று மானான் தன்னைத்
தொண்டாகிப் பணிவார்கட் கினியான் தன்னை
வில்லானை மெல்லியலோர் பங்கன் தன்னை
மெய்யராய் நினையாதார் வினைகள் தீர்க்க
கில்லானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே. (6.67.5)

4. திருத்தேவூர் - 611109

இறைவன் : தேவபுரீசுரர்
இறைவி : மதுரபாஷணியம்மை
தீர்த்தம் : தேவதீர்த்தம்
தலவிருட்சம்: வாழைமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

கீழ்வேளூரிலிருந்து தெற்கே 3 கி.மீ. கௌதமர், பிரகஸ்பதி, இந்திரன், குபேரன், சூரியன் முதலியோர் பூசித்த ஊர். கௌதமலிங்கம் கட்டுமலையின் வடபக்கத்தில் உள்ளது.

மறைக ளான்மிக வழிபடு மாணியைக் கொல்வான்
கறுவு கொண்டவக் காலனைக் காய்ந்தவெங் கடவுள்
செறுவில் வாளைகள் சேலவை பொருவயல் தேவூர்
அறவன்சேவடி யடைந்தனம் அல்லலொன் றிலமே. (2.82.3)



14. காரைக்கால்

1. திருநள்ளாறு
2. திருவேட்டகுடி
3. திருத்தெளிச்சேரி எனப்படும் கோயிற்பத்து
4. திருத்தருமபுரம்
5. திருக்கோட்டாறு (திருக்கொட்டாரம்)

(காரைக்கால் என்றதும் நினைவிற்கு வருபவர் காரைக்கால் அம்மையாரான புனிதவதியார். இப்பெருமாட்டியின் திருக்கோயிலும் இக்கோயிலின் எதிரேயுள்ள கயிலாசநாதர் கோயிலையும் கண்டு வணங் கலாம். இவ்விருகோயில்களும் கடைத்தெருவிலேயே உள்ளன.)

1. திருநள்ளாறு - 609607

இறைவன் : தர்ப்பாரணியேசுரர், திருநள்ளாற்றீசர்
இறைவி : போகமார்த்த பூண்முலையம்மை
தீர்த்தம் : நளதீர்த்தம்
தலவிருட்சம்: தருப்பை
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, திருநாவுக்கரசர் 10, சுந்தரர் 10 பாடல்கள்

'திருநள்ளார்' என்பதே இன்றைய வழக்கு. பிரசித்திபெற்ற சனிபகவான் உறையும் திருத்தலம். பாண்டிச்சேரி மாநிலத்தில் உள்ளது. காரைக்காலுக்குப் பக்கம். திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், கும்பகோணம் போன்ற ஊர்களிலிருந்தும் பேருந்து வசதி உண்டு.

(தேனி-கம்பம் பேருந்து சாலையில் 'குச்சனூர்' எனும் தலமும் சனி உறையும் தனித்தலமாம். இச்சனி சுயம்பு. பரசுராமர் வழிபட்டதலம். கும்பகோணம் நாச்சியார் கோவில் அருகே திருநறையூர் முத்தீச்சரம் என்ற தலத்தில் ஒரு கோயிலில் (பாடல் பெற்ற கோயில் வேறோர் இடத்தில் உள்ளது) சனி குடும்பச்சனி என வழங்கப்படுவதற்கு ஏற்ப மனைவி மக்களுடன், தசரதன் புடைசூழ உள்ளார்; திருவாரூர் அருகே உள்ள பாடல்பெற்ற தலமான கொள்ளிக்காடு திருக்கோயிலில் மகாலட்சுமி அருகே சனிபகவானின் சந்நிதி. அருகில் வன்னிமரம். பொங்குசனி எனப்படுகின்றார். கையில் கலப்பை காணப்படுகின்றது. முருகன் தன் கையில் வில்கொண்டு விளங்குகின்றார். அடியார்கள் இத்தலங்களைக் கண்டு மகிழ்ந்து துயர்போக்கி நல்லின்பம் பெறுக.)

நளன் பூசித்ததால் இப்பெயர் பெற்றது. முதல் யுகத்தில் ஆதிபுரி எனவும், இரண்டாம் யுகத்தில் தருப்பாரண்யமெனவும், மூன்றாம் யுகத்தில் விடங்கபுரம் எனவும், நான்காம் யுகத்தில் நாளேச்சரம் எனவும் கூறப்படுகிறது. பலர் பூசித்து மேன்மை பெற்றுள்ளனர். நான்முகன், திக்பாலர், திருமால், வசுக்கள், காசிபர், அகத்தியர், அருச்சுனன், போஜன் போன்றோர் பூசித்து பேறு பெற்ற தலம். திருஞானசம்பந்தர் மதுரையில் சமணருடன் வாது செய்கையில் தீயிலிட்டும் வேகாதிருந்த பச்சைத் திருப்பதிகம் ஆகிய 'போகமார்த்த பூண்முலையாள்' என்ற பதிகமும் இத்தலப்பதிகமே. இலிங்க மூர்த்தியின் திருவுருவம் தர்ப்பைக் கொழுந்துகள் சேர்ந்தன போல் அடையாளங் கொண்டுள்ளதாய் உள்ளது.

சிவபிரான் எழுவகை நடனமாடிய சப்தவிடத் தலங்களில் திருநள்ளாறு- நாகவிடங்கர்- உன் மத்த நடனம்.

நெஞ்சமிது சுண்டுகொ ளுனக்கென நினைந்தார்
வச்சம தறுத்தரு மற்றவனை வானோர்
அஞ்சமது காகியவர் கைதொழ எழுந்த
நஞ்சமது செய்தவன் இருப்பிடம்நள் ளாறே. (2.33.5)

இறவாமே வரம்பெற்றேன் என்றுமிக்க
இராவணனை யிருபதுதோள் நெரியவூன்றி
உறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே
யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை
மறவாதார் மனத்தென்றும் மன்னி னானை
மாமதியம் மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறவார்செஞ் சடையானை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. (6.20.10)

மங்கை பங்கனை மாசிலா மணியை
வானநாடனை ஏனமோ(டு) அன்னம்
எங்கும் நாடியும் காண்பரி யாளை
ஏழையேற்(கு) எளிவந்த பிரானை
அங்கம் நான்மறை யால்நிறை கின்ற
அந்த ணாளர் அடியது போற்றும்
நங்கள் கோனைநள் ளாறனை அமுதை
நாயி னேன் மறந்(து) என்நினைக் கேனே. (7.5)

2. திருவேட்டகுடி - 609602

இறைவன் : திருமேனியழகர்
இறைவி : சாந்தநாயகி
தீர்த்தம் : சந்திரபுஷ்கரணி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

காரைக்காலிலிருந்து பொறையாறு செல்லும் சாலையில் 3 கிலோ மீட்டர் சென்று கிழக்குத் திசையில் கட்டியுள்ள ஆர்ச்சின் உள்நுழைந்து 3 கிலோமீட்டர் செல்ல ஆலயம். அருச்சுனன் தவம் செய்து கொண்டிருந்த போது சிவனார் வேடவடிவில் வெளிப்பட்ட தலம்.

அருமறைநான் முகத்தானும் அகலிடம்நீ ரேற்றானும்
இருவருமாய் அளப்பரிய எரியுருவாய் நீண்டபிரான்
வருபுனலின் மணியுந்தி மறிதிரையார் சுடர்பவளத்
திருவுருவில் வெண்ணீற்றார் திருவேட்டக் குடியாரே. (3.66.9)

3. திருத்தெளிச்சேரி எனும் கோயிற்பத்து - 609602

இறைவன் : பார்வதீசுரர்
இறைவி : சத்தியம்மை
தீர்த்தம் : சத்தி தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

இன்றைய பேருந்து நிலையத்திற்கு நேர்ப் பின்பகுதி.

திருஞானசம்பந்தப் பெருமானார் அடியார் திருக்கூட்டத்தாருடன் செல்லுகையில் 'பரசமய கோளரி வந்தார்' என்று முத்துச் சின்னங்கள் ஊத, அதனைப் பொறாத பௌத்தர்கள் தடுத்தனர். தேவாரத் திருமுறை எழுதும் அடியவர் திருவைந்தெழுத்துப் பதிகத்திருப்பாடலைப்பாடி பௌத்தர் தலையில் இடிவிழும்படிச் செய்தனர். பௌத்தர்கள் மீண்டும் சாரி புத்தனைத் தலைவனாகக் கொண்டு அவ்வடியார்களுடன் வாது செய்து தோல்வியுற்று சிவக்கன்றின் நல்லருளால் சைவர்களாக மாறி உயர்ந்த பெருந்தலம். மேற்குப்பார்த்த சந்நிதி. பங்குனி மாதம் 13 முதல் தொடர்ந்து பத்து நாட்கள் சூரியனின் கிரணங்கள் இறைவன் மேல் விழுகின்றன.

கோட டுத்த பொழிலின் மிசைக்குயில் கூவிடும்
சேட டுத்த தொழிலின் மிருதெளிச் சேரியீர்
மாட டுத்த மலர்க்கண்ணி னாள்கங்கை நங்கையைத்
தோட டுத்த மலர்ச்சடை யென்கொல்நீர் சூடிற்றே. (2.3.7)

4. திருத்தருமபுரம் - 609602

இறைவன் : யாழ்மூரி நாதேசுரர்
இறைவி : தேனமிர்தவல்லி
தீர்த்தம் : விண்டு தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 1, யாழ்முரி 11 பாடல்கள்

கடைத் தெரு மெயின்ரோடு பொறையார் செல்லும் திசைக்கு எதிர்ப்புறம் நாகை செல்லும் சாலை. இச்சாலை வழியே சென்றால் தருமபுரம் கைகாட்டி வழி உள்ளே 4 கிலோமீட்டர் செல்ல வேண்டும். சாலை கோயிலோடு முடிகின்றது. பக்கத்தில் செல்லும் சாலை திருநள்ளார் சாலையுடன் இணைகிறது. அச்சாலையில் தக்களூர் எனும் வைப்புத்தலம் உள்ளது.

மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
சடை யுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவும் அடுவர்
அவர்படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரைபொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே. (1.136.1)

5. திருக்கோட்டாறு (திருக்கொட்டாரம்) - 609703

இறைவன் : ஐராவதேசுரர்
இறைவி : வண்டமர் பூங்கழலம்மை
தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 22 பாடல்கள்

திருநள்ளாற்றிலிருந்து 5 கி.மீ. பூந்தோட்டம் அம்பர் மாகாளத்தி லிருந்து வ.கிழக்கே 2 கி.மீ.

இக்கோட்டாற்றுக்குக் கிழக்கே 3 கி.மீட்டரில் இளையான்குடி என்ற ஊர் உள்ளது. பரமக்குடிக்கு 11 கி.மீட்டரிலுள்ள இளையான்குடிதான் இளையான்குடி மாறநாயனாரின் ஊர். பெயர் ஒற்றுமை கண்டு மயங்க வேண்டா. வெள்ளையானை பூசித்தத் தலம்.

ஊனம ரும்முட லுள்ளிருந் தவ்வுமை பங்கனும்
வானம ரும்மதி லென்னிவைத் தமறை யோதியும்
தேனம ரும்மலர்ச் சோலைசூழ்ந் ததிருக் கோட்டாற்றுள்
தானம ரும்விடை யானுமெங் கள்தலை வனன்றே. (3.12.4)

15. பூந்தோட்டம்

1. அம்பர் மாகாளம் (கோயில் திருமாகாளம்)
2. அம்பர் பெருந்திருக்கோயில்
3. திருமீயச்சூர்
4. திருமீயச்சூர் இளங்கோயில்
5. திருப்பாம்பரம்
6. திருதிலதைப்பதி (செதலபதி)
7. திருச்சிறுகுடி

1. அம்பர் மாகாளம் (கோயில் திருமாளம்) - 609503

இறைவன் : மாகாளேசுவரர்
இறைவி : பட்சயநாயகி
தீர்த்தம் : மாகாளதீர்த்தம்
தலவிருட்சம்: கருங்காலிமரம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 33 பாடல்கள்.

பூந்தோட்டத்திலிருந்து காரைக்கால் செல்லும் சாலையில் 3 கி.மீ. அம்பருக்கும், அம்பர் மாகாளத்திற்கும் இடையில் சோமாசி நாயனார் யாகம் செய்த மண்டபம் உள்ளது. யாக உற்சவம் வைகாசி ஆயில்ய நட்சத்திரத்தில் வெகுவிமர்சையாக நிகழ்கிறது.

அம்பன், அம்பாசுரன் என்னும் அரக்கர்களைக் கொன்ற பாவந்தீரக் காளி பூசை செய்த தலம். பாணலிங்கம் இலிங்கமூர்த்திக்கு எதிரில் சற்று வடக்கே நாகராஜனும் அவர் பூசித்த இலிங்கமும் அம்மையும் உள்ளனர். வெளிப்பிரகாரத்தின் தென்பக்கத்தில் காளி கோயில் உள்ளது. மஹாகாளரிஷி பூசை செய்த தலம்.

சோமாசி மாற நாயனார், அவர் மனைவி, சுந்தரர், பரவையார் இவர்களின் உருவங்கள் கொண்ட விக்கிரகங்களும் இவற்றுக்கு எதிரில் தியாகராசருடைய விக்கிரகமும், தேவியார் விக்கிரகமும் உள்ளன.

அணியார் மலைமங்கை யாகம் பாகமாய்
மணியார் புனலம்பர் மாகா ளம்மேய
துணியா ருடையினான் துதைபொற் கழல்நாளும்
பணியா தவர்தம்மேற் புறையா பாவம்மே. (1.83.5)

2. அம்பர் பெருந்திருக்கோயில் - 609503

இறைவன் : பிரமபுரீசுரர்
இறைவி : பூங்குழலம்மை
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: புன்னை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

அம்பர் மாகாளத்திற்குக் கிழக்கே 1 கி.மீ.

சோமாசி மாறநாயனார் முத்தி பெற்ற தலம். இறைவன் சந்நிதி கட்டுமலைபோல் உள்ளது. இறைவன் பின்புறம் இறைவன் இறைவி உருவங்கள் உள்ளன. கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்ட திருக்கோயில்.

எரிதர அனல்கையில் ஏந்தி யெல்லியில்
நரிதிரி கானிடை நட்ட மாடுவர்
அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே. 3.19.1

3. திருமீயச்சூர் (லலிதாம்பாள் கோயில்) - 609405

இறைவன் : முயற்சி நாதேசுரர்
இறைவி : சௌந்தரநாயகி
தீர்த்தம் : சூரியபுட்கரணி
தலவிருட்சம்: வில்வமரம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்

பேரளம் சென்று காரைக்கால் பாதையில் செல்லாமல் ஆரூர் சாலைவழி கடைத்தெரு சென்று அதற்கு இணையாகப் பின்புறமுள்ள இரயில்வே கேட் தாண்டி 2 கி.மீ. செல்ல வேண்டும்.

இறைவனையும் இறைவியையும் யானைமேல் வைத்து சூரியன் பூசை செய்த தலம். இறைவி லலிதாம்பாள் என அழைக்கப்படுகின்றனர். பெயருக்கு ஏற்ப அத்துணை அழகு. மக்கள் லலிதா சகஸ்ரநாமம் படிக்கின்றனர்.

பொன்னேர் கொன்றை மாலை புரளும் அகலத்தான
மின்னேர் சடைக ளுடையான் மீயச் சூரானைத்
தன்னேர் பிறரில் லானைத் தலையால் வணங்குவார்
அந்நே ரிமையோ ருலக மெய்த லரிதன்றே. 2.62.3

4. திருமீயச்சூர் இளங்கோயில் - 609405

இறைவன் : சகலபுவனேசுவரர்
இறைவி : மேகலாம்பிகை
தீர்த்தம் : அமிர்ததீர்த்தம்
பாடியவர் : அப்பர் 10 பாடல்கள்.

திருமீயச்சூர் இறைவன் சந்நிதிக்கு வடபுறம் உள்ளது. மீயச்சூர் இறைவனின் பாலாலயமாயிருந்தபோது பாடப்பெற்ற சந்நிதி. காளி பூசித்தது. நான்கு முகங்களுடன் சண்டேசுவரர் அற்புதமாகக் காட்சி அளிக்கிறார்.

பொன்னங் கொன்றையும் பூவணி மாலையும்
பின்னுஞ் செஞ்சடை மேற்பிறை சூடிற்று
மின்னு மேகலை யாளொடு மீயச்சூர்
இன்ன நாள்அக லாரிளங் கோயிலே. 5.11.6

5. திருப்பாம்புரம் - 612203

இறைவன் : பாம்புரேசுரர்
இறைவி : வண்டார் பூங்குழலியம்மை
தீர்த்தம் : ஆதிசேவு தீர்த்தம்
தலவிருட்சம்: வன்னி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

பேரளத்திலிருந்து 7 கி.மீ. (வழியில் $1^1/_2$ கி.மீ. மீயச்சூர் உள்ளது. கும்பகோணம்- நாகேஸ்வரம்- இராகு, கேது பரிகாரத்தலம். இராகு, கேது இருவரின் முழு உருவங்கள் உள. தற்காலத்தில் பிரசித்தி பெற்று வருகின்ற தலம். இறைவனை வழிபட்டு 2-ஆம் பிரகாரம் வரின் ஆண்டுள்ள மலைக்கோயிலில் ஏறிப்பார்த்தால் திருவீழிமிழலை கோபுரம் தெரியுமாம். நாகராசன் பூசை செய்த தலம். நாகராசனின் மூலவிக்கிரகமும் உற்சவ விக்கிரகமும் உள்ளன.

துஞ்சு நாள் துறந்து தோற்றமும் இல்லாச்
  சுடர்விடு சோதி எம்பெருமான்
நஞ்சுசேர் கண்டம் உடையஎன் நாதர்
  நள்ளிருள் நடம்செயும் நம்பர்
மஞ்சுதோய் சோலை மாமயில் ஆட
  மாட மாளிகை தன்மேல் ஏறிப்
பஞ்சுசேர் மெல்லடிப் பாவையர் பயிலும்
  பாம்புர நன்னகராரே. 1.41.4

6. திலதைப்பதி (திலதர்ப்பணபுரி) - 609503

வழக்கு செதலபதி

இறைவன் : முத்தீசுவரர்
இறைவி : பொற்கொடியம்மை
தீர்த்தம் : சந்திரதீர்த்தம்
தலவிருட்சம்: மந்தாரை
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்

பூந்தோட்டம் கூந்தலூரை அடைந்து அரசலாற்றுப் பாலம் வழியாகக் கொல்லுமாங்குடி சாலை சென்று ஊர் செல்க.

கோயில் எதிரே நரமுக விநாயகர் உள்ளார். (எங்கும் காண முடியாத் திருமேனி. யானைமுகம் இல்லை மனித முகம்) மண்டபம் கட்ட ஏற்பாடு செய்து வருகின்றனர்.

கோயிலினுள் 4 யுக லிங்கங்கள் உள. திலகம்- எள். இராமபிரான் தன் தந்தை தசரதருக்கும், சடாயுவிற்கும் எள்கொண்டு தர்ப்பணம் செய்த இடம். அதனால் இங்கு தர்ப்பணம், சிரார்த்தம் செய்தல் விசேடம். யானை வழிபட்ட தலம்.

பொடிகள் பூசிப் பலதொண்டற் கூடிப் புலர்காலையே
அடிகளாரத் தொழுதேத்த நின்றவ் வழகன்னிடம்
கொடிகளோங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி
றடிகொள்சோலைம் மலர்மணங் கமழும் மதிமுத்தமே. 2.118.1

7. திருச்சிறுகுடி - 609503

இறைவன் : மங்களேசுவரர்
இறைவி : மங்களநாயகி
தீர்த்தம் : சூரியதீர்த்தம்
தலவிருட்சம்: வில்வம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்

திருவீழிமிழலையிலிருந்து 3 கி.மீ. (திருப்பாம்புரத்திற்கு அருகில்) செவ்வாயும், கருடனும், கந்தருவரும் பூசித்தத் தலம். பிற மதத்தினர்களும் வழிபாடு செய்து திருநீறு பெறுகின்றனர்.

சிற்றிடை யுடன்மகிழ் சிறுகுடி மேவிய
சுற்றிய சடைமுடி யீரே
சுற்றிய சடைமுடி யீரும தொழுகழல்
உற்றவ ருறுபிணி யிலரே. 3.97.2

16. திருவீழிமிழலை

1. திருவீழிமிழலை
2. கருவிலி கொட்டிட்டை
3. அன்னியூர்

1. திருவீழிமிழலை - 609505

இறைவன் : வீழியநாதர்
இறைவி : சுந்தர குஜாம்பிகை
தீர்த்தம் : விஷ்ணு தீர்த்தம்
தலவிருட்சம்: வீழிச்செடிகள்
பாடியோர் : திருஞான சம்பந்தர் 154, அப்பர் 83,
சுந்தரர் 10 பாடல்கள்.

குத்தாலத்திலிருந்து 9 கி.மீ. கும்பகோணம், பூந்தோட்டம், மயிலாடுதுறையிலிருந்தும் பேருந்து வசதி உண்டு. வீழிச்செடிகள் அதிகம் இருப்பதாலும், தலவிருட்சம் வீழியாதலாலும் இப்பெயர் பெற்றது என்பர். பெரிய கோயில். கருவறையில் மூல லிங்கத்திற்குப் பின்னே பார்வதி பரமேசுவரர்களின் திருவுருவங்கள் உள்ளன. திருமால் இறைவனைப் பூசித்தத் தலம். அங்ஙனம் பூசை செய்யும் பொழுது ஒரு மலர் குறைய தன் கண்ணையே எடுத்துப் பூசை செய்து சக்கரம் பெற்ற தலம். இவ்வரலாற்றினை இத்திருக்கோயிலுள்ள உற்சவ மூர்த்தியின் திருமேனியில் கண்டு மகிழலாம். இத்திருமேனியானை 'மாப்பிள்ளை சாமி' என அழைக்கின்றனர். திருமணம் தடைபடுவோர் மாப்பிள்ளை சாமியை வந்து வணங்கின் மணம் நிறைவுறும். தங்க விமானம், வௌவால் நெற்றி வேலைப்பாடு மிக்கது. தில்லை மூவாயிரவர் போல 'வீழிநூற்றந்தணர்' என இவ்வூர் அந்தணர் பெருமை பெறுவர். திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் இத்தலம் வந்தபோது பஞ்சம் வரவே அருளாளர்கள் இறைவனிடம் படிக்காசுப் பெற்று பஞ்சம் தீர்த்தனர். அப்பலிபீடங்கள் உள்ளன.

எடுத்தான் தருக்கினை இழித்தான் விரனூன்றிக்
கொடுத்தான் வாளாளாக் கொண்டான் உறைகோயில்
படித்தார் மறைவேள்வி பயின்றார் பாவத்தை
விடுத்தார் மிகவாழும் வீழி மிழலையே. 1.82.8

நீற்றினை நிறையப் பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி யொருநா ளொன்று குறையக்கண் நிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி யவன் கொணர்ந்த திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்த னாரே. 4.64.8

பரந்த பாரிடம் ஊரி டைப்பலி
பற்றிப் பார்த்தனுஞ் சுற்ற மாயினீர்
தெரிந்த நரன் மறையோர்கசு இடம் ஆய திருமிழலை
இருந்து நீர்தமி ழோடு இசைகேட்கும்
இச்சை யாற்காசு நித்தம் நல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீர் அடி யேற்கும் அருளுதீரே. 7.8

2. கருவிலிக் கொட்டிட்டை - 605507

இறைவன் : சற்குண நாதேசுவரர்
இறைவி : சர்வாங்கநாயகி
தீர்த்தம் : ஏமதீர்த்தம்
பாடியவர் : அப்பர் 10 பாடல்கள்.

திருவீழிமிழலை, வன்னியூருக்கு அருகிலுள்ளது. ஊர்ப்பெயர் கருவிலி. ஆலயத்திற்குக் கொட்டிட்டை என்று பெயர். சற்குணன் என்னுமோர் அரசன் பூசித்துப் பிறவிப் பிணியைப் போக்கிய தலம். இந்திரனும், விண்ணவரும் பூசித்தத் தலம். உருத்திர கணங்கள் பூசித்ததாகத் தேவாரம் (பாடல் 8) கூறுகிறது. இத்தலப் பெருமானைப் பாடி வணங்கிட மீண்டும் கருவில் இடமில்லை. கரு இலி - கருவிலி.

பிணித்த நோய்ப்பிற விப்பிரி வெய்துமாறு
உணர்த்த லாம் இது கேண்மின் உருத்திர
கணத்தி னார்தொழுது ஏத்தும் கருவிலிக்
குணத்தி னான்உறை கொட்டிட்டை சேர்மினே. 5.69.8

3. திருவன்னியூர் (அன்னியூர்) - 612201

இறைவன் : அக்கினீசுரர்
இறைவி : பார்வதியம்மை
தீர்த்தம் : அபக்கினி தீர்த்தம்
தலவிருட்சம்: வன்னி
பாடியவர் : அப்பர் 9 பாடல்கள்.

திருவீழிமிழலைக்கு வடமேற்கே 3 கி.மீ. இங்கிருந்து 4 கி.மீ. கருவிலி. அக்கினி பூசித்தது.

இம்மை அம்மை என இரண்டும் இவை
மெய்ம்மை தான்அறி யாதுவிளம்புவர்
மெய்ம்மை யால்நினை வார்கள்தம் வல்வினை
வம்மின் தீர்பபர்கண் டீர்வன்னி யூரரே. 5.26.4

17. திருக்கடையூர்

1. திருக்கடையூர் (திருக்கடவூர்)
2. திருக்கடவூர் மயானம்
3. ஆக்கூர்
4. திருத்தலச்சங்காடு

1. திருக்கடையூர் - 609311

இறைவன் : அமிர்தகடேசுரர், காலசங்கரர்
இறைவி : அபிராமியம்மை
தீர்த்தம் : அமிர்ததீர்த்தம்
தலவிருட்சம்: வில்வம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 31, சுந்தரர் 10 பாடல்கள்.

மயிலாடுதுறையிலிருந்து நகரப்பேருந்து உண்டு. மயிலாடுதுறை தரங்கம்பாடிப் பாதையில் 22 கி.மீட்டர். அட்டவீரட்டானத் தலங்களில் இத்தலமும் ஒன்று. மார்க்கண்டேயருக்காகக் கூற்றுவனைக் காலால் உதைத்த தலம். கால சம்காரமூர்த்தி சந்நிதி விசேடம். பெரும் வடிவத்திலுள்ளார். அறுபது ஆண்டு முடிவுற்ற தம்பதிகள் இச்சந்நிதியில் தம் அறுபதாம் ஆண்டுத் திருமணத்தைச் செய்து கொள்வதை மிகப்பாக்கியமாகக் கருதுவர். மக்கள் கூட்டம் மிகுந்து காணப்படும். மேற்குப் பார்த்த சந்நிதி. அகத்தியர், புலஸ்தியர் பூசித்த பாபவிமோசன லிங்கம், புண்யவர்த்தனலிங்கம் என்ற இரண்டு லிங்கச் சந்நிதிகள் சிறப்பான (ஸாந்நித்தியமாய்த்) தெய்வத்தன்மையுடன் திகழ்கின்றன. குங்கலியக் கலய நாயனார், காரி நாயனார் ஆகியோர் வசித்து முத்தி பெற்ற தலம். மகாலிங்கத்தின்மீது கூற்றுவன் வீசிய, பாசக்கயிற்றின் தழும்பு உள்ளது. அன்னை அபிராமியம்மையின் சந்நிதியும் மிகச் சிறப்பு. அபிராமிபட்டர் அந்தமும் ஆதியும் இல்லாத அம்மைக்கு அந்தாதி பாடியருளியுள்ளார். மிக அற்புதமான திருப்பாடல்கள். இத்தலம் பல தலங்களுக்கு மையமாக உள்ளது. திருக்கடவூர்மயானம் இத்தலத்திற்குக் கிழக்கே $1^1/_2$ கி.மீட்டர்; மேற்கே 5 கி.மீ. ஆக்கூர்; வடமேற்கே 5 கி.மீ. திருத்தலைச்சங்காடும்; 7 கி.மீட்டரில் திருவலம்புரமும் உள்ளன. தென்மேற்கே 6 கி.மீட்டரில் திருவிசைப்பாத் தலமும் சிறந்த முருகன் தலமுமான திருவிடைக்கழி உள்ளது.

சடையுடை யானும்நெய் யாடலா னுஞ்சரி கோவண
உடையுடை யானுமை ஆர்ந்தவொண் கண்ணுமை கேள்வனும்
கடையுடை நன்னெடு மாடமோங் குங்கட வூர்தனுள்
விடையுடை யண்ணலும் வீரட்டா னத்தர னல்லனே. (3.8.1)

மாயத்தை அறிய மாட்டேன் மையல்கொள் மனத்த னாகிப்
பேயொத்துக் கூகை யானேன் பிஞ்ஞகா பிறப்பொன் றில்லீ
நேயத்தால் நினைய மாட்டேன் நீதனே நீச னேன்நான்
காயத்தைக் கழிக்க மாட்டேன் கடவூர்வீ ரட்ட னீரே. (4.31.7)

வேறா உன்னடியேன்
விளங்குங்குழைக் காதுடையாய்
தேறேன் உன்னையல்லால்
சிவனேயென் செழுஞ்சுடரே
காறார் வெண்மருப்பா
கடவூர்த்திரு வீரட்டத்துள்
ஆறார் செஞ்சடையாய்
எனக்கார்துணை நீயலதே. (7.8)

2. திருக்கடவூர் மயானம் - 609311

இறைவன் : பிரமபுரீசரர்
இறைவி : மலர்க்குழல் மின்னம்மை
தீர்த்தம் : காசி தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 8, சுந்தரர் 10 பாடல்கள்.

திருக்கடவூருக்குக் கிழக்கே $1^1/_2$ கி.மீ. ஊர் இல்லை. திருக்கோயில் மட்டும் உளது. மேற்குப் பார்த்த சந்நிதி. சிவபெருமான் நான்முகனை நீறாக்கி மீண்டும் அவரை உயிர்ப்பித்து சிருஷ்டித் தொழிலைக் கொடுத்தருளிய தலம். இத்திருக்கோயிலில் முருகன் வில்வேந்தி உள்ளான். அவன் காலில் குறடும் உளது. பெருமாள் சந்நிதியும் உண்டு. இத் தலத்திற்குக் தெற்கே 3/4 கி.மீட்டரில் ஒரு கிணறு உள்ளது. அக்கிணறு சிறப்புத் தன்மையுடையது. அக்கிணற்றிலிருந்துதான் நாள்தோறும் திருக்கடவூர் அமிர்தகடேசுரருக்குத் திருமஞ்சனம் கொண்டு வரப்படுகின்றது. பங்குனி மாதம் சுக்கிலபட்ச அசுவனி நட்சத்திரத்தில் இக்கிணற்றுப் புனிதநீரில் நீராடல் பிரபலம். மற்றைக் காலங்களில் திருமஞ்சனத்திற்குத் தவிர பிற ஒன்றுக்கும் பயன்படுத்துவதில்லை. இத் திருக்கோயில் சென்றுவர திருமணத்தடை நீங்கும். பிரிந்து வாழ்வோர் ஒன்று சேர்ந்து மகிழ்வர்.

மங்கைமணந்த மார்பர் மழுவாள்வதனொன்(று) ஏத்திக்
கங்கை சடையிற் கரந்தார் கடவூர்மயானம் அமர்ந்தார்
செங்கணவெள்ளே(று) ஏறிச்செல்வஞ் செய்யா வருவார்
அங்கையேறிய மறியார் அவரெம் பெருமன் அடிகளே. (2.80.2)

குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உழையர் தாங்கடவூரின் மயானத்தார்
பழைய தம்மடி யார்செய்த பாவமும்
பிழையும் தீர்ப்பர் பெருமா னடிகளே. (5.38.1)

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர்நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமான் அடிகளே. (7.1)

3. (தான்தோன்றி மாடம்) ஆக்கூர் - 609311

இறைவன் : தான்தோன்றி நாதர், சுயம்புநாதர்
இறைவி : வாள்நெடுங்கண்ணியம்மை
தீர்த்தம் : குமுததீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்.

சிறிய மாடக்கோயில். கோயிலுக்குத் தான்தோன்றி மடம் என்று பெயர். திருக்கடவூரிலிருந்து மேற்கே 5 கி.மீட்டரில் இத்தலம் உளது. மன்னன் ஒருவன் இறைவன் ஆணைப்படி ஆயிரம் அந்தணர்களுக்கு அன்னதானம் அளித்ததாகவும், அவர்களில் இறைவனே ஒருவனராய் வந்து உணவு உண்டதாகவும் மன்னருக்கு இச்செய்தி பின்னர் தெரிந்ததாகவும் கூறுவர். ஆயிரத்தில் ஒருவர் என்ற இறைவனின் செப்பு உருவம் உற்சவ விக்கிரகமாக உள்ளது.

கொங்குசேர் தண்கொன்றை மாலையினான் கூற்றடரப்
பொங்கினான் பொங்கொளிசேர் வெண்ணீற்றான் பூங்கோயில்
அங்கம்ஆ றோடும் அருமறைகள் ஐவேள்வி
தங்கினார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. (2.52.3)

கண்ணார்ந்த நெற்றி யுடையார் போலும்
காமனையும் கண்ணழலாற் காய்ந்தார் போலும்
உண்ணா அருநஞ்(சு) உண்டார் போலும்
ஊழித்தீ யன்ன வொளியார் போலும்

எண்ணா யிரங்கோடி பேரார் போலும்
ஏறேறிச் செல்லும் இறைவர்போலும்
அண்ணாவும் ஆரூரும் மேயார் போலும்
ஆக்கூரில் தான்தோன்றி யப்ப னாரே. (6.21.8)

4. திருத்தலைச்சங்காடு-609301

இறைவன் : சங்கருணாதேசுரர்
இறைவி : சௌந்தரநாயகி
தீர்த்தம் : காவிரியாறு
தலவிருட்சம்: வல்லம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

ஆக்கூரிலிருந்து வடகிழக்கே 2 கி.மீ. திருமால் சிவபெருமானைப் பூசித்து 'பாஞ்ச சந்யம்' என்னும் சங்கினைப் பெற்ற திருத்தலம். மாடக்கோயில் கட்டுமலைமேல் கோயில் உள்ளது. கோயிலுக்கு எதிரில் தீர்த்தம் உள்ளது.

சீர்கொண்ட பாடலீர் செங்கண்வெள்ளே(று) ஊர்தியீர்
நீர்கொண்டும் பூக்கொண்டு நீங்காத்தொண்டர் நின்றேத்தத்
தார்கொண்ட நூல்மார்பர் தக்கோர்வாழும் தலைச்சங்கை
ஏர்கொண்ட கோயிலே கோயிலாக இருந்தீரே. (2.55.3)



18. நன்னிலம்

1. நன்னிலம்
2. திருக்கொண்டீச்சரம்
3. திருவாஞ்சியம்
4. திருப்பனையூர்
5. திருப்புகலூர்
6. திருவர்த்தமானீச்சரம்
7. திருஇராமனதீச்சரம்
8. திருச்செங்காட்டங்குடி
9. திருமருகல்
10. சாத்தமங்கை

1. நன்னிலம் - 610105

இறைவன் : மதுவனேசுரர்
இறைவி : மதுவனநாயகி
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
பாடியோர் : சுந்தரர் 11 பாடல்கள்.

கும்பகோணத்திலிருந்தும் திருவாரூரிலிருந்தும் பேருந்து வசதி உண்டு. இவ்வூருக்கு மதுவனம் என்ற பெயரும் உண்டு. கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில்களில் இதுவும் ஒன்று. இறைவன் கட்டுமலைமேல் உள்ளார். கீழேயும் பெரியலிங்கம் ஒன்றினை அமைத்துள்ளார்கள். சூரியன் பூசித்த தலம். தேவியார் சந்நிதியும் அகத்தீசுரர் சந்நிதியும் கீழே உள்ளன.

வெண்பொடி மேனியினான்
கருநீல மணிமிடற்றான்
பெண்படி செஞ்சடையான்
பிர மன்சிரம் பீடழித்தான்
பண்புடை நான்மறையோர்
பயின் றேத்திப்பல் கால்வணங்கும்
நண்புடை நன்னிலத்துப்
பெருங்கோயில் நயந்தவனே. (7.6)

2. திருக்கொண்டீச்சரம் - 609504

இறைவன் : பசுபதீசுரர்
இறைவி : சாந்தநாயகி
பாடியவர் : அப்பர் 20 (4, 5 திருமுறைகள்)

நன்னிலத்திலிருந்து கிழக்கே 3 கி.மீட்டர். முடிகொண்டான் ஆற்றின்மேல் மரப்பாலம் உள்ளது. (வில்வக்காடு என்ற பெயரும் உண்டு) அம்மை பசுவாகி இறைவனைத் தேடி இங்குவந்து கொம்பினால் குத்திக் கிளறி வரும்போது ஓரிடத்தில் குருதி வரக்கண்டு உடன் தன் பாலையே விட்டுக் காயத்தை ஆற்றி வழிபட்ட தலம். இன்றும் பெருமான் உச்சியில் கொம்பு முட்டிய வடுவினைக் காணலாம். கோயில் இடிபாடுடன் காணப்படுகின்றது. நம் சமயாச்சாரியர்கள் சென்று, கண்டு பாடிய இடங்களுக்கு நம்மனோர் சென்று அப்பெருமக்களின் பதிகங்களைப்பாடி பெருமை கொள்ள வேண்டும்.

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்தநாளும் மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்தநாளும் குறிக்கோளி லாதுகெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச் சரத்துளானே. (4.67.9)

3. திருவாஞ்சியம் - 609504

இறைவன் : வாஞ்சிலிங்கேசுரர்
இறைவி : மங்களநாயகி
தீர்த்தம் : குப்த மங்கை, கிணறு
தலவிருட்சம்: சந்தனமரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 7, சுந்தரர் 10, மணிவாசகர் ஓரிடம்.

நன்னிலத்திலிருந்து மேற்கே 10 கி.மீ. கொண்டீச்சரம் தாண்டிச் செல்ல வேண்டும். திருமால் தன்னை விட்டுப் பிரிந்த இலட்சுமியை சிவபிரானைப் பூசித்து வாஞ்சையுடன் பெற்ற ஊர்; எனவே திருவாஞ்சியம் ஆயிற்று. பெரியகோயில். திருக்கோயிலின் வடக்கே குப்தகங்கை என்னும் பெருங்குளம் உளது. கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடலே சிறப்பு எனினும் கடைசி ஞாயிறு நீராடல் பெருஞ் சிறப்பு. இயமனுக்கும் இத்திருக்கோவிலில் ஒரு சிறுகோயில் உள்ளது. இவ்வூரில் இறப்பார்க்குக் கூற்றுவனால் துன்பம் இல்லை. இறைவனுக்கு இயமவாகனமும் உள்ளது. நான்முகன், பராசரர், அத்திரி மகரிஷி போன்றோர் பூசித்தத் திருத்தலம். காசிக்கு ஒப்பாகக் கூறப்படும் தென்னாட்டுத் தலங்கள்

ஆறினுள் இவ்வூரும் ஒன்று. (1. திருவெண்காடு 2. திருவையாறு 3. மயிலாடுதுறை 4. திருவிடை மருதூர் 5. திருச்சாய்க்காடு 6. திருவாஞ்சியம்)

வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்
பொன்னி யன்றசடை யிற்பொலிவித்தபு ராணனார்
தென்ன வென்றுவரி வண்டிசை செய்திருவாஞ்சியம்
என்னை யாளுடை யானிட மாகவுகந்ததே (2.56.1)

அற்றுப் பற்றின்றி யாரையும் இல்லவர்க்கு
உற்ற நற்றுணை யாவான் உறைபதி
தெற்ற மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
கற்றுச் சேர்பவர்க் குக்கருத் தாவதே. (5.181.6)

கரந்தை கூவிள மாலை
கடிமலர்க் கொன்றையுஞ் சூடிப்
பரந்த பாரிடம் சூழ
வருவர்நம் பரமர்தம் பரிசால்
திருந்து மாடங்கள் நீடு
திகழ்திரு வாஞ்சியத் துறையும்
மருந்த னார்அடி யாரை
வல்வினை நலியஒட் டாரே. (7.6)

திருவாஞ்சியத்தில் சீர்பெற இருந்து (திருவாசகம் 2-79)

4. திருப்பனையூர் - 609504

இறைவன் : செளந்தரிய நாதர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்
விருட்சம் : பனைமரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, சுந்தரர் 10 பாடல்கள்
மணிவாசகர் - ஓரடி

நன்னிலத்திலிருந்து கிழக்கே 6 கி.மீ. திருவாரூருக்கு வடக்கே $10^1/_2$ கி.மீட்டரிலுள்ள ஆண்டிப்பந்தல் சிற்றூரை அடைந்து அங்கிருந்து $1^1/_2$ கி.மீட்டர் கிழக்கே செல்ல வேண்டும். திருப்புகலூருக்குத் தெற்கே 5 கி.மீட்டர். சிவபிரான் திருநடனக்காட்சியுடன் சுந்தரருக்குக் காட்சி தந்த தலம். இதனை இவர் பாடிய பாடலால் அறியலாம். கரிகாற் பெருவளத் தானுக்கு இக்கோயிலுள்ள விநாயகர் துணையாய் இருந்தமை பற்றிப் பிள்ளையார் 'துணையிருந்த பிள்ளையார்' என அழைக்கப்பட்டார். பராசர முனிவர் பூசித்துப் பேறுபெற்ற தலம். திருக்கோயிலின் உள் இத்தல விருட்சமான இரண்டு பனைமரங்கள் உள்ளன.

அணியார் தொழவல் லவரேத்த
மணியார் மிடறொன் றுடையானூர்
தணியார் மலர்கொண் டிருபோதும்
பணிவார் பயிலும் பனையூரே. (1.37.6)

செங்கண் மேதிகள் சேடெ றிந்து
தடம்ப டிதலற் சேலி னத்தொடு
பைங்கண் வாளைகள்பாய் பழ னத்தி ருப்பனையூர்த்
திங்கள் சூடிய செல்வ னாரடி
யார்தம் மேல்வினை தீர்ப்ப ராய்விடில்
அங்கிருந் துறைவார் அவரே அழகியரே (7.3)

திருப்பனையூரில் விருப்பன் ஆகியும் (8 தீர்தித்தி அகவல் 87)

5. திருப்புகலூர் - 609704

இறைவன் : அக்கினீசுரர்
இறைவி : கருத்தாழ் குழலியம்மை
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்
தலவிருட்சம்: புன்னை மரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 22, அப்பர் 44, சுந்தரர் 11 பாடல்கள்.

நன்னிலத்திற்குக் கிழக்கே 6 கி.மீட்டர். அப்பர் பெருமான் முத்திபெற்ற தலம். கோவில் பெரியது. கோவில் தென்பக்கம் தவிர மற்ற பக்கங்களில் எல்லாம் கருங்கல்லினால் கட்டிய அகழி காணப்படுகின்றது. தண்ணீர் நிரம்ப உள்ளது. பெருமான் சற்று சாய்வாகக் காணப்படுகின்றார். இதனால் கோணப்பிரான் எனவும் அழைக்கப்படுகின்றார். சந்திரசேகரர் சந்நிதி விசேடம். எதிரில் அக்கினி பகவான் உருவம் உள்ளது. வாதாபி, கணபதி அருகில் அப்பரடிகளின் திருவுருவம் உள்ளது. இறைவனுக்கு மலர் மாலையைக் கட்டிக் கொடுப்பதையே தம் திருத்தொண்டாகப் பாவித்து வந்த முருகநாயனார் வாழ்ந்த ஊர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலம் வந்தபோது திருப்பணிக்காக வைக்கப்பட்டிருந்த 4, 5 செங்கற்களைத் தலைக்கு வைத்து உறங்கினார். எழுந்து பார்த்தபொழுது செங்கற்கள் தங்கக்கட்டிகளாக மாறியிருந்தன. இக்கோயிலில் உழவாரம் செய்துவந்த அப்பரடிகள் பொன்னையும் மண்ணையும் ஒன்றாகவே பாவித்து அவற்றையெல்லாம் குப்பைத் தொட்டியில் போட்ட ஊர். இக்கோவிலுக்கு உள்ளேயே 'திருப்புகலூர் வர்த்தமானேச்சரம்' எனும் கோயில் உள்ளது. திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. (இறைவனின் வடபுறத்தில் உள்ளது. முருகநாயனார் திருவுருவமும் உள்ளது.)

பூவுந்நீரும் பலியும் சுமந்துபுக லூரையே
நாவினாலே நவின்றேத்த லோவார்செவித் துளைகலால்
யாவுங்கேளார் அவன்பெருமை யல்லால் அடியார்கள்தாம்
ஓவுநாளும் உணர்வொழிந்த நாளென்றுள்ளங் கொள்ளவே. (2.115.4)

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோ லுடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியே னானிட்டுக் கூறிநின்று
பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர்மேவிய புண்ணியனே. (6.99.8)

கற்றி லாதானைக் கற்று நல்லனே
காம தேவனை ஒக்குமே
முற்றி லாதானை முற்ற னேஎன்று
மொழியி னும்கொடுப் பாரில்லை
பொத்தில் ஆந்தைகள் பாட்(டு) அறாப்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்த னாய்அமர் உலகம் ஆள்வதற்(கு)
யாதும் ஐயுற வில்லையே. (7.9)

6. திருவர்த்தமானீச்சரம் - 609702

இறைவன் : வர்த்தமானேசுரர்
இறைவி : கருந்தாழ்குழலம்மை
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருப்புகலூர் திருக்கோவிலில் அக்கினீசுரருக்கு வடபுறத்தில் அமைந்துள்ளது. முருகநாயனார் திருவுருவமும் உள்ளது.

பண்ண வண்ணத்த ராகிப்
பாடலொடு ஆடல் அறாத
விண்ண வண்ணத்த ராய
விரிபுகல் ஊரரொர் பாகம்
பெண்ண வண்ணத்த ராகும்
பெற்றியொடு ஆணிணை பிணைந்த
வண்ண வண்ணத்தெம் பெருமான்
வர்த்தமா னீச்சரத் தாரே (2.92.4)

7. திருஇராமனதீச்சரம் - 609704

இறைவன் : இராமநாதேசுரர், இராமலிங்கேசுரர்
இறைவி : கருவார் குழலியம்மை
தீர்த்தம் : மணிகங்கை, இராமதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

திருப்புகலூரிலிருந்து தெற்கே திரும்பி முடிகொண்டான் ஆற்றைக் கடந்து $1^1/_2$ கி.மீ செல்ல இவ்வூர். இராமபிரான் பூசித்தத் திருத்தலம். (இவ்வூருக்கு மேற்கே திருக்கண்ணபுரம் என்ற சிறந்த வைணவத்தலம் உள்ளது.)

தழைமயி லேறவன் தாதையோதான்
மழைபொழி சடையவன் மன்னுகாதில்
குழையது இலங்கிய கோலமார்பின்
இழையவன் இராமன தீச்சரமே (1.3)

8. திருச்செங்காட்டங்குடி - 609704

இறைவன் : கணபதீசுரர்
இறைவி : திருக்குழல் நாயகியம்மை
தீர்த்தம் : சத்தி தீர்த்தம், சூரிய தீர்த்தம்
விருட்சம் : ஆத்திமரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 21, அப்பர் 10 பாடல்கள்

இராமனதீச்சரத்திலிருந்து கிழக்கே $1^1/_2$ கி.மீ. தொலைவு. கஜாமுககசுரனைக் கொன்ற பழி நீங்கும் பொருட்டு விநாயகர் சிவனைப் பூசித்த இடம். அசுரனின் குருதி பெருகி செங்காடாய் இருந்ததால் செங்காட்டங்குடி என்ற பெயர் வந்தது. கணபதி பூசித்ததால் கணபதீச்சரம் என்ற பெயரும் உண்டு. சிறுத்தொண்டர் தன் ஒரே மகனான சீராளனை பைரவவேடம் புனைந்து வந்த சிவனுக்கு பிள்ளை கறியாக்கி அளிக்க, பின்னர் அவன் இறைவன் திருவருளால் மீண்டும் உயிர்த்தெழுந்த தலம்.

பழைய திருவாத்திமரமும், சிறுத்தொண்டர், அவர் மனைவி, சீராளன், சந்தன நங்கை ஆகியோரின் சிலாவிக்கிரகங்கள் பிரகாரத்தின் கீழ்ப்பக்கத்தில் உற்சவர் சந்நிதிக்கு எதிரிலும், கோயிலுக்குத் தெற்கே சூரிய தீர்த்தமும் உள்ளன. சிறுத்தொண்டர் மடமும், அமுது கேட்கவந்த உத்தராபதீசுரர் ஆகியோரின் உருவங்களும் ஊரின் தெற்கே வீதிமேலைக் கோடியில் உள. உத்திரபதியார் சந்நிதி விசேடம்.

தோடுடையான் குழையுடையான்
அரக்கன்தன் தோளடர்த்த
பீடுடையான் போர்விடையான
பெண்பாகம் மிகப்பெரியான்
சேடுடையான் செங்காட்டங்
குடியுடையான் சேர்ந்தாடும்
காடுடையான் நாடுடையான்
கணபதீச் சரத்தானே. (1.61.8)

கன்னியையங் கொருசடையிற் கரந்தான் தன்னைக்
கடவூரில் வீரட்டங் கதி னானைப்
பொன்னிசூழ் ஐயாற்றெம் புனிதன் தன்னைப்
பூந்துருத்தி நெய்த்தானம் பொருந்தி னானைப்
பன்னியநான் மறைவிரிக்கும் பண்பன் தன்னைப்
பரிந்திமையோர் தொழுதேத்திப் பரனே யென்று
சென்னிமிசைக் கொண்டணிசே வடியி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே. (6.84.6)

9. திருமருகல் - 609702

இறைவன்	:	மாணிக்கவண்ணர்
இறைவி	:	வண்டார் குழலம்மை
தீர்த்தம்	:	சிவகங்கை
விருட்சம்	:	வன்னி
பாடியோர்	:	திருஞானசம்பந்தர் 21, அப்பர் 21 பாடல்கள்.

திருப்புகலூருக்குத் தென்கிழக்காக 7 கி.மீ. நஞ்சு தீண்டி இறந்த செட்டிப் பிள்ளையைத் திருஞானசம்பந்தர் பதிகம் பாடி உயிர்ப்பித்தருளிய தலம். இறைவியின் சந்நிதிக்கு எதிரேயுள்ள தெருவில் 'நஞ்சு தீர்த்த பிள்ளையார்' சந்நிதியும் பிரகாரத்தில் 'மருகலுடையார்', 'சௌந்திரநாயகி' சந்நிதிகள் உள்ளன. நல்ல அழகிய திருக்கோயில்.

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா யெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவளே சறவே (2.82)

நீடு நெஞ்சுள் நினைந்துகண் ணீமல்கும்
ஓடு மாலினோடு ஒண்கொடி மாதராள்
மாட நீண்மரு கற்பெரு மான்வரில்
கூடுநீ யென்று கூடல் இழைக்குமே. (5.82.8)

10. திருசாத்தமங்கை - 609702

இறைவன்	:	அயவந்தீசுரர், மாதீசுவரர்
இறைவி	:	மலர்க்கண்ணம்மை, தையலம்பிகையார்
தீர்த்தம்	:	பிரமதீர்த்தம்
பாடியோர்	:	திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

ஊரின் பெயர் திருசாத்தமங்கை. கோயிலின் பெயர் அயவந்தி. திருமருகலிலிருந்து தென்மேற்கே $1^1/_2$ கி.மீ. (திருநள்ளாறிலிருந்து தென்மேற்கே 8 கி.மீ.) திருநீலநக்க நாயனாரின் திருத்தலம். ஒருநாள் நாயனார் மனைவியுடன் திருக்கோவில் சென்றபோது ஒரு சிலந்திப்பூச்சி சிவபிரான் திருமேனியில் விழ, அதனைக் கண்ட நாயனாரின் மனைவி யார், அன்பின் மிகுதியால் பெருமான் திருமேனியில் விழுந்த சிலந்தியை அகற்ற எண்ணி தன் வாயால் ஊதிட, அதனைக் கண்ட நாயனார் இச்செயல் பிழையானது என்றெண்ணி மனைவியை நிராகரித்துவிட்டார். அன்றிரவு சிவபிரான் நாயனாரின் கனவில் தோன்றினார். அவர் பொன்னார் திருமேனியில் அவரின் மனைவியார் ஊதின இடத்தைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் சிலந்தியின், கொப்பளமாயிருத்தலைக் கண்டு திடுக்கிட்டார். தன் உடல் பண்டுபோல் ஒளி வீசிட வேண்டுமெனில் 'நீ உன் மனைவியுடன் கூடி வாழ்' என்றார். தன் அன்பு மனைவியுடன் பண்டுபோல் சேர்ந்தருளிய தலமே இத்தலம்.

பிரிந்தவர் கூடிப்பேசிப் பழகிட இத்தலம் செல்க.

வெந்தவெண் ணீறுபூசி விடையேறிய வேதகீதன்
பந்தண வும்விரலாள் உடனாவதும் பாங்கதுவே
சந்தமா றங்கம்வேதந் தரித்தார்தொழுஞ் சாத்தமங்கை
அந்தமாய் ஆதியாகி அய வந்திய மர்ந்தவனே (3.58.5)

19. குடவாயில் (குடவாசல்)

1. குடவாசல்
2. திருநாலூர்மயானம்
3. கொள்ளம்பூதூர்
4. திருக்கடுவாய்க் கரைப்புத்தூர்

1. குடவாசல் - 612601

இறைவன் : கோணேசுரர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்
தலவிருட்சம்: வாழை மரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 22 பாடல்கள்.

திருச்சேறைக்கு அருகிலுள்ளது. திருவாரூரிலிருந்து 16 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 15 கி.மீ. திருமணபிந்து எனும் முனிவர் பூசிக்க இறைவன் திருக்குடத்திலிருந்து வெளிப்பட்டு அவரின் தொழுநோயைத் தீர்த்தருளிய தலம். பெரியநாயகி அம்மையே துர்க்கையாக வழிபடப் பெறுவதால் தனியாக துர்க்கை இல்லை.

பொன்னொப் பவனும் புயலொப் பவனும்
தன்னொப் பறியாத் தழலாய் நிமிர்ந்தான்
கொன்னற் படையான் குடவா யில்தனில்
மன்னும் பெருங்கோ யில்மகிழ் தவனே. 2.22.9

2. திருநாலூர்மயானம் - 612605

இறைவன் : ஞான பரமேசுவரர்
இறைவி : ஞானாம்பிகை
தீர்த்தம் : சந்திரதீர்த்தம்
பாடியவர் : சம்பந்தர்

திருக்குடவாயிலுக்கு வடகிழக்கே 5 கி.மீ. கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 8 கி.மீ. நாலூர் மயானத்திற்குத் தென்மேற்கே $1^1/_2$ கி.மீ. உள்ளது. நாலூர் எனும் ஊர் ஆபஸ்தம்ப முனிவர் பூசித்தது. வைப்புத்தலம் இவ்விரு தலங்களையும் சேர்த்துப் பாடப்பட்ட பதிகம் 1 பாடல்கள் 11.


பத்துத் தலையோனைப் பாதத் தொருவிரலால்
வைத்து மலையடர்த்து வாளோடு நாள் கொடுத்தான்
நத்தி னொலியோவா நாலூர் மயானத்தென்
அத்த னடிநினைவார்க் கல்ல லடையாவே. 2.46.8

3. கொள்ளம்பூதூர் (திருக்களம்பூர்) - 622414

இறைவன் : வில்வனேசுவரர்
இறைவி : சௌந்தராம்பிகை
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: வில்வம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்

குடவாயிலிலிருந்து 5 கி.மீ. நீடாமங்கலத்திலிருந்து 9 கி.மீ. கூவிளம்பூதூர்- கொள்ளம்பூதூர் ஆயிற்று. திருஞானசம்பந்தர் இங்கு வரும்போது வெள்ளம் மிகப்பெருக்கு எடுத்து ஓடியது. ஓடக்காரர்கள் ஓடத்தை கரையில் நிறுத்திவிட்டுப் போயிருந்தனர். இதனைக் கண்ட சம்பந்தர் அடியார்களுடன் தானும் ஓரிடத்தில் ஏறி ஆற்றுக்கு எதிரேயுள்ள இத்திருப்பதியின்மேலே 'கொட்டாமே கமழும் கொள்ளம் பூதூர்' எனும் திருப்பதிகம் பாடினர். திருவருளால் ஓடமும் அக்கரையை அடைய அடியார் புடைசூழ பெருமானார் திருக்கோவிலுக்குள் சென்று வழி பாடாற்றினர். இந்த ஐதீகத்தை முன்னிட்டு ஐப்பசி மாத அமாவாசையில் இவ்விழா நிகழ்கிறது. கூவிளம்-வில்வம்; முள்ளியாறு- அகத்திய காவேரி, வெட்டாறு எனப்படும்.

ஓடம்வந் தணையுங் கொள்ளம் பூதூர்
ஆடல்பேணிய அடிகளை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே 3.6.6



4. திருக்கடுவாய்க் கரைப்புத்தூர் - 612804
(ஆண்டான் கோயில்)

இறைவன் : சொர்ணபுரீசுரர்
இறைவி : சிவாம்பிகை
தீர்த்தம் : திரிசூலகங்கை
தலவிருட்சம்: வன்னி
பாடியவர் : அப்பர் 10 பாடல்கள்.

குடவாயில்-வலங்கைமான் சாலையில் உள்ளது. 17 கி.மீ. குடுவாய் என்ற ஆறு இப்பொழுது குடமுருட்டி என வழங்கப்படுகிறது. காசிப முனிவர் பூசித்தத் தலம்.

குண்டு பட்டகுற் றந்தவிர்த் தென்னையாட்
கொண்டு நாற்றிறங் காட்டிய கூத்தனைக்
கண்ட னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
அண்ட னைக்கண் டருவினை யற்றெனே. 5.62.5



20. திருவாரூர்

1. திருவாரூர்
2. திருவாரூர் அரநெறி
3. திருவாரூர் பரவையுள் மண்டளி
4. திருக்காறாயில் (காறவாசல்)
5. திருநெல்லிக்கா
6. திருக்கொள்ளிக்காடு
7. திருத்தெங்கூர்
8. திருக்கைச்சினம் (கச்சனம்)
9. திருவலிவலம்
10. திருக்கோளிலி (திருக்குவளை)
11. திருவாய்மூர்
12. திருவிற்குடி
13. திருப்பயற்றூர்
14. திருப்பள்ளியின் முக்கூடல்
15. திருவிளமர்
16. திருநாட்டியத்தான்குடி
17. திருக்கன்றாப்பூர்
18. திருக்கரவீரம் (கரையபுரம்)
19. திருப்பெருவேளூர்
20. திருத்தலையாலங்காடு
21. திருப்பேரெயில்
22. திருச்சிற்றேமம்

1. திருவாரூர் - 610001

இறைவன் : வன்மீக நாதர்
இறைவி : அல்லியங்கோதையம்மை
தீர்த்தம் : கமலாலயம், சங்குதீர்த்தம்
தலவிருட்சம்: பாதிரி மரம்.
பாடியவர் : திருஞானசம்பந்தர் 44, அப்பர் 208, சுந்தரர் 63, மணிவாசகர் 6 இடங்கள்.

இன்றைய திருவாரூர் மாவட்டத்தின் தலைநகர் திருவாரூர் நகரமே! திரு பூசித்து, வசிக்கும் தலமாதலின் திருஆரூர் எனப்பெயர் பெற்றது. பிறக்க முத்தி தரும் தலம். அதனாலன்றோ சுந்தரரரும் 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்றார். பஞ்சபூதத் தலங்களில்

திருவாரூர் 'மண்'ணிற்கு உரியது. (சிலர் காஞ்சி என்றும் கூறுவர்; இரண்டினையுமே கொள்ளல் தவறில்லை) சிவபெருமான் நடனமாடிய சப்தவிடத்தலங்கள் ஏழினுள் முதன்மையானது திருவாரூரே! (வீத விடங்கர் -அஜபா நடனம் 'திருவாரூர் தேரழகு' என்பது உலக வழக்கு. திருமுறைகளைத் தொகுத்தும், செப்பேடு செய்வித்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்தவர்களான அபயகுலசேகர சோழர் (11-ஆம் திருமுறை வரை) அநபாய சோழர் (பெரிய புராணத்தை 12-ஆம் திரு முறையாக வகுத்தவர்) ஆகியோர் அரசோச்சிய இடம். திருத்தொண்டத் தொகை தோன்றிய இடம். விறமிண்டர், நமிநந்தி, செருத்துணையார், தண்டியடிகள், கழற்சிங்கர் போன்ற நாயன்மார்கள் முத்தி பெற்ற தலம். சுந்தரர் பரவையாரை மணந்த இடம்; அவர்தம் வலக்கண் ஒளி பெற்ற இடமும் இவ்வாரூரே! நம்பியாரூரரிடம் சேரமான் நட்புக் கொண்ட இடம். நால்வரும் போற்றிப் பணிந்த புனிதத் தலம். நாட்டிலேயே பெரியதேர் ஆரூர் தேர்தான். கோவிலுக்கு எதிரிலுள்ள கமலாலயம் எனும் குளம் மிகப்பெரியது. இத்திருக்குளத்தில் மூன்று நாட்கள் தெப்போற்சவம் நடைபெறும். இக்குளத்தின் ஈசான மூலையில் மாற்றுரைத்த பிள்ளையார் கோயில் உள்ளது. தெற்குக் கோபுரத்திற்கு அருகில் பரவையார் கோயில் உள்ளது. கிழக்குக் கோபுரத்திற்கு அப்பால் மனுநீதிச் சோழன் தேர் (கல்லினால்) உள்ளது. கோயிலின் வெளிப் பிரகாரத்தில் அநேக லிங்கங்கள் கொண்ட சிறுசிறு ஆலயங்கள் உள்ளன. அதிகமான தேவாரப் பதிகங்களைக் கொண்ட இரண்டாம் இடத்தினைத் திருவாரூர் பெறுகின்றது. முதல் 7 திருமுறைகளிலும் இடம்பெற்ற நற்றவத்தலம். பஞ்ச பாசுரம் (தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்) பெற்ற தலங்கள் இரண்டு. ஒன்று திருவாரூர். பிறிதொன்று சிதம்பரம். 'திருவாரூர்த் திருமூலட்டானம்' எனக் கூறப்படுதலும் கருதத்தக்கது. 'தில்லையே கோயில்' என வழங்கப் படினும், திருவாரூர் அதனினும் பழைய கோயிலாதல் திருப்பதிகங் களாலும் நாயன்மார்களின் வரலாறுகளாலும் இனிது கொள்ளக் கிடக்கின்றது (பெரும்புலவர் அருணை வடிவேல் முதலியாரவர்கள்) நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மாலையில் தியாகராசப் பெருமானுக்கு நடக்கும் சாயரட்சை தீபமே ஒருதனி அழகு கொண்டது.

வல்லியந் தோலுடையான் வளர்திங்கட் கண்ணியினான் வாய்த்த
நல்லிய னான்முகத்தோன் தலையின் னறவேற்றான்
அல்லியங் கோதைதன்னை யாகத் தமர்ந்தருளி ஆரூர்ப்
புல்லிய புண்ணியனைத் தொழுவாரும் புண்ணியரே! (1.105.9)

துன்பெலாம் அற நீங்கிச் சுபத்தராய்
என்பெலாம் நெக்கு இராப்பகல் ஏத்திநின்று
இன்பரய் நினைந்து என்று மிடையறா
அன்பர் ஆமவர்க்கு அன்பர் ஆரூரரே. 5.7.4

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே. 7.1

'தேன்அமர் சோலைத் திருவாரூரில்' 8.2.73

2. திருவாரூர் அரநெறி - 610001

இறைவன் : அரநெறியப்பர்
இறைவி : வண்டார் குழலி
பாடியவர் : திருநாவுக்கரர் 11 பாடல்கள்.

திருவாரூர்த் திருக்கோயிலில் இரண்டாம் பிரகாரத்தில் மேற்கு நோக்கியுள்ள சந்நிதி. நமிநந்தி அடிகள் தண்ணீரால் திருவிளக்கு ஏற்றிய இடம். இச்செய்தியை அப்பர்பிரான் தம் தேவாரத்தில் (4.102.2)

அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக்கு இட்டமை
நீள்நாடு அறியுமன்றே எனவிதந்தோதினர்
இப்பெருமகனாரின் அருள்செயலை 'அடித்தொண்டன்
நந்தியென்பானுளன்' என்றார்.

விழித்தனர் காமனை வீழ்தர விண்ணின்
இழித்தனர் கங்கையை ஏத்தினர் பாவம்
கழித்தனர் கல்சூர் கடியரண் மூன்றும்
அழித்தனர் ஆரூர் அரநெறி யாரே. 4.17.4

3. திருவாரூர்ப் பரவையுள் மண்டளி - 610001

(துலா நாயனார் கோயில்)

இறைவன் : தூவாயனார் நாதர்
இறைவி : பஞ்சின் மெல்லடியம்மை
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்.

திருவாரூர்ப் பெரிய கோயிலின் பெரிய தேர் நிற்கும் இடத்திற்கு அருகில் உள்ளது. அழகிய சிறிய கோயில்.

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயா கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்கு
ஆவாஎன் பரவையுண்மண்டளி அம்மானே. 7.1

4. திருக்காறாயில் (திருக்காறவாசல்) - 610202

இறைவன் : கண்ணாயிரநாதர்
இறைவி : கைலாய நாயகி
தீர்த்தம் : இந்திரதீர்த்தம்
தலவிருட்சம்: பலா
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

திருவாரூர்-திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் உள்ளது. 12 கி.மீ. திருவாரூர்- திருநெல்லிக்காவல் வரும் நகரப்பேருந்திலும் வரலாம். சப்தவிடத்தலங்களில் ஒன்று. ஆதிவிடங்கர்; குக்குடநடனம். இந்திரன், முசுகுந்த சக்கரவர்த்தி போன்றோர் பூசித்தத் தலம். பௌர்ணமியில் இந்திரன் பூசித்ததாக ஐதீகம். கோயிலின் வடபுறத்தில் குளம் உளது. அக்குளம் இந்திரதீர்த்தம் என்ற அழைக்கப்படுகிறது. குளத்தின் வடகரையில் கடுக்காய்ப் பிள்ளையார் அமர்ந்துள்ளார். வியாபாரி ஒருவன் தான் கொண்டு வந்திருந்த ஜாதிக்காய் மூட்டைகளைக் கடுக்காய் மூட்டைகள் என பொய்கூற அம்மூட்டைகள் யாவும் கடுக்காயாகவே மாறின. இச்செயல் விநாயகரின் ஆற்றலே என அறிந்து அவரிடம் சென்று கசிந்துருகி வேண்டிட அம்மூட்டைகள் யாவும் ஜாதிக்காய் மூட்டைகளாய் மாறின. விநாயகரும் இப்பெயர் பெற்றார்.

தாயானே தந்தையு மாகிய தன்மைகள்
ஆயானே யாயநல் லன்பர்க்கு அணியானே
சேயானே சீர்திகழும் திருக் காறாயில்
மேயானே யென்பவர் மேல்வினை மேவாவே. 2.15.4

5. திருநெல்லிக்கா (திருநெல்லிக்காவல்) - 610205

இறைவன் : நெல்லிவனேச்சுரர்
இறைவி : மங்களநாயகி
தீர்த்தம் : பிரம, சூரியதீர்த்தங்கள்
தலவிருட்சம்: நெல்லிமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருவாரூர்- திருத்துறைப்பூண்டி சாலையில் 12 கி.மீ. சென்றபின் மாற்றுப் பாதையில் 2 கி.மீ. செல்ல வேண்டும். ஆரூரிலிருந்து நகரப் பேருந்து வசதி உண்டு. (இங்கிருந்து திருத்தெங்கூருக்கும், திருக்கொள்ளிக் காட்டிற்கும் செல்லலாம்.) சூரியனும், பிரமனும் பூசித்தத் தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. ஐப்பசி மாத கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்தசி முதல் 7 நாட்களும் மாசி மாத 18 முதல் 7 நாளும் மறையும் சூரியனின் ஒளிக் கதிர்கள் இறைவன்மேல் விழுகின்றன. நெல்லிமரம் திருச்சுற்றில் உள்ளது. நெல்லிக்காய்கள் இறைவனுக்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன.

வெறியார் மலர்கொன் றையந்தார் விரும்பி
மறியார் மலைமங் கைமகிழ்ந்து தவன்தான்
குறியாற் குறிகொண்டு அவர்போய்க் குறுகும்
நெறியான் நெல்லிக்கா வுள்நிலா யவனே. 2.19.6

6. திருக்கொள்ளிக்காடு - 610 205

இறைவர் : அக்கினீசுவரர்
இறைவி : பஞ்சின் நெல்லடியம்மை
தீர்த்தம் : முன்னுள்ள தீர்த்தக்குளம்
தலவிருட்சம்: வன்னி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

சனிபகவான் பரிகாரத்தலம். இலட்சுமி அருகே சனி இருத்தல் சிறந்தது. குறிப்பாக திருவாதிரையில் பிறந்தவர்கள் இக்கோயில் வந்து சனியை வழிபடல் ஏற்றம். திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையில் திருநெல்லிக்காவில் இறங்கி சற்று நடக்க வேண்டும். இறைவன் மேற்குப் பார்த்துள்ளான்.

பஞ்சுதோய் மெல்லடிப் பாவை யாளொடும்
மஞ்சுதோய் கயிலையுள் மகிழ்வர் நாள்தொறும்
வெஞ்சின மருப்பொடு விரைய வந்தடை
குஞ்சரம் உரித்தனர் கொள்ளிக் காடரே. 3.16.6

7. திருத்தெங்கூர் - 610205

இறைவன் : வெள்ளிமலைநாதர்
இறைவி . பெரியநாயகி
தீர்த்தம் : சிவகெங்கை
தலவிருட்சம்: தென்னைமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருக்கொள்ளிக்காட்டிலிருந்து 1 கி.மீ. திருநெல்லிக்காவிலிருந்து தென்மேற்காக 3 கி.மீ. இலட்சுமியும் நவக்கிரகங்களும் பூசித்த ஊர். பிரகாரத்தில் 9 இலிங்கங்கள் உள்ளன. இலட்சுமி பூசித்த லிங்கம் அப்பெருமாட்டியின் முன்னே உள்ளது.

தொல்லை வல்வினை தீர்ப்பார் சுடலைவெண் பொடியணி சுவண்டர்
எல்லி சூடிநின் றாடும் இறையவன் இமையவர் ஏத்தச்
சில்லை மால்விடை யேறித் திரிபுரந் தீயெழச் செற்ற
வில்லி னார்திருத் தெங்கூர் வெள்ளியங் குன்றுஅமர்ந் தாரே. 2.93.6

8. திருக்கைச்சினம் (கச்சனம்) - 610201

இறைவன் : கைச்சினநாதர்
இறைவி : வெள்வளையம்மை
தீர்த்தம் : இந்திர, வச்சிர தீர்த்தங்கள்
தலவிருட்சம்: கோங்கு, இலவமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்

இன்று கச்சனம் என வழங்கப்படுகிறது. ஆரூரிலிருந்து நகரப் பேருந்து உண்டு. (தனிப் பிளசர் இருப்பின் ஆரூர், அரநெறி, பரவையுள் மண்டலி, காறவாசல், கச்சனம், கச்சனத்திலிருந்து குளம்பிக்காடு வழியாக திருவலிவலம், (எட்டுக்குடி) திருக்கோளிலி, திருவாய்மூர் செல்லலாம்.) திருமணபிந்து முனிவர் பூசித்தத் தலம். இந்திரன் பூசை செய்த ஊர். மணலினால் இலிங்கம் செய்து தாபனம் செய்து பூசை முடிந்த பின்பு இலிங்கத்தைக் கையினால் எடுத்து அப்புறம் வைக்கும் பொழுது இந்திரனின் கைச்சின்னம் (கைக் குறி) அதிற்பொருந்திட இக்காரணம் பொருந்த இறைவனுக்குக் கைச்சின நாதர் என்றும், தலம் கைச்சின்னம் என்றும் ஆயிற்று. இன்று பெயர் மருவி கச்சனம் ஆயிற்று. தட்சிணா மூர்த்தி ரிஷபத்தின் மேல் உள்ளார். அழகான திருவுரு.

பாடலார் நான்மறையான் பைங்கொன்றை பாம்பினொடும்
சூடலான் வெண்மதியந் துன்று கரந்தையொடும்
ஆடலா னங்கை யனலேந்தி யாடரவக்
காடலான் மேவியுறை கோயில் கைச்சினமே. 2.45.3

9. திருவலிவலம் - 610207

இறைவன் : மனத்துணை நாதர்
இறைவி : வாளையங்கண்ணியம்மை
தீர்த்தம் : சங்கரதீர்த்தம்
தலவிருட்சம்: புன்னை
பாடியோர் : திருஞான சம்பந்தர் 11, அப்பர் 10, சுந்தரர் 11 பாடல்கள்

வழி 1. திருவாரூர்- வழி வேளூர் (கீழ்வேளூர் திருத்துறைப்பூண்டி சாலை) 2. திருவாரூர்- புலிவலம் மாவூர் வழியாக.

மாடக்கோயில் சூரியனும், காரணமுனியும், கரிக்குருவியும் பூசித்தத் தலம். இறைவன் சந்நிதி கட்டுமலைமேல் உள்ளது. கிழக்குப் பக்கம் தவிர மற்றப் பக்கங்களில் கோயிலைச் சுற்றி மாலையிட்டது போல் ஓடையொன்று உளது.

பிடியதன் உருவுமை கொளமிக கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வள வலமுறை இறையே. 1.123.5

உய்த்தவன்காண் உடல்தனக்கோர் உயிரா னான்காண்
ஓங்காரத் தொருவன்காண் உலகுக்கு எல்லாம்
வித்தவன்காண் விண்பொழியும் மழை யானான்காண்
விளைவவன்காண் விரும்பாதார் நெஞ்சத்து என்றும்
பொய்த்தவன்காண் பொழிலேழும் தாங்கி னான்காண்
புனலோடு வளர்மதியும் பாம்பும் சென்னி
வைத்தவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வளவலத்தான் காணவனென் மனத்து ளானே. 6.48.4

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்கு
அரையனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத்
தொண்ட னேன் அறியாமை அறிந்து

கல்லி யல்மனத் தைக்கடி வித்துக்
கழலடி காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 7.8

10. திருக்கோளிலி (திருக்குவளை) - 610204

இறைவன் : கோளிலிநாதர்
இறைவி : வண்டமர்பூங்குழலம்மை
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: தேற்றாமரம்

மூவர் பாடிய தலம். திருஞானசம்பந்தர் 11, அப்பர் 20, சுந்தரர் 10 பாடல்கள்.

அழகிய கோயில் பெருமான் மீது குவளை சார்த்தப் பெற்றுள்ளது. அமாவாசை அன்று குவளையை எடுத்து அபிஷேகம் செய்த பின்னர் மீண்டும் குவளை வைக்கப்படும். திருக்குவளைப் பெயர்க்காரணம் புரிகின்றது. சுந்தரருக்குப் பெருமான் நெற்குவியல் கொடுத்த இடம். சப்தவிடத் தலங்களில் ஒன்று. அவனி விடங்கர்- பிரமர நடனம். பூஜையின் பொழுதுப் படிக லிங்கத்திற்கும் மரகதலிங்கத்திற்கும் அபிஷேகம் நடைபெறும். இத்தலம் அருகே எட்டுக்குடி என்ற சிறந்த முருகன்தலம் உளது. அதன் அருகே திருவாய்மூர்.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே யரன்நாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே. 1.62.1

பலவும் வல்வினை பாறும் பரிசினால்
உலவுங் கங்கையுங் திங்களு மொண்சடை
குவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
நிலவி னான்றனை நித்தல் நினைமினே. 5.56.4

நீள நினைந்தடியேன் உனை
நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித் தரப்பணியே. 7.1

11. திருவாய்மூர் - 610204

இறைவன்	:	வாய்மூர்நாதர்
இறைவி	:	பாலினும் நன்மொழியம்மை
தீர்த்தம்	:	சூரியதீர்த்தம்
தலவிருட்சம்	:	பலா
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 11, அப்பர் 20 பாடல்கள்.

திருக்கோளிலி- எட்டுக்குடி - திருவாய்மூர் எட்டுக்குடி சிறந்த முருகன்தலம். சப்தவிடத்தலங்களுள் ஒன்று. நீலவிடங்கர்- கமல நடனம். நவகோள்கள் ஒரே வரிசையில் உள்ளன. மூலவருக்குத் தெற்கே தியாகராசர் உள்ளார். ஸ்படிகலிங்கமும் மரகதலிங்கமும் உள. பூஜையின் போது அபிஷேகம் நடைபெறும். தட்சிணாமூர்த்தி ரிஷபத்துடன் உள்ளார். ஆடல்வல்லான் சிலை சிறப்பாக உள்ளது. இறைவனையும், தியாக ராசரையும் வணங்கினால் நவகிரகங்கள் நம்மை அண்டாது. 8 வைரமூர்த்தங்கள் முன் இருந்தனவாம். தற்பொழுது 7 உள்ளன. நாவுக்கரையர் திருமறைக்காட்டிலிருந்த பொழுது இறைவன் அவர்முன் தோன்றி இவண்வர ஆணையிட்டார். அப்பர்பிரான் வர ஆளுடை பிள்ளையும் அவர் பின்னே செல்ல பின் இருவருமாகக் கூடி தரிசித்த நற்றவத்தலம்.

கழியக் கண்டிலேன் கண்ணெதி ரேகண்டேன்
ஒழியப் போந்திலே னொக்கவே யோட்டந்தேன்
வழியிற் கண்டிலேன் வாய்மூ ரடிகள்தம்
கழியிற் பட்டுச் சுழல்கின்றது என்கொலோ. 5.50.4

பண்ணிற் பொலிந்த வீணையர்
பதினெண் கணமு முணராநஞ்
கண்ணப் பொலிந்த மிடற்றினா
ருள்ள முருகி லுடனானவார்
சுண்ணப் பொடிநீ றணி மார்பர்
சுடர்பொற் சடைமேல் திகழ்கின்ற
வண்ணப் பிறையோ டிவராணீ
வாய்மூ ரடிகள் வருவாரே. 2.111.3

12. திருவிற்குடி (பிருந்தைமயானம்) - 610101

இறைவன் : வீரட்டானேசுரர்
இறைவி : ஏலவார்குழலி
தீர்த்தம் : சங்கு, சக்கர தீர்த்தங்கள்
தலவிருட்சம்: துளசிச்செடி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்.

திருவாரூர் - நன்னிலம் பேருந்து சாலையில் 5 கி.மீ. சென்று அறிவிப்புப் பலகை பார்த்து 1 கி.மீ. கிளைப்பாதையில் செல்ல வேண்டும். அட்ட வீரட்டானத்தில் ஒன்று. சலந்தாசுரனை சங்கரித்த தலம். உற்சவ மூர்த்தியின் திருக்கரத்தில் சக்கரம் உளது. கோயிலுக்குப் பின் மெய்ஞ்ஞானேசுரரின் சிறுகோயிலும் எதிரில் சக்கரதீர்த்தமும் பக்கத்தில் துளசி மாடமும் உள்ளன.

கரிய கண்டத்தர் வெளியவெண் பொடியணி மார்பினர் வலங்கையில்
எரியர் புன்சடை யிடம்பெறக் காட்டகத் தாடிய வேடத்தர்
விரியு மாமலர்ப் பொய்கைசூழ் மதுமலி விற்குடி வீரட்டம்
பிரிவி லாதவர் பெருந்தவத்தோரெனப் பேணுவர் உலகத்தே. 2.108.3

13. திருப்பயற்றூர் (திருப்பயற்றங்குடி) - 609701

இறைவன் : திருப்பயற்றீசர்
இறைவி : காவியங்கண்ணியம்மை
தீர்த்தம் : கருணாதீர்த்தம்
தலவிருட்சம்: சிலந்திமரம்
பாடியோர் : அப்பர் 10 பாடல்கள்

திருவிற்குடியிலிருந்து கிழக்கே 5 கி.மீ.

பைரவரிஷி பூசித்தத் தலம்.

மூவகை மூவர்போலும் முற்றுமா நெற்றிக் கண்ணர்
நாவகை நாவர்போலும் நான்மறை ஞானம் எல்லாம்
ஆவகை யாவர்போலும் ஆதிரை நாளர் போலும்
தேவர்கள் தேவர் போலும் திருப்பயற்றூர னாரே. 4.32.5

14. திருப்பள்ளியின் முக்கூடல் (பள்ளி முக்கூடல்) - 610002

இறைவன் : முக்கோண நாதேசுரர்
இறைவி : மைமேவு கண்ணியம்மை
தீர்த்தம் : முக்கூடல்
பாடியோர் : அப்பர்-10 பாடல்கள்.

திருவாரூருக்கு வடகிழக்கே 5 கி.மீ. விற்குடி இரயில் நிலையத்திலிருந்து $1^{1}/_{2}$ கி.மீ.

இராமர் பூசித்த இலிங்கம் பளபளப்பாய் உள்ளது.

அடைந்தார்தம் பாவங்கள் அல்லல் நோய்கள்
அருவினைகள் நல்குரவு செல்லா வண்ணம்
கடிந்தானைக் கார்முகில்போற் கண்டத் தானைக்
கடுஞ்சினத்தோன் தன்னுடலை நேமி யாலே
தடிந்தானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தத்துவனை உத்தமனை நினைவார் நெஞ்சில்
படிந்தானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநான் உழன்ற வாறே. 6.69.5

15. திருவிளமர் - 610002

இறைவன் : பதஞ்சலிமனோகரர்
இறைவி : யாழினும் மென்மொழியம்மை
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்.

திருவாரூருக்குத் தென்மேற்கே 3 கி.மீ. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில்; சிறிய கோயில். பதஞ்சலி பூசித்தத்தலம்.

பண்தலை மழலைசெய் யாழென மொழியுமை பாகமாகக்
கொண்டலை குரைகழல் அடிதொழ மவர்வினை குறுகிலர்
விண்தலை அமரர்கள் துதிசெய அருள்புரி விறலினர்
வெண்தலை பலிகொளும் விமலர்தம் வளநகர் விளமரே. 3.88.5

16. திருநாட்டியத்தான்குடி - 610202

இறைவன் : மாணிக்கவண்ணர்
இறைவி : மலைமங்கையம்மை
தீர்த்தம் : சூரியதீர்த்தம்
தலவிருட்சம்: மாவிலங்கை மரம்
பாடியோர் : சுந்தரர் 10 பாடல்கள்.

திருவாரூர் திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் மாவூர் கூட் ரோடு வந்து அங்கிருந்து வடபாதி மங்கலம் செல்லும் பாதையில் செல்க.

கோட்புலி நாயனார்தலம். இவரின் உருவம் கோயிலில் உள்ளது. சுந்தரர் இங்கு வந்தபோது இறைவனைக் காணாமல் விநாயகரைக் கேட்க இறைவன் இருக்குமிடத்தை இவர் சுட்டிக்காட்டியதால் 'கைகாட்டி மூர்த்தி' எனப் பெயர் கொண்டார்.

கல்லேன் அல்லேன் நின்புகழ் அடிமை
கல்லாதே பல கற்றேன்
நில்லேன் அல்லேன் நின்வழி நின்றார்
தம்முடை நீதியை நினைய
வல்லேன் அல்லேன் பொன்னடி பரவ
மாட்டேன் மறுமையை நினைய
நல்லேன் அல்லேன் நானுனக்கு அல்லால்
நாட்டியத்தான் குடி நம்பீ 7.4

17. திருக்கன்றாப்பூர் (கோயில் கண்ணாப்பூர்) - 610207

இறைவன் : நடுதறியப்பர்
இறைவி : மாதுமையம்மை
தீர்த்தம் : ஞானதீர்த்தம் தலவிருட்சம்: கல்பனை
பாடியவர் : அப்பர்-9 பாடல்கள்.

1. திருவாரூரிலிருந்து அடிக்கடி நகரப்பேருந்து உண்டு. அப்பால் 1 கி.மீ. சென்றால் வலிவலம்.
2. நாட்டியத்தான்குடியிலிருந்து கிழக்கே 3 கி.மீ.
3. திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலை சந்திப்பில் உட்புறத்திலுள்ள குன்னூரிலிருந்து 4 கி.மீ. தொலைவிலுள்ள ஆதிமங்கலத்தை அடைந்து வடக்கே 4 கி.மீ சென்றால் ஊர்.

இறைவன் மாடுகட்டும் ஆப்புக் குச்சியிலிருந்து வெளிவந்தவர். சைவப் பெண்ணொருத்தி வைணவரை மணந்து வீடுவந்தாள். கன்றுக்குட்டியைக் கட்டிய ஆப்பையே சிவமாகப் பூசித்துவர ஒருநாள் அவள் கணவன் இதனைக்கண்டு, அவ்வாப்பைக் கோடரியால் வெட்ட, பெருமான் வெளிப்பட்டார். இவ்வெட்டுக்குறி பெருமான் திருமேனியில் உள்ளது. ஊருக்குக் கன்றாப்பூர் எனவும் இறைவன் நடுதறி நாதர் எனவும் பெயர் கொண்டார். இடும்பன் எனும் அரசன் பூசித்தத் தலம். சிறிய கோயில். அர்ச்சகர் அருகே உள்ளார்.

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றுஞ்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே யென்றுந்
துடியனைய இடைமடவாள் பங்கா வென்றுஞ்
சுடலைதனில் நடமாடுஞ் சோதீ யென்றுங்
கடிமலர்தூய்த் தொடுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 6.61.2

18. திருப்பெருவேளூர் (காட்டூர் ஐயம்பேட்டை) - 610104

இறைவர் : ஆடவல்ல ஈசுரர்
இறைவி : திருமடந்தையம்மை
தீர்த்தம் : சங்கு தீர்த்தம்
தலவிருட்சம்: வன்னிமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் *11*, அப்பர் *10* பாடல்கள்.

கரவீரத்திலிருந்து *2* கி.மீ. இங்கிருந்து *5* கி.மீ. தலையாலங்காடு உள்ளது.

குணக்கும் தென் திசைக்கண்ணும் குடபாலும் வடபாலும்
கணக்கென்ன அருள்செய்வார் கழிந்தோர்க்கும் மொழிந்தோர்க்கும்
வணக்கம்செய் மனத்தராய் வணங்காதார் தமக்கென்றும்
பிணக்கம்செய் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. 3.66.3

குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் தாதை என்று
நறவிள நறுமென் கூந்தல் நங்கையோர் பாகத்தானைப்
பிறவியை மாற்றுவானைப் பெருவேளூர் பேணினானை
உறவினால் வல்லனாகி யுணருமா றுணர்ந்து வேனே. 4.60.3

19. திருக்கரவீரம் (கரையபுரம்) - 610104

இறைவன் : கரவீரேசுவர்
இறைவி : பிரத்தியட்சமின்னம்மை
தீர்த்தம் : அனவரத தீர்த்தம்
தலவிருட்சம்: அலரி மரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

திருவாரூர்-கும்பகோணம் சாலையில் திருவாரூருக்கு மேற்கே 10 கி.மீ. இத்தலத்திற்கு வடமேற்கே 2 கி.மீ. பெருவேளூர் உள்ளது.

பண்ணி னார்மறை பாடல் ஆடலன்
விண்ணி னார்மதி லெய்தமுக்
கண்ணி னானுறை யுங்கர வீரத்தை
நண்ணு வார்வினை நாசமே. 1.58.5

20. திருத்தலையாலங்காடு - 612103

இறைவன் : ஆடவல்ல ஈசரர்
இறைவி : திருமடந்தையம்மை
தீர்த்தம் : சங்கு தீர்த்தம்
பாடியவர் : அப்பர் 10

பெருவேளூரிலிருந்து மேற்கே 5 கி.மீ.

காலமுனி பூசித்தத் தலம். தாருகாவன முனிவர்கள் அனுப்பின முயலகன் முதுகின்மீது சிவபிரான் நடித்தருளிய இடம்.

மெய்த்தவத்தை வேதத்தை வேத வித்தை
விளங்கிளமா மதிசூடும் விகிர்தன் தன்னை
எய்த்தவமே உழிதந்த ஏழை யேனை
யிடர்க்கடலில் வீழாமே யேற வாங்கிப்
பொய்த்தவத்தா ரறியாத நெறிநின் றானைப்
புனல்கரந்திட் டுமையொடொரு பாகம் நின்ற
தத்துவனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே. 6.79.3

21. திருப்பேரெயில் (ஓகைப் பேரையூர்) - 610206

இறைவன் : ஜகதீசுரர்
இறைவி : ஜகந்நாயகி
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்
தலவிருட்சம்: நாரத்தை மரம்
பாடியவர் : அப்பர் 11 பாடல்கள்.

ஆரூர்- மன்னார்குடி சாலை மூலங்குடி வந்து இத்தலத்தை அடையலாம்.

மறையும் ஓதுவார் மான்மறிக் கையினர்
கறைகொள் கண்ட முடைய கபாலியார்
துறையும் போகுவர் தூயவெண் நீற்றினர்
பறையும் சூடுவர் பேரெயி லாளரே. 5-16-1

22. திருச்சிற்றேமம் (சித்தாய்மூர்) - 610203

இறைவன் : பொன்வைத்த நாதர்
இறைவி : அகிலாண்டேசுவரி
தீர்த்தம் : சுவர்ணபுஷ்கரணி
தலவிருட்சம்: ஆத்தி
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்.

ஆரூர்-திருத்துறைப்பூண்டி சாலையில் ஆலத்தம்பாடிவந்து 3 கி.மீட்டர்.

வானார்திங்கள் வாண்முக மாதர்பாட வார்சடைக்
கூனார்திங்கள் சூடியோ ராடல்மேய கொள்கையான்
தேனார்வண்டு பண்செயுந் திருவாருஞ்சிற் றேமத்தான்
மானார்விழிநன் மாதொடும் மகிழ்ந்தமைந்த னல்லனே. 3.42.5

(பட்டுக்கோட்டை தாலுகா திருச்சிற்றம்பலமே திருச்சிற்றம்பலம் என்பாரும் உளர். தவறு.)



21. திருத்துறைப்பூண்டி

1. திருக்களர்
2. திருக்கோட்டூர்
3. திருத்தண்டலை நீள்நெறி
4. திருக்கடிக்குளம் (கற்பகநாதர் குளம்)
5. இடும்பாவனம்
6. திருமறைக்காடு (வேதாரண்யம்)
7. அகத்தியான் பள்ளி
8. கோடிக்குழகர்

திருவிசைப்பாத் தலங்கள்:

1. திருக்களந்தை
2. திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்
3. திருமுகத்தலை

(இத்திருத்தலங்களை என் பால்ய நண்பர் (இன்றும்) திருத்துறைப் பூண்டி மேட்டுப்பாளையம் இராஜகோபால் தொடக்கப்பள்ளித் தாளாளரும், மருத்துவருமான இரா. ஸ்ரீவத்ஸன் அவர்கள் என்னை, தன் வீட்டிலேயே தங்கச் செய்து, உணவு அளித்து தனிப் பிளசரில் அழைத்துச் சென்றார்.)

1. திருக்களர் - 614720

இறைவன் : களர்முனை நாதேசுரர்
இறைவி : அழகேசரியம்மை
தீர்த்தம் : துருவாச தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

மன்னார்குடி- திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் உள்ளது. பள்ளங்கோயில் என்ற ஊரிலிருந்து தெற்கே செல்லும் சாலையில் 4 கி.மீ. சென்றால் இத்திருக்கோயிலை அடையலாம். பெரியகோயில். பராசர முனிவரும், காளவ முனிவரும் பூசித்தத் தலம். துருவாச முனிவருக்கு நடன தரிசனங் கொடுத்த இடம். ஆடல்வல்லான் முன்னே இவரின் திருவுருவம் உள்ளது. வலம்புரி விநாயகர், முருகன் சந்நிதி விசேடம். கேது பரிகாரத்தலம். (இத்தலம் அருகே திருக்கோட்டூர் உளது.)

கொங்கு லாமலாச் சோலை வண்டினம்
கிண்டி மாமது வுண்டிமை சைசெயத்
தெங்குபைங் கமுகம் புடைசூழ்ந்த திருக்களருள்
மங்கை தன்னெடுங் கூடிய மண
வாளனேபிணை கொண்டார் கைத்தலத்
தங்கையிற் படையாய் அடைந்தார்க் கருளாயே. 2.51.5

2. திருக்கோட்டூர் - 614708

இறைவன் : கொழுந்தீசுரர்
இறைவி : மதுரவசனாம்பிகை
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்
தலவிருட்சம்: வன்னி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

மன்னார்குடி-திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் உள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து மன்னார்குடி செல்லும் சாலையில் தீவட்டிக்கரைக்குப் போகும் பாதையில் வடக்கே 6 கி.மீ. (இத்திருக் கோயிலுக்குக் கிழக்கே 1/2 கி.மீ. தொலைவில் கீழ்க்கோட்டூர் மணியம்பலம் என்ற திருவிசைப்பாத் தலம் உள்ளது.) இறைவன் மேற்குப் பார்த்துள்ளார்.

பலவு நீள்பொழில் தீங்கனி
தேன்பலா மாங்கனி பயில்வாய்
கலவ மஞ்ஞைகள் நிலவுசொற்
கிள்ளைக ளன்னஞ்சேர்ந் தழகாய்
குலவு நீள்வயற் கயலுகள் கோட்டூர்நற்
கொழுந்தே என்று எழுவார்கள்
நிலவு செல்வத்தராகி நீள்
நிலத்திடை நீடிய புகழாரே. 2.109.4

3. திருத்தண்டலை நீள்நெறி - 614715

(தண்டலைச்சேரி)

இறைவன் : நீள்நெறிநாதர்
இறைவி : ஞானாம்பிகை
தீர்த்தம் : ஓமகதீர்த்தம்
தலவிருட்சம்: குருந்து
பாடியவர் : திருஞானசம்பந்தர் 8 பாடல்கள்.

திருத்துறைப்பூண்டி இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 4 கி.மீ. கூர்மாவதாரங் கொண்ட திருமாலின் அகந்தையை அடக்கி அதன் ஓட்டினை அணிந்த தலம். அரிவட்ட நாயனார் செந்நெல்லரசி, மாவடு, செங்கீரை முதலியன வைத்து நிவேதித்து வந்து முத்தி பெற்ற தலம். அவர் ஊராகிய கணமங்கலம் 1 கி.மீ. கிழக்கே உள்ளது. கோச்செங்கட்சோழன் வழிபட்டதலம்.

விரும்பும் திங்களும் கங்கையும் விம்மவே
சுரும்பும் தும்பியும் சூழ்சடை யார்க்கிடம்
கரும்பும் செந்நெலும் காய்கமு கின்வளம்
நெருங்கும் தண்டலை நீணெறி காண்மினே. 3.50.1

4. திருக்கடிக்குளம் - 614703

(கற்பகநாதர் குளம், கற்பகனார் கோயில்)

இறைவன் : கற்பகநாதர்
இறைவி : பாலசுந்தரி
தீர்த்தம் : விநாயக தீர்த்தம்
தலவிருட்சம்: பலா
பாடியவர் : திருஞானசம்பந்தர்- 11 பாடல்கள்.

திருத்துறைப்பூண்டியிலிருந்து தென்மேற்குத் திசையில் 17 கி.மீ. திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை, வேதாரண்யம் போன்ற ஊர்களிலிருந்து பேருந்து வசதி உண்டு. கடி-மணம். மணம் மிக்க திருக்குளம். மணம்- சிவமணம் திருக்கடிக்குளம் சிறிய அழகான கோயில். பெருமான் எட்டுப் பட்டை கொண்டு பிரகாசிக்கின்றார். ஊரே கோயில்; கோயிலே ஊர்.

பொடி கொண்மேனி வெண்ணூலினர் தோலினர்
புலியுரியதளாடை
கொடி கொளேற்றினர் மணிகிணி னெனவரு
குறைகழல் சிலம்பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்
துறையுங் கற்பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரும் அடியரை
முன்வினை மூடாவே. (2.104.1)

5. இடும்பாவனம் - 614735

இறைவன் : சற்குணநாதேசுரர்
இறைவி : மங்கள நாயகி
தீர்த்தம் : குசுமதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருத்துறைப்பூண்டியிலிருந்து தென்மேற்கே 16 கி.மீ. நெடும்பலம், பாண்டி, தில்லைவிளாகம் போன்ற இரயில் நிலையங்களினின்றும் செல்லலாம். இங்கிருந்து திருக்கடிக்குளம் அண்மைத்து. வெள்ளப் பிள்ளையார் விசேடம். வெண்மை நிறம். இறைவன் பின்னே பெருமானும் பெருமாட்டியும் திருமணக்கோலத்துடன் அற்புதக்காட்சி. பாடல்பெற்ற தலங்களில் இவ்வரிய காட்சியை 1. வேதாரண்யம் 2. இடும்பாவனம் 3. திருவேற்காடு ஆகிய தலங்களில் கண்டு மகிழலாம். (தில்லை விளாகத்தில் நடராசர் கோவிலும் உற்சவமூர்த்திகளாக விளங்கும் பெருமாள் காலிலும் முழங்காலிலும், கை பின்பக்கங்களிலும் நரம்புகள் தெரிவது அபூர்வம். சிதம்பரத்தில் இருப்பதுபோல சிவனையும், திருமாலையும் ஒன்றாகக் கண்டு வணங்கி மகிழலாம்.)

நீறேறிய திருமேனியர் நிலவும்முல கெல்லாம்
பாறேறிய படுவெண்தலை கையிற்பலி வாங்காக்
கூறேறிய மடவாள் ஒருபாகம் மகிழ்வு எய்தி
ஏறேறிய இறைவர்க்கு இடம் இடும்பாவனம் இதுவே (1.17.7)

6. திருமறைக்காடு (வேதாரண்யம்) - 614810

இறைவன் : மறைக்காட்டீசுவரர்
இறைவி : யாழைப்பழித்த நாயகி
தலவிருட்சம்: வன்னி
தீர்த்தம் : வேதாமிர்தம்; வேதநதி (கடல்)
பாடியோர் : மூவரும் போற்றிய புனிதத்தலம்.
திருஞானசம்பந்தர் 32 பாடல்கள்,
அப்பர் 50 பாடல்கள், சுந்தரர் 50 பாடல்கள்

முதல் ஏழு திருமுறைகளிலும் பாடல்கள் கொண்ட அற்புதத்தலம். திருச்சி, தஞ்சை, நாகை போன்ற ஊர்களிலிருந்து பேருந்து வசதி உண்டு. திரு-சிறப்பு அடை மொழி; மறை-வேதம்; காடு- ஆரண்யம். வேதாரண்யம் என வழங்கும் தலம் இதுவே! திருமுதுகுன்றம்- விருத்தாசலம் ஆனதுபோல் திருமறைக்காடும் வேதாரண்யம் ஆயிற்று.

இராவணனை வீழ்த்திய இராமர் இங்குவந்து தம் பாவத்தைப் போக்கியதால் 'ஆதிசேது' என்று இத்தலத்தைக் கூறுவர். நான்முகன், விசுவாமித்திரர் பூசித்தத் தலம். வடபுலம் தாழ தென்புலம் உயர இதனைச் சமன்செய்ய வேண்டி சிவபிரான் அகத்தியரைத் தென்திசை செல்ல ஆணை பிறப்பிக்கக் குறுமுனியும் தென்திசை போந்தார். குறுமுனியின் வேண்டுகோளுக்கிணங்கி அம்மையப்பனின் திருமணக்காட்சியை இத்திருக்கோவிலில் குறுமுனி கண்டு மகிழ்ந்தார். இவ்வற்புதத் திருக்கோலம் பெருமானின் கருவறையின் பின்சுவரில் அழகுற உள்ளது. நாமும் கண்டு மகிழலாம். (இவ்வற்புதக் கோலம் திருவேற்காடு சிவன் கோயிலிலும் உள்ளது. இதனால் இக்கோயில் வட வேதாரண்யம் என்றும் வழங்கப்படுகிறது. இடும்பன் கோயிலிலும் இத்திருமணக் காட்சிக் கோலத்தைக் காணலாம்.) மறைகள் பூசித்துத் திருக்காப்பிடப்பட்ட, கதவினைத் திருநாவுக்கரசர் தம் பாடலால் திறந்தும்; திருஞானசம்பந்தர் தம் பாடலால் திறந்த கதவினை மூடச்செய்த அற்புதம் நிகழ்ந்த தலம். சுந்தரர் சேரமான் பெருமாளுடன் சென்று இறைவனைக் கண்டு போற்றிய தலம். தியாகராசர் சந்நிதிக்கு எதிரில் சுந்தரர் பரவையாருடன் உள்ள உருவச்சிலை உள்ளது. சப்த விடத்தலங்களில் இத்தலமும் ஒன்று: புவனிவிடங்கர் ஹம்சபாத நடனம். நெய்யுண்ண வந்த எலி ஒன்று; கருவறை செல்ல, அங்கு மங்கிய ஒளியுடன் எரியும் விளக்கில் அதன் மூக்குப்பட அதனால் திரி தூண்டப்பட்டு ஒளி பரவியது. அன்று சிவராத்திரியாகவும் அமைந்தது. இச்செயலால் இறைவன் அவ்வெலிக்கு மறுபிறப்பில் மாவலி சக்கரவர்த்தியாகப் பிறக்கச் செய்தார். அவனும் இறையருளால் நிலமிசை நீடு வாழ்ந்து அரசாண்டார். 'தூண்டு சுடரணைய சோதி கண்டாய்' என நாவரசர் போற்றியதற்கேற்ப 'வேதாரண்யம் விளக்கழகு' என்பர். துர்க்கை சந்நிதி தனித்து சிறப்பாக விளங்குகின்றது. சரஸ்வதியின் திருவுருவம் கம்பீரமாக உள்ளது. கலைமகளிடம் காணப்படும் வீணை இங்கு இல்லை. பெரியகோயில்; கோயிலின் பின்பக்கத்தில் குளம் உளது. மக்கள் நீராடப் பயன்படுத்துகின்றனர். தாயுமானவர் பிறந்த புண்ணியபூமி.

அரவம் வீக்கிய அரையும் அதிர்கழல் தழுவிய அடியும்
பரவ நாஞ்செய்த பாவம் பறைதர அருள்பவர் பதிதான்
மரவ நீடுயர் சோலை மழலைவண் டியாழ்செயும் மறைகாட்
டிரவும் எல்லியும் பகலும் ஏத்துதல் குணமென லாமே (2.91.5)

துஞ்சும் போதுந் துயிலின்றி யேத்துவார்
வஞ்சின் றிவலங் கொண்மறைக் காடரோ
பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்
தஞ்சி நிற்பது மைந்தலை நாகமே (5.6)

யாழைப்பழித் தன்னமொழி மங்கைஒரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தான்இடம் பேணில்
தாழைப்பொழில் ஊடேசென்று பூழைதலை நுழைந்த
வாழைக்கனி கூழைக்குரங்கு உண்ணும் மறைக் காடே. (7.1)

7. அகத்தியான்பள்ளி - 614810

இறைவன் : அகத்தீசுரர்
இறைவி : பாகம் பிரியாநாயகி
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

வேதாரண்யத்திலிருந்து கோடிக்கரை செல்லும் பாதையில் உள்ளது. தெற்கே $1^1/_2$ கி.மீட்டர் தொலைவு. சிவனாரின் திருமணக்கோலத்தைக் கண்டு வழிபடும் பொருட்டு அகத்தியர் தங்கியிருந்த ஊர். இம்முனிவரின் திருவுருவம் கோயிலில் உள்ளது. நவக்கிரகங்கள் ஒரே திசை பார்த்துள்ளன.

ஓதியெல்லாம் உலகுக்கொர் ஒண்பொரு ளாகிமெய்ச்
சோதியென்று தொழுவார் அவர்துயர் தீர்த்திடும்
ஆதியெங்கள் பெருமான் அகத்தியான் பள்ளியை
நீதியால் தொழுவார் அவர்வினை நீங்குமே. (2.76.7)

8. கோடிக்குழகர் - 614821

இறைவன் : அமிர்தகடேசுரர்
இறைவி : மையார் தடங்கண்ணியம்மை
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்.

அகத்தியான்பள்ளியிலிருந்து தெற்கே $1^1/_2$ கி.மீ. சிறிய அழகிய கோயில். அமுத தீர்த்தம் என்கின்ற கிணறு சுற்றில் உள்ளது. பாற்கடலில் தோன்றிய அமிழ்தைத் தேவர்கள் உண்ட பின் மீதியிருந்த அமிழ்தை வாயுவின் கையில் கொடுக்க, அவரும் அதனைப் பெற்று விண்வழியே செல்லுங்கால் கீழே வீழ்ந்த அமிழ்து இலிங்கமாய் அமைந்தது. இத்திருக்கோயிலில் முருகன் ஒற்றைத் திருமுகனாய் ஆறு கரங்களுடன் காட்சியளிக்கின்றான். (அறங்கண்ட நல்லூரிலும் இத்திருக் காட்சியை

காணலாம்.) இக்கோடிக்கரைக் கடலில் ஒரே தடவை நீராடினால் சேதுவில் நூறுமுறை நீராடிய பலனைப் பெறலாம். அகத்தியான் பள்ளியிலிருந்து இத்தலம் வரும் வழியில் இராமபிரானின் பாதங்கள் பதிந்த இடமுளது. ஆடி, தை அமாவாசைகளில் மக்கள் கூட்டம் அதிகம்.

அரவேர் அல்குலாளை ஓர்பாகம் அமர்ந்து
மரவங் கமழ்வா மறைக்காடு அதன்தென்பால்
குரவப் பொழில் சூழ்தருகோடிக் குழகா
இரவே துணையாய் இருந்தாய் எம்பிரானே. (7.6)



22. மன்னார்குடி

1. திருவெண்டுறை
2. பாதாளேச்சரம் (பாம்பணி)

1. திருவெண்டுறை (வண்டுறை) - 614717

இறைவன் : வெண்டுறை நாதர்
இறைவி : வேல்நெடுங்கண்ணி
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: வில்வமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

வழி: மன்னார்குடி- சேந்தங்குடி அல்லது வீராக்கி செல்லும் நகரப் பேருந்துகளில் செல்லலாம். 9 கி.மீ. மன்னார்குடி- திருத்துறைப் பூண்டி சாலையில் 'வீராக்கி' விளக்கு நிறுத்தத்தில் இறங்கி 1 கி.மீ. நடக்க வேண்டும்.

பிருங்கு முனிவர் வண்டு வடிவமாய் மங்கைபங்கனாகவுள்ள இறைவன் வடிவில் இறைவனை மட்டும் துளைத்துச்சென்று பெருமானை மட்டும் வலமாக வந்தனர் என்பர். இன்றும் வண்டின் ஒலி கருவறையில் கேட்கிறது.

காலனை யோருதையில் லுயிர் வீடுசெய் வார்கழலான்
பாலொடு நெய்தயிரும் பயின் றாடிய பண்டரங்கன்
மாலைம தியொடுநீ ரர வம்புனை வார்சடையான்
வேலன கண்ணியொடும் விரும் பும்மிடம் வெண்டுறையே. 3.61.2

2. திருப்பாதாளீச்சுரம் (பாம்பணி, பாமணி) - 614004

இறைவன் : சர்ப்பபுரீசுரர்
இறைவி : அமிர்தநாயகி
தீர்த்தம் : நாகதீர்த்தம்
தலவிருட்சம்: மாமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

மன்னார்குடியிலிருந்து 2 கி.மீ. இறைவனுக்கு இரண்டு திரு முகங்கள். (மூன்று முகங்கள் திருவக்கரைப் பெருமானுக்கு உள்ளது.) பதஞ்சலி போன்ற பாம்புருவமுள்ள தனஞ்சயமுனி பூசித்தத்தலம். இவரின் உருவம் கோயிலில் உள்ளது.

நாகமும் வான்மதியும் நலமல்கு செஞ்சடையான் சாமம்
போகநல் வில்வரையாற் புரமூன் றெரித்துகந்தான்
தோகைநன் மாமயில்போல் வளர்சாயல் தூமொழியைக் கூடப்
பாகமும் வைத்துகந்தா னுறைகோயில் பாதாளே. 1.108.3

(முத்துப்பேட்டை)

23. திருஉசாத்தானம் (கோயிலூர்) - 614704

இறைவன் : மந்திரபுரீசுரர்
இறைவி : பெரியநாயகி அம்மை
தீர்த்தம் : நின்மலதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 9 பாடல்கள்

தஞ்சை, திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி போன்ற ஊர்களிலிருந்து செல்லும் முத்துப்பேட்டைப் பேருந்தில் சென்று அங்கு இறங்கி கோயிலூர் கோயில் எனக் கேட்டுச் செல்லலாம். முத்துப் பேட்டைக் கடைத்தெருவிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவு. பெரிய கோயில். இராமபிரான், இலக்குவன், சுக்கிரீவன், அனுமன், ஜாம்பவான் முதலியோர் வழிபட்டுப் போற்றிய தலம்.

பெருமானிடம் இராமன் அருமறை கேட்டு இலங்கை சென்றதாகக் கூறுவர். இதனால் இறைவன் மந்திரபுரீசுவரர் ஆயினர். சுயம்பு இலிங்கத் திருமேனி. வெண்மையாகக் காணப்படுகிறது. பச்சைக் கற்பூரம் சார்த்தி வழிபடுகிறார்கள். லிங்கத்திருமேனியின் மேல்பாகத்தில் ஒரு சிறுபள்ளம் காணப்படுகிறது. அதனுள் பெருமானுக்குத் திலகம் வைக்கப்பட்டுள்ளது. பெருமான் சற்று வடபுறம் சாய்ந்துள்ளார். திருக்கோயிலின் உள்சுற்றில் பெரிய சிவலிங்கம் ஒன்று உள்ளது. அவரைச் சுற்றிலும் சிறிய சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மழைப் பொய்த்து விடுமாயின் இந்த சிவலிங்கச் சுற்றில் தண்ணீரை நிரப்புவர் (3000 லிட்டர் கொள்ளளவு). உடன் மழை வருமாம். இன்றுவரை இப்பழக்கம் உள்ளது. கோயிலில் நவக்கிரகம் இல்லை.

நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீவன்அநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தவெம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே. (3.33.1)



24. நீடாமங்கலம்

1. திருப்பூவனூர் (புஷ்பவனம்)
2. இரும்பூளை (ஆலங்குடி)
3. திருவெண்ணியூர்

1. திருப்பூவனூர் (புஷ்பவனம்) - 612803

இறைவன் : புஷ்பவனநாதர்
இறைவி : கற்பகவல்லி
தீர்த்தம் : கருங்கழி தீர்த்தம்
தலவிருட்சம்: பலாமரம்
பாடியவர் : அப்பர் 11 பாடல்கள்.

நீடாமங்கலத்திலிருந்து 3 கி.மீ.

சாமுண்டீஸ்வரி சந்நிதி சிறப்புடையது. ஞாயிறுதோறும் விஷக்கடிக்கு மந்திரித்து கயிறு தருகிறார்கள். பெரியகோயில். பாமணியின் மேல்கரை வெண்ணி; தென்கரை பூவனூர்.

ஆவின் மேவிய ஐந்தமர்ந்து ஆடுவான்
தூவெண் ணீறு துதைந்தசெம் மேனியான்
மேவ னூல்விரி வெண்ணியின் தென்கரைப்
பூவ னூர்புகு வார்வினை போகுமே 5.65.4

2. இரும்பூளை (ஆலங்குடி) - 612801

இறைவன் : ஆபத்சகாயேஸ்வரர்
இறைவி : ஏலவார்குழலி
தீர்த்தம் : அமிர்தப் பொய்கை
தலவிருட்சம்: பூளைச்செடி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்

நீடாமங்கலம்- கும்பகோணம் பேருந்து வழியில் உள்ளது. குருத்தலம். பிரபலமான தலம். தட்சிணாமூர்த்தியே குரு. இப்பிரானை வழிபடுக. சிறியகோயில்.

நச்சித் தொழுவீர் கள்நமக் கிதுசொல்லீர்
கச்சிப் பொலிகா மக்கொடி யுடன்கூடி
இச்சித் திரும்பூ ளையிடங் கொண்ட ஈசன்
உச்சித் தலையிற் பலிகொண் டுழலூணே. 2.36.4

3. திருவெண்ணியூர் (கோயில் வெண்ணி) - 614403

இறைவன் : வெண்ணிக்கரும்பேசுவரர்
இறைவி : அழகிய நாயகி
தீர்த்தம் : சந்திர சூரிய தீர்த்தங்கள்
தலவிருட்சம்: அரசமரம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11, அப்பர் 11 பாடல்கள்

தஞ்சை-நீடாமங்கலம் கல்லூரிக்கு முன்பாகப் பிரிந்து செல்லும் சாலையினுள் 2 கி.மீ. செல்ல கோயில். கோயில் அருகே சிவாச்சாரியார் வீடு.

மூத்தானை மூவுல குக்கொரு மூர்த்தியாய்க்
காத்தானைக் கனிந்தவ ரைக்கலந் தாளாக
ஆர்த்தானை யழகமம் வெண்ணியன்றன்னை
ஏத்தாதா ரென்செய்வா ரேழைப் பேய்களே. 2.14.4

காற்றி னைக்கன லைக்கதிர் மாமணி
நீற்றி னைநினைப் பார்வினை நீக்கிடும்
கூற்றி னையுதைத்திட்ட குணமுடை
வீற்றி னைநெரு நற்கண்ட வெண்ணியே. 5.17.3



25. திருப்பனந்தாள்

1. திருப்பனந்தாள்
2. திருஆப்பாடி
3. திருசேய்ஞலூர்

1. திருப்பனந்தாள் - 612504

இறைவன் : சடையப்பர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: பனைமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

ஆடுதுறையிலிருந்து 9 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 16 கி.மீ. திருச்சி-ஜெயங்கொண்டம்- ஆடுதுறை இவ்வழியாகவும் செல்லலாம். இறைவன் மேற்குப் பார்த்துள்ளார். ஆலயம் தாடகேச்சுரம் என வழங்கப்படுகிறது. தாடகை (இராமாயணத் தாடகை அன்று) என்னும் பெண் மாலையிட முடியாத நிலையில் உயரமாய்ப் பெருமான் இருக்க அவளின் வேண்டுகோளின்படி பெருமான் சற்றே சாய்ந்தார். பின்னர் அதே நிலையிலிருந்த பெருமானை சரியான நிலையில் வைக்கும் முயற்சியில் ஈடுபட்ட அரசன், யானை, சேனை போன்ற பலவற்றைப் பயன்படுத்தியும் முடியவில்லை. குங்குலியக் கலய நாயனார் இவ்வூர் வந்தபோது இலிங்கத்திரு மேனியில் ஒரு நுனியையும் மற்றொரு நுனியைத் தன் கழுத்திலுமாகக் கட்டியிழுக்க அன்பின் முதிர்ந்த நிலையில் இச்செயல் அமைந்ததால் பெருமான் நிமர்ந்தனர். இக்கதை நிகழ்ச்சி திருக்கோவில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. பிரகாரத்தில் இரு ஆண்பனைகள் உள. துர்க்கை சந்நிதி விசேடம். சைவம் தழைக்க உழைக்கும் திருப்பனந்தாள் காசிமடம் இத்தலத்தில் உள்ளது.

விரித்தவன் நான்மறையை மிக்க விண்ணவர் வந்திறைஞ்ச
எரித்தவன் முப்புரங்கள் ளிய லேமுல கில்லுயிரும்
பிரித்தவன் செஞ்சடைமேல் நிறை பேரொலி வெள்ளந்தன்னைத்
தரித்தவ னூர்பனந்தாள் திருத்தாடகை யீச்சரமே. 3.62.2

2. திருஆப்பாடி - 612504

இறைவன் : பாலுகந்தநாதர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : மண்ணியாறு
தலவிருட்சம்: ஆத்தி
பாடியவர் : அப்பர் 11 பாடல்கள்.

திருப்பனந்தாளிலிருந்து தென்மேற்கே $1^1/_2$ கி.மீ. திருப் பனந்தாளுக்கு முந்திய நிறுத்தம்.

சண்டேசுவரர் பூசை செய்த தலம்.

ஆதியும் அறிவுமாகி அறிவினுட் செறிவு மாகிச்
சோதியுட் சுடரு மாகித் தூநெறிக் கொருவ னாகிப்
பாதியிற் பெண்ணு மாகிப் பரவுவார் பாங்கராகி
வேதியர் வாழுஞ் சேய்ஞல் விரும்புமாப் பாடி யாரே. 4.48.2

3. திருசேய்ஞலூர் - 612504

இறைவன் : சத்தியகிரீசுரர்
இறைவி : சசிதேவியம்மை
தீர்த்தம் : மண்ணியாறு
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

திருப்பனந்தாளிலிருந்து 1 கி.மீ.

சண்டேசுவரரின் அவதாரத்தலம். இவரின் சந்நிதி வேறெங்கும் காணாத நிலையில் அர்த்தநாரி திருக்கோலத்தில் உள்ளார். கண்டு மகிழவேண்டிய திருமேனி. வைணவ நாலாயிரப் பிரபந்தத்திற்கு உரைகண்ட பெரியவாச்சான் பிள்ளையின் அவதாரத்தலமும் இதுவே. எதிரே திருக்கோயில் உளது.

காடடைந்த ஏனமொன்றின் காரண மாகிவந்து
வேடடைந்த வேடனாகி விசயனொ டெய்ததென்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்க ணாற்கருள்செய்
சேடடைந்த செல்வர்வாழுஞ் சேய்ஞலூர் மேயவனே. 1.48.6

2. கொங்கு நாட்டுத் தலங்கள் - 7.

1. திருச்செங்கோடு (கொடிமாடச் செங்குன்றூர்)
2. திருநணா (பவானி)
3. திருப்பாண்டிக் கொடுமுடி (கொடுமுடி)
4. அவிநாசி
5. திருமுருகன்பூண்டி
6. கரூர்
7. திருவெஞ்சமாக்கூடல்

(மேற்குறித்த இந்த ஏழுதலங்களையும் ஈரோடு மாநகரை மையமாகக் கொண்டு; சென்று, கண்டு, மகிழ்ந்து வணங்கலாம். மேலும் ஈரோடு-சென்னிமலை (முருகன்தலம்) ஈரோடு- காங்கேயம்-வட்டமலை-ஊதிமலை காங்கேயம்- சிவன்மலை; ஈரோடு- தாராபுரம் அநுமன் கோயில்; தாராபுரம் பிரசித்திபெற்ற பழநி; திருஆவினன் குடி பழநி நகரிலுள்ள பெரிய நாயகி அம்மன் கோயில் மற்றும் பழநி-தாராபுரம் சாலையிலுள்ள பெருவாலவாயுடையார் சிவன் கோயில் ஆகிய திருக்கோயில்களையும் வணங்கி மகிழலாம். மேலும் ஈரோடு நகர் மகளிர் கல்லூரி அருகில் திண்டல்மலை என்ற சிறுகுன்றின்மீது குமரன் வீற்றுள்ளான். குன்றுறையும் குமரனையும் கண்டு வணங்கி மகிழ்க.)

(இத்தலங்களுக்கு அடியவன் குடும்பத்துடன் சமரச சன்மார்க்கரான திரு. டாக்டர் விக்டர்லூயி அவர்கள் தன் குடும்பத்தோடு கலந்து கொண்டார்கள்.)

(கொடிமாடச் செங்குன்றூர்)
1. திருச்செங்கோடு - 637211

இறைவன்	:	அர்த்தநாரீச்சுவரர்
இறைவி	:	அர்த்தநாரீச்சுவரி
தீர்த்தம்	:	சங்கதீர்த்தம்
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 21 பாடல்கள்.

இயற்கையான பெரியமலை. மலை செங்குத்தானது. செங்குத்தாக உள்ளதால் 'செங்கோடு' ஆயிற்றோ! (கோடு-மலை) மலை செம்மையாக இருத்தலின் செங்கோடானதோ! நாககிரி, நாகமலை, சர்ப்பகிரி என்ற வேறு பெயர்களும் உண்டு. நகரின் மேல்வீதியிலிருந்து பார்த்தால் மலை நாகம் போல் தோன்றுவதால் நாககிரி என்பர். 1200படிகள். மலை

அடிவாரத்திலும் மலைமேல் உள்ளதுபோல் ஒரு சிவன் கோயில் உளது. இங்கிருந்துதான் மலைக்கோவிலுக்கு தேவஸ்தான பேருந்துகள் செல்கின்றன. இப்பணி அண்மைக் காலத்தில் தோன்றியது. மலைமீது பேருந்து, பிளசர் முதலியன செல்ல கட்டணத்துடன் அனுமதி வழங்கப் படுகிறது. படிவழியாக மலை ஏறுங்கால் ஒரு சில இடங்களில் இறங்கி, ஏறும் நிலை உளது. பத்து மண்டபங்களைத் தாண்டி மலைக் கோவிலுக்குள் செல்லலாம். மூன்றாவதாக உள்ள தயிலி (தைலி) மண்டபத்திற்கு மேற்கே வெண்ணெய்யால் மூழ்கடிக்கப் பெற்றிருக்கும் நந்தியைக் காணலாம். நந்தி மண்டபத்திலிருந்து 60 அடி நீளத்திற்கு அழகிய ஐந்து தலைகளுடன் வேலைப்பாடோடு அமைய செதுக்கப்பட்டுள்ள பாம்பினைக் கண்டு மகிழலாம். ஐந்தாவதான சிங்கத்தூண் மண்டபத்தினைக் கடக்கும்போது செங்குத்தான பாறையின்மேல் ஒரே நிலையில் அமைக்கப் பெற்றுள்ள அறுபது படிகளைக் காண்கின்றோம்.

இப்படிகளின் ஓரங்களில் எண்ணெய் ஊற்றி ஏற்றுதற்கு ஏற்றார் போல் மாடப்பிறைகளும் உள்ளன. இவையே சத்திய வாக்குப் படிகள்! பணம் பெற்று இல்லை என்போர்; வஞ்சக மனங் கொண்ட கயவர்; பொருளாசையால் மனம் மாறுபட்டோர், பண ஆசையால் படிற் றொழுக்கம் பூண்டோர் நீராடி, ஈரத்துணியுடன் இப்படிகளில் ஏறிவந்து இறுதியில் அமைந்துள்ள சத்தியநாதனான கந்தன் சந்நிதியில் நெய் விளக்கினை ஏற்றிடவும்; எரிகின்ற கற்பூரத்தை அணைக்கவும் மேற் குறித்தோர் அஞ்சுவர். ஆம்! அத்துணை சக்தி கொண்டவை அச்சத்தியப் படிகளும் சத்தியநாதனும். வஞ்சிக்கப்பட்டு அதனால் அல்லலுற்று ஆற்றாது இடர்ப்படுவோர் அழுத கண்ணீருடன் கூறும் கடுஞ்சொற்கள்- கொடுஞ்சொற்கள்- அவற்றிக்கு உரியாரைச் சென்றடையும் தன்மை பெற்றவை. வஞ்சிக்கப்பட்டோர், நீதிமன்ற வழக்குகளில் சிக்கித்தவிப்போர் வெற்றிபெற இச்சத்தியப் படிகளில் திருவிளக்கு ஏற்றியும், சிறப்புப் பூசையும் செய்வர். இத்திருக்கோயிலில் இதற்குரிய கட்டணத்தைச் செலுத்திச் செய்யும் சத்திய பிரமாணத்தைத் தமிழகத்தின் உயர்நீதிமன்றமே ஏற்றுக் கொள்கிறதாம்! இச்சத்தியப் படிகளையும், சத்திய நாதனையும் அருணகிரியார் 'தர்க்க சத்ரத் தக்கமார்க்கச் சத்திய வாக்யப் பெருமாளே' (திருச்செங்கோட்டுத் திருப்புகழ் 391) எனப் பாடியுள்ளார். பத்தாம் மண்டபம் தாண்டி திருக்கோயிலினுள் நுழைகின்றோம். வேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய அற்புத மண்டபம். கற்சங்கிலி களும் உள. இம்மண்டபம் அருகே செங்கோட்டு வேலவன் சந்நிதி. வேலவன் கிழக்குப் பார்த்துள்ளான். அவன் திருக்கையில் இயற்கை யிலேயே வேல் உளது. கந்தரலங்காரத்தில் செங்கோட்டு வேலனை

அருணகிரியார் பலவாறு பாடியுள்ளார். 5 இடங்கள். 51 செய்யுட்கள் கொண்ட கந்தரநுபூதியில் 11ஆம் பாட்டில் மட்டும் 'நாகாசலம்' என்று இத்தலம் ஒன்றினையே சிறப்பித்துள்ளார். வேறு எத்தலமும் அநுபூதியில் குறிக்கப்படவில்லை. அத்துணை உயர்வு கொண்டவன் செங்கோட்டு வேலன். இப்பகுதி வாழ் மக்கள் ஊர்ப்பெயரொடு 'செங்கோட்டு வேலன்' எனத் தம் பெயரை வைத்து மகிழ்வர். இப்பகுதி வாழ் மக்கள் திருமணம் முடிந்ததும் தம்பதிகளை செங்கோட்டு மலைக்கு அழைத்து வாராமல் இரார். முருகனின் நீங்கா இடங்களைக் கூறவந்த சிலம்பாசிரியரான இளங்கோவடிகள் 'சீர்கெழு செந்திலும் செங்கோடும்' என்பர். வேலவனை வணங்கி வரும்போது சிவலிங்க சந்நிதி உள்ளது. இச்சந்நிதியையும் தாண்டி உட்சென்றால் மூலவரான அர்த்தநாரீச்சுரர் சந்நிதி. பெருமான் மங்கைபங்கனாகக் காட்சி தருகின்றார். மேற்கு நோக்கிய சந்நிதி.

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்துஊ தாய் கோத்தும்பீ

(திருக்கோத்தும்பி 15)

என மனமொழிப் பெருமான் பாடியதற்கேற்ப பெருமான் விளங்கு கின்றார். ஆறடி உயரத்தில் அற்புதக் கோலமாய் பெருமான் விளங்கு கின்றான். மங்கை பங்கனின் திருவடிகளுக்குக் கீழே ஒரு நீரூற்று. என்னே அற்புதம்! கடும்பாறை நீண்டு உயர்ந்த மலை! அம்மையப்பன் அடிகளின் கீழ்நீரூற்று. இதனைத் தேவதீர்த்தம் என்பர். திருஞானசம்பந்தர் இவ்வூருக்கு வரும்போது மழைக்காலம் நீங்கிப் பனிக்காலம் வர குளிர் அதிகமாயிற்று. அதனால் நஞ்சுடைச் சுரத்தால் பெருமானுடன் வந்த திருக்கூட்டத்தார் வருத்தமுற பிள்ளையாரும் 'அவ்வினைக்கு இவ் வினை' என்ற திருநீலகண்டத் திருப்பதிகம் பாடியருளி அடியார்களின் அல்லலை அகற்றினார். இப்பதிகம் தவிர பிள்ளையார் பாடிய திருநீல கண்டப்பதிகமும் உண்டு. இக்கோவிலில் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும் உண்டு.

அவ்வினைக்(கு) இவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா(து) இருப்பது உம்தமக்(கு) ஊனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்

நீலகண்டம். பொது (1.116.1)

ஓங்கிய மூவிலைநற் சூலம் ஒருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு மதியம் சடைக்கணிந்து
கோங்கண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன் தாள்தொழுவர் வினையாய பற்றறுமே. (1.106.6)

2. திருநணா (பவானி) - 638301

இறைவர் : சண்முகநாதர்
இறைவி : வேதமங்கையம்மை, தேவிபவானி
தீர்த்தம் : சங்குதீர்த்தம், காவிரி
விருட்சம் : இலந்தை
பாடியவர் : திருஞானசம்பந்தர்-11 பாடல்கள்.

பவானி என்பது வழக்கு. இத்திருக்கோவிலைக் கண்டு வணங்கிய வர்க்கு ஒரு தீங்கும் நண்ணா என்பதால் நண்ணாவூர் என்பது நணா என மருவிற்று என்பர். இவ்வூர் பத்மகிரி, நாககிரி, சங்ககிரி, மங்கலகிரி, வேதகிரி என ஐந்து மலைகளால் சூழப்பெற்றவூர். காவிரி, பவானி, அமுதநதி கூடுதலால் முக்கூடல் என்பர். அமுதநதி அந்தர வாகினியாம். (காவிரி, பவானி, சுவாமி பாததீர்த்தம் சேர்ந்து மூன்று நதிகள் என்பர். கயப்பாக்கம் சிவத்திரு. சதாசிவ செட்டியாரவர்கள்) திருக்கோயிலுக்குக் கிழக்கே காவிரியும், தெற்கே பவானியும் வந்து கூடுகின்றன.

நீண்டகன்ற அழகிய திருக்கோயில். திருக்கோயிலில் முதலில் இருப்பது ஆதிகேசவப்பெருமாள் சந்நிதியும் தாயார் சந்நிதியுமே! இச்சந்நிதிகளைத் தாண்டிச் சென்றால் வேதமங்கை அம்மன் சந்நிதி இறைவி காண்போர் களிப்புறும் வகையில் நல்ல எழிலார் திருமேனி யுடன் காட்சி தருகின்றார்கள். அப்பெருமாட்டியின் எதிரில் உள்ள கிழக்கு மதிற்சுவரில் மூன்று பெரிய துவாரங்கள் உள்ளன. இதனைப்பற்றி ஒரு செவிச் செய்தி உண்டு. பவானியைத் தலைநகராகக் கொண்ட பண்டைய சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வில்லியம் காரோ (1802) என்பார் பிற சமயத்தினராதலால் திருக்கோயிலினுள் சென்று வணங்கும்பேறு பெறாத காரணத்தால் அத்துவாரங்கள் வழியே அம்மையின் அழகிய கோலத்தினைக் கண்டு வணங்கிச் செல்வாராம். அவருக்கு அம்மையின்மீது அப்படி அளவற்ற அன்பு. ஒருநாள் இரவில்தன் அறையில் உறங்கிக் கொண்டிருந்த பொழுது அவர் கனவில் அழகிய சிறுமி ஒருத்தித் தோன்றி 'உடன் உறக்கத்தினின்று எழுந்து வெளியே வா; காலந்தாழ்த்தாதே' என்று கூறித் தன்னைத் தட்டி எழுப்புவதுபோல இருந்ததை உணர்ந்த அவரும் உடன் துயில்நீத்து வெளியே வந்தார். அவர் வெளியே வந்தவுடன் அவர் உறங்கிக் கொண்டிருந்த அறையின் மேற்கூரை இடிந்து அவர் துயின்ற கட்டிலின்மேல் விழுந்தது. அதிசயமும்

ஆச்சர்யமும் கொண்டவர் செய்வதறியாது திகைத்து நின்றார். தான் நாடோறும் வணங்கி வந்த வேதமங்கையே சிறுமியாக வந்து தன் உயிரைக் காப்பாற்றினார்கள் என உணர்ந்து அம்மைக்குத் தன் செய்ந்நன்றி மறவா நிலையைத் தெரியப்படுத்த, தந்தத்தால் ஆன கட்டில் ஒன்றினை செய்து அதில் தன் பெயரையும் பதித்து 11.1.1804 ஆம் நாளில் திருக்கோயிலுக்கு வழங்கினார். அக்கட்டில் இன்றும் அம்மையின் சந்நிதி யிலுள்ள பள்ளியறையில் காணலாம். அடுத்த சந்நிதி முருகனுடையது. இத்திருக்கோயிலில் முருகன் சந்நிதி அமைந்துள்ள விதம் பெருமைக் குரியது. அம்மையின் சந்திக்கும் அப்பனின் சந்நிதிக்கும் இடையில் கந்தவேள் சந்நிதி அமைந்துள்ளது. இயற்கையாக சோமாஸ்கந்தமூர்த்தி மூலம் இருக்கும் தன்மையைப் பெற்றுள்ளது. அடுத்து 'கேட்டார் வினை தீர்க்கும் திருநணாவின்' சங்கமுகநாதரின் சந்நிதி. கிழக்குப் பார்த்தத் திருமேனியராகப் பெருமானார் அற்புதமாக விளங்குகின்றார். அமுதமே லிங்கமாக மாறியுள்ளதாக ஐதீகம்.

அதனால் அமிர்தலிங்கமேசுவரர் எனவும் வழங்கப் பெறுகிறார். பெருமானின் திருச்சன்னிதி தாண்டிப் படித்துறை போகும் வழயில் ஒரு சிறிய கோயில் உள்ளது. அக்கோவிலில் சந்தானலிங்கப் பெருமானார் உள்ளார். அப்பெருமானார் அமைந்த விதம் சிறப்புடையது. ஆவுடை யினின்றும் லிங்கத்தினை மேல் எடுக்கவும், மீண்டும் பொருத்தமுறவும் செய்யலாம். மகப்பேறு அற்றவர் சந்தானலிங்கத்தினைத் தம் இடையில் வைத்துக் கொண்டு கோயிலை வலமாகச் சுற்றிவர மகப்பேறு பெறுவர். இக்கோயில் அருகே 1008 லிங்கங்களாலான சகஸ்ரலிங்கேஸ்வரர் திருக்கோயில் உள்ளது. ஆடிப்பதினெட்டு அன்று முக்கூடலில் நீராடி இறைவனை வழிபடும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தினை இன்றும் காணலாம்.

முத்தேர் நகையாள் இடமாகத் தம்மார்பில் வெண்ணூல் பூண்டு
தொத்தேர் மலர்ச்சடையில் வைத்தார் இடம் போலும் சோலைசூழ்ந்த
அத்தேன் அளியுண் களியால் இசைமுரல ஆலத்தும்பி
தெத்தேன் எனமுரலக் கேட்டார் வினைகெடுக்கும் திருநணாவே.

(2.72.5)

3. திருப்பாண்டிக் கொடுமுடி (கொடுமுடி) - 638151

இறைவன்	:	கொடுமுடிநாதர்
இறைவி	:	பண்மொழியம்மை
தீர்த்தம்	:	காவிரி
விருட்சம்	:	வன்னி
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 22, அப்பர் 5, சுந்தரர் 10 பாடல்கள்.

காவிரிக்கரையில் உள்ள பெரிய கோயில். மும்மூர்த்தித் தலம். கொங்கு நாட்டில் மூவர் பெருமக்களாலும் பாடப்பட்ட ஒரே தலம் இத்தலம் மட்டுமே! கறையூர் என்பது தலத்தின் பெயர். பாண்டிக் கொடுமுடி என்பது திருக்கோயிலின் பெயர். காவிரி இங்கு தென்வடலாக ஓடுகின்றது. கொடுமுடிநாதர் கருவறை சிறியதாக உள்ளதுபோல் பெருமானும் வடிவத்தில் சிறிய திருமேனியராக உள்ளார். சிவாச்சாரியார் துணையுடன் பெருமான் திருமேனியில் அகத்தியர் கைவிரல் தடத்தினையும், பெருமானைத் தமிழ் முனிவர் கட்டித்தழுவிய தழும்பினையும் காணலாம். வலமாக வரும்போது வன்னி மரத்திற்குக் கீழே நான்முகன் வீற்றுள்ளார். அவரின் இடப்பக்கம் அநுமனின் சந்நிதி. வலப்பக்கம் பள்ளி கொண்ட பெருமாள் சந்நிதி. இவர்களை வணங்கி வரும் போது நவக்கிரக சந்நிதி. அங்கே சனீஸ்வரன் தனித்து காக்கைமேல் நவக்கிரகத்தில் இருப்பதுபோல் மேற்கே நோக்கி உள்ளார். கொங்குநாட்டுப் பாடல்பெற்றத் தலங்களில் இக்கோவிலில் மட்டுமே சனீஸ்வரனுக்குத் தனிசந்நிதி உள்ளது. சுந்தரர் நமச்சிவாயப் பதிகம் பாடிய அற்புதத்தலம். இங்குள்ள காவிரி நீரினைக் காவடியில் கட்டிச் சுமந்து பழநியாண்டவனுக்கு அபிஷேகம் செய்விக்க அடியார் பாதயாத்திரையையும் மேற்கொள்வர்.

புரந்தன் தன்னொடு வானோர் போற்றியென்(று) ஏத்தநின் றாடும்
பெருந்திறல் வாளரக் கன்னைப் பேரிடர் செய்துகந் தாரும்
கருந்திரை மாமிடற்றாருங காரகில் பன்மணியுந்திப்
பரந்திழி காவிரிப் பாங்கர்ப் பாண்டிக் கொடுமுடி யாரே. (2.69.8)

பிரமன் மாலறி யாத பெருமையன்
தரும மாகிய தத்துவன் எம்பிரான்
புரம னாருறை பாண்டிக் கொடுமுடி
கரும மாகத் தொழுமட நெஞ்சமே (5.81.2)

இட்ட னும்மடி ஏத்து வார்இகழ்ந்து
இட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாள்இவை என்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழுது
ஏத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும்நா நமச்சி வாயவே. (7.2)

4. அவிநாசி - 641654

இறைவன் : அவிநாசியப்பர்
இறைவி : கருணாம்பிகை
தீர்த்தம் : முத்தலை
விருட்சம் : பாதிரி
பாடியவர் : சுந்தரர் 10, மணிவாசகர் 1 பாடலில் ஓரடி பெற்றது.

கொங்குநாட்டுத் தலங்களில் திருவாசகம் பாராட்டும் தலம் இதுவே! அவிநாசி என்பதற்கு விநாசம் இல்லாதது என்பது பொருள். காசியினும் வீசம் (1/16) பங்கு உயர்ந்தது அவிநாசி என்பது அப்பகுதி மக்கள் கருத்து. பண்டு திருப்புக்கொளியூர் இருந்ததாகக் கூறுவர். தற்பொழுது அங்கே வீடுகள் இல்லை. ஏரி உள்ளது. சுந்தரர் கோயில் உள்ளது. அவர் முன்னே ஒரு முதலை உள்ளது. அகன்ற கூடம். அம்பிகை இங்கே தவம் செய்த தாகச் சொல்கிறார்கள். இவ் ஏரியின் வடக்கே (சற்றே தொலைவு) கோயில்.

எங்கேனும் போகினும் எம்பெரு மானை நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறைகொண்(டு) ஆறலைப் பர்இலை
பொங்கா(டு) அரவா புக்கொளி யூர்அவி நாசியே
எங்கோ னேஉனை வேண்டிக்கொள் வேன்பிற வாமையே. (7.92.3)

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலம் எல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்சது ஏற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வது ஒன்றும் அறியேனே (திருவாசகம் 50.7)

5. திருமுருகன் பூண்டி - 641652

இறைவன் : முருகாவுடையார், முருகநாதேசுவரர்
இறைவி : ஆவுடைநாயகி, முயங்குபூண்முலையம்மை
தீர்த்தம் : ஆவுடைத்தீர்த்தம்
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்.

எம்பெருமான் கந்தவேள் வழிபட்ட தலம். கற்சிலைகளுக்குப் பெயர் பெற்ற ஊர். துருவாசர் மாதவி எனும் குருகத்தி மரத்தினை விண்ணுலகினின்றும் கொண்டுவந்து இங்கு பயிரிட்டனர் எனக் கூறுவர். அதனால் மாதவி வனம் என்ற பெயரும் இத்தலத்திற்கு உண்டு. ஆடல்வல்லான்

துருவாசர் போன்றோர்க்கு பிரமதாண்டவக் காட்சி கொடுத்தார். அதனால் இவர் சந்நிதி சிறப்புடையது. சேரமான் தந்த பொருள்களைக் கொண்டு வந்த சுந்தரரிடம் சிவகணங்கள் வேடர்களாக மாறி அவற்றைப் பறித்து இத்திருக்கோயிலினுள் புதைத்து வைத்தன. அக்குழியினை இக் கோயிலின் பைரவர் சந்நிதி முன் காணலாம். கோயிலின் நுழைவாயில் மண்டபத்தில் பொருள்களை இழந்து வருத்தமுற்ற சுந்தரர் வடிவத்தை யும், செல்வம் மீண்டும் கிடைத்த மகிழ்ச்சியால் களிப்புடன் விளங்கும் சுந்தரரையும் கண்டு மகிழலாம்.

மனநிலை சரியில்லாதவர், பில்லி சூனியத்தால் பாதிக்கப்பட்டோர் இவர் போன்ற பிறர் இத்திருக்கோயில் தங்கி தங்கள் நலிவு நீங்கி நனிநலம் பெற்றுச் செல்கின்றனர். கோயிலின் உட்பிரகாரத்தில் முருகனின் தீர்த்தம் உளது. இத்தீர்த்தத்தை முருகன் தம் வேலினால் தோண்டினான் என்பர். இத்தீர்த்தத்தைப் பருகினால் பிணி நீங்குகின்றது. ஈண்டுறையும் முருகன் முன்னே ஐந்து திருமுகங்களுடனும் பின்னே ஒரு திருமுகத்துடனும் வள்ளி தேவசேனாசமேதனாக பன்னிருகரங்களுடன் தென்திசை பார்த்துள்ளான். கருவறையில் கந்தனோடு பெருமானும் ஒரு மூலையில் உள்ளார். பொங்கலுக்கு மறுநாள் பெருமான் மக்களின் இடரினைக் களைய ஊரின் வெளியே வேட்டைக்குச் செல்கின்றார். அப்போது சுந்தரர் பாடிய 'கொடுகு வெஞ்சிலை' என்ற திருப்பதிகம் முழுவதுமாகப் பாடப்படுகின்றது. கோவிலின் வெளியே காணப்படும் பிள்ளையார் கோவிலுக்கு எதிரே உள்ள ஒரு பாறையின் சிறு குழியில் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை நீர் பொங்குவதாகக் கூறுகின்றார்கள்.

வேதம் ஓதிவெண் ணீறு பூசிவெண்
　　கோவணந் தற்றயலே
ஓதம் மேவிய ஒற்றி யூரையும்
　　உத்திர நீர்மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளும்முரு
　　கன்பூண்டி மாநகர்வாய்
ஏது காரணம் ஏது காவல்கொண்(டு)
　　எத்துக்(கு) இங்கிருந்தீர் எம்பெருமானீரே. (7.7)

6. கரூர் - 639001

இறைவன் : பசுபதிநாதர்
இறைவி : கிருபாநாயகி
தீர்த்தம் : அமராவதியாறு
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

பெரியகோயில், நகரின் மையப்பகுதியில் உள்ளது. பெருமான் சற்று வடபுறம் சாய்ந்துள்ளார். இறைவி சந்நிதிகள் இரண்டு உள. எறிபத்த நாயனார் வாழ்ந்து பேறுபெற்ற தலம். புகழ்ச்சோழர் வேந்தனாய் உலகாண்டு திருவடிப்பேறு எய்திய திருத்தலம். சிவபிரானுக்குப் பூமாலை தொடுத்து அளிக்கும் சிவத்தொண்டர் - திருத்தொண்டர்- சிவகாமி யாண்டார் வாழ்ந்த திருவூர். திருவிசைப்பாவில் பலப்பாடல் களைப் பாடிய கருவூர்த் தேவர் பிறந்து வீடுபேறு உற்றத் திருத்தலம். இவரின் சந்நிதி தெற்குச் சுற்றில் உள்ளது.

பண்ணி னார்படி யேற்றார் நீற்றர்மெய்ப்
பெண்ணி னார்பிறை தாங்கு நெற்றியர்
கண்ணி னார்கரு வூருள் ஆனிலை
நண்ணி னார்நமை யாளும் நாதரே. (2.28.7)

7. திருவெஞ்சமாக்கூடல் - 639109

இறைவன் : விகிர்த நாதேசுரர்
இறைவி : பண்ணேர் மொழியம்மை, விகிர்த நாயகி
தீர்த்தம் : விகிர்ததீர்த்தம்
பாடியவர் : சுந்தரர் - 10 பாடல்கள்

கரூருக்குத் தெற்கே அரவக்குறிச்சி தாண்டி 28 கி.மீட்டர். இம்மெயின் சாலையிலிருந்து உட்பக்கம் சாலை வழியே 4 கி.மீ. செல்ல வேண்டும். குடவன் ஆற்றோடு ஒரு காட்டாறு கூடுவதால் 'கூடல்' என்னும் பெயர் வந்தது. வெஞ்சன் என்னும் வேடமன்னன் வழிபட்டதலம். திருக்கோயில் ஒரு பள்ளத்தாக்கில் உள்ளது. அழகிய சிறுகோயில் சாலையிலிருந்து நன்கு அமைந்துள்ள படிவழியே இறங்கிச் செல்ல வேண்டும்.

தொழுவார்க்(கு) எளியாய் துயர்தீர நின்றாய்
சுரும்பார் மலர்க்கொன்றை துன்றுஞ் சடையாய்
உழுவார்க்(கு) அரிய விடையேறி ஒன்னார்
புரந்தீ எழஓ டுவித்தாய் அழகார்
முழவார் ஒலிபா டலொடா டல்அறா
முதுகா டரங்கா நடமாட வல்லாய்
விழவார் மறுகில் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியே னையும்வேண் டுதியே. 7-6

3. பாண்டி நாட்டுத் தலங்கள் - 14.

1. திருஆலவாய்
2. திருஆப்பனூர்
3. திருப்பரங்குன்றம்
4. திருவேடகம்
5. திருப்பூவணம்
6. திருச்சுழியல்
7. திருப்புத்தூர்
8. திருக்கானப்பேர்
9. திருவாடானை
10. திருப்புனவாசல்
11. திருக்குற்றாலம்
12. திருநெல்வேலி
13. திருஇராமேச்சுரம்
14. திருக்கொடுங்குன்றம் *(பிரான் மலை)*

1. மதுரை

1. ஆலவாய் *(மதுரை)*
2. திருஆப்பனூர்
3. திருப்பரங்குன்றம்
4. திருவேடகம்
5. திருப்பூவணம்
6. திருச்சுழியல்

2. புதுக்கோட்டை

1. திருப்புனவாசல்

3. திருப்புத்தூர்

1. திருப்புத்தூர் *(திருப்பத்தூர்)*
2. திருக்கானப்பேர் *(காளையார் கோயில்)*
3. திருவாடானை
4. திருக்கொடுங்குன்றம் *(பிரான் மலை)*

1. திருக்குற்றாலம்
2. திருநெல்வேலி
3. இராமேச்சுரம்

1. மதுரை

1. *ஆலவாய் (மதுரை)*
2. *திருஆப்பனூர்*
3. *திருப்பரங்குன்றம்*
4. *திருவேடகம்*
5. *திருப்பூவணம்*
6. *திருச்சுழியல்*

1. ஆலவாய் (மதுரை) - 625001

இறைவன்	:	சொக்கநாதர்
இறைவி	:	மீனாட்சி
தீர்த்தம்	:	பொற்றாமரைக்குளம், வைகை
தலவிருட்சம்:		கடம்பு.
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 98, திருநாவுக்கரசர் 21 பாடல்கள், மாணிக்கவாசகர் 4 இடங்கள்.

பெருநகரம். நீண்டகன்ற பெரியகோயில். தமிழகத்திலேயே அதிகமான கோபுரங்கள் 14ஐக் கொண்ட கோயில். மதுரைக் கோயிலே! முந்தைய பாண்டிநாட்டின் தலைநகரம். 64 திருவிளையாடல்களைச் சொக்கேசன் புரிந்த ஊர். நக்கீரர், பரணர் போன்ற சங்கப் பாவலர்கள் வாழ்ந்து, தமிழாய்ந்த இடம்; மூர்த்தி நாயனார் அரசோச்சிய இடம்; அரிமர்த்த பாண்டியன் காலத்தில் மணிவாசகப் பெருமான் 'தென்னவன் பிரமராயன்' எனும் பெயர் தாங்கி அமைச்சர் பணியாற்றிய இடம்; திருஞானசம்பந்தப் பெருமான் சமண சமயத்திலிருந்த கூன்பாண்டி யனுடைய கடுஞ்சுரநோயை 'மந்திரமாவது நீறு' என திருநீற்றுப் பதிகம் பாடி திருநீறு அளித்துச் சுரத்தைப் போக்கிய தலம். இச்சிறப்புப் போல் பல சிறப்புக்கள் கொண்ட பழம்பதி. பஞ்ச சபைகளில் இத்தலம் வெள்ளியம்பலமாகும். சொக்கேசர் சந்நிதியிலும் ஸ்ரீ மீனாட்சி சந்நிதியிலும் எப்பொழுதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும். பாரதப் பெருநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மக்கள் இறைவனையும் இறைவியையும் வணங்கியவண்ணம் இருப்பர். ஆயிரங்கால்மண்டபம், பொற்றாமரைக் குளம் இரண்டும் திருக்கோயிலுக்கு அணி சேர்ப்பன. ஒரு தனி நூலுக்குரிய செய்திகள் இக்கோவிலுக்கு உண்டு. முக்குறுணிப் பிள்ளையார், சங்கீதத் தூண்கள் போன்றவை பார்க்கத்தக்கன.

மண்ண கத்திலும் வானிலும் எங்குமாம்
திண்ண கத்திரு ஆலவா யாயருள்
பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்
தெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே. 3.47.3

நம்பனே நான்மு கத்தாய் நாதனே ஞான மூர்த்தி
என்பொனே யீசா என்றென் ஏத்திநா னேசற் றென்றும்
பின்பினே திரிந்து நாயேன் பேர்த்தினிப் பிறவா வண்ணம்
அன்பனே யால வாயில் அப்பனே யருள்செய் யாயே. (4.62.2)

ஆடக மதுரை அரசே போற்றி 8.4.90

2. திருஆப்பனூர் (திருஆப்புடையார் கோவில்) - 625001

இறைவன் : திருஆப்புடையார்
இறைவி : குரவங்கமழ் குழலம்மை
தீர்த்தம் : வைகை, இடபதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

தேவர் பெருமகனார் திருவுருவச் சிலைக்கருகே வைகையாற்றில் இருபாலங்கள் உள்ளன. தாழ்வான பாலத்தின் வடக்கே சற்றுத் தொலைவில் திருக்கோயில். சோழந்தகன் என்னும் பாண்டிய மன்னன் நிமித்தம் சிவனார் ஓர் ஆப்பினிடத்தில் தோன்றியருளிய தலம். இறைவனுக்கு 'இடபபுரேசர்' எனும் பெயரும் உண்டு. ஆதி சைவ அர்ச்சகருக்காக வைகையாற்று மணலை உலையில் இட்டு அன்னமாக்கியதால் 'அன்னவிநோதன்' என்ற பெயரும் பெற்றார். திருக்கோயிலினுள் ஆடல்வல்லானின் கருங்கல் சிலை அதி அற்புதம். செப்புச்சிலையிலும் இப்பெருமான் உள்ளார். கண்டு வணங்க வேண்டிய நல்ல திருத்தலம்.

பிணியும் பிறப்பறுப்பான் பெருமான் பெருங்காட்டில்
துணியி னுடைதாழச் சுடரேந்தி யாடுவான்
அணியும் புனலானை யணியாப்ப னூரானைப்
பணியும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 1.88.4

3. திருப்பரங்குன்றம் - 625005

இறைவன் : பரங்கிரிநாதர்
இறைவி : ஆவுடைநாயகி
தீர்த்தம் : சரவணப்பொய்கை
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11; சுந்தரர் -11 பாடல்கள்.

தந்தையின் பெருமையை சேய்கொண்ட ஊர். ஆம்! அறுபடை வீட்டி்னுள் முதல்படை வீடு திருப்பரங்குன்றமன்றோ! இன்று சிவனாரைக் காணக் கட்டணமும் செலுத்த வேண்டும். மதுரை-விருதுநகர் இரயில் வழியில் இரயில் நிலையமே உள்ளது. மதுரையிலிருந்து 6 கி.மீ. மாநகரப் பேருந்து வசதியும் உண்டு. பரந்து விரிந்த பெருமலை. சுந்தரர் தம் திருக்கடைக்காப்பில் 'முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே' எனக் கூறிச் சிறப்பித்துள்ளதால் முடியுடைய மூவேந்தரும் இத்தலம் வந்து வணங்கியுள்ளனர் எனத் தெரிகின்றது.

சுந்தரர் பாடலில் வரும் கோத்திட்டை (கோ, திட்டை- பெரிய மேட்டுநிலம்) என்பது பரங்குன்றம் என்பதின் பரியாயம் போலும்!

பொன்னியல் கொன்றை பொறிகிளர்நாகம் புரிசடைத்
துன்னியசோதி யாகிய ஈசன் தொன்மறை
பன்னியபாடல் ஆடலன்மேய பரங்குன்றை
உன்னியசிந்தை உடையவர்க்கு இல்லை உறுநோயே. 1.100.5

மூடாய முயல்கண் மூக்கப்பாம்பு
முடைநாறிய வெண்தலை மொய்த்தபல்பேய்
பாடவரு பூதங்கள் பாய்புலித்தோல்
பரிசொன்றறி யாதன பாரிடங்கள்
தோடார்மலர்க் கொன்றையும் துன்னெருக்கும்
துணைமாமணி நாகம் அரைகசைத்தொன்று
ஆடாதன வேசெய்தீர் எம்பெருமான்
அடிகேள்உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 7.3



4. திருவேடகம் - 624234

இறைவன் : ஏடகநாதர்
இறைவி : ஏலவார் குழலி
தீர்த்தம் : வைகை
தலவிருட்சம்: வில்வமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்.

மதுரையிலிருந்து மூன்று பேருந்து நிலையங்களிலிருந்தும் மாநகரப் பேருந்து வசதி உண்டு. (18 கி.மீ.) திண்டுக்கல்லிலிருந்து வாடிப்பட்டி செல்லும் பேருந்தில் ஏறி பின்னர் அங்கிருந்து சோழ வந்தான் செல்லும் பேருந்துக்கு மாறி அங்கிருந்து திருவேடகம் செல்லும் பேருந்தில் செல்லலாம் (அடிக்கடி பேருந்து வசதி). திண்டுக்கல் சமயநல்லூர் சென்று அங்கிருந்து சோழவந்தான் பேருந்தில் ஏறி திருவேடகத்தில் இறங்க வேண்டும். சாலை ஓரத்தில் கட்டியுள்ள வளைவினுள் செல்ல அழகிய திருக்கோயில். கோயில் மிக அற்புதமாய்த் தூய்மையாய் உள்ளது.

குண்டலந் திகழ்தரு காதுடைக் குழகனை
வண்டலம் பும்மலர்க் கொன்றைவான் மதியணி
செண்டலம் பும்விடைச் சேடனூர் ஏடகம்
கண்டுகை தொழுதலுங் கவலைநோய் கழலுமே 3.32.3

5. திருப்பூவணம் (திருப்புவணம்) - 623611

இறைவன் : பூவணநாதர்
இறைவி : மின்னனையாளம்மை
தீர்த்தம் : வைகை
தலவிருட்சம்: பலா
பாடியவர் : திருஞானசம்பந்தர் 22, திருநாவுக்கரசர்-11,
சுந்தரர் 8, மணிவாசகர் 2 இடங்கள்
9-ஆம் திருமுறை கருவூர்த்தேவர்
-திருவிசைப்பாவில்- 8 பாடல்கள்.

மதுரையிலிருந்து கிழக்கே 19 கி.மீ. மாநகரப்பேருந்து வசதி (திருப்பரங்குன்றத்திற்குப் புறப்படும் இடத்திலிருந்து) உண்டு. மதுரை-இராமேஸ்வரம் செல்லும் பேருந்துகளிலும் செல்லலாம். தமிழ்நாட்டு மூவேந்தர்களும் பூசித்து வணங்கின தலம் (திருவாதவூர் இவ்வூரினின்று வடகிழக்காக 10 கி.மீ. உள்ளது. திருவாதவூர்-மேலூர் -சிங்கம் புணரி-பிரான்மலை எனப்படும் கொடுங்குன்றம் செல்லலாம்.)

பொன்னையாள் எனும் நாட்டிய நங்கை பொன்னால் இறைவனின் திருவுருவம் அமைக்க விரும்பினாள். தன்னிடமிருந்த அனைத்துப் பொன் அணிகலன்களையும் ஒன்று சேர்த்து உருக்கி உருவம் செய்ய முற்பட்டாள்; ஆனால் போதிய அளவு பொன் இல்லை. தன்னிடத்து இருப்பதுபோல் மேலும் ஒரு பங்கு தேவை என்பதை உணர்ந்தாள். இதனால் மனம்வருந்தி இறைவனை வணங்கி வழிபட்டாள். இறைவனும் தன் அடியாரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்ப்பாராய் ஒருநாள் சித்தர் உருக்கொண்டு அவள் முன்தோன்றி 'உன் வீட்டினுள்ள இரும்பு, செம்பு, ஈயம் போன்ற உலோகப் பொருள்களை எடுத்துவா' எனப் பணித்தார்.

நடன நங்கையும் சித்தர் பணித்தவாறே கொண்டுவந்து அவர் முன்வைக்க அவரும் தம் இரசவாத முறையால் அவற்றைப் பொன்னாக மாற்றி அவள் விரும்பிய உருவத்தை அமைத்துக் கொடுத்தார். உருவம், கண்டார் மகிழும் வகையில் மிக அழகாகவும் சிறப்பாயும் அமைந்திருந்தது. அன்பும் ஆசையும் மீதூரப்பெற்ற அந்நங்கை அப்படிமத்தின் கன்னத்தை அள்ளி முத்தமிட்டாள். அம்முத்த நகக்குறி அடையாளத்தை இன்றும் நாம் அப்படிமத்தில் காணலாம்.

காசிக்குச் சமமான தலம் எனக் கூறப்பெறும். அதனால் புஷ்ய வனகாசி என்றும் இத்தலம் வழங்கப்பெறும்; கோயிற் கொடுங்கைகள் ஆவுடையார் கோவில் அமைப்புப் போல் காணப்படுகின்றன. ஆடல்வல்லான் மிகப் பிரமாண்டமான திருமேனியராக சிலாவிக்கிரக வடிவில் உள்ளார். அதி அற்புதம். பெருமானுக்கு முன்னுள்ள நந்தி சற்று சாய்ந்துள்ளார். பெருமான் திருமேனியில் திரிசூலமும், சடை முடியும் காணப்படுகின்றன. கற்பூர தீபவணக்கத்தின் பொழுது சற்று உற்றுநோக்க வேண்டும்.

அறையார் புனலும் மாமலரும் மாடரவார் சடைமேல்
குறையார் மதியஞ் சூடிமாதோர் கூறுடை யானிடமாம்
முறையார்முடிசேர் தென்னர்சேரர் சோழர்கள்தாம் வணங்கும்
திறையாரொளிசேர் செம்மையோங்குந் தென்திருப்பூவணமே. 1.64.1

தன்னடியார்க்கு அருள்புரிந்த தகவுதோன்றுஞ்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தின் உரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்
தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 6.18.7

நிலனுடைய மான்மறி கையது தெய்வக்
கலனுடை மாமழு ஏந்தியோர் கையில்
அனலுடை யார்அழ கார்தரு சென்னிப்
புனலுடை யார்உறை பூவணம் ஈதோ. 7.4

'பூவணம் அதனில் பொலிந்து இனிது அருள்' - 8.2.50

பாம்பனைத் துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங் காலம்நிற் காண்பான்
ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந்து ஒழுகும்
பூம்பணைச் சோலை ஆவண வீதிப்
பூவணங் கோயில் கொண் டாயே.

திருவிசைப்பா. கருவூர்த்தேவர் பாடல் 2.

6. திருச்சுழியல் (வழக்கு திருச்சுழி) - 624129

இறைவன் : திருமேனிநாதர்
இறைவி : துணை மாலையம்மை
தீர்த்தம் : பிரளயதீர்த்தம்
தலவிருட்சம்: புன்னைமரம்
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்

மதுரையிலிருந்து 48 கி.மீ. தொலைவுள்ள அருப்புக்கோட்டை வரவேண்டும். அல்லது விருதுநகர்- அருப்புக்கோட்டை வரவேண்டும். (திருப்பூவணத்திலிருந்து கிழக்கே 24 கி.மீ.)

அருப்புக்கோட்டையிலிருந்து அடிக்கடி பேருந்துண்டு. சிவபிரானை மணம் செய்துகொள்ள அம்மை விரும்பி வழிபட்ட தலம். திருக்கோயிலுக்கு முன் பெரியகுளம் உளது. இதனைக் 'கௌவைக் கடல்' எனத் தேவாரம் கூறும். இக்கோயிலின் சண்டேசுரர் சந்நிதிக்கு நேர் எதிரே பகவான் இரமணர் பிறந்த வீடு உள்ளது. சென்று கண்டு வணங்கி அவரின் திருவுருவத்திற்கு மலர் சார்த்தி வழிபடலாம்.

கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந்து ஆடும்திருச் சுழியல்
தெய்வத்தினை வழிபாடு செய்து எழுவார்அடி தொழுவார்
அவ்வத்திசைக்கு அரசாகுவர் அலரால் பிரியாளே. 7.3

2. புதுக்கோட்டை

புதுக்கோட்டை நகரிலிருந்து அறந்தாங்கி சென்று அங்கிருந்து கலைப் பொக்கிஷமான ஆவுடையார் கோயில் சென்று அத்திருக் கோயிலைக் கண்டு மகிழ வேண்டும். மணிவாசகப் பெருமான் கட்டிய திருக்கோயில். அங்கிருந்து 24 கி.மீ. திருப்புன்னவாசல் செல்லலாம்.

திருப்புனவாயில் - 614629
(திருப்புனவாசல் வழக்கு)

இறைவன் : பழம்பதிநாதர்
இறைவி : கருணை நாயகி
தீர்த்தம் : கருணாநிதி
தலவிருட்சம்: புன்னை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11. சுந்தரர் 10 பாடல்கள்

திருவாடானை இவ்வூருக்கு வடக்கே 20 கி.மீ.

நான் மறைகளும் பூசித்தத் திருத்தலம். இத்தலத்திற்கு பழம்பதி, விருத்தபுரி என்ற பெயர்களும் உண்டு. நந்தி, லிங்கம், ஆவுடை மிகப்பெரியன. இதுபற்றியே மூன்று முழமும் ஒரு சுற்று (லிங்கத்திற்கு) முப்பது முழமும் ஒரு சுற்று (ஆவுடைக்கு) என்ற வழக்கும் உள்ளது. ஓரிடத்தில் பஞ்ச லிங்கங்கள் அமைந்த கூடாரம் உள்ளது. அதற்கு நேரே காளிசந்நிதி. முக்கோண வடிவில், காளி சந்நிதி. காளியை வணங்கிய பின் பிற எவரையும் வணங்கல் கூடாதாம். பாண்டி நாட்டு 14 தலங்களும் இத்தலத்திலேயே அடங்கியதாக ஐதீகம். 14 இலிங்கங்கள் உள.

திருவளர் தாமரை மேவினானும் திகழ் பாற்கடல்
கருநிற வண்ணனுங் காண்பரிய யகட வுள்ளிடம்
நரல்சுரி சங்கொடு மிப்பியுந் திந்நில மல்கிய
பொருகடல் வெண்டிரை வந்தெறியும்புன வாயிலே. 3.11.9

சித்தம் நீநினை என்னொடு சூளறு வைகலும்
மத்த யானையின் ஈருரிபோர்த்த மணாளன் ஊர்
பத்தர் தாம்பலர் பாடிநின் றாடும் பழம்பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்டுஅறாப் புனவாயிலே. 7.1

3. திருப்புத்தூர் (திருப்பத்தூர்)

1. திருப்பத்தூர்
2. திருக்கானப்பேர் (காளையார் கோவில்)
3. திருவாடானை
4. கொடுங்குன்றம்

1. திருப்பத்தூர் - 623211

இறைவன் : திருத்தளிநாதர்
இறைவி : சிவகாமியம்மை
தீர்த்தம் : கருடதீர்த்தம்
தலவிருட்சம்: கொன்றை
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்

திருவாடானை, காளையார் கோயில், பிரான்மலை (கொடுங்குன்றம்) இந்த மூன்றுடன் திருப்பத்தூரையும் கண்டு ஆக நான்கு தலங்களையும் கண்டு மகிழலாம்.

புதுக்கோட்டை, திருச்சி, காரைக்குடி போன்ற ஊர்களிலிருந்து பேருந்து வசதி உண்டு. அழகிய கோயில். பைரவர் சந்நிதி விசேடம். பைரவர் யோக வடிவில் மேற்கு நோக்கி உள்ளார். ஆடல்வல்லான் தம் தாண்டவத்தை (கௌரி தாண்டவம்) அம்மை காண ஆடிய இடம். இவ்வூர்ப் புராணத்தில் மட்டும் நடராசப் பெருமான் ஏழுதாண்டவங்களை ஆடியதாகக் கூறப்பட்டுள்ளது. வேறு எந்நூலிலும் இச்செய்தி இல்லை. அகத்தியர் வழிபட்ட சிவலிங்கம் கொன்றை மரத்தின் கீழ் உள்ளது. பைரவர் சந்நிதி தனிக்கோயில் போல் உள்ளது. நள்ளிரவு பூசையின் போது அங்கு யாரும் இருத்தல் கூடாது. வாசனைப் பொருள்களைப் பூசியவர் யாரும் அவர்முன் செல்லுதலும் கூடாது; மீறிச் சென்றால் மயக்கம் வரும்; அம்மயக்கம் நீங்க புனுகு சார்த்தல் வேண்டும். இப்பழக்க வழக்கம் இன்றுவரை அங்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

நாற விண்ட நறுமா மலர்க்கவ்வித்
தேறல் வண்டு திளைக்குந் திருப்புத்தூர்
ஊறல் வாழ்க்கை உடையார் அவர்போலும்
ஏறுகொண்ட கொடியெம் இறையாரே. 1.26:4

மின்காட்டுங் கொடிமருங்குல் உமையாட்கு என்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண் அவனென் சிந்தையானே. 6.76.3

2. திருக்கானப்பேர் (காளையார் கோவில்)-623551

இறைவன் : காளையீசுவரர்
இறைவி : சொர்ணவல்லி
தீருத்தம் : புட்பவன தீர்த்தம், யானைமடு
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, சுந்தரர் 10 பாடல்கள்.

காளையார்கோவில் திருப்பத்தூர் ஸ்ரீ பைரவரையும், பெருமானையும் கண்டு வணங்கியபின் சிவகெங்கைப் பேருந்தில் ஏற வேண்டும். காளையார்கோவில்செல்லும் பேருந்துகள் மிக அதிகம். தற்பொழுது பேருந்து நிலையம் உள்ள இடத்திலேயே கோவிலும் உளது. பெரிய கோவில். மூன்று சிவசந்நிதிகள் ஒரே திசை பார்த்து வெவ்வேறு சந்நிதிகளில் அமர்ந்து அருள் பாலிக்கின்றனர். (இதே போல் மூன்று சிவ சந்நிதிகள் தனித்தனியாக அமைந்து ஒரே திசையைப் பார்க்கும் திருத்தலம் காஞ்சி திருஓணகாந்தன்தளி திருக்கோயிலாம்.)

1. சோமேசர் சௌந்திரநாயகி
2. காளீசர் சொர்ணவல்லி
3. சுந்தரேசர் மீனாட்சி

இறைவன் காளை வடிவு கொண்டு திருக்கரத்தில் பொன் செண்டுடனும், திருமுடிமேல் சுழியும் உடையவராய் சுந்தரரின் கனவில் தோன்றி 'யாம் உறைவது கானப்பேர்' என்று கூறி மறைய, அவர் தன்னுடனிருந்த சேரமான் பெருமாளையும் திருக்காளையார் கோவிலுக்கு அழைத்துச் சென்று வணங்கினார்.

சாபத்தால் காட்டானையாக மாறிய ஐராவதம் ஈண்டு வந்து பூசித்தப் பெருந்தலம். (திருஞானசம்பந்தர் தம் முதற்பாடலில் இச்செய்தியைக் கூறி உள்ளார்.)

இம்மூன்று இறைவர்களையும் பற்றி ஒரு வழக்குப் பழமொழி உண்டு. காளைதேட; சொக்கர் சுகிக்க; சோமர் அழிக்க என்பதாம்.

மருதுபாண்டியார் கட்டிய கோபுரம் சோமேசர் சந்நிதிக்கு முன்னர் உள்ளது.

பள்ளமே படர்சடைப் பாற்படப் பாய்ந்தநீர்
வெள்ளமே தாங்கினான் வெண்மதி சூடினான்
கள்ளமே செய்கிலர் கருதிய கானப்பேர்
உள்ளமே கோயிலா வுள்குமென் னுள்ளமே. 3.26.6

தொண்டர் அடித்தொழலும் சோதி இளம்பிறையும்
சூதன மென்முலையாள் பாகமும் ஆகிவரும்
புண்ட ரிகப்பரிசாம் மேனியும் வானவர்கள்
பூச லிடக்கடல்நஞ் சுண்ட கருத்தமரும்
கொண்டல் எனத்திகழும் கண்டமும் எண்தோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமும் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவது என்று கொலோ அடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே 7.1

3. திருவாடானை - 623407

இறைவன் : ஆடானைநாதர்
இறைவி : அன்பாயியம்மை
தீர்த்தம் : சூரிய வருணதீர்த்தம்
தலவிருட்சம்: வில்வமரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

பெரியகோயில் நீலரத்தினத்தால் சிவலிங்கஞ் செய்து சூரியன் பூசித்தத் தலம். அதனால் இறைவன் ஆதிரத்தினேசுரர் எனவும் அழைக்கப் பட்டார். வருணனின் புதல்வரான வாருணி, துருவாச முனிவருக்கு மரியாதை செய்யாததால் முனிவர் அவனை ஆட்டுத் தலையும், ஆனையின் உடலுமாக வடிவு எய்தும்படி சபிக்கப் பெற்றான். (ஆடு, ஆனை) அவன் இத்தலம் வந்து இறைவனை வழிபட்டு சாப விமோசனம் பெற்றான். அதனால் ஆடானை திருசேர்க்கப் பெற்று திருவாடானை ஆயிற்று. காளையூர் கோயிலுக்குக் கிழக்கே 34 கி.மீ. அறந்தாங்கியிலிருந்து 48 கி.மீ. காளையார் கோவிலிலிருந்து இத்தலம் வர பேருந்துகள் உள.

வெந்தநீறணி மார்பில்தோல் புனை
அந்தமில்லவன் ஆடானை
கந்தமாமலர் தூவிக்கை தொழும்
வலங்கொள்வார் வினை மாயுமே. 2.112.8

4. கொடுங்குன்றம் (பிரான்மலை) - 624503

இறைவன் : கொடுங்குன்றீசர்
இறைவி : குயிலமுதநாயகி
தீர்த்தம் : சுந்தரதீர்த்தம்
தலவிருட்சம்: உறங்கப் புளிமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

இன்றைய வழக்கு பிரான்மலை. வழிகள் :

1. திண்டுக்கல்- கொட்டாம்பட்டு- சிங்கணம்புணரி- பிரான்மலை
2. திருச்சி - கொட்டாம்பட்டு- பிரான்மலை.
3. பொன் அமராவதி- பிரான்மலை.
4. திருப்பத்தூர் -சிங்கம்புணரி- பிரான்மலை.
5. மேலூர்- சிங்கம்புணரி-பிரான்மலை. திருப்பத்தூரிலிருந்து வடமேற்கே 24 கி.மீ. பாரி வாழ்ந்த பறம்புமலை என்பர். ஆனால் அதுபற்றிய சுவடு ஒன்றும் இல்லை. பரந்து விரிந்த மலை. கீழே ஞானசம்பந்தர் பாடிய பெருமான் உள்ளார். அம்மையும் உள்ளார். பாலமுருகன் சந்நிதி தனித்து உள்ளது. முருகன் பாலனாய் இல்லை, கம்பீரமாக உள்ளான். அருகே பிரான்மலை முருகன் வள்ளி தெய்வயானை சகிதமாய்க் காட்சி தருகின்றார். சுமார் 50, 60 படிகள் மேலே சென்றால் பைரவர் கம்பீரமாகக் காட்சி தருகின்றார். பெரிய மண்டபமும் உள்ளது. அதற்கும் மேல் இறைவனும் இறைவியும் திருமணக் கோலத்தில் காண்போர் மகிழும் வண்ணம் எழுந்தருளியுள்ளனர். மேலே கயிலாயம், நடு மத்திமம், கீழ் மண்ணுலகம் எனச் சிவாச்சாரியார் கூறுகின்றார். முருகன் முன் மயில் இல்லை; யானை உள்ளது. கல்லில் சங்கிலிக் கோவை; தூண்களின் இடையில் தொளைகள்; அவற்றில் பந்துகள் அமைந்துள்ளன. காண வேண்டிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கோவில்.

மயில்புல்குதண் பெடையோடு உட னாடும் வளர் சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர் சோலைக் கொடுங் குன்றம்
அயில்வேல்மலி நெடுவெஞ்சுடர் அனலேந்தி நின்றாடி
எயில்முன்பட எய்தானவன் மேயவ்வெழில் நகரே. 1.14.2



1. குற்றாலம் (குறும்பலா) - 627802

இறைவன் : குறும்பலா ஈசன்
இறைவி : குழல்வாய் மொழியம்மை
தீர்த்தம் : சித்திரா நதி
தலவிருட்சம்: குறும்பலா
பாடியவர் : திருஞானசம்பந்தர் 22 பாடல்கள்.

தென்காசிக்குக் மேற்கே 6 கி.மீ. குற்றால அருவியை அறியார் யார்? மேலகரம்-திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலத் தலபுராணம் இம்மலையைப் பரக்கப் பேசும். 'வானரங்கள் மதிகொடுத்து மந்தி யொடு கொஞ்சும்' என்ற பாடல் அனைவரும் அறிந்ததே. விஷ்ணு வடிவமாயிருந்த மூர்த்தி மேல் அகத்தியர் தன்கரத்தை வைத்து சிவரூபமாக மாற்றிய தலம். பஞ்ச சபைகளில் இத்தலம் சித்திர சபையாம். பெரிய கோயில். மலை அடிவாரக் கோயில். அதனருகே பிரபலமான அருவி. கோயிலினுள் வடக்குச் சுற்றுத் தொலைவில் சித்திரசபை உள்ளது. இச்சபையை வலமும் வரலாம். நடராசர் சுவரில் சித்திர வடிவில் உள்ளார். இதற்கு அருகில் கூத்தர்கோயில் உள்ளது. இத்திருக்கோவிலினுள் பராசக்தி சந்நிதி மிகச் சிறப்புடையது. கோயிலை வலம் வரும் ஓரிடத்தில் விநாயகர், இலிங்கம், கோபுரம், மலை, மலையின் வீழருவி என்ற ஐந்து காட்சிகளைக் காணலாம். இதனைப் பஞ்ச தரிசனம் என்பர். இக்கோயிலின் தென்மேற்கில் 3 கி.மீ. தொலைவில் அருணகிரியாரால் பாடப்பெற்ற இலஞ்சி என்ற அழகான கோயில் உள்ளது. மேலும் பண்பொழி என்ற மலைவாழ் முருகன் கோயிலும் உளது. காண வேண்டிய திருக்கோயில்கள்.

திருந்த மதிசூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவிபாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தாற் காடுறைதல் புரிந்தசெல்வர்
இருந்த இடம்வினவில் ஏலங்கமழ் சோலையின வண்டுயாழ்செய்
குருந்த மணநாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்பலாவே. 2.71.1



2. திருநெல்வேலி - 627001

இறைவன் : நெல்லையப்பர்
இறைவி : காந்தியம்மை
தீர்த்தம் : தாமிரபருணி
தலவிருட்சம்: மூங்கில்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

தமிழகத்தின் தென்கோடி. நீண்டகன்ற அழகிய திருக்கோயில். பஞ்ச சபைகளில் இத்தலம் தாமிர சபையாகும். வேதசர்மா என்ற அந்தணர் இறைவனின் திருவமுதிற்காக யாசித்துப் பெற்றுவந்த நெல்லை உலர வைத்திருந்தார். மழைவரும் குறிகளைக் கண்ட அந்தணர் காயும் நெல்மணிகளை மழை நீரினின்றும் காக்க இறைவனை வேண்டிட பெருமானும் அந்நெல்மணிகளை வெள்ளம் அடித்துப் போகா வண்ணம் வேலிகட்டிக் காத்தருளினார். இக்காரணத்தால் இத்தலம் திருநெல்வேலி என வழங்கலாயிற்று. இன்றும் இக்கோயிலைச் சுற்றி நெற்கழனிகள் வேலியாக அமையப் பெற்றுள்ளன. திருமால், நான்முகன், அகத்தியர் கருவூர்த் தேவர் போன்றோர் பூசித்தத் தலம். நெல்லையப்பர், வேணுவன நாதர் என இரண்டு சந்நிதிகள் உள்ளன. இறைவன் மூங்கிலிற் தோன்றிய காரணத்தால் 'வேய் முத்த நாதர்' எனவும் பெயர் பெற்றார். நெல்லை யப்பர் சந்நிதிக்கு அருகில் அரங்கனின் பள்ளி கொண்ட சந்நிதியும் உள்ளது. கோயிலில் முன் உள்ள வெள்ளை நந்தி காண்போரை ஈர்க்கும் தன்மை கொண்டது. சங்கிலிமண்டபம், வசந்த மண்டபம், சோமவார மண்டபம், ஊஞ்சல் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் ஆகியன சிறப்புடையன திருக்கோயிலின் மணி மண்டபத்தின் நடுவில் ஒரு பெரிய கற்றூண் உள்ளது. இக்கற்றூணைச் சுற்றி உருவிலும் உயரத்திலும் வேறுபாடு கொண்ட நாற்பத்தெட்டுச் சிறுதூண்கள் உள்ளன. இவற்றைத் தட்டினால் தனித்தனி ஒலிகள் எழும். முருகப் பெருமான் (ஆறுமுக நாதர்) சந்நிதி பிரகாரத்தில் தனிச் சந்நிதியாக பொலிவுடன் விளங்குகின்றது. தாமிரபருணியாற்றின் வடகரையில் இத்திருக்கோவில் அமைந்துள்ளது. இவ்வாற்றின் நடுவில் குறுக்குத்துறை என வழங்கும் சிறப்பான முருகன் கோயிலும் உள்ளது.

அக்குலா மரையினர் திரையுலா முடியினர் அடிகளன்று
தக்கனார் வேள்வியைச் சாடிய சதுரனார் கதிர்கொள்செம்மை
புக்கதோர் புரிவினர் வரிதரு வண்டுபண் முரலுஞ் சோலைத்
திக்கெலாம் புகழுறுந் திருநெல்வே லியுறை செல்வர் தாமே. 3.92.7

3. இராமேச்சுரம் - 623526

இறைவன்	:	இராமநாதர்
இறைவி	:	மலைவளர்காதலி
தீர்த்தம்	:	கோயிலுக்குள் உள்ள 22 தீர்த்தங்கள்.
பாடியோர்	:	திருஞானசம்பந்தர் 22.
		திருநாவுக்கரசர் 11 பாடல்கள்

மதுரை சென்றும் செல்லலாம்; புதுக்கோட்டை, திருவாடானை, இராமநாதபுரம் சென்றும் செல்லலாம். தற்பொழுது பேருந்துகள் மூலமும் செல்லலாம். முன்னர் இரயில் வழி ஒன்றுதான். பிரசித்திபெற்ற பாம்பன் பாலத்தின் மேல் இரயில் செல்லும். இராவணனைக் கொன்ற கொலைப் பழி அகல இராமன் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட நற்றவத்தலம் பன்னிரு ஜோதிலிங்கச் க்ஷேத்திரங்களில் இராமேச்சுரமும் ஒன்று. பாரதநாட்டிலுள்ள வடநாட்டினர் ஈண்டு வருவதும் தென்னவரான நாம் காசி செல்லவும் நம் நாட்டின் மறுக்க, மறைக்கப்படாத ஒரு பெரும் பண்பாடாம். (காசி செல்வோர் இராமேச்சுரம் வந்து பெருமானை வழிபட்டுக் கடலினின்று ஒரு சொம்பு நீரினை எடுத்துச் சென்று காசிக்கரையில் அதனை சங்கமித்து, கங்கையாற்று நீரை அதே சொம்பில் கொண்டு வந்து இராமநாதருக்கு அபிஷேகம் செய்து தன் காசி யாத்திரையைப் பூர்த்தி செய்வர்.) பெரிய கோயில். அக்கினி தீர்த்தம் எனும் கடல் கோயிலின் கோபுரத்திற்கு நேர்கிழக்காய் உள்ளது. இலிங்கம் ஒன்று கொண்டுவந்து அதனைத் தாபித்து பூசைசெய்ய வேண்டுமாதலால் இலிங்கம் கொண்டுவர வாயுபுத்திரனான அனுமன் காசி சென்றுவர சற்று காலந்தாழ்ந்தமையால், சீதாப்பிராட்டியார் தம் கைகளால் மணலால் இலிங்கம் ஒன்று அமைத்திட அவ்விலங்கத்தையே இராமபிரானும் பூசித்தார். பின்னர் அனுமன் கொண்டு வந்த இலிங்கத்தையும் மூல இலிங்கத்தின் வடபுறத்தில் தாபனம் செய்தனர். இந்த இலிங்கமே காசி விசுவலிங்கமாம். இந்த இலிங்கத்திலிருந்துதான் பூசை தொடங்குகின்றது.

திருமால் அந்தண வடிவொடு இலட்சுமியை மணந்து சேதுமாதவர் எனும் திருப்பெயர் தாங்கித் திருக்கோயிலினுள் ஒரு சந்நிதியுள் எழுந்தருளியுள்ளார். இவரையும் வணங்க வேண்டும். இவரை வணங் காதவர் இராமநாதலிங்கத்தை வணங்கிய பேற்றினை அடையமாட்டார் என்பர்.

இவ்வூருக்கு வடக்கே 5 கி.மீ. தொலைவில் கந்த மாதனப் பர்வதம் உள்ளது. அதன்மீது இராமபிரானின் திருவடிகள் பதிந்துள்ளன. இங்கு இராம, இலட்சுமண, சுக்கிரீவ, அனும, தரும, பீம, அருச்சுன, நகுல,

சகாதேவ தீர்த்தங்கள் உள்ளன. மேற்குப் பிரகாரத்தில் லவன் இலிங்கமும்; வடக்குப் பிரகாரத்தில் விபீஷண லிங்கமும், கற்பூர ஜோதியில் ஸ்படிக ரூபமாய் விளங்குகின்றன.

இராவணனை வதைத்து சீதையை மீட்டு வர இராமன் கட்டிய அணை ஈண்டு அமைந்ததால் சேது என்றும் இத்தலம் வழங்கப்படும். சேதுவிலுள்ள நீர் இராமன் தன் அம்பால் கீறிக் கொண்டதாதலின் 'தனுக்கோடி' என்றாகியது. இன்று தனுஷ்கோடி என வழங்குகின்றது. தனுஷ்கோடி தெற்கே 19 கி.மீ. தொலைவிலுள்ளது. அங்கு தனியாக ஸ்நான கட்டம் எனப்படும் நீராடும்துறை உள்ளது. அங்கே நீராடி மகிழ வேண்டும்.

சனிபுதன் ஞாயிறு வெள்ளிதிங் கள்பல தீயன
முனிவது செய்துகந் தானைவென்ற அவ்வினை மூடிட
இனியருள் நல்கிடென்று அண்ணல்செய் தவிராமேச்சுரம்
பனிமுதி சூடிநின்று ஆடவல்ல பரமேட்டியே. 3.10.7

கடலிடை மலைகள் தம்மால்
அடைத்து மால் தரும் முற்றித்
திடலிடைச் செய்த கோயில்
திருஇரா மேச்சு ரத்தைத்
தொடலிடை வைத்து நாவிற்
சுழல்கின் றேன் தூய்மை யின்றி
உடலிடை நின்றுப் பேரா
ஐவர்ஆட் டுண்டு நானே. 4.61.3



4. நடுநாட்டுத் தலங்கள் - 22

1. திருநெல்வாயில் அரத்துறை (திருவட்டத்துறை)
2. பெண்ணாகடம் (பெண்ணாடம்)
3. திருக்கூடலையாற்றூர்
4. எருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரபட்டினம்)
5. திருத்தனைநகர் (தீர்த்தனகிரி)
6. திருச்சோபுரம் (தியாகவல்லி)
7. திருவதிகை
8. திருநாவலூர்
9. திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)
10. திருநெல்வெண்ணெய்
11. திருக்கோவிலூர் (திருக்கோயிலூர்)
12. திருஅறையணி நல்லூர் (அறங்கண்ட நல்லூர்)
13. இடையாறு (T. எடையார்)
14. திருவெண்ணெய்நல்லூர்
15. திருத்துறையூர் (திருத்தளூர்)
16. வடுகூர் (திருஆண்டார் கோயில்)
18. திருமாணிகுழி
18. திருப்பாதிரிப் புலியூர்
19. திருமுண்டீச்சரம் (கிராமம்)
20. திருப்புறவார் பனங்காட்டூர் (பனையபுரம்)
21. திருஆமாத்தூர்
22. திருவண்ணாமலை

1. உளுந்தூர்ப்பேட்டை

1. திருநெல்வெண்ணெய்

2. விருத்தாசலம்

1. திருநெல்வாயில் அரத்துறை
2. பெண்ணாடகம்
3. எருக்கத்தம்புலியூர்
4. கூடலையாற்றூர்
5. விருத்தாசலம்

3. விழுப்புரம்

1. திருஆமாத்தூர்
2. திருநாவலூர்
3. திருவெண்ணெய்நல்லூர்
4. திருமுண்டீச்சரம்
5. திருப்புறவார்பனங்காட்டூர்
6. திருஇடையர்

4. பன்ருட்டி

1. திருவதிகை
2. திருத்துறையூர்

5. கடலூர்

1. திருப்பாதிரிப் புலியூர்
2. திருமாணிகுழி
3. திருத்தினை நகர்
4. திருச்சோபுரம்

6. திருஅண்ணாமலை

1. திருஅண்ணாமலை
2. திருக்கோவலூர்
3. அறங்கண்ட நல்லூர்

7. பாண்டிச்சேரி

1. வடுகூர்

1. உளுந்தூர்பேட்டை

1. திருநெல்வெண்ணெய் - 607201

இறைவன் : வெண்ணெயப்பர்
இறைவி : நீலமலர்க் கண்ணம்மை
தீர்த்தம் : வெண்ணெய் தீர்த்தம்
தலவிருட்சம்: புன்னை மரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

உளுந்தூர்பேட்டையிலிருந்து சேலம் செல்லும் பேருந்து சாலையில் குமாரத்தலம் தாண்டி, எலவானூர் கோட்டை நெடுஞ்சாலையில் நெல்வெண்ணெய் ஊர்.

பழுதடைந்த சிறிய கோயில். கோவில் அருகிலேயே அர்ச்சகர் உள்ளார்.

நீர்மல்கு தொல்புகழ் நெல்வெண்ணெய் மேவிய
ஊர்மல்கி யுறையவல் லீரே
ஊர்மல்கி யுறையவல் லீருமை யுள்குதல்
பார்மல்கு புகழவர் பண்பே. (3.96.4)



2. விருத்தாசலம் (திருமுதுகுன்றம்)

1. திருநெல்வாயில் அரத்துறை (இன்றைய வழக்கு திருவட்டத்துறை, திருவரத்துறை)
2. பெண்ணாடகம்
3. எருக்கத்தம்புலியூர் (வழக்கு இராஜேந்திரபட்டினம்)
4. கூடலையாற்றூர்
5. விருத்தாசலம் (கொளஞ்சியப்பர் முருகன் கோயில் திருச்சியிலிருந்து தனிப் பௌசர் காரில் சென்றால் இத்தலங்களுடன் ஸ்ரீமுஷ்ணமும் தலத்தையும் காணலாம்.)

1. திருநெல்வாயில் அரத்துறை - 606111

இன்று திருஅரத்துறை, திருவட்டத்துறை, அருட்துறை என வழங்கப் படுகிறது. (நெல்வாயில் அரத்துறை என்றால் யாரும் அறியார்.)

இறைவன் : அரத்துறைநாதர்
இறைவி : ஆனந்தநாயகி
தீர்த்தம் : வெள்ளாறு
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10, சுந்தரர் 10 பாடல்கள்.

திருச்சியிலிருந்து தொழுதூர் செல்லும் சாலைவரை சென்று பின்னர் பெண்ணாடம், விருத்தாசலம் செல்லும் பாதையில் செல்ல வேண்டும். திட்டக்குடி, ஆவினன்குடி தாண்டி கொடிகளம் என்னும் நிறுத்தம் பார்த்து சாலையினின்று பிரிந்து செல்லும் பாதையில் 3 கி.மீ. செல்ல வேண்டும். (பெண்ணாடத்திலிருந்து 4 கி.மீ.) சுமாரான கோயில். அழகிய சிற்பங்கள். திருஞானசம்பந்தருக்கு முத்துச் சிவிகையும், முத்துச்சின்னங்களும் பெருமானால் வழங்கப்பட்ட தலம். இச்செய்தியை இத்தலத்திருப்புகழும் கூறும்.

நீல மாமணி மிடற்று நீறணி சிவனெனப் பேணும்
சில மாந்தர்கட் கல்லாற் சென்றுகை கூடுவதன்றால்
கோல மாமல ருந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலை நெல்வாயி லரத்துறை யடிகள்தம் மருளே 2.90.7

பொன்னொப் பானைப்பொன் னிற்சுடர் போல்வதோர்
மின்னொப் பானைவிண் ணோரு மறிகிலார்
அன்னொப் பானை யரத்துறை மேவிய
தன்னொப் பானைக்கண் டீர்நாந் தொழுவதே. 5.3.8

கறிமாமிள கும்மிகு வன்மரமும்
மிகஉந்தி வரும்நிவ வின்கரைமேல்
நெறிவார்குழ லாரவர் காணநடஞ்செய்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
வறிதேநிலை யாதஇம் மண்ணுலகின்
நரனாக வகுத்தனை நான்நிலையேன்
பொறிவாயிலிங் வைந்தினை யும்அவியப்
பொருதுஉன்னடி யேபுகும் சூழல் சொல்லே. 7.2

2. பெண்ணாகடம் (பெண்ணாடம்) - 606105

பெண்+ஆ+கடம்.

இறைவன் : சுடர்க் கொழுந்தீசுரர்
இறைவி : கடந்தைநாயகி
தீர்த்தம் : பெண்ணைநதி
தலவிருட்சம்: சண்பகமரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 3 பாடல்கள்.

பெண்- தேவகன்னியர். ஆ-காமதேனு. கடம்-வெள்ளையானை பூசித்தபடியால் இப்பெயர் பெற்றது. இத்தலத்திலுள்ள கோயிலைத் 'தூங்கானை மாடம்' எனக் கூறுவர். கலிக்கம்ப நாயனாரின் திருத்தலம். திருநாவுக்கரசு சுவாமிகள் இத்திருக்கோயிலில் திருப்பதிகம் பாடித் தம் தோளின்மேல் சூலக்குறியும், இடபக் குறியும் பொறித்தருளப் பெற்ற தலம். மெய்கண்ட தேவரின் தந்தையார் அச்சுத காளப்பர் வசித்த ஊர். மறைஞான சம்பந்தரின் அவதாரத்தலம். இத்திருக்கோவிலில் நந்திகள் பெருமானைப் பார்க்காமல் பெருமான் பார்க்கும் திசையையே பார்க்கின்றன.

நோயும் பிணியு மருந்துயரமு நுகருடைய
வாழ்க்கை யொழியத்தவம்
வாயு மனங்கருதி நின்றீரெல்லா மலர்மிசைய
நான்முகனும் மண்ணும் விண்ணும்
தாய அடியளந்தான் காணமாட்டாத் தலைவர்க்
கிடம்போலுந் தண்சோலைவிண்
தோயுங் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்காண
மாடந் தொழுமின்களே. 1.59.9

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென்மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே. 4.109.1

3. எருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரபட்டிணம்) - 608703

இறைவன் : நீலகண்டேசுவரர்
இறைவி : வீரமுலையம்மாள்
தீர்த்தம் : நீலோற்பல தீர்த்தம்
தலவிருட்சம்: வெள்ளெருக்கு
பாடியோர் : திருஞான சம்பந்தர் : 10 பாடல்கள்

பெண்ணாடத்திலிருந்து விருத்தாசலம் செல்லும் சாலையில் கறிவேப்பிலைக் குறிச்சி எனும் ஊர் வந்தும், அங்கிருந்து செல்லும் சாலையில் திரும்பி எருக்கத்தம்புலியூர் செல்ல வேண்டும். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அவதாரத்தலம். உருத்திரசன்மன் வழிபட்டுத் தன் ஊமைத் தன்மையைப் போக்கிக் கொண்ட தலம். இவரின் உருவமும் உண்டு.

மறையான் நெடுமால்காண பரியான் மழுவேந்தி
நிறைய மதிசூடி நிகழ்முத் தின்றொத்தே
இறையா னெருக்கத்தம் புலியூ ரிடங்கொண்ட
கறையார் மிடற்றானைக் கருதக்கெடும் வினையே. 1-9

4. கூடலையாற்றூர் - 608702

(மணிமுத்தாறும்-வெள்ளாறும் கூடுமிடம்)

இறைவன் : நெறிகாட்டு நாயகர்
இறைவி : புரிகுழலாம்பிகை
தீர்த்தம் : மணிமுத்தாறு
தலவிருட்சம்: கல்லால மரம்
பாடியோர் : சுந்தரர் 10 பாடல்கள்

வழிகள்:

1. சிதம்பரம்-காவலகுடி நகரப்பேருந்து (24 கி.மீ)
2. விருத்தாசலம்-புவன்கிரி 19 கி.மீ. சென்று வளையமாதேவி எனும் ஊரை அடைந்து அங்கிருந்து தெற்கே 3 கி.மீ.

3. கும்பகோணம்- சேத்தியாதோப்புப் பாதையில் குமாரகுடி வந்து ஸ்ரீ முஷ்ணம் (திருமுட்டம்) போகும் பாதையில் 2 கி.மீ. சென்று காவலகுடி சாலையில் 2 கி.மீ. செல்க.

சுந்தரர் திருமுதுகுன்றம் செல்லும்போது அவர்முன் இறைவன் அந்தண வடிவு கொண்டு வந்து நிற்க, சுந்தரரும் திருமுதுகுன்றத்திற்கு வழியை வினாவ அந்தணரும் கூடலையாற்றுக்கு வழிகாட்டித் தானும் உடன்வந்து கூடலையாற்றூர் வர மறைந்தனர். (வெள்ளப் பெருக்கால் கோயில் அழிந்திட அக்கோயில் கற்களையே கொண்டு ஊர்ப் பொது மக்கள் புதிய கோவிலை அமைத்து இறைவனையும் இறைவியையும் எழுந்தருளச் செய்தனர்.)

ஊர்தொறும் வெண்டலைகொண்டு உண்பலி இடும்என்று
வார்தரு மென்முலையாம் மங்கையொடும் உடனே
சூர்நுனை மழுவேந்திக் கூடலை யாற்றூரில்
ஆர்வன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. (7.3)

5. விருத்தாசலம் (திருமுதுகுன்றம்) - 606001

முதுமை- விருத்தம்; அசலம்-குன்றம். (தமிழ்ப் பெயர் வடமொழி வழக்கில் வேதாரண்யம் போல் மாறிவிட்டது.)

சென்னை மெயின் வழி இரயில் பாதையில் உள்ள சந்திப்பு நிலையம். விருத்தாசலம் சந்திப்பு, விருத்தாசலம் நகரம் என்ற இரண்டு நிலையங்களிலும் இறங்கித் திருக்கோயில் செல்லலாம். திருச்சி, தஞ்சை, கும்பகோணம் போன்ற நகரங்களினின்றும் பேருந்து வசதி உள்ளது.

இறைவன்	:	பழமலைநாதர்
இறைவி	:	பெரியநாயகி அம்மை
தீர்த்தம்	:	மணிமுத்தாறு
தலவிருட்சம்	:	வன்னி
பாடியோர்	:	திருஞான சம்பந்தர் 72, அப்பர் 10, சுந்தரர் 11 பாடல்கள்

விருத்தகிரி, பழமலை என்ற பெயர்களும் உண்டு. சுந்தரர் பொன்பெற்ற தலங்களில் இத்தலமும் ஒன்று. இங்கு, இறைவனிடம் பெற்ற பொன்னைத் தம்பிரான் தோழர் மணிமுத்தாற்றில் போட்டு திருவாரூர்க்குளத்தில் பெற்றார். இந்நிகழ்ச்சியிலிருந்தே 'ஆற்றில் போட்டுக் குளத்தில் தேடுவது போல்' என்ற பழமொழியும் எழுந்தது போலும்! சிவபிரான் முதன் முதலில் படைத்த மலை இதுவென்பர். இத்தலத்தில் இறந்தார் முத்தி பெறுவர் என்பது பெற இத்தலம் விருத்தகிரி

என்றும் அழைக்கப் பெறுகின்றது. 'இங்கு உயிர் நீங்குவோர்க்கு உமையம்மை தம் ஆடையால் வீசி இளைப்பாற்றவும், பெருமானார் திருவைந்தெழுத்தினை உபதேசமும் செய்வார் என்றும், காசியினும் இப்பதி சிறந்தது எனவும் கந்தபுராணம் (வரி நடைப்படலம்) கூறும். நான்முகன், அகத்தியர், சுவேதன் என்போர் பூசை செய்து வழிபட்ட தலம். 'முத்தி தரும் உயர் முதுகுன்றம்'; 'செழு நிலத்தை மூடவந்த மூவாத முழங்கொலி நீர்கீழ்தாழ மேலுயர்ந்த முதுகுன்றம்' என்பார் காழிக்கோமானார். 'ஹைட்' என்னும் ஆங்கிலேயர் மாவட்ட ஆட்சித்தலைவராய் இருந்தபோது தம்பெயர் எழுதி இக்கோயிலுள்ள திருத்தேருக்குச் சங்கிலிகள் தந்துள்ளார். இத்தலத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் (மணவாள நல்லூர் எனும் சிற்றூர்) கொளஞ்சியப்பர் என்ற புகழ்வாய்ந்த முருகன் கோயில் உள்ளது. 'பாம்பாட்டிச் சித்தர் இக்கோயிலினுள் சமாதி கொண்டார்' என்பர்.

தழ்ல்சேர்தரு திருமேனியர் சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகவேறிய மறையோனுறை கோயில்
விழவோடொலி மிகுமங்கையர் தகுமாடக சாலை
முழவோடிசை நடமுன்செயு முதுகுன்றுடை வோமே 1-7

தக்கனது பெருவேள்வி தகர்த்தா னாகித்
தாமரையான் நான்முகனுந் தானே யாகி
மிக்கதொரு தீவளிநீ ராகா சமாய்
மேலுலகுக் கப்பாலா யிப்பா லானை
அக்கினொடு முத்தினையு மணிந்து தொண்டர்க்
கங்கங்கே அறுசமய மாகி நின்ற
திக்கினையென் திருமுதுகுன் றுடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. 6.68.5

ஆடி அசைந்தடி யாரும் நீரும் அகந்தொறும்
பாடிப் படைத்தபொருளெ லாம்உமை யாளுக்கோ
மாட மதிலணிகோபு ரம்மணி மண்டபம்
மூடி முகில்தவழ் சோலை சூழ்முது குன்றரே. 7.5



3. விழுப்புரம்

1. திருஆமாத்தூர்
2. திருநாவலூர்
3. திருவெண்ணெய்நல்லூர்
4. திருமுண்டீச்சரம்
5. திருப்புறவார்பனங்காட்டூர்
6. திருஇடையார்

1. திருஆமாத்தூர் - 605602

இறைவன் : அழகியநாதர்
இறைவி : முத்தாம்பிகை
தீர்த்தம் : பதுமதீர்த்தம், பம்பையாறு
தலவிருட்சம்: வன்னி
பாடியோர் : திருஞானசம்பந்தர் 22, அப்பர் 21, சுந்தரர் 11 பாடல்கள்.

விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலை செல்லும் பாதையில் செல்ல 6 கி.மீ. பசுக்களுக்குத் தாயகமான தலம். இராமர் பூசித்த பெருமான். வன்னிமரமான பிருங்கி முனிவர் சக்தியைப் பூசித்து, சாபம் நீங்கின தலம். வன்னியும் கொன்றையும் உள்ளன. இறைவி தனிக்கோயிலில் அமர்ந்துள்ளாள். இறைவன் சந்நிதிக்குக் கோபுரம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இறைவன் திருமேனியில் பசுவின் குளம்புவடு காணப் படுகிறது. வட்டப்பாறை அம்மன் சந்நிதியும் உண்டு. விழுப்புரம்-சூரப்பட்டு நகரப்பேருந்தில் செல்லலாம்.

மாறாத வெங்கூற்றை மாற்றி மலைமகளை
வேறாக நில்லாத வேடமே காட்டினான்
ஆறாத தீயாடி யாமாத்தூ ரம்மானைக்
கூறாத நாவெல்லாங் கூறாத நாக்களே. (2.44.7)

குராமன் னுங்குழ லாளொரு கூறனார்
அராம னும்சடை யான்திரு ஆமாத்தூர்
இராம னும்வழி பாடுசெய் ஈசனை
நிராம யன்தனை நாளும் நினைமினே. 5.43.5

பாடுவன் பாடுவன் பார்ப்பதி தன்அடி பற்றிநான்
தேடுவன் தேடுவன் திண்ணெனப் பற்றிச் செறிதர
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் அடிகளைக்
கூடுவன் கூடுவன் குற்றம தற்றென் குறிப்பொடே. 7.2

2. திருநாவலூர் - 607204

இறைவன் : திருநாவலேசுவரர்
இறைவி : சுந்தரநாயகி அம்மை
தீர்த்தம் : கருட தீர்த்தம்
தலவிருட்சம்: நாவல்
பாடியவர் : சுந்தரர்

வழி: உளுந்தூர்பேட்டையிலிருந்து கடலூர், பன்ருட்டி செல்லும் பேருந்துகளில் செல்லலாம். உளுந்தூர்பேட்டையிலிருந்து கெடிலம் ஆற்றுப் பாலம் வரை சென்று அங்கிருக்கும் திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் எதிரே பிரிந்து செல்லும் சாலையில் (திரு நாவலூர்-சுந்தரர் அவதாரத்தலம்- சுக்கிரன் தலம் என்ற அறிவிப்புப் பலகையும் உண்டு.) இடப்பக்கமாகச் சென்றால் 2கி.மீ. கோபுரவாயில் நுழைவு தாண்டிய இடப்பக்கத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தனிச்சந்நிதி கோயில். பரவையார், சங்கிலியாருடன் திருநாவலூரர் காட்சி தருகின்றார். கோயிலின் உள் நவக்கிர சந்நிதி அருகில் சுக்கிரன் வழிபட்ட சிவபிரானின் பேருருவம் உள்ளது. மக்கள் யாவரும் வணங்கிப் போற்றும் தனித்திருமுன் இதுவே. உள்ளே பெருமான் உள்ளார். இறைவி சந்நிதி தனித்து உள்ளது. வரதராசப் பெருமாள் சந்நிதியும் கோயிலின் திருச்சுற்றில் உள்ளது.

அஞ்சுங்கொண்டு ஆடுவர் ஆவினிற்
சேவினை ஆட்சி கொண்டார்
தஞ்சங்கொண் டார்அடிச் சண்டியைத்
தாமென வைத்துகந்தார்
நெஞ்சங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்டு
நஞ்சங்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே. 7.4



3. திருவெண்ணெய்நல்லூர் - 607203

இறைவன் : தடுத்தாட் கொண்ட நாதர்
இறைவி : வேற்கண்ணியம்மை
தீர்த்தம் : பெண்ணையாறு
தலவிருட்சம்: மூங்கில்
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்

வழிகள்:

1. திருநாவலூர் வணங்கி பன்ருட்டி சாலைவழி சென்று அப்பர் பெருமான் பிறந்த திருத்தலமான திருவாமூர் சென்று வணங்கி பன்ருட்டியிலிருந்து திருவெண்ணெய் நல்லூர் செல்லும் பாதையில் செல்ல வேண்டும். (விழுப்புரத்திலிருந்து நகரப் பேருந்து உண்டு.)

2. திருநாவலூர் வணங்கியபின் சென்னை சாலையில் (கெடில ஆற்று சாலை தொடக்கம், பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் வந்து) அரசூர் வரை வந்து அங்கு பிரியும் திருவெண்ணெய் நல்லூர் சாலையில் வர வேண்டும். முதலில் திருமுண்டீச்சரம்; வழக்கு கிராமம். அடுத்து திருவெண்ணெய்நல்லூர்.

பெரிய திருக்கோயில். இறைவன் கருவறைக்குப்பின் இறைவனின் திருமணக்கோலம் கண்டு இன்புறலாம். அம்மட்டோ! சுந்தரரைத் தடுத்தாட் கொள்ள முதியவராக வந்த அந்தணரின் மரத்தினாலான பாதச் சுவடுகள் உள்ளன. தொட்டு வணங்கலாம். வலச்சுவடு அரித்துக் காணப்படுகிறது. கோயிலின் நுழைவாயிலின் வலப்பக்கம் நவக்கிரகங்கள் வணங்கிய பெரிய இலிங்கத் திருமேனி உள்ளது. திருக்கோயில் அமைந்துள்ள இடம் திருஅருட்டுறை.

திருவெண்ணெய்நல்லூர் கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் வாழ்ந்த ஊர். மெய்கண்டாரின் ஜீவசமாதி வடக்கு வீதியின் கோடியில் உள்ளது.

பித்தர்பிறை சூடிபெரு
மானேஅரு ளாளா
எத்தான்மற வாதே நினைக்
கின்றேன்மனத்து உன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட் துறையுள்
அத்தாஉனக்கு ஆளாய் இனி
அல்லேன்எனல் ஆமே. 7.1

4. திருமுண்டீச்சரம் (வழக்கு கிராமம்) - 607203

இறைவன் : முண்டீச்சுரர்
இறைவி : கானார் குழலியம்மை
தீர்த்தம் : முண்டக பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: வன்னி
பாடியவர் : அப்பர் 10 பாடல்கள்.

திருவெண்ணெய்நல்லூருக்குக் கிழக்கே 3 கி.மீ. பிரமனும், இந்திரனும் வழிபட்ட தலம். இறைவியை வழிபட்டுப் போற்ற நடனமும், இசையும் வரமாகப் பெறலாம். தட்சிணாமூர்த்தி கல்லால மரமீது அமராமல் இடபத்தை வாகனமாகக் கொண்டு அமர்ந்துள்ளார்.

உற்றவன்காண் உறவெல்லா மாவான் றான்காண்
ஒழிவறநின் றெங்கு முலப்பி லான்காண்
புற்றரவே யாடையுமாய்ப் பூணு மாகிப்
புறங்காட்டி லெரியாடர் புரிந்தான் றான்காண்
நற்றவன்காண் அடியடைந்த மாணிக் காக
நணுகியதோர் பெருங்கூற்றைச்சேவ டியினால்
செற்றவன்காண் திரமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே. 6.85.6

5. திருப்புறவார்பனங்காட்டூர் (பனையபுரம்)

இறைவன் : பனங்காட்டீசர்
இறைவி : புறவம்மை
தீர்த்தம் : புதுமதீர்த்தம்
தலவிருட்சம்: பனைமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

வழிகள்:

1. விழுப்புரம் இரயில் நிலையம் வடக்கே 9 கி.மீ. சென்று முண்டியம்பாக்கம் இரயில் நிலையம் வடகிழக்கே 3 கி.மீ. தாண்டி திண்டிவனம் போகும்வழியில் $1^1/_2$ கி.மீ. சென்று பின்பு கிழக்கே $1^1/_2$ கி.மீ.
2. விழுப்புரம்-திருக்கானூர்- பாண்டிச்சேரி சாலையில் 6 கி.மீ.
3. திண்டிவனம்-விழுப்புரம் சாலையில் விக்கிரவாண்டியைத் தாண்டி தஞ்சை சாலையில் திரும்பி 2 கி.மீ. செல்ல ஊர்.

சித்திரை முதல் தேதி முதல் 7வரை ஒவ்வொரு நாள் காலையிலும் சூரியன் உதயமாகும்போது அவனின் ஒளிக்கதிர்கள் முதலில் இறைவன் மேலும் பின்னர் இறைவி மேலும் விழுகின்றன. சிபியின் தொடர்புடைய திருக்கோயில். அறுபத்து மூவர் சந்நிதியில் திருநீலகண்ட நாயனார் தம் துணைவியாருடன் சிறியகோல் பற்றிப் பிடித்த திருமேனியைக் காணலாம்.

விண்ணமர்ந்தன மும்மதில்களை
வீழவெங்கணை யாலெய்தாய்விரி
பண்ணமர்ந்தொலி சேர்
புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொரு பாகமாகிய
பிஞ்ஞு காபிறை சேர்நுதலிடைக்
கண்ணமர்ந் தவனே
கலந்தார்க்கு அருளாயே. 2.189.1

6. திருஇடையார் (T. இடையார்) - 607209

இறைவன் : இடையாற்றீசர்
இறைவி : சிற்றிடைநாயகி
தீர்த்தம் : சிற்றிடை
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்

திருவெண்ணெய்நல்லூருக்கு வடமேற்கே 5 கி.மீ. திருக்கோயிலூர்-திருவெண்ணெய்நல்லூர் வழியாக அரசூர் செல்லும் பாதையில் சித்தலிங்கமடத்தை அடுத்த ஊர். சந்தானக் குரவர்களில் ஒருவரான மறைஞான சம்பந்தரின் அவதாரத்தலம் என்பர் சிலர்.

தேசனூர் வினைதேய நின்றான் திருவாக்கூர்
பாசனூர் பரமேட்டி பவித்திரபாவ
நாசனூர் நனிபள்ளி நள்ளாற்றை அமர்ந்த
ஈசனூர் எய்தமான் இடையாறு இடைமருதே. 7.8



4. பன்ருட்டி

1. திருவதிகை
2. திருத்துறையூர்

1. திருவதிகை - 607106

இறைவன் : அதிகை வீரட்டேசுரர்
இறைவி : திரிபுரசுந்தரி
தீர்த்தம் : கெடிலதீர்த்தம்
தலவிருட்சம்: சுரக்கொன்றை
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 146, சுந்தரர் 10 பாடல்கள்.

பண்ருட்டியிலிருந்து 2 கி.மீ.

அட்டவீரட்டானத்தில் ஒன்று. முப்புரங்களை அழித்த தலம். விண்ணோர் மமதை அடங்கப் புன்னகையும்; சிவபூசை தவறாது செய்த திரிபுரத் தலைவர் மூவரும் உய்ய தண்ணகையும்; சிவபூசை தவறிய முப்புர அசுரர் மடிய வெண்ணகையும் ஆக மூன்று நகையை இத்தலத்துப் பெருமான் செய்தனர் என்பர். திருஞானசம்பந்தருக்கு இறைவன் திருநடனம் காட்டிய தலம்; திருநாவுக்கரசரின் கொடிய சூலை நோயை நீக்கிய தலம்; அப்பிரான் 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்ற முதல் தேவாரத் திருப்பாடலைப் பெற்ற தலம்; சுந்தரர் இத்தலத்தினை நண்ணிய போது 'அப்பர் பெருமான் திருத்தொண்டு புரிந்த தலம்' என்பதனை அறிந்து, அத்தலத்தில் நம் காலடிகளைப் பதித்தல் கூடாது என அஞ்சி, அவ்வூர் புறத்தேயுள்ள சித்தவட மடத்தில் தங்கித் துயின்றனர். பழைய காவலர் நிலையம் தாண்டி 1 கி.மீ. சென்றால் ஸ்ரீசிதம்பரேசுவர் கோயிலை அடையலாம். இதுவே சித்தவடமடம். இப்பகுதி புதுப்பேட்டை, கோடலம்பாக்கம் என வழங்கப்படுகிறது. கோயிலின் உள் திருக்குளமும், சூலைநோயைத் தீர்த்த கிணறும் உள்ளது. கர்ப்பக்கிரகம் தேர்போல் பதுமைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதன் மேலுள்ள கோபுரத்தின் நிழல் கீழே விழாது. அப்பர்பிரானின் மூலவிக்கிரகமும், உற்சவ விக்கிரகமும் உள்ளன. இறைவன் சந்நிதிக்குச் செல்லும் முன் திலகவதியார் திருவுருவம் உள்ளது. சமணத்திலிருந்து சைவத்திற்குக் கொணர்ந்த அப்பெருமாட்டியை வணங்கிப் பெருமானை வணங்க உட் சென்றால் பெருமான் மிகக் கம்பீரமாக 16 பட்டைகளுடன் காட்சி தருகிறார். மூலவரான இறைவனுக்குப் பின்புறம் பெருமான் பெருமாட்டி

எழுந்தருளியுள்ளனர். அற்புதத் திருக்காட்சி. காடவன் மகேந்திர வர்மன் என்னும் சமண மன்னன் சைவமே மெய்யென உணர்ந்தபின் பாடலி புரத்திலிருந்த சமணர் பள்ளிகளையும், பாழிகளையும் இடித்து அவற்றின் கற்களைக் கொண்டு கட்டிய 'குணபரேச்சுரம்' என்னும் ஆலயமும் இவ்வூரில் உள்ளது.

பாதம் பலரேத்தப் பரமன் பரமேட்டி
பூதம் புடைசூழப் புலித்தோ லுடையாகக்
கீதம் உமைபாடக் கெடில வடபக்கம்
வேதம் முதல்வனின்று ஆடும்வீரட் டானத்தே. 1.46.7

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலம்தீங்கிலம் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 4.1.6

தம்மானை அறியாத சாதியார் உளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்து
தம்மான்தன் அடிக்கொண்டென் முடிமேல்வைத்திடும் என்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில் வடவீரட் டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன்போல யானே. 7.1


2. திருத்துறையூர் - 607205

இறைவன் : பசுபதீசுரர்
இறைவி : பூங்கோதை நாயகி
தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
தலவிருட்சம்: கொன்றை
பாடியவர் : சுந்தரர் 11 பாடல்கள்.

பன்ருட்டியிலிருந்து 15 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 14 கி.மீ. நாரதர் பூசித்தத் தலம். சைவ சித்தாந்த சாத்திர நூலான சிவஞான சித்தியார் நூலை இயற்றிய சகலாகம பண்டிதரும், சந்தானக் குரவர்களில் ஒருவருமான

அருணந்தி சிவாச்சாரியாரின் அவதாரத்தலம். இவரின் ஜீவசமாதி திருக்கோயிலுக்குச் சற்று தொலைவில் உள்ளது. ஆண்டுதோறும் புரட்டாசி பூரத்தில் குருபூசை நிகழ்கின்றது. சுந்தரருக்குக் காட்சி கொடுத்த மூர்த்தி மூலத்தானத்திற்கு மேலேவுள்ள விமான நிலையில் வீற்றுள்ளார். கோயிலினுள் பீமன், சூரியன் பூசித்த இலிங்கங்கள் உள்ளன. கோயிலின் வெளியே வடக்கு பார்த்த அஷ்டபுஜங்க காளியின் திருக்கோயில் உள்ளது.

மாவாய்ப் பிளந்தானும் மலர்மிசையானும்
ஆவா அவர்தேடித் திரிந்தல மாந்தர்
பூவார்ந்தன பொய்கைகள் சூழும் துறையூர்த்
தேவா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7.10



5. கடலூர்

1. திருப்பாதிரிப்புலியூர்
2. திருமாணிகுழி
3. திருத்தினைநகர்
4. திருச்சோபுரம்

1. திருப்பாதிரிப்புலியூர் - 607002

இறைவன் : தோன்றாத்துணைநாதர்
இறைவி : பெரியநாயகியம்மை
தீர்த்தம் : கெடிலநதி
தலவிருட்சம்: பாதிரி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்.

கடலூரின் ஒரு பகுதி. கடலூரில் இரயில் பாதையைக் கடக்கப் பாடலீசுவரர் திருக்கோயிலைக் காணலாம்.

திருநாவுக்கரசரைச் சமணர் கல்லைக்கட்டி கடலிலிட அவர் 'சொற்றுணை வேதியன்' எனும் நமச்சிவாயப் பதிகம் பாடி கரையேறிய தலம். அந்த இடம் 'கரையேறவிட்ட குப்பம்' என அழைக்கப்படுகிறது. பின்னர் அரசர் 'ஈன்றாளுமாய்' எனத் திருப்பதிகம் பாடி சிவபிரானை வணங்கிப் போற்றிச் சின்னாள் தங்கியிருந்த பெருந்தலம். வியாக்கிரபாதர் பூசித்தமையால் இது புலியூர் எனப்பெயர் பெற்றது. சாபம் பெற்ற முடக்காலுள்ள முயலுருப் பெற்ற மங்கள முனிவர் பன்னாட்கள் தங்கி இறைவனைப் போற்றி வணங்கிட நல்லுரு கொண்ட தலம். அக்கினி, கங்கை போன்றோர் போற்றிய புனிதத்தலம்.

முன்னநின்ற முடக்கான் முயற்கு அருள் செய்துநீள்
புன்னைநின்று கமழ் பாதிரிப் புலியூருளான்
தன்னைநின்று வணங்கும் தனைத்தவ மில்லிகள்
பின்னைநின்ற பிணி யாக்கைப் பெறுவார்களே. 2.121.1

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் ஆயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத்து உள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடி யோங்களுக்கே. 4.1

2. திருமாணிகுழி - 607401

இறைவன்	:	மாணிக்கவரதர்
இறைவி	:	மாணிக்கவல்லி
தீர்த்தம்	:	மாணிக்கதீர்த்தம்
தலவிருட்சம்	:	கொன்றை
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

வழிகள்:

1. கடலூர்-குணமங்கலம்-நகரப்பேருந்து
2. கடலூர்-நடு வீரப்பட்டி (வழி. திருவகீந்தபுரம் செல்லும் பேருந்தில் சென்று திருமாணிகுழி நிறுத்தத்தில் இறங்கி 1கி.மீ. நடக்க வேண்டும்.)
3. பண்ருட்டி-பாலூர் வழி கடலூருக்குச் செல்லும் சாலை.

எப்பொழுதும் இறைவன் கருவறையில் திரையிடப்பட்டுள்ளது. அர்ச்சனைகள் முடிந்து தீபாரதனையின்போது சில மணித்துளிகள் திரையை விலக்குகின்றனர். இறைவன் இறைவியோடு இருப்பதாகச் செய்தி. வாமன அவதாரம் செய்த திருமால் இறைவனைப் பூசித்தத் தலம்.

மந்த மலர் கொண்டுவழி பாடுசெயு
மாணி யுயிர் வவ்வமனமாய்
வந்தவொரு காலனுயிர் மாளவுதை
செய்தமணி கண்டன் இடமாம்
சந்தினொடு காரகில் சுமந்துநட
மாமலர்கள் கொண்டு கெடிலம்
உந்துபுனல் வந்துவயல் பாயுமண
மார்உதவி மாணி குழியே. 3.335.6



3. திருத்தினைநகர் (வழக்கு தீர்த்தனகிரி) - 608801

இறைவன் : சிவக்கொழுந்தீசர்
இறைவி : ஒப்பிலா நாயகி
தீர்த்தம் : திருந்து தீர்த்தம்
தலவிருட்சம்: கொன்றை
பாடியோர் : சுந்தரர் 10 பாடல்கள்

வழிகள்:

1. ஆலம்பாக்கம் இரயில் நிலையத்திலிருந்து சிறிது தொலைவு மேற்கே சென்று, கடலூரிலிருந்து சிதம்பரம் போகும் பெரிய முதன்மைச் சாலை வழியடைந்து தெற்கே 3 கி.மீ. சென்று (22 கி.மீ. குறிக்கும் கல் இடத்து) மேற்கே திரும்பி 2 கி.மீ. சென்று தானூர் கிராமம் அடைந்து, பின்னர் $1^1/_2$ கி.மீ. மேற்கே சென்றால் ஊரை அடையலாம்.
2. கடலூர்-சிதம்பரம் மேட்டுப்பாளையம் வழியாகச் செல்லும் நகரப்பேருந்தில் செல்லலாம்.
3. பரங்கிப்பேட்டை இரயில் வண்டி நிலையத்திற்கு வடமேற்கே 11 கி.மீ. புதுச்சத்திரம் இரயில் நிலையத்திற்கு வடமேற்கே 5 கி.மீ. மேலும் $1^1/_2$ கி.மீ. மேற்கே செல்ல இவ்வூர்.

தாமரைக்குளத்து நீர்க் குட்டம் தீர்க்கும் பெரியான் எனும் அரிஜன் ஒருவர் உழுது கொண்டிருக்கையில் சிவனார் ஜங்கமர் வேடங்கொண்டு அவனிடம் வந்து 'பசியாக உள்ளது உணவு கொடு' எனக் கேட்க, அவனும் ஊர் சென்று உணவு கொண்டு வருவதாகக் கூறிச் சென்றான். அவன் வருவதற்குள் இறைவன் அவன் உழுது கொண்டிருந்த நிலத்தில் தினை விளைத்து, பழுத்திருக்கும்படி செய்து மறைந்தனர். சென்ற அவனும் அவன் மனைவியும் நிலத்தில் தினை விளைந்து பழுத்திருப் பதைக் கண்டு ஆச்சர்யமும் அதிசயமும் கொண்டனர்; அந்நிலையில் ஜங்கமரும் அங்கு இல்லை. பின்னர் அவர்களுக்குத் தரிசனம் கொடுத்தார். அதிசயமாகத் தினை வளர்ந்த காரணத்தால் இந்நகர் திருத்தினை நகர் எனப்பெயர் பெற்றது என்பர். இறைவனுக்கு இன்றும் தினை நைவேத்தியம் உண்டு. பெரியான், ஜங்கமர் உருவங்கள் கோயிலில் உள்ளன. இக்கோவிலிலுள்ள நடராச மூர்த்தியின் ஒரு பக்கத்தில் திருமால் சங்கு ஓதுகின்றார்; மற்றொரு பக்கத்தில் நான்முகன் முரசு முழங்குகின்றார். எங்கும் காணக்கிட்டாத அற்புதக்காட்சி. முழுநிலா அன்று கிராம மக்கள் கோயிலைச் சுற்றிவந்து வணங்குகின்றனர். அன்று இரவு 9 மணி வரை கோயில் திறந்திருக்கும்.

ஒன்ற லாஉயிர் வாழ்க்கையை நினைந்திட்டு
உடல்த ளர்ந்தரு மாநிதி இயற்றி
என்றும் வாழலாம் எமக்கெனப் பேசும்
இதுவும் பொய்யென வேநினை உளமே
குன்று லாவிய புயமுடை யானைக்
கூத்த னைக்குலா விக்குவ லயத்தோர்
சென்றெ லாம்பயில் திருத்தினை நகருள்
சிவக்கொ முந்தினைச் சென்றடை மனனே. 7.5

4. திருச்சோபுரம் (தியாகவல்லி வழக்கு) - 608801

இறைவன் : சோபுரநாதர்
இறைவி : சோபுர நாயகி
தீர்த்தம் : கோபுர தீர்த்தம்
தலவிருட்சம்: கொன்றை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

கடலூர்-சிதம்பரம் சாலையில் ஆலம்பாக்கம் இரயில் நிலையம் உள்ள கைகாட்டி உள்ள பாதையில் இடப்பக்கம் திரும்பி (மங்கள புரீச்சுவரர்- தியாகவல்லி பெயர்ப்பலகைப் பார்த்து) இரயில் கேட்டைத் தாண்டி மேற்சென்றால் உப்பங்கழியின் மேல்கட்டப்பட்ட பெரிய நீண்ட பாலத்தின் வழியே சென்று சவுக்குத் தோப்பினைத் தாண்டிச் சென்றால் திருக்கோயில்.

அகத்தியர் பூசித்தது. தியாகவல்லி என்ற அரசகுமாரி பூசித்ததால் தியாகவல்லி என்ற பெயர் உண்டாயிற்று. அரசகுமாரியின் திருவுருவமும் திரிபுவன சக்கரவர்த்தியின் உருவமும் வடகீழ்ப்பால் பிரகாரத்தில் உள்ளன. இத்தலம் 125 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டதென்பர். அதற்குமுன் மணலால் மூடப்பட்டிருந்தது என்பர். இரண்டு தம்பிரான்கள் இத்தலத்தைக் கண்டுபிடித்துத் திருப்பணி செய்தனராம். அதனால் 'தம்பிரான் கண்டதலம்' எனும் பெயரும் உண்டு. கடலும் சமீபத்தில் உள்ளது. உயர்ந்த மணற் குன்றுகள் காணப்படுகின்றன.

விடை அமர்ந்து வெண்மழு ஒன்று
ஏந்தி விரிந்து இலங்கு
சடை ஒடுங்கத் தண்புனலைத்
தாங்கியது என் னைகொலாம்
கடை உயர்ந்த மும்மதிலும்
காய்ந்து அனலுள் ளழுந்தத்
தொடை நெகிழ்ந்த வெஞ்சிலையாய்
சோபுரமே யவனே. 1.51.2

6. திருஅண்ணாமலை

1. திருஅண்ணாமலை
2. திருக்கோவலூர் (திருக்கோயிலூர்)
3. அறங்கண்டநல்லூர்

1. திருஅண்ணாமலை - 606601

இறைவன் : அருணாசலேசுரர், அண்ணாமலையார்
இறைவி : உண்ணாமுலையம்மை
தீர்த்தம் : பிரமதீர்த்தம்
தலவிருட்சம்: மகிழமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 22, அப்பர் 30 பாடல்கள்
மணிவாசகர் 5 இடங்கள்

அண்ணாமலையை அறியார் யார்? அக்கினித்தலம். நான்முகன், திருமால் ஆகியோர் முறையே அன்னமாகவும், பன்றியாகவும் முடி, அடியினைத் தேடியும் காணாது நின்ற தலம். கார்த்திகை தீபம் உலகப் பிரசித்தி பெற்றது. அதேபோல் பௌர்ணமி கிரிவலம், தமிழ்மாதப் பிறப்பு கிரிவலம். பலர் நித்தமும் கிரிவலம் செய்கின்றனர். கிரிவலம் 16 கி.மீ. நீண்டகன்ற பெரியகோயில் அருணகிரியாரின் அவதாரத்தலம். அவருக்கு அநுக்கிரகஞ் செய்த முருகனின் திருவுருவம் கோயிலுக்குக் கிழக்கே ஒரு கம்பத்தில் இருக்கிறது. அவர் கம்பத்திளையனார் என அழைக்கப்படுகின்றார்.

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.
1.10.1

கருவி னைக்கடல் வாய்விடம் உண்டவெம்
திருவி னைத்திரு வண்ணா மலையனை
உருவி னையுண ரார்புர மூன்றெய்த
அருவி னையடி யேன்மறந் துய்வனோ. 5.4.8

அண்ணாமலையான் அடிக்கமலம் 8.7.18

2. திருக்கோவலூர் (திருக்கோயிலூர் வழக்கு) - 605757

இறைவன் : வீரட்டேசுரர்
இறைவி : சிவாநந்தவல்லி
தீர்த்தம் : பெண்ணையாறு
தலவிருட்சம்: வில்வம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்.

திருக்கோயிலூர் பெண்ணையாற்றின் தென்கரை ஆற்றினைக் கடக்கும் பாலத்தருகில் திருக்கோயில். இறைவன், இறைவி இருவரும் தனித்தனிக் கோயில்களில் காட்சி தருகின்றார். முதலில் இறைவி கோயில்; அடுத்து இறைவன். அட்டவீரட்டானங்களில் இஃது ஒன்று. அந்த காசுரனை சம்காரம் செய்த தலம். பெருமான் கம்பீரமாய்ப் பேரெழிலுடன் காட்சி தருகின்றார். மேற்குப் பார்த்தத் திருமுன். மெய்ப்பொருளாரின் அவதாரத்தலம். ஈண்டுள்ள விநாயகரையே ஔவையார் வணங்கி 'விநாயகர் அகவல்' பாடினார் என்ப. (திருமங்கை ஆழ்வாரால் மங்கள சாசனம் செய்யப்பட்ட வைணவக் கோயில் மேலூர்ப் பகுதியில் உள்ளது)

உள்ளத்தீரே போதுமின் உறுதியாவது அறிதிரேல்
அள்ளற் சேற்றில் காலிட்டிங்கு அவலத்துள் அழுந்தாதே
கொள்ளப்பாடு கீதத்தான் குழகன்கோவ லூர்தனில்
வெள்ளந்தாங்கு சடையினான் வீரட்டான்ம் சேர்துமே. 2.100.3

செத்தையேன் சிதம்ப நாயேன் செடியனேன் அழுக்குப் பாயும்
பொத்தையே போற்றி நாளும் புகலிடம் அறிய மாட்டேன்
எத்தைநான் பற்றி நிற்கேன் இருளற நோக்கமாட்டாக்
கொத்தையேன் செய்வ தென்னே கோவல்வீரட்ட னீரே. 4.69.1



3. அறையணி நல்லூர் - 605752

(அறங்கண்ட நல்லூர்)

இறைவன் : அறையணி நாதர்
இறைவி : அருள்நாயகி
தீர்த்தம் : பாண்டவ தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

பெண்ணையாற்றின் வடகரை.

பாலம் தாண்டி விழுப்புரம் செல்லும் பாதையில் சென்றால் காவலர் நிலையம் வரும். அதன் அருகே செல்லும் கான்கிரீட் சாலையில் செல்க. சிறுகுன்றின்மேல் கோயில். கோயில்வரை பிளசரில் செல்லலாம்.

....

பாரின் மல்கிய தொண்டர்கள் இமையவர்
நாள்தொறும் பணிந்து ஏத்தும்
காரின் மல்கிய சோலை அண்ணாமலை
அன்பர் காட்டிடக் கண்டார்.

(திருஞானசம்பந்தர் புராணம் 969)

எனச் சேக்கிழார் சுவாமிகள் குறித்ததுபோல் இக்குன்றின்மீது மேலிருந்து பார்த்தால் திருஅண்ணாமலைச் சிகரம் தெரியும். பெரியகோபுரம் கோயிலுக்குக் கிழக்கிலும் தெற்கிலும் பாறையில் ஒரு பெருங்குளம் உளது. இதனருகில் பஞ்ச பாண்டவர்குகை என ஐந்து அறைகளும், திரௌபதை இருந்ததொரு சிறிய அறையும் இவற்றிற்கு எதிரே ஒரு சுனையும் உளது. இரமணரின் உருவம் உளது. இவரருகே ஒருமுகம் கொண்ட முருகன் ஆறுகைகளுடன் காட்சி தருகின்றான். இங்கு விநாயகர் உருவம் சுவரிலேயே அமைந்துள்ளது. எங்கிருந்து பார்த்தாலும் விநாயகர் நம்மைப் பார்ப்பார்.

என்பினார்கனல் சூலத்தார் இலங்குமாமதி உச்சியான்
பின்பினாற் பிறங்கும் சடைப்பிஞ்ஞகன் பிறப்பிலி யென்று
முன்பினார் மூவர்தாம்தொழு முக்கண் மூர்த்திதன் தாள்களுக்கு
அன்பினார் அறையணி நல்லூர் அங்கையால்தொழு வார்களே.

2.77.3

7. பாண்டிச்சேரி


1. வடுகூர் (திருஆண்டார் கோயில்) - 605102

(ஆண்டார் கோவில் வழக்கு)

இறைவன் : வடுகேசுரர்
இறைவி : வடுவகிர்க் கண்ணம்மை
தீர்த்தம் : வாமதேவதீர்த்தம்
தலவிருட்சம்: வன்னி
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

விழுப்புரம்-பாண்டிச்சேரி (வழி கோலியனூர்)ப் பாதையில் வளவனூர் தாண்டி புதுவை மாநில எல்லைக்குள் சிறிது தொலைவு செல்ல இக்கோயிலை அடையலாம். (18கி.மீ.) எதிரில் இந்திய உணவுக் கார்ப்பரேஷன் அலுவலகம். வடுகனாகிய வைரவர் பூசித்தத் தலம்.

தளரும் கொடியன்னாள் தன்னோடு உடனாகிக்
கிளரும் அரவுஆர்த்துக் கிளரு முடிமேலோர்
வளரும் பிறைசூடி வரிவண்டு இசைபாட
ஒளிரும் வடுகூரில் ஆடும் அடிகளே. 1.87.6



5. தொண்டை நாட்டுத் தலங்கள்-32

1. திருக்கச்சியேகம்பம் (காஞ்சிபுரம்)
2. திருக்கச்சிமேற்றளி (திருமேற்றளி)
3. திருக்கச்சி நெறிக்கரைக்காடு (திருக்கலிக்காமேடு)
4. திருக்கச்சி அனேகதங்காவதம்
5. திருவோணகாந்தன்தளி
6. குரங்கணில் முட்டம்
7. மாகறல்
8. திருவோத்தூர் (செய்யாறு)
9. வன்பார்த்தான் பனங்காட்டூர் (திருப்பனங்காடு)
10. திருவல்லம் (திருவலம்)
11. திருமாற்பேறு (திருமால்பூர்)
12. திருஊறல் (தக்கோலம்)
13. இலம்பையங்கோட்டூர் (எலுமினியன் கோட்டூர்)
14. திருவிற்கோலம் (கூவம்)
15. திருவாலங்காடு
16. திருப்பாசூர்
17. திருவெண்பாக்கம்
18. திருக்கள்ளில் (திருக்கண்டலம்)
19. திருக்காளத்தி
20. திருவொற்றியூர்
21. திருவலிதாயம் (பாடி)
22. வடதிருமுல்லைவாயில்
23. திருவேற்காடு
24. மயிலாப்பூர்
25. திருவான்மியூர்
26. திருக்கச்சூர் ஆலக்கோயில்
27. திரு இடைச்சுரம் (திருவடிசூலம்)
28. திருக்கழுக்குன்றம்
29. அச்சிறுபாக்கம்
30. திருவக்கரை
31. அரசிலி (ஒழிந்தியாப்பட்டு)
32. இரும்பை மாகாளம்

தொண்டை நாட்டுத் தலங்கள் - 32

1. விழுப்புரம் - 2

1. அச்சிறுபாக்கம்
2. திருவக்கரை

2. செங்கற்பட்டு - 3

1. திருக்கழுக்குன்றம்
2. திருவிடைச்சுரம்
3. திருக்கச்சூர்

3. காஞ்சீபுரம் - 15

1. கச்சியேகம்பம் (காஞ்சி)
2. திருக்கச்சிமேற்றளி
3. கச்சி அநேக தங்காவதம்
4. திருவோணகாந்தன்தளி
5. கச்சி நெறிக்கரைக்காடு (காலிமேடு)
6. திருமாகறல்
7. குரங்கணில் முட்டம்
8. திருவன் பார்த்தான் பனங்காட்டூர் (பனங்காடு)
9. திருவோத்தூர் (செய்யாறு)
10. திருவல்லம்
11. திருமாற்பேறு (திருமால்பூர்)
12. திருவூறல்
13. இலம்பையங்கோட்டூர் (எலுமினியன் கோட்டூர்)
14. திருவாலங்காடு
15. திருக்காளத்தி

4. திருவள்ளூர் - 2

1. திருப்பாசூர்
2. திருவெண்பாக்கம்

5. சென்னை - 8

1. திருமயிலை
2. திருவான்மியூர்
3. திருவேற்காடு
4. திருவொற்றியூர்
5. திருவலிதாயம்
6. வடதிருமுல்லைவாயில்
7. திருக்கள்ளில்
8. திருவிற்கோலம்

6. பாண்டிச்சேரி - 2

1. இரும்பைமாகாளம் (இரும்பை)
2. அரசிலி (ஒழிந்தியாப்பட்டு)

1. விழுப்புரம்

1. அச்சிறுபாக்கம்
2. திருவக்கரை

1. அச்சிறுபாக்கம் - 603301

(அச்சு+இறு+பாக்கம்)

இறைவன் : பாக்கபுரேசர்
இறைவி : சுந்தரநாயகி
தீர்த்தம் : வேததீர்த்தம்
தலவிருட்சம்: கொன்றை
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

சென்னையிலிருந்து 94 கி.மீ. தெற்கே உள்ளது. சிவபிரான் முப்புரங்களை அழிக்க முற்பட்டபோது தேவர்கள் அமைத்த தேரில் ஏறிச்சென்றனர். அத்தேவர்கள் விநாயகப் பெருமானை முதற்கண் நினைக்காமல் சென்றதால் தேர் அச்சு முறிந்தது. பின்னர் விநாயகர் அருளால் அச்சு நன்னிலை உற்றது. கண்ணுவரும், கௌதமரும் பூசித்தத் திருத்தலம்.

இரண்டு சந்நிதிகள் உள்ளன. சிவபிரான் வீற்றிருக்கும் ஒரு சந்நிதியில் அவருக்குப் பின்னே திருமணக்கோலக்காட்சி அமைந்துள்ளது அற்புதம். பிறிதொரு சந்நிதியில் பெருமான் தரையோடு தரையாக உள்ளார். இறைவி சந்நிதிகளும் இரண்டு. பெருமாள், தாயார், அனுமன் திருவுரு வங்களும் அமைந்துள்ளன. வள்ளல் பெருமானின் திருவுரு இங்கு அமைந்துள்ளது சிறப்பு.

தேனினும் இனியர் பாலன நீற்றர்
    தீங்கரும்பு அனையர்தம் திருவடி தொழுவார்
ஊன்நயந்து உருக உவகைகள் தருவார்
    உச்சிமேல் உறைபவர் ஒன்றலாது ஊரார்
வானகம் இறந்து வையகம் வணங்க
    வயங்கொள நிற்பதோர் வடிவினை உடையார்
ஆனையின் உரிவை போர்த்த எம்மடிகள்
    அச்சிறு பாக்கமது ஆட்சி கொண்டாரே. 1.77.2



2. திருவக்கரை - 604304

இறைவன் : சந்திரசேகரர்
இறைவி : வடிவாம்பிகை
தீர்த்தம் : சந்திர தீர்த்தம்
தலவிருட்சம்: கொன்றை
பாடியவர் : திருஞானசம்பந்தர்

விழுப்புரத்திலிருந்து நகரப் பேருந்து உண்டு. விழுப்புரத்திலிருந்து சென்னை நோக்கிச் செல்லும் சாலையில் 9 கி.மீ. சென்று (புறவார் பனங்காட்டூர்) பனையபுரம் செல்லும் சாலையில் 15 கி.மீ. செல்ல கோயிலை அடையலாம். பிற வழிகள் சுற்று.

பௌர்ணமி மிகச் சிறப்பு.

வக்கிரகாளி சந்நிதி தாண்டியே சிவபிரான் சந்நிதி செல்ல வேண்டும். பெருமான் திங்களுக்காக ஒரு முகமும், பிரமனுக்காக ஒரு முகமும், திருமாலுக்காக ஒரு முகமுமாக மூன்று முகங்களைக் கொண்டுள்ளார். பெருமான் பின் பெரிய கண்ணாடி வைத்துள்ளனர். வக்கிராசுரன் பூசித்த இலிங்கத் திருமேனி கோயிலின் முன்புறத்தில் வடக்கில் உள்ளது. அவனைத் திருமால் அழித்தபோது அவனுடலினின்று இரத்தம் நிலத்தினுள் விழாதபடி, தம் நாவினை நீட்டி உறிஞ்சின காளியின் உருவம் தென்பால் உள்ளது. காளியின் வலச்செவியில் குழந்தை ஒன்றின் உருவம் குண்டலமாகத் தொங்குகின்றது. இடக்கையில் வில் உள்ளது. திருமால் கோயில் பெரிய பிரகாரத்தில் மேற்குப் பார்த்து உள்ளது. மிகப்பெரிய நந்தி முன்னே உள்ளார்.

திருவக்கரை காளியின் சிறப்பால் கோயிலே பராமரிக்கப்படுகிறது. பௌர்ணமி மிகச்சிறப்பு. திருவக்கரை குண்டலிவனம் என்றும் திண்டிவனம் தண்டகவனம் எனவும் கூறுகின்றனர்.

ஏனவெண் கொம்பினொடும் இளவாமையும் பூண்டுகந்து
கூனிள வெண்பிறையும் குளிர்மத்தமும் சூடிநல்ல
மானன் மென்விழியா ளொடும் வக்கரை மேவியவன்
தானவர் முப்புரங்கள் எரிசெய்த தலைமகனே. 3.60.5

2. செங்கற்பட்டு

1. திருக்கழுக்குன்றம்
2. திருவிடைச்சுரம்
3. திருக்கச்சூர்

1. திருக்கழுக்குன்றம் - 603100

இறைவன்	:	வேதகிரீசுரர், மலை மருந்தீசர்
இறைவி	:	பெண்ணின் நல்லாள் அம்மை
தீர்த்தம்	:	பட்சிதீர்த்தம், சங்கு தீர்த்தம்
தலவிருட்சம்	:	வாழைமரம்
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 10, அப்பர் 2. சுந்தரர் 10. மணிவாசகர் 8 இடங்கள்

காஞ்சீபுரம், சென்னை, செங்கற்பட்டு போன்ற இடங்களிலிருந்து பேருந்து வசதி உண்டு.

பெரியகோயில். இறைவன் மிகக் கம்பீரமாய் அழகுமிகக் காட்சி தருகின்றார்.

கோயில் எதிரே 1/2 கி.மீ. மலை உள்ளது. மறைகளே மலையுருவாய் இறைவனைத் தாங்குவதாய் ஐதீகம். முன்னர் இரு கழுகுகள் இங்கு பகல் 12 மணிக்கு வந்து உணவு கொண்டன. இப்பொழுது இல்லை. அதனருகே 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு தோன்றும் சங்குக்குளம் உளது. காலையில் சங்குக் குளத்தில் நீராடி மலையைச் சுற்றி வலமாக வருதல் சிறப்பு. மலை கிரிவலம் $8\,^1/_2$ கி.மீ.

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழல்ஏத்தும் சிறுத்தொண்டர்
உள்ளமெல்லாம் உள்கிநின்று ஆங்கே உடன்ஆடும்
கள்ளம்வல்லான் காதல் செய்கோயில் கழுக்குன்றே. 1.103.6

பல்லாடு தலைசடைமேல் உடையான் தன்னைப்
பாய்புலித்தோல் உடையானைப் பகவன் தன்னைச்
சொல்லோடு பொருளனைத்தும் ஆனான் தன்னைச்
சுடருருவில் என்பறாக் கோலத்தானை
அல்லாத காலனைமுன் அடர்த்தான் தன்னை
ஆலின்கீழ் இருந்தானை அமுதா னானைக்
கல்லாடை புனைந்தருளும் காபா லியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 6.92.2

இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையான் எங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை அருவித் தண்கழுகுக் குன்றமே. 7.2

மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலம் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேன் இனி
மேல் விளைவது அறிந்திலேன்
இலங்குகின்ற நின்சேவடிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

திருவாசகம் (திருக்கழுக்குன்றப் பதிகம் 7 செய்யுட்களில் 3ஆம் பாடல்)

2. திருவிடைச்சுரம் (திருவடிசூலம்) - 603108

இறைவன் : இடைச்சுரநாதர்
இறைவி : இமயமடக் கொடி
தீர்த்தம் : தாமரைக்குளம்
தலவிருட்சம்: வில்வம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

செங்கற்பட்டு- திருப்போரூர் சாலையில் 8 கி.மீ. சென்று திருவடி சூலம் கோயில் வளைவு பார்த்து 1கி.மீ. செல்க. மரகதலிங்கம் தீபாராதனையின்போது இலிங்கம் ஜோதி சுரூபம் காணக் கண்போதாது. இங்குள்ள வில்வமரத்தில் 9 தனிஇலைகள் விசேடம்.

கானமும் சுடலையும் கற்படு நிலனும்
காதலர் தீதிலர் கனல் மழுவாளர்
வானமு நிலமையும் இருமையும் ஆனார்
வணங்கவும் இணங்கவும் வாழ்த்தவும் படுவார்
நானமும் புகையொளி விரையொடுகமழ
நளிர்பொழில் இளமஞ்ஞை மன்னிய பாங்கர்
ஏனமும் பிணையலும் எழில்திகழ் சாரல்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே. 1.78.3

3. திருக்கச்சூர் (இரண்டு கோயில்கள்) - 603204

1. கச்சூர் கோயில்

இறைவன் : விருந்திட்டஈசுரர்
இறைவி : அஞ்சனாட்சி
தீர்த்தம் : ஆமை தீர்த்தம்
தலவிருட்சம்: ஆலமரம்

2. மருந்தீசர் கோயில்

இறைவன் : மருந்தீசர்
இறைவி : இருள்நீக்கித் தாயார்
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்

சிங்கப்பெருமாள் கோயில்- ஸ்ரீபெரும்புதூர் சாலையில் 2 கி.மீ. சென்று கச்சூர்ப் பெயர்ப் பலகை பார்த்துக் கோயிலை அடையலாம்.

சுந்தரரின் பசியைப் போக்க இறைவன் பலவீடுகளுக்குச் சென்று பிச்சை எடுத்து வந்து உணவு இட்ட இடம். இக்கோவிலில் சண்டேசு வரரின் திருவுருவம் காண வேண்டிய ஒன்று. நான்கு முகங்களுடன் உள்ளார்.

மேலை விதியே வினையின் பயனே
விரவார் புரமூன்று எரி செய்தாய்
காலை எழுந்து தொழுவார் தங்கள்
கவலை களைவாய் கறைக்கண்டா
மாலைமதியே மலைமேல் மருந்தே
மறவேன் அடியேன் வயல் சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 7.5



3. காஞ்சீபுரம்

1. கச்சியேகம்பம் 2. திருக்கச்சிமேற்றளி 3. கச்சி அநேக தங்காவதம் 4. திருவோணகாந்தன்தளி 5. கச்சிநெறிக்கரைக்காடு (காலிமேடு) 6. திருமாகறல் 7. குரங்கணில் முட்டம் 8. வன்பார்த்தான் பனங்காட்டூர் (பனங்காடு) 9. திருவோத்தூர் (செய்யாறு) 10. திருவல்லம் 11.திருமாற்பேறு (திருமால்பூர்) 12. திருவூறல் 13. இலம்பையங்கோட்டூர் (எலுமினியன் கோட்டூர்) 14. திருவாலங்காடு 15. திருக்காளத்தி

1. கச்சி ஏகம்பம் - 631502
காஞ்சீபுர ஏகாம்பரேசுவரர் கோயில்

இறைவன் : ஏகாம்பரநாதர்
தீர்த்தம் : சிவகங்கை, சப்பாநதி
தலவிருட்சம்: மா
பாடியோர் : திருஞானசம்பந்தர் 43, அப்பர் 71, சுந்தரர் 20 பாடல்கள் மணிவாசகர் 4 இடங்கள்

கா-பிர்மா; அஞ்சித-பூஜிக்கப்பட்டது. பிர்மாவால் பூஜிக்கப்பட்ட திருத்தலம். தமிழகத்தில் திருக்கோயில்கள் மிகுந்த நகரங்கள் இரண்டு 1. காஞ்சிபுரம் 2. கும்பகோணம். க்ஷேத்திரவெண்பா பாடிய ஐயடிகள் காடவர்கோன் அரசாண்ட இடம். சுந்தரர் மீண்டும் இடக்கண் பார்வை பெற்ற தலம். (காஞ்சிபுரத்திலுள்ள சிவன் கோயில்களில் அம்மன் சந்நிதி தனித்துக் கிடையாது. காமாட்சி அம்மன் கோவிலே இறைவி சந்நிதியாம்.) பஞ்ச பூதத்தலங்களில் மண்ணிற்கு உரியது. (சிலர் ஆரூர் என்பர்; இரண்டு தலங்களைக் கொள்வதும் சிறப்பே!) முத்திதரும் முதுநகர் ஏழினுள் முதன்மையானது காஞ்சி. (காஞ்சி, மதுரா, மாயா, காசி, அவந்திகா, பூரி, துவாரகை) 'முத்தி தரும் நகர் ஏழுள் முக்கியமாம் முதற்காஞ்சி' என்பது பிரமாணம். கச்சியப்ப சிவாச்சாரியார் பூசித்த குமரகோட்டம் இத்தலமே; அவர் பாடிய கந்தபுராணம் அரங்கேறிய இடம் குமரகோட்டம். இக்கோட்டம் இத்தல நகரின் மையப் பகுதியில் உள்ளது; அம்மையின் பெருந்தலமான காமாட்சி அம்மன் கோயில் பெற்ற இடமும் காஞ்சியே! திருக்குறிப்புத் தொண்டர், சாக்கியர் போன்றோர் முத்தி அடைந்த நகர். இத்திருக்கோயிலினுள் மாமரம் ஒன்றுளது. இம்மரம் 3600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது புவியியல் அறிஞர்களின் ஆராய்ச்சியின் முடிவு. இம்மரத்தில் 4 கிளைகள் நான்மறையை உணர்த்துகின்றன. மாம்பழக் காலங்களில் ஒவ்வொரு கிளைகளிலும் காய்த்துப் பழுக்கும் மாம்பழங்கள்

தனிச்சுவை கொண்டன. நவக்கிரகங்கள் தத்தமக்கு உரிய வாகனங்களில் அமர்ந்திருப்பது சிறப்பான காட்சி.

பிரமனுந் திருமாலுங் கைதொழப் பேரழ லாயபெம்மான்
அரவஞ் சேர்சடை அந்தணன் அணங்கினொடு அமருமிடம்
கரவில்வண் கையினார்கள் வாழ்கலிக் கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ வல்வினை மாய்ந்துறுமே. (1.133.9)

பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை யேகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே. (5.47.1)

ஆலம் தான்உகந்து அமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழுது ஏத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. (7.1)

ஏகம்பத்தில் இயல்பாய் இருந்து (8.2.77)

2. திருக்கச்சிமேற்றளி - 631501

இறைவன் : திருமேற்றளி நாதர்
தீர்த்தம் : விஷ்ணுதீர்த்தம்
பாடியோர் : அப்பர் 10, சுந்தரர் 10 பாடல்கள்.

திருக்கச்சியின் மேல்திசையில் அமைந்துள்ளதால் திருக்கச்சி மேற்றளி எனப் பெற்றது என்பர். (மேற்குப் பாகமாகிய பிள்ளையார் பாளையத்தில் உள்ளது.) திருமால் சிவவடிவம் பொருட்டுத் தவம் செய்து கொண்டிருந்தபோது திருஞானசம்பந்தப் பெருமான் இங்கு வந்து திருப் பதிகம் பாடிட, திருமாலும் தான் நினைத்த சிவவடிவம் பெற்றதலம். அச்சந்நிதியே 'ஓத அருளீசுவரர்' ஆகும். மற்றொரு சந்நிதியில் 'திருமேற்றளியீசுரர்' மேற்கு நோக்கி வீற்றுள்ளார். இவ்விரண்டு சந்நிதிகளின் மேற்கில் அவர் திருப்பாடலை உற்றுக்கேட்ட முத்தீசுரர் கோயிலும் உளது.

மாயனாய் மால னாகி மலரவ னாகி மண்ணாய்த்
தேயமாய்த் திசையெட் டாகித் தீர்த்ததமாய்த் திரிதர் கின்ற
காயமாய்த் காயத்துள்ளார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏயமென் றோளி பாக ரிலங்குமேற் றளிய னாரே 4.43.6

நானேல் உன்னடியே நினைந்தேன் நினைதலுமே
ஊனே இவ்வுடலம் புகுந்தாய்என் ஒண்சுடரே
தேனே இன்னமுதே திருமேற் றளியுறையும்
கோனே உன்னையல்லால் குளிர்ந்தேத்த மாட்டேனே. 7.6

3. கச்சி அநேக தங்காவதம் - 631501

இறைவன் : அநேக தங்காபதேசுரர்
தீர்த்தம் : தாணு
பாடியோர் : சுந்தரர்-10 பாடல்கள்.

காஞ்சியின் தென்மேற்காய்ப் புத்தேரித் தெருவழியாகக் கயிலாச நாதர் கோயில் செல்லும் வழியிலுள்ள ஒரு பெரும்பள்ளிக் கட்டடத்தின் அருகே அகல சந்தொன்று உளது. அதனுள் சென்றால் இச்சிறிய கோயில். பெரிய வடிவில் பெருமானார் லிங்கவடிவில் காட்சி தருகின்றார். (மாலை 6 மணிக்குள் கயிலாச நாதர் கோயிலுக்குச் செல்ல வேண்டும். கலை நுட்பம் மிகுந்த அதி அற்புதக் கோயில். இக்கோயில் திருக்குட முழுக்கிற் காகப் பல்லவன் இறைவனிடம் வேண்ட இறைவன் பூசலார் மனத்தினுள் கட்டிய கோயிலுக்குச் சென்றார்.)

கட்டு மயக்கம் அறுத்தவர் கைதொழுது
ஏத்தும் இடம்கதி ரோன்ஒளியால்
விட்ட இடம்விடை யூர்தி இடங்குயில்
பேடைதன் சேவலோடு ஆடுமிடம்
மட்டுமயங்கி அவிழ்ந்த மலர் ஒரு
மாதவி யோடு மணம் புணரும்
அட்ட புயங்கப் பிரானது இடங்கலிக்
கச்சி அனேகதங் காவதமே. (7.7)



4. திருவோணகாந்தன்தளி- 631502

இறைவன் : ஓணேஸ்வரர் காந்தேஸ்வரர், சயேந்திர நாதர்
தீர்த்தம் : இந்திர, கரை தீர்த்தங்கள்
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்

காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயிலுக்கு மேற்கிலுள்ள சர்வதீர்த்தத்திற்கு $1^1/_2$ கி.மீட்டர் தொலைவு. காஞ்சி-அரக்கோணம் பேருந்துப் பாதை. பஞ்சுப்பேட்டைத் துணைமின் நிலையம் செல்ல வலப்புறம் பிரியும் சிறிய பாதையில் செல்ல வேண்டும்.

சுந்தரர் பொன்பெற்ற தலங்களில் ஒன்று. வாணாசுரனுடைய சேனைத் தலைவர்களாகிய ஓணன், காந்தன் என்னும் இரு அசுரர்கள் பூசித்தத் தலம். மூன்று சந்நிதிகள் உள்ளன. (பாண்டி நாட்டுக் காளையார் கோவிலிலும் மூன்று இலிங்கங்கள் தனித்தனியான சந்நிதிகளில் இத்தலம் போன்று உள்ள அமைப்பைக் காணலாம்.) ஓணன் பூசித்த மூர்த்தியும், காந்தன் வணங்கிய மூர்த்தியும், வடபாலும், சலந்தரன் வணங்கிய மூர்த்தி தென்பால் வேறோர் ஆலயத்திலும் எழுந்தருளி உள்ளார்கள்.

நெய்யும்பாலும் தயிருங் கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையில் ஒன்றும் காணம் இல்லைக்
கழலடி தொழுது உய்யின் அல்லால்
ஐவர் கொண்டிங்கு ஆட்டஆடி
ஆழ்குழிப் பட்ட அழுத்து வேனுக்கு
உய்யு மாறொன்று அருளிச் செய்வீர்
ஓண காந்தன் தளியு ளீரே. 7.1

5. கச்சி நெறிக்கரைக்காடு (திருக்காலிமேடு) - 631501

இறைவன் : கரைத்தெரு நாகேசுவரர்
தீர்த்தம் : இந்திர தீர்த்தம், காரை தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

இன்று திருக்காலீசுரன் கோயில், திருக்காலிமேடு என வழங்கப் படுகின்றது. இரயில் சாலையிலுள்ள தலைமை அஞ்சல் நிலையம் எதிரில் திருக்காலிமேட்டுக்குச் செல்லும் பாதையில் செல்ல வேண்டும். புதன் பூசித்தத் தலம். தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் பேரழகு வாய்ந்தது. சிறிய கோயில்.

பிறைநவின்ற செஞ்சடைகள் பின்தாழப் பூதங்கள்
மறைநவின்ற பாடலோடு ஆடலராய் மழுவேந்திச்
சிறைநவின்ற வண்டினங்கள் தீங்கனிவாய்த் தேன்கதுவும்
நிறைநவின்ற கலிக்கச்சி நெறிக்கரைக் காட்டாரே. 3.65.4.

6. திருமாகறல் - 631603

இறைவன் : அகத்தீசுரர்
இறைவி : திரிபுவனேஸ்வரி
தீர்த்தம் : அக்கினிதீர்த்தம், நவ்வி தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் - 11 பாடல்கள்.

காஞ்சி- உத்திரமேரூர் சாலையில் ஓரிக்கையைத்தாண்டி உள்ளது. (காஞ்சி-மாகறல் 15 கி.மீ. தொலைவு.)

இராஜேந்திர சோழனுக்கு இறைவன் பொன்னுடும்பாகத் தோன்றி, அவன் துரத்துங்கால் ஓடிப் புற்றில் ஒளிந்து வெளிப்பட்டருளினரென்பர். இறைவன் புற்றிலிருந்து தோன்றினார். உடும்பு தழுவிக் கொண்டிருக்கின்றது. மிகத் தூய்மையான அழகிய கோயில். சோமவாரம் மிக விசேடம். பிள்ளைவரம் வேண்டுவோர் இங்கு அங்கப்பிரதட்சணம் செய்கின்றனர். முருகவேள் சந்நிதியும் சிறப்பு. (இங்கிருந்து 6 கி.மீ. தொலைவில் இளையனார் வேலூர் என்ற சிறந்த முருகன் தலம் உள்ளது.)

மன்னுமறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை
யோரிலெழு மாகறலுளான்
மின்னைவிரி புன்சடையின் மேல்மலர்கள்
கங்கையொடு திங்களெனவே
உன்னுமவர் தொல்வினைக ளொல்கவுயர்
வானுலக மேறலெளி தே. (3.72.6)



7. குரங்கணில் முட்டம் - 631703

இறைவன் : வாலீசுரர்
இறைவி : இறையனார் வளையம்மை
தீர்த்தம் : வாலி தீர்த்தம், நளகங்கை
தலவிருட்சம்: இலந்தை மரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் - 11 பாடல்கள்.

குரங்கு-வாலி; அணில், முட்டம்- காகம் இம்மூன்றும் பூசித்த பெருமை கொண்டது. சிறிய கோயில். கோயில் நுழைவாயிலுள்ள முகப்புத் தூணில் இவற்றை விளக்கும் செதுக்கிய படங்களைக் காணலாம். காஞ்சி- வந்தவாசி பேருந்து சாலையில் தூசி எனும் கிராமம் தாண்டி ஊர். சுமார் 8 கி.மீட்டர். மாகறலிலிருந்தும் இத்தலத்திற்குச் செல்லலாம்.

சூலப்படை யான்விடை யான்சுடு நீற்றான்
காலன்றனை ஆருயிர் வவ்விய காலன்
கோலப்பொழில் சூழ்தகு ரங்கணில் முட்டத்
தேலங்கமழ் புன்சடை யெந்தை பிரானே. (1.31.3)

8. திருவன் பார்த்தான் பனங்காட்டூர் - 604416
(பனங்காடு)

இறைவன் : பனங்காட்டு நாதர்
இறைவி : அமிர்தவல்லி
தீர்த்தம் : சடாகங்கை
தலவிருட்சம்: பனை
பாடியவர் : சுந்தரர் 10 பாடல்கள்.

திண்டிவனம்-காஞ்சி செல்லும் சாலை வழியில் குரங்கணில் முட்டம் பார்தது திரும்பி அதேவழியில் வந்து காஞ்சி செல்லும் பாதை வழி 3/4 கி.மீ செல்ல 'மோரணம்' என்ற பெயர்ப்பலகை பார்த்து அச்சாலை வழி செல்லின் பனங்காடு வரும். பிறவழிகள் சுற்று மற்றும் நினைவில் வைத்துக் கொள்வதும் அரிது.

கோயிலினுள் இரண்டு இறைவன் சந்நிதிகள் முதலில் இருப்பது புலத்தியர் வழிபட்டது.

இறைவன் : கிருபாநாதேசுவரர்
இறைவி : கிருபாநாயகி

அடுத்து அகத்தியர் பூசித்த இறைவன் சந்நிதி.

இறைவன் : தாலபுரீசுவரர்
இறைவி : தூலகோமளபதாம்பாள்

கோயிலின் உள் மண்டபத்தில் வாலி உருவம் கொண்டுள்ள தூண் உளது. வெளியில் இராமன் உருவம் கொண்ட தூண் உளது. இராமன் உருவம் கொண்ட பாகத்திலிருந்து பார்த்தால் வாலிதூண் தெரியாது; வாலி உருவம் கொண்ட தூணிலிருந்து இராமன் உருவம் பொறிக்கப்பட்ட தூண் தெரியும். இதே நிலை சேலம் தாரமங்கலத்திலுள்ள சிவன்கோயிலிலும் பார்க்கலாம்.

பனையைத் தலமரமாகக் கொண்ட தலங்கள்

1. திருப்பனந்தாள்
2. திருப்பனையூர்
3. திருவோத்தூர்
4. புறவார்பனங்காட்டூர்
5. வன்பார்த்தான் பனங்காட்டூர்
6. திருமழபாடி.

வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலையைப்
பஞ்சிச்சீ றடியாளைப் பாகம்வைத்து உகந்தானை
மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்துளங் கள்பிரானை நினையாதார் நினைவென்னே. 7.8

9. திருவோத்தூர் (செய்யாறு) - 604407

இறைவன் : வேதநாதேசுரர்
இறைவி : இளமுலைநாயகி
தீர்த்தம் : கலியாணகோடி
தலவிருட்சம்: பனைமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

செய்யாறே திருவோத்தூர். காஞ்சி, திருவண்ணாமலை, போளூர், ஆரணி, வந்தவாசி முதலிய ஊர்களிலிருந்து பேருந்து வசதி உண்டு. ஓத்து-வேதம். இறைவன் மறைக்குப் பொருள் கூறிய இடமாதலால் இத்தலம் திருவோத்தூர் என அழைக்கப் பெற்றது. கோயிலுக்கு அருகில் செய்யாறு ஓடுகிறது. நந்தி திரும்பியுள்ளது. வடக்குச் சுற்றில் ஐம்பெரு

பஞ்சபூத இலிங்கங்கள் உள. ஐம்பூதங்களை இவை நினைவுபடுத்தும். சிவனடியார் ஒருவர் வைத்த பனைகள் ஆண் பனையாக இருந்தது பற்றிச் சில சமணர் எள்ளி நகையாட; பின்னர் இங்கு வந்த திருஞானசம்பந்தப் பெருமான் 'குரும்பையாண் பனையீன் குலையோத்தோர்' எனப்பாடிட அனைத்து ஆண்பனைகளும் பெண்பனையாய் மாறிக் காய்த்தன. கோவிலினுள் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும் உள்ளது.

குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின்று ஆடுவர்
அழையா மேயருள் நல்குமே. 1.54.5

10. திருவல்லம் (திருவலம்) - 632515

இறைவன் : வல்லநாதர்
இறைவி : வல்லாம்பிகை
தீர்த்தம் : திருவல்லம்
தலவிருட்சம்: வில்வமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்.

இரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ. ராயவேலூரிலிருந்து 9 கி.மீ. ஆற்காட்டிலிருந்து இராணிப்பேட்டை வழியாகக் காட்பாடி செல்லும் சாலையில் உள்ளது. இங்கிருந்து பிரசித்தி பெற்ற வள்ளிமலை 10 கி.மீ. ஸ்ரீ-ல-ஸ்ரீ மௌன சுவாமிகளின் பெருமுயற்சியால் கோயில் சிறப்பாக விளங்குகிறது. சுவாமிகளின் ஜீவசமாதி கோயிலின் முன் உள்ளது. நந்தியெம்பெருமான் திரும்பியுள்ளார். இவருக்கு அருகில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பெரிய நந்தியும் திரும்பியே உள்ளது.

சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும் வண்ணம்
நேர்ந்தவன் நேரிழை யோடுங்கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச்செய்தே
சேர்ந்தவன் உறைவிடந் திருவல்லமே. 1.113.5

11. திருமாற்பேறு (திருமால்பூர்) - 631053

இறைவன் : மணிகண்டேசுரர், மால்வணங்கீசர்
இறைவி : அஞ்சனாட்சியம்மை, கருணைநாயகி
தீர்த்தம் : அரிதீர்த்தம்
தலவிருட்சம்: வில்வம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 21, அப்பர் 30 பாடல்கள்.

வழி: காஞ்சி- அரக்கோணம் அடிக்கடி பேருந்து உளது. காஞ்சிக்கு வடமேற்கே 11 கி.மீ. இரயில் நிலையம் தாண்டி முதன்மை சாலை யிலிருந்து ஊருக்குச் செல்லும் சாலை வழியே சென்றால் திருக்கோயிலை அடையலாம்.

திருமால், சலந்தாசுரனைக் கொன்ற சக்கரம் பெற சிவபிரானிடம் வேண்டிட ஆயிரம் தாமரை மலர் கொண்டு அருச்சிக்க, அதில் ஒரு மலர் குறைய உடன் தன் கண்ணையே எடுத்துப் பெருமானுக்கு அருச்சிக்க விரும்பிய நிலையில் பெருமான் அவர் முன் தோன்றி 'சுதர்சன' சக்கரத்தைக் கொடுத்தார் என்பர். கண்ணையேயிடந்து அருச்சிக்க முயன்ற காரணத்தால் 'பத்மாட்சன்' என்ற பெயரை நல்கினார். அந்நிலையில் திருமால் இத்தலத்தில் ஒரு விநாடிப் பொழுது தங்கியோர்க்கும் முத்தியளிக்க வேண்டுமென வேண்டிட அதற்கும் பிரான் அருள் பாலித்து மறைந்தார்.

சிவனார் எதிரே கூப்பிய கரங்களுடன் திருமால் வேண்டி நிற்கும் திருக்கோலத்தைக் காணலாம்.

திருமறுமார்பன் காவற் செயல்பெற.
அரனைப் பூசித்து இருகர முகிழ்த்து நேர்நின்று ஏத்திடமிதுவாம்
(தி.வி.புராணம் அருச்சனை 14)

நந்தியெம்பெருமான் எங்குமிலாதபடி நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இவ்வுருவம் கூப்பிய கரத்துடன் விளங்கும் திருமாலின் பின்புறமுள்ள சிறிய மண்டபத்தில் உள்ளது.

உரையா தார்இல்லை ஒன்றுநின் தன்மையைப்
பரவா தார்இல்லை நாள்களும்
திரை ஆர்பாலியின் தென்கரை மாற்பேறு
அரையா னேஅருள் நல்கிடே. 1.55.6

சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்தி ரம்சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளு ம்மாற் பேறரே. 5.60.3

12. திருவூறல் (தக்கோலம்) - 631151

இறைவன் : உமாபதீசுரர்
இறைவி : உமையம்மை
தீர்த்தம் : பார்வதி தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்.

வழி: அரக்கோணம் அருகில் உள்ளது. காஞ்சியிலிருந்து 30 கி.மீ. அரக்கோணத்திலிருந்து 12 கி.மீ. சென்னையிலிருந்து 91B, 91C, 107, 86, 138B போன்ற எண்ணுள்ள பேருந்துகள் செல்லுகின்றன. தட்சிணா மூர்த்தியின் திருவுருவம் மிக அற்புதமாக உள்ளது. காண்போரை ஈர்க்கும் தன்மையது. வியாழன் (குருவாரம்) அன்று திருக்கோயிலுக்கு மக்கள் பலர் வந்து தென்முகக் கடவுளை வணங்கிச் செல்வர். கோயிலும் நீண்ட நேரம் திறந்திருக்கும். கோயிலின் வெளிச்சுற்றில் ஒருவர் நந்தியெம்பெருமான் உளர். முன் அவர் திருவாயினின்று தண்ணீர் விழுந்து கொண்டே இருக்குமாம். அதனாலேயே ஊறல் எனப்பெயர் வந்தது எனவும் கூறுகின்றனர்.

ஏன மருப்பினொடும் எழிலாமையும்
பூண்டு அழகார் நன்றும்
கானமர் மான்மறிக்கைக் கடவுள்
கருதும் இடம்
வான மதிதடவும் வளர்சோலைகள்
சூழ்ந்து அழகார் நம்மை
ஊனம் அறுத்தபிரான் திருவூறலை
உள்குதுமே. 1.106.3



13. இலம்பையங் கோட்டூர் - 631553
(எலுமினியன் கோட்டூர்)

இறைவன் : சந்திரசேகரேசுரர்
இறைவி : கதிர் முலையம்மை
தீர்த்தம் : சந்திரதீர்த்தம்
தலவிருட்சம்: மல்லிகைச்செடி
பாடிய்வர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

வழி: திருவிற்கோலம் எனப்படும் கூவத்திற்கு அருகில்; சென்னையிலிருந்து 143B என்ற அரசுப்பேருந்து செல்கிறது. காஞ்சியினின்றும் நகரப்பேருந்து உண்டு. இறைவன் சுயம்பு. அரம்பையர் பூசித்த இலிங்கம் உளது. அவர் 16 பட்டைகளுடன் உள்ளார். இக்கோயிலிலிருக்கும் தட்சிணாமூர்த்தி பெருங்கீர்த்தி கொண்டவர். வேறெங்கும் காணாத திருக்கோலத்தினர். அவர் கொண்டிருக்கும் சின்முத்திரை என வழங்கும் ஞானமுத்திரை அடியார்களை நோக்கி இருக்கும். வழக்கிற்கு மாறாக சின்முத்திரையைத் தன் இதய கமலத்தில் நிறுத்தியுள்ளார். கண்கள் இரண்டும் கீழ்நோக்கி உள்ளன. வலக்கரத்தில் திரிசூலம். இடக்கரத்தில் உருத்திராட்ச மாலை. மற்றொரு இடக்கரம் கீழே உள்ள மலையின்மேல் ஊன்றிய நிலையில் உள்ளது. வலப்பாதம் மேல்நோக்கி யோகப் பட்டையுடன் நிற்கிறது. இடப்பாதம் முயல்மீது உள்ளது. தொடர்ந்து இருவாரம் வந்து இப்பெருமானை வழிபட்டால் துன்பம் தொலையும்; இன்பம் பெருகும். 21முறை இக்கோயிலை வலமாக வந்து வணங்கின் பெறக்கரிய பேறுகள் பெறலாம். உண்மை.

மலையினார் பருப்பதம் துருத்தி மாற்பேறு
மாசிலாச் சீமறைக் காடுநெய்த் தானம்
நிலையினான் எனதுஉரை தனதுஉரை யாக
நீறு அணிந்து ஏறுஉகந்து ஏறிய நிமலன்
கலையினார் மடப்பினை துணையொடும் துயிலக்
கானலம் பெடைபுல்கிக் கணமயில்ஆலும்
இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணிஎன் னெழில் கொள்வதியல்பே.

1.76.1

14. திருவாலங்காடு-631210

இறைவன் : ஊர்த்துவதாண்டவப் பெருமான்
இறைவி : வண்டார்குழலம்மை
தீர்த்தம் : மூர்த்தித் தீர்த்தம்
தலவிருட்சம்: பலா, ஆல்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 12, அப்பா 20, சுந்தரர் 10 பாடல்கள்.

சென்னை-அரக்கோணம் இரயில் பாதையில் திருவாலங்காடு நிலையத்திலிருந்து 5 கி.மீ. அரக்கோணம், திருவள்ளூர், திருப்பாசூர் வழியாகவும் செல்லலாம். (பேருந்து)

பஞ்ச சபைகளில் இரத்தினசபை. சிவனார் காளியுடன் திருநடனம் செய்தருளிய தலம்- ஊர்த்துவ தாண்டவம். காரைக்காலம்மையார் கயிலாயத்தில் தலையாலே நடந்து செல்ல இறைவன் 'அம்மையே' என அழைக்க இவரும் 'அப்பா' என்றார். இறைவன் ஆணைவண்ணம் இறைவனின் குஞ்சிய பாதத்திருவிடியைக் கண்டு மகிழ்ந்திட இத்தலம் போந்தார். நடராசர் சந்நிதியில் இவரின் உருவம் உள்ளது. இவ்வம்மையார் பாடிய திருப்பாடல்கள் 11-ஆம் திருமுறையில் உள்ளன. வடாரணியம், பழையனூர் ஆலங்காடு என்ற பெயர்களும் உண்டு.

ஈர்க்கும் புனல்சூடி யிளவெண்டிங்கள் முதிரவே
பார்க்கு மரவம்பூண் டாடிவேடம் பயின்றாரும்
கார்க்கொள் கொடிமுல்லை குருந்தமேறிக் கருந்தேன் மொய்த்
தார்க்கும் பழையனூ ராலங் காட்டெம் மடிகளே. 1.45.5.

கூடினார் உமைதன் னோடே குறிப்புடை வேடங் கொண்டு
சூடினார் கங்கை யாளைச் சுவறிடு சடையர் போலும்
பாடினார் சாமவேதம் பைம்பொழிற் பழனை மேயார்
ஆடினார் காளி காண ஆலங்காட் டடிக ளாரே. 4.68.8.

எம்மான் எந்தை மூத்தப்பன்
ஏழேழ் படிகால் எமை ஆண்ட
பெம்மான் ஈமப் புறங்காட்டில்
பேயோடு ஆடல்புரிவானே
பன்மா மலர்கள் அவைகொண்டு
பலரும் ஏத்தும் பழையனூர்
அம்மா ஆலங்காடா உன்
அடியார்க்கு அடியேன் ஆவேனே. 7.9

15. திருக்காளத்தி - 517644

இறைவன் : காளத்திநாதர்
இறைவி : ஞானப்பூங்கோதை
தீர்த்தம் : பொன்முகலியாறு
தலவிருட்சம்: மகிழமரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 33, அப்பர் 11, சுந்தரர் 10 பாடல்கள்.

ஆந்திர மாநிலத்தில் உள்ளது. ரேணிகுண்டா இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்காக 24 கி.மீ. காளத்தி இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்காக 3 கி.மீ. சென்னை, காஞ்சியிலிருந்து பேருந்து வசதி உண்டு. ஸ்ரீ-சிலந்தி; காளம்-பாம்பு; ஹஸ்தி-யானை இவை பூசித்துப் பேறு பெற்றமையால் ஸ்ரீகாளஹஸ்தி எனப்பெயர் கொண்டது. பஞ்சபூதத் தலங்களில் காற்றுத்தலம். திருமால், நான்முகன், இலக்குமி, சரசுவதி, சனகாதியர், சுவேதாசுவதாரிதியர், நூற்றுப் பன்னிரு தேவரிஷிகள், உரோமசர், வசிட்டர், அகத்தியர், திக்பாலகர், யோகினிகள், ஆதிசேடன், முசுகுந்தராகிய அரசர், நக்கீரர், இந்திரன், இராமன் மேலும் எண்ணற்றோர் வழிபட்டுப் பேறுபெற்ற பெருந்தலம். காளத்தி என்றவுடன் நினைவிற்கு வருபவர் கண்ணப்பர். 'நாளாறில் கண்ணிரண்டு இடந்து அப்பவல்லேன் அல்லேன்' என்றார் பட்டினத்தடிகள். 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' என்பார் மணிவாசகர். கலைமலி சீர் நம்பியாய்த் திகழ்ந்த கண்ணப்பன் முத்திபெற்ற தலம். இவருடன் இறைவனைப் பூசித்து வந்த சிவகோசாரியாரும் பேறுபெற்ற தலம். ஞானப்பாலுண்ட சிவக்கன்று இறைவனை ஏத்தியதோடு மட்டுமின்றி கண்ணப்பரையும் வழிபட்டுப் பேரன்புயெய்திய செய்தி அறியாதார் யார்? ஆதிசங்கரரும் போற்றிய புனிதர் கண்ணப்பர். அவரின் திருவுருவம் மலைமேல் உள்ளது. இங்கு ஓடும் ஸ்வர்ணமுகி தென்வடலாக ஓடுகிறது. இறைவனின் கருவறையில் பெருமான் கண்டோர் மகிழும் வண்ணம் மிக உயரமாக ஆவுடையினின்று எழுந்தருளியுள்ளார். இக்கருவறையில் எரியும் தீபங்களில் ஒன்று காற்றினால் மோதப்பட்டாற்போல் எக்காலமும் அசைந்து ஆடிக்கொண்டே இருப்பது சிறப்பான செய்தி. பெருமான் சந்நிதியில் விபூதி வழங்கப்படுவதில்லை. நவக்கிரகங்கள் இல்லை. சனி மட்டும் உள்ளார். இராகு கேது பரிகாரத்தலம்.

வேய்அனைய தோளுமையொர் பாகமது
வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடில்நட
மாடிமலை தன்னைவினவில்

வாய்கலச மாகவழி பாடுசெயும்
வேடன் மல ராகுநயனம்
காய்கணையி னால்இடந்து ஈசனடி
கூடுகா ளத்தி மலையே. 3.69.4

செற்றான்காண் என்வினையைத் தீயாடி காண்
திருவொற்றி யூரான்காண் சிந்தை செய்வார்க்
குற்றான்காண் ஏகம்பம்மேவி னான்காண்
உமையாள்நற் கொழுநன் காண் இமையோரேத்தும்
சொற்றான்காண் சோற்றுத் துறையு ளான்காண்
சுறாவேந்தன் ஏவலத்தை நீறா நோக்கக்
கற்றான்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவனென் கண்ணு ளானே. 6.8.4

கொண்டாடும் விடையாய் சிவனேஎன் செழுஞ்சுடரே
வண்டா ருங்குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும் கணநாதன்எங் காளத்தியாய்
அண்டா உன்னை அல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 7.1



4. திருவள்ளூர்

1. திருப்பாசூர்
2. திருவெண்பாக்கம்

1. திருப்பாசூர் (திருப்பாச்சூர் வழக்கு) - 631203

இறைவன் : பாசூர் நாதர்
இறைவி : பசுபதநாயகி
தீர்த்தம் : சோம தீர்த்தம்
தலவிருட்சம்: மூங்கில் மரம்
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 21 பாடல்கள்.

வழிகள்:

1. திருவள்ளூர்- பேரம்பாக்கம் நகரப்பேருந்து.
2. காஞ்சி- கடம்பத்தூர் வழி- திருவள்ளூர் செல்லும் சாலை கடம்பத்தூரை அடுத்துப் பாசூர்.
3. சென்னை- திருவாலங்காடு வழி- அரக்கோணம் செல்லும் சாலையில் உள்ளது.
4. சென்னை- திருத்தணி பேருந்து சாலை. கடம்பத்தூர் சாலை பிரியுமிடத்து.

பெரியகோயில். பாசு-மூங்கில். பெருமான் மூங்கில் அடியில் தோன்றிய தலம். ஒரு சந்நிதியில் 16 பிள்ளையார் உள்ளனர். இச்சந்நிதி சிறப்புடையது.

கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிவார்கள்
மெய்யார் குறையும் துயரும் தீர்க்கும் விகிர்தனார்
நெய்யா டுதல்அஞ்சு உடையார் நிலாவும் ஊர்போலும்
பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே. 2.60.3

நாறு கொன்றையும் நாகமும் திங்களும்
ஆறும் செஞ்சடை வைத்த அழகனார்
காறு கண்டத்தர் கையதோர் சூலத்தர்
பாறின் ஓட்டினர் பாசூர் அடிகளே. 5.25.3

2. திருவெண்பாக்கம் - 602023

இறைவன் : வெண்பாக்கநாதர், ஊன்றீசுவரர்
இறைவி : மின்னலொளியம்மை, கனிவாய் மொழியம்மை
தீர்த்தம் : கயிலாய தீர்த்தம்
தலவிருட்சம்: இலந்தை
பாடியவர் : சுந்தரர் *11* பாடல்கள்.

வழி:- திருவள்ளூரிலிருந்து செல்லலாம் (*11* கி.மீ). பூண்டி நீர்த்தேக்கம் உள்ள இடம், திருவளம்புதூர் எனப்படுகிறது. முன் நீர்த்தேக்கத்தின் உள் கோயில் இருந்தது. நீர்த்தேக்கம் கட்ட அதே போன்ற கோயிலைத் தற்போது உள்ள இடத்தில் கட்டியுள்ளனர். பெருமான் முன்னுள்ள நந்தியின் கொம்பு ஒன்று (இடப்பக்கம்) ஒடிந்துள்ளது. நந்தி அருகே சுந்தரர் உருவம் உளது.

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளாயே என்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம்போகீர் என்றானே. 7.1



5. சென்னை மாநகர்

1. திருமயிலை
2. திருவான்மியூர்
3. திருவேற்காடு
4. திருவொற்றியூர்
5. திருவலிதாயம்
6. வடதிருமுல்லைவாயில்
7. திருக்கள்ளில்
8. திருவிற்கோலம்

1. திருமயிலை - 600004

இறைவன்	:	கபாலீச்சுரர்
இறைவி	:	கற்பகவல்லியம்மை
தீர்த்தம்	:	கபாலி, மணிகர்ணிகை
விருட்சம்	:	புன்னை, புன்னாகம்
பாடியவர்	:	திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

திருமயிலை, மயிலை, மயிலாப்பூர் என்று அழைப்பதும் உண்டு. சென்னை மாநகரின் பல பகுதிகளிலிருந்தும் மாநகரப் பேருந்து வசதி உண்டு. உமையம்மை மயிலுரு கொண்டு பூசித்ததால் இப்பெயர் பெற்றது. மயிலுடன் தொடர்புடைய இடங்கள் நந்தமிழகத்தில் நான்கு. மயில் பூசித்து புகழ்பெற்ற தலங்கள் இரண்டு. ஒன்று அன்னை கற்பகாம்பிகை மயிலுருவாய் இருந்து கபாலீச்சுரனைத் தொழுத மயிலாப்பூர் பிறிதொன்று அசுர குலத்தலைவனான சூரபன்மன் மயில் உருவில் குன்றாக மாறி முருகனின் அருள் வேண்டி தவம் இருந்த மயிலம். மயில் எம்பெருமான் கந்தவேளை நினைந்து மகிழ்ந்தாடிய இடங்கள் ஒன்று திருமயிலாடி, மற்றொன்று மயிலாடுதுறை. இச்செய்தியை இக்கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் உள்ள மயிலம்மை பூசிக்கும் இலிங்கமூர்த்தி விளக்கும். இராமபிரான் பூசித்துப்பேறு பெற்றமை பற்றி ஐப்பசி ஓணத்தில் திருவிழா நடந்ததாகப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. வாயிலார் நாயனார் அவதாரத்தலம். இவர் சந்நிதி தெற்குப் பிரகாரத்தில் வடமுகமாய் உள்ளது. சிவநேசர் என்ற வணிகர் குல அடியாரின் நன்மகளாய்த் தோன்றிய 'பூம்பாவை' எனும் பெண் அரவு தீண்டி இறக்க, அடியாரும் அப் பூம்பாவை திருஞானசம்பந்தப் பெருமானுக்கே உரியவர் என்று எண்ணி இருந்தமையால் மகளைத் தகனம் செய்து எலும்பினையும்

சாம்பலையும் ஒரு பானையில் சேகரித்து வைத்திருந்தார். சம்பந்தப் பெருமான் இப்பதிக்கு எழுந்தருளியபோது அவர்பால் சிவநேசர் தம் மகள் பற்றிய செய்தியைக் கூறினர். உடன் பெருமானும் 'மட்டிட்ட புன்னையங் கானல்' (2-ஆம் திருமுறை 11 பாடல்கள்) எனும் திருப்பதிகம்பாடி அனைவரும் வியப்புறும்படி மாண்ட பூம்பாவையை உயிருடன் வரச் செய்தார். இன்றும் இந்நிகழ்ச்சி இத்திருக்கோயிலில் நிகழும் பிர்மோற்சவத்தில் எட்டாம் திருநாளில் நிகழ்கின்றது. மேற்கு வாயிலுக்குச் சற்றே வடபால் திருஞானசம்பந்தப் பெருமானின் திருவுருவம், குடத்தின்மேல் பூம்பாவை அமர்ந்துள்ள உருவத்தினையும் கண்டு மகிழலாம். தெற்குப் பிரகாரத்தில் சிங்கார வேலவர் சந்நிதி அற்புதமாக உள்ளது. இறைவி சந்நிதியும் அப்படியே! இறைவன் காண்போர் பரவசம் அடையும்படி வீற்றுள்ளார். மேற்குப் பார்த்த சந்நிதி. பங்குனி மாதத்தில் இக்கோயிலில் நிகழும் 63 நாயன்மார் உற்சவம் மிகச் சிறப்புடையது. பிரதோஷம் மிகச் சிறப்பு. திருக்கோயிலுக்கு மேற்கில் அழகிய குளம் உளது. வான்புகழ் வள்ளுவர் மயிலாப்பூரில் பிறந்தார் என்பாரும் உளர்.

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய் (2.47.5)

2. திருவான்மியூர் - 600041

இறைவன் : மருந்தீசுரர்
இறைவி : சொக்கநாயகி
பாடியோர் : திருஞானசம்பந்தர் 21, அப்பர் 10 பாடல்கள்.

சென்னை மாநகரின் பல பகுதிகளிலிருந்தும் மாநகர் பேருந்து வசதி உண்டு. கடற்கரையோரக் கோயில். தேவர்கள் அமிழ்தத்தால் இலிங்கம் செய்து பூசித்த அற்புதத் தலம். இக்காரணத்தினாலேயே இறைவனும் 'மருந்தீசர்' எனப்பட்டார். இலிங்க மூர்த்தி சற்றே வடபால் சாய்ந்துள்ளார். இறைவன் திருமேனியில் பசு ஒன்று பால் சொரிந்து அபிஷேகம் செய்த பொழுது பட்ட குளம்பின் சுவடினைச் சிவாச்சாரியார் துணை கொண்டு பார்க்கலாம். இறைவன் மேற்குத் திசை பார்த்துள்ளான். வான்மீகர் பூசித்தத் தலம்.

மஞ்சு லாவிய மாடம திற்பொலி மாளிகைச்
செஞ்சொ லாளர்கள் தாம்பயிலும்திரு வான்மியூர்த்
துஞ்சு வஞ்சிருள் ஆடல் உகக்கவல் லீர்சொலீர்
வஞ்சு நஞ்சுண்டு வானவர்க்(கு) இன்னருள் வைத்ததே. (2.4.4)

மந்த மாகிய சிந்தை மயக்கறுத்(து)
அந்த மில்குணத்(து) ஆனை யடைந்துநின்று
எந்தை ஈசனென் ஏத்திட வல்லீரேல்
வந்து நின்றிடும் வான்மியூர் ஈசனே. (5.3)

(மருந்தீசர் திருக்கோயில் அருகே கலாக்ஷேத்திரக் கட்டடத்திற்கு அருகில் 6666 பாடல்களை முருகன்மீது பாடிய அவனின் நல்லடியார் ஸ்ரீ-ல-ஸ்ரீ பாம்பன் சுவாமிகளின் சமாதி உளது. அருளாளர் அனைவரும் சென்று, கண்டு, வணங்க வேண்டிய இடம். தவறாமல்- மறவாமல்- சென்று திருவருள் பெறுக.)

3. திருவேற்காடு - 600077

இறைவன் : வேதபுரீசுவரர் வேற்காட்டீசர்
இறைவி : வேற்கண்ணியம்மை, பாலாம்பிகை
தீர்த்தம் : வேற்கண்ணி வேலாயுதத் தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

சென்னை மாநகரின் பல பகுதிகளினின்றும் மாநகர்பேருந்து வசதி உண்டு. திருவேற்காடு என்றவுடன் அனைவருக்கும் நினைவிற்கு வருவது கருமாரி அம்மனே! இக்கருமாரியைக் கண்ணாரக்கண்டு, மகிழ்ந்து வணங்கி இத்திருக்கோயிலுக்கு மேற்குத் திசையிலுள்ள சிவாலயம் செல்ல வேண்டும். ஒரு கிலோ மீட்டர் தொலைவு. அங்குள்ள திருக் கோயிலே திருஞானசம்பந்தப் பெருமானால் பாடல் பெற்ற தலம். மூர்க்க நாயனாரின் அவதாரத்தலம். இவரின் திருவுரு துவார பாலகர்களுக்கு இடையே உள்ளது. இறைவனின் திருவுருவின் பின்னே அம்மையை அப்பன் திருமணம் செய்து கொண்ட அழகிய கோலத்தைக் காட்டும் சிலா வடிவங்கள். அகத்தியர் இறைவன் திருமணத்தைக் கண்டுகளித்த இடங்களில் இத்தலமும் ஒன்று. தென்கோடியிலுள்ள வேதாரண்யம் திருக்கோயில் இறைவனின் பின்னே இதே போன்ற அற்புதக் கோலத்தைக் காணலாம். அதனால் இத்தலம் வடவேதாரண்யம் என்றும் அழைக் கப்படுகிறது. நஞ்சு தீண்டாத்தலம் என்பர். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள வேற்கண்ணியம்மையையும், திருவலிதாயம் (பாடி) ஜகதாம்பிகை யையும், திருவொற்றியூர் வடிவாம்பிகையையும் ஒரே நாளில் கண்டு

வணங்குவது பெருஞ்சிறப்பாம். இது பண்டு தொட்டு நடந்து வருவது இதனால் அளவிடற்கரிய நற்பேறுகள் கிட்டும்.

ஆழ்க டலெனக் கங்கைக ரந்தவன்
வீழ்ச டையினன் வேற்காடு
தாழ்வு டைமனத் தால்பணிந்(து) ஏத்திடப்
பாழ்படும் அவர் பாவமே. (1.57.4)

4. திருவொற்றியூர் - 600019

இறைவன் : ஆதிபுரீசுரர், மாணிக்கத்தியாகர்
இறைவி : வடிவுடையம்மை
தீர்த்தம் : பரமதீர்த்தம்
விருட்சம் : மகிழமரம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 41, சுந்தரர்: 10 பாடல்கள்.

மாந்தாத்தா என்னும் மன்னன் தன் எல்லைக்குட்பட்ட ஊர்களில் நிலவிய பஞ்சத்தைத் தவிர்க்கும் பொருட்டுத் திருக்கோயில் தலங்களின் கட்டளைகளைக் குறைத்து எழுதச் சொல்லி பறையறிவிக்கச் செய்த பொழுது தியாகேசர் ஏட்டில் வரிபிளந்து 'திருவொற்றியூர் நீங்கலாக' என்று எழுதியிருந்ததால் பெருமானார் 'எழுத்தறியும் பெருமான்' ஆயினர். திருவிளக்குத் தொண்டு செய்து வந்த கலியநாயனார் முத்திபெற்ற தலம். சுந்தரர் சங்கிலியாரைத் திருமணம் செய்து கொண்ட இடம். சுந்தரர் சங்கிலியார்க்கு மகிழமரத்தின் கீழ் செய்து கொடுத்த பிரமாணம் ஐதீகத்தை முன்னிட்டு 'மகிழ உற்சவம்' மாசி மாதத்தில் பிரபலமாக நிகழ்கிறது. பெரியகோயில்.

திருக்கோயிலினுள் அநேக இலிங்கங்கள் உள. தியாகேசர் சந்நிதி விசேடம். பெருமானுக்குக் கவசம் இட்டுள்ளனர். கார்த்திகை பௌர்ணமி அன்று மட்டும் கவசம் நீக்கப்படும். இச்சந்நிதிக்கு ஒருபால் வட்டப் பாறையம்மை என்ற துர்க்கை அம்மன் சந்நிதி உள்ளது. அம்மனின் முன்னே கிணறு ஒன்று பண்டு இருந்ததாம். அதனை இப்பொழுது மூடியுள்ளனர். இச்சந்நிதிக்கு வடக்கே ஆதிலிங்கம் வெகு பளபளப்பாய் உள்ளது. சங்கிலியார், சுந்தரர் இவர்களின் உற்சவ விக்கிரங்கள் மணக் கோலத்தில் உள்ளன. பிரளய வெள்ளத்தை விலக்கச் செய்தமையால் ஒற்றியூர் எனப்பெயர் பெற்றது என்பர்.

கயிலையங்கிரியில் பொழுது சாயுங்காலத்தில் தாம் செய்கின்ற பிரதோஷ நடனத்தைத் தரிசித்த நந்திதேவர் அமர்ந்திருந்து தாம் செய்கின்ற நித்திய நடனத்தையும் தரிசிக்க வேண்டுமென்ற வேண்டுகோளினை நிறைவேற்றும் பொருட்டுச் சிவனார் நடனம் செய்கின்றார். இதனைத்

திருமால், நான்முகன், ரோமச முனிவர் என்பவர்கள் கண்டு வணங்கி பேறுபெற்ற தலம். அகத்தியருக்குப் பெருமானார் தன் திருக்கல்யாண காட்சி கொடுத்த தலங்களில் இதுவும் ஒன்று. முற்றும் துறந்த பட்டினத்து அடிகளுக்குப் பேய்க்கரும்பு இனித்துப் பட்டினத்தார் பேறுபெற்ற தலம். இவரின் சமாதிக் கோயில் இத்திருவொற்றியூர் திருக்கோவிலினின்றும் ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அப்பர் பெருமானுக்கும் தனிக்கோயில் ஒன்று இவ்வூரில் உள்ளது.

இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள வடிவுடையம்மை மீது வள்ளல் பெருமானுக்கு நீங்கா நல்லன்பு உண்டு. அம்மை மிக சக்தி வாய்ந்த பெருமாட்டி. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தாங்கொணா மகளிர் பெருங்கூட்டம் அம்மையின் சந்நிதியை ஆக்கிரமித்துக் கொள்ளும். ஒரே நாளில் வடிவுடையம்மையையும் திருவேற்காடு வேற்கண்ணியம்மையும், திருவலிதாயம் ஜகதாம்பிகையையும் கண்டு வணங்கல் பெருஞ்சிறப்பாம். அடியவர்கள் அம்மையின் திருவருளைப் பெற முற்படுவார்களாக.

மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகடல் ஓடும்போது
மதமெனும் பாறைதாக்கி மறியும்போ(து) அறியவொண்ணா
துணையுனும் உணர்வைநல்காய் ஒற்றியூர் உடைய கோவே. (4.46.2)

மகத்திற் புக்கதோர் சனிஎனக்(கு) ஆனாய்
மைந்த னேமணி யேமண வாளா
அகத்திற் பெண்டுகள் நான்ஒன்று சொன்னால்
அழையேல போகுரு டாஎனத் தரியேன்
முகத்தில் கண்ணிழந்(து) எங்ஙனம் வாழ்வேன்
முக்க ணாமுறை யோமறை யோதீ
உகைக்கும் தண்கடல் ஓதம்வந்(து) உலவும்
ஒற்றி ஊரெனும் ஊர் உறைவானே (7.9)

5. திருவலிதாயம் (பாடி) - 600050

இறைவன் : வலிதாயநாதர்
இறைவி : தாயம்மை, ஜெகதாம்பிகை
தீர்த்தம் : வலிதாயம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்

சென்னை மாநகரிலிருந்து மாநகரப்பேருந்து வசதி உண்டு. T.V.S. லூகாஸ் நகரருகே உள்ள அழகிய சிறு கோயிலே திருவலிதாயமாம்.

ஆவடி, அம்பத்தூர் செல்லும் பேருந்துகளில் செல்லலாம். T.V.S. லூகாஸ் ஸ்டாப்பில் இறங்கி 10அடி சென்றால் மெயின்ரோட்டில் ஓர் அம்மன் கோயிலைக் காணலாம். அக்கோயில் திருவட்டை அம்மன் கோயில். அம்மன் பெயராலேயே தெருவும் உள்ளது; இத்தெரு கோயில் எதிரில் உள்ளது. இத்தெருவினின்று சிறு தொலைவு சென்றால் திருவலிதாயம் சிவன் கோயில். அழகிய சிறு கோயில். பிரகஸ்பதி, அனுமன் முதலியோர் பூசித்தத் தலம். கோயிலினுள் கிணற்று நீர் சுவையாக உள்ளது. குருஸ்தலம்.

பத்தரோடுபல ரும்பொலியம்மலர் அங்கைப் புனல்தூவி
ஒத்தசொல்லியு கத்தவர்தாம்தொழு(து) ஏத்த உயர் சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறைகின்ற வலிதாயம்
சித்தம்வைத்தஅடி யாரவர்மேலடை யாமற்றிடர் நோயே. (1.3.1)

6. வட திருமுல்லைவாயில் - 609113

இறைவன் : மாசிலாமணி ஈசுவரர்
இறைவி : கொடியிடை நாயகி அம்மை
தீர்த்தம் : பாலாறு, சுப்பிரமணிய தீர்த்தம்
பாடியவர் : சுந்தரர் 11 பாடல்கள்.

திருவலிதாயத்திற்கு அடுத்த நிறுத்தம் அம்பத்தூர். ஆவடி செல்லும் மாநகரப் பேருந்துகளில் ஏறலாம். அம்பத்தூர் பேருந்தில் ஏறினால் இறங்கி மீண்டும் அங்கிருந்து ஆவடி செல்லும் பேருந்தில் ஏறி முல்லைவாசல் நிறுத்தத்தில் இறங்க வேண்டும். முல்லைவாசல், திருமுல்லைவாசல் என்பன வழக்கில் உள்ளன. சென்ட்ரல் இரயில் சந்திப்பிலிருந்து ஆவடி செல்லும் மின்சார வண்டியில் ஏறி முல்லைவாசல் நிறுத்தத்தில் இறங்கி மெயின் சாலையை அடைந்து $1^1/_2$ கிலோமீட்டர் செல்லத் திருக் கோயிலை அடையலாம். சோழநாட்டின் தெற்கேவுள்ள திருமுல்லை வாயிலினின்றும் வேறுபட இவ்வூர் வட திருமுல்லைவாயில் எனப் பெயர் கொண்டது. சுந்தரரின் 10ஆம் பாடலால் இத்தலத்தின் பெயர்க் காரணத்தை அறியலாம். சுந்தரர் இத்தலத்து இறைவனிடம் 'படு துயர்களையாய்' என்று பாடிய திருப்பதிகம் சம்பந்தப் பெருமான் திருநெடுங்களத்து (சோழநாடு - காவிரி தென்கரைத்தலம்) இறைவன் மேல் 'இடர்களையாய்' என்ற பதிகத்தோடு ஒப்பாகும். இடர் நீங்கவும், படுதுயர் ஒழியவும் பெருமக்களின் தேவாரப் பாடல்களைப் பாடி உய்வோமாக. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள மாசிலாமணீசுவரர் சந்நிதி சிறப்பானது. கருவறைக்கு முன் இருபக்கங்களிலும் வெள்ளெருக்குத்

தூண்கள் உள்ளன. இத்தூண்களில் மூன்று இடங்களில் பூணிட்டுள்ளார்கள். வரும் அடியார்கள் சந்தனத் தைலத்தை அத்தூண்களில் தடவுகிறார்கள். இறைவனை நோக்கி எப்பொழுதும் இருக்கும் நந்தி இப்பெருமான் சந்நிதியில் பெருமானை நோக்காது பெருமான் பார்க்கும் திசையையே பார்க்கின்றார். (இவ்வமைப்பு நடு நாட்டுத்தலமான பெண்ணாடம் பிரகதீஸ்வரர் ஆலயத்திலும், சோழ நாட்டுக் காவிரி வடகரைத்தலமான திருவைகாவூர் தலக்கோயிலிலும், திருவண்ணா மலை மாவட்டம் திருவத்திபுரம் தலத்திலுள்ள செய்யாற்றுக் கரையிலுள்ள சிவன் கோயிலிலும் திருவலத்திலும் உள்ளன.) 'மாசிலாமணி ஈசுவரருக்கு யாரேனும் இடர் செய்வரோ' என்ற எண்ணத்தில் நந்தியெம் பெருமான் அமைந்துள்ளார் என்கின்றனர். கண்ணொளி இழந்த சுந்தரர் வழிச் செல்வோர் துணை கொண்டு இத்திருக்கோயிலை அடியார் வழிகாட்ட 'படுதுயர் களையாய்' எனத் திருப்பதிகம் பாடினார்.

திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என்(று) எண்ணி
ஒருவரை மதியா(து) உறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர்சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. (7.1)

7. திருக்கள்ளில் - 601103

(திருக்கண்டலம், திருக்கள்ளம் வழக்கு)

இறைவன் : சிவானந்தேசுவரர்
இறைவி : ஆனந்தவல்லியம்மை
தீர்த்தம் : சிவானந்த தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்.

வழிகள்:

1. சென்னை- கோயம்பேடு பேருந்து இவ்வழிச் செல்கிறது.
2. சென்னை ஆவடியிலிருந்து 20 கி.மீ. உள்ள பெரியபாளையம் அருகில்
3. திருவள்ளூர்-செங்குன்றம் பெரியபாளையம் சாலையில் தாமரைப் பாக்கம் கூட்ரோட்டினை அடைந்து பெரியபாளையம் செல்லும் பாதையில் திரும்பி வெங்கல் கிராமத்தை அடைந்து கன்னிகைப்பேர் வழிகாட்டியில் வலமாக 10 கி.மீ. செல்ல வேண்டும்.

பழுதடைந்த கோயில் சிவாச்சாரியாரின் பெருமுயற்சியால் அழகாகக் கட்டப்பட்டுள்ளது.

ஆடலான் பாடலான் அரவங்கள் பூண்டான்
ஓடுஅலாற் கலன்இல்லான் உறை பதியால்
காடு அலாற் கருதாத கள்ளின் மேயான்
பாடெலாம் பெரியார்கள் பரசுவாரே. 1.19.2

8. திருவிற்கோலம் (கூவம்) - 613203

இறைவன் : திரிபுராந்தர்
இறைவி : திரிபுராந்தகியம்மை
தீர்த்தம் : கூபாக்கினி தீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்.

வழிகள்:

1. சென்னையிலிருந்து நேராக பேருந்து உண்டு.
2. சென்னை- பெங்களூர், வேலூர், காஞ்சி நெடுஞ்சாலையில் சுங்குவார் சத்திரம் வந்து- பேரம்பாக்கம் வழியாக திருவள்ளூர் செல்லும் கிளைச்சாலையில் கூவம் சாலையில் 1 கி.மீ. வலப்புறமாக செல்க.
3. காஞ்சி-சுங்குவார் சத்திரம்-திருவள்ளூர் செல்லும் பாதையில் கூவம் சாலையில் இறங்குக. இலம்பையங்கோட்டூர் இத்தலத்திற்கு மிக அருகாமையில் உள்ளது.

இறைவன் சுயம்பு. அதிகமழை வருவதாக இருந்தால் இறைவன் வெண்மை வண்ணம் பெறுவார்; போர் வருவதாக இருந்தால் சிவந்த வண்ணம் பெறுவார் என்கின்றனர். (இறைவன் திரிபுரம் எரித்த காலத்தில் வில்லேந்திய கோலத்தில் இங்கு வந்து வீற்றிருந்ததையொட்டி திருவிற் கோலம் எனப்பெயர் கொண்டது என்பர். கூவம்-ஊர்; திருவிற்கோலம் கோயிலுள்ள இடம்.)

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூக மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே. 3.23.6

6. பாண்டிச்சேரி

1. இரும்பைமாகாளம் (இரும்பை)
2. அரசிலி (ஒழிந்தியாப்பட்டு)

1. இரும்பைமாகாளம் - 605010

இறைவன் : மாகாளேசுவரர்
இறைவி : குயில் மொழியம்மை
தீர்த்தம் : மாகாளதீர்த்தம்
தலவிருட்சம்: புன்னைமரம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்

வழி: பாண்டிச்சேரியிலிருந்து நகரப்பேருந்து உண்டு. பாண்டிச்சேரி திண்டிவனம் சாலையில் வடமேற்கே 8 கி.மீ. (இதற்கு அப்பால் 5 கி.மீ. தொலைவில் அரசிலி உள்ளது.)

மாகாளர் பூசித்தத் திருத்தலம். பங்குனி உத்திரம் விசேடம். பல காவடிகள் வருகின்றன. பிரகாரத்தில் முருகன் உள்ளார். கார்த்திகை சோமவாரம் தோறும் உற்சவம்.

பூசுமாசில் பொடியான் விடையான் பொருப்பான்மகள்
கூச ஆனை உரித்தபெரு மான்குறை வெண்மதி
ஈசன் எங்கள் இறைவன் னிடம்போய் இருப்பைதனுள்
மாசிலோர்கள் மலர்கொண்டு அணிகின்ற மாகாளமே. 2.117.5

2. அரசிலி (ஒழிந்தியாப்பட்டு) - 605010

இறைவன் : அரசிலி நாதர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : அரசடிதீர்த்தம்
தலவிருட்சம்: அரசமரம்
பாடியவர் : திருஞான சம்பந்தர் 11 பாடல்கள்

வழி: இரும்பை மாகாளம் பார்க்க. இரும்பையிலிருந்து 5 கி.மீ வாமதேவ முனிவர் பூசித்தது. சிவாச்சாரியார் வீடு அருகில் உள்ளது.

சிறிய அழகான கோயில்.

மிக்க காலனை வீட்டி
        மெய்கடக் காமனை விழித்துப்
புக்க வூரிடு பிச்சை
        உண்பது பொன்திகழ் கொன்றை
தக்க நூல்திகழ் மார்பில்
        தவளவெண் ணீறணிந்து ஆமை
அக்கின் ஆரமும் பூண்ட
        அடிகளுக்கு இடம்அர சிலியே. 2.95.4



7. துளுவ நாட்டுத்தலம்

1. திருகோகர்ணம்

(கோ-ஆ; கர்ணம்-காது)

இறைவன் : மகாபலநாதர்
இறைவி : கோகர்ணநாயகி
தீர்த்தம் : கோடிதீர்த்தம்
பாடியவர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10 பாடல்கள்

கருநாடக மாநிலம் மங்களூர். பேருந்தில் செல்லலாம். (தனிப்பிளசரில் மங்களூரிலிருந்து புறப்பட்டு உடுப்பி, கோகர்ணம், சிங்கேரி, தர்மஸ்தாலா, சுப்ரமண்யா, கொரநாடு- அன்னபூரணியின் தங்கத்திருமேனி, கடற்கரையோர பேரழகும் பிரமாண்டமான சிவனின் திருமேனி கொண்ட முண்டீஸ்வர், கோகர்ணம் - மூகாம்பிகை போன்ற புண்ணியத் தலங்களைக் கண்டு, வணங்கி, மகிழ்ந்து வரலாம்.) இலங்கை வேந்தனான இராவணன் சிவபெருமானிடம் தவமிருந்து விரும்பி வேண்டிப் பெற்றுவந்த சிவலிங்கத் திருமேனியை தன்னூரில் தாபிக்க எடுத்துவர, விண்ணோர் வேண்டுகோளின்படி விநாயகப் பெருமான் அவனிடமிருந்து அத்திருமேனியை ஒரு தந்திரத்தால் பெற்று அங்கேயே தாபனமும் செய்தார். பலமுறை முயன்றும் இராவணால் அத் திருமேனியை எடுக்க முடியவில்லை. பின்னர் வெறுங்கையோடு இலங்கை புகுந்தனன். இதனால் இப்பிரான் 'மகாபல லிங்கேசுவரர்' எனப் பெயர் பெற்றார். இலிங்கத்திருமேனி பூவின் காதுபோல் நீண்டும், செவித்துவாரம் போல் ஆவுடையில் இலிங்கம் இல்லாமல் துவாரம் மட்டுமே உள்ளது. இராவணனை ஏமாற்றிய விநாயகப் பெருமான் இத்திருக்கோவில் அருகே தனித்து கம்பீரமாய் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். நாமே நீராடிய பின்னர், தண்ணீர், பால் போன்றவற்றை விநாயகப் பெருமான் திருமேனியில் அபிஷேகம் செய்து மலர் வைத்தும் வணங்கலாம்.

கோகர்ண திருக்கோவிலிலுள்ள இலிங்கத் திருமேனியிலும் நாமே நீர், பால் போன்றன அபிஷேகம் செய்யலாம். குருக்கள் மந்திரம் மட்டும் கூறுவார். மலரிடுவதும் நாமே. ஆவுடையிலுள்ள துவாரத்தினின்று தீர்த்தத்தை நம் உடம்பில் தெளித்துக் கொண்டு, பருகவும் செய்யலாம். எப்பொழுதும் மக்கள் கூட்டம் மிகுந்து காணப்படுகிறது. இறைவன் சந்நிதிக்குப் பின்னே இறைவியின் சந்நிதி.

திருக்கோவில் எதிரில் அரபிக்கடல். பல வெளிநாட்டினரும் கடற்கரையில் காணப்படுகின்றனர். இறந்துபோன நம் மூதாதையர் களுக்கு நீத்தார்கடன் செய்யவும் (இராமேசுவரம்போல) இத்தலம் விசேடமானது.

பேதைமட மங்கையொரு பங்கிட
மிகுத்து இடபம் ஏறியமரர்
வாதைபட வண்கடல்எ ழுந்தவிடம்
உண்டசிவன் வாழும் இடமாம்
மாதரொடும் ஆடவர்கள் வந்தடி
இறைஞ்சிநிறை மாமலர்கள் தூய்க்
கோதைவரி வண்டிசை கொள் கீதமுரல்
கின்றவளர் கோகரணமே. 3.79.2

பிறையோடு பெண்ணொருபால் வைத்தான் றான்காண்
பேரவன்காண் பிறப்பொன்று மில்லா தான்காண்
கறையோடு மணிமிடற்றுக் காபாலி காண்
கட்டங்கன் காண்கையிற் கபால மேந்திப்
பறையோடு பல்கீதம் பாடி னான்காண்
ஆடினான் காண்பாணி யாக நின்று
மறையோடு மாகீதங் கேட்டான் றான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. 6.49.6



6. மலைநாட்டுத் தலம்


1. அஞ்சைக்களம்

இறைவன் : அஞ்சைக் களத்தப்பர்
இறைவி : உமையம்மை
தீர்த்தம் : சிவகங்கை
தலவிருட்சம்: சரக்கொன்றை
பாடியவர் : சுந்தரர் 20 பாடல்கள்.

கேரள மாநிலம் பிரசித்தி பெற்ற சிவன் கோயிலுள்ள திருச்சூரிலிருந்து 3 கி.மீ.

சுந்தரர், சேரமான் இவர்களின் உற்சவ விக்கிரகங்கள் உள்ளன. பரசுராமர் தாயைக் கொன்ற பாவம் நீங்கும் பொருட்டு பூசித்தத்தலம். வைணவ ஆழ்வார்களின் ஒருவரான குலசேகர ஆழ்வாரின் அவதாரத் தலம்.

தலைக்குத்தலை மாலை அணிந்த தென்னே
சடைமேற்கங்கை வெள்ளம் தரித்த தென்னே
அலைக்கும்புலித் தோல் கொண்டு அசைத்த தென்னே
அதன்மேற்கத நாகங்கச்சு ஆர்த்த தென்னே
மலைக்குநிகர் ஒப்பன வன்திரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அலைக்கும்கடல் அங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 7.1



8. வடநாட்டுத் தலங்கள்

1. *இந்திர நீலப்பருப்பதம் - திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்*
3. *கேதாரம் - திருஞானசம்பந்தர் 11, சுந்தரர் 10 பாடல்கள்*
2. *அநேக தங்காவதம் - திருஞானசம்பந்தர் 11 பாடல்கள்*
4. *நொடித்தான்மலை (கயிலாயம்) - திருஞானசம்பந்தர் 22, அப்பர் 40, சுந்தரர் 10 பாடல்கள்*
5. *திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்)*

இறைவன் : பருப்பநாதர்
இறைவி : பருப்பநாயகி
தீர்த்தம் : பாலாநதி
தலவிருட்சம்: மருதமரம் ஜோதிலிங்கங்களில் ஒன்று.
பாடியோர் : திருஞானசம்பந்தர் 11, அப்பர் 10, சுந்தரர் பாடல்கள்.

ஆந்திரா கர்நூல் மாவட்டம் நந்தியாவில் இருந்து 96 கி.மீ. திருப்பதியிலிருந்து 500 கி.மீ.

நந்திதேவர் பர்வத வடிவமாக சிவபிரானைத் தாங்கும் தலம். 'செல்லுறவரிய சிவன் சீபர்ப்பத மலையை' என்பார் சுந்தரர். நாமே இலிங்கத் திருமேனியைத் தொட்டுப் பூசிக்கலாம்.

கொங்கணி நறுங்கொன்றைத் தொங்கலன் குளிர்சடையான்
எங்கள்நோ யகலநின்றா னெனைவரு ளீசனிடம்
ஐங்கணை வரிசிலையா னநங்கனை யழகழித்த
பைங்கண்வெள் ளேறுடையான் பருப்பதம் பரவுதுமே. 1.118.4

பேரிடர்ப் பிணிகள் தீர்க்கும் பிஞ்ஞக னெந்தைபெம்மான்
காருடைக் கண்டராகிக் கபாலமோர் கையி லேந்திச்
சீருடைச் செங்கண் வெள்ளே றேறிய செல்வர் நல்ல
பாரிடம் பாணி செய்யப் பருப்பத நோக்கி னாரே. 4.58.8

மன்னிப்புனங் காவல்மட மொழியாள்புனம் காக்கக்
கன்னிக்கிளி வந்துகவைக் கோலிக்கதிர் கொய்ய
என்னைக்கிளி மதியாதென்று எடுத்துகவண் ஒலிப்பத்
தென்னற்கிளி திரிந்தேறிய சீபர்ப்பத மலையே. 7.3

9. ஈழநாட்டுத் தலம்

1. திருக்கோணமலை - திருஞானசம்பந்தர் 10 பாடல்கள்
2. திருக்கேதீச்சரம் - திருஞானசம்பந்தர் 11, சுந்தரர் 10 பாடல்கள்

அடியவனின் ஆன்மார்த்த இறைவனான திரிபுரசுந்தரி உடனாய திருவதிகை வீரட்டானேச்சுவரன் திருவருள் கூட்ட வடநாட்டுத் திருப்பதிகள் 1. இந்திர நீலப் பருப்பதம் 2. திருக்கேதாரம் 3. அநேக தங்காவதம் 4. கயிலாயம் மற்றும் ஈழநாட்டுத் தலங்களான 1. திருக்கோண மலை 2. திருக்கேதீச்சரம் நீங்கலாக 274-5=269 திருத்தலங்களைச் சென்று கண்டு வணங்கி மகிழ்ந்தேன். சிவநேயச் செல்வர்கள் அனைத்துத் திருத்தலங்களையும் சென்று, கண்டு, மகிழ்ந்திட சிவபரம்பொருளைச் சிந்திக்கின்றேன்.

சிவம்

புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தலங்கள் 2.

1. திருவிடைவாய் காவிரியின் தென்கரையில் உள்ளது.
   திருஞானசம்பந்தர் பாடியது 11 பாடல்கள்
2. திருக்கிளியன்னவூர் பாண்டிச்சேரியில் உள்ளது
   திருஞானசம்பந்தர் பாடியது. பாடல்கள் 11.

திருச்சிற்றம்பலம்.



தேவாரத் தலம் சிவக்களஞ்சியம்

பகுதி – II

சிவசிவ

தேவாரத் திருத்தலங்களும் பாடிய குரவர்களும்

(இப்பாடல்களின் எண்ணிக்கையும், பின்வரும் பதிக நிரலும்; 7ஆம் திருமுறை மட்டும் வரலாற்று முறையில் தொகுக்கப் பெற்ற எண்களாகும்)

எண்	தலம்	திருஞான சம்பந்தர்				திருநாவுக்கரசர்				சுந்தரர்
		1	2	3	மொத்தம்	4	5	6	மொத்தம்	7
	காவிரி வடகரைத் தலங்கள் 63									
1	சிதம்பரம் (கோயில்)	11	-	11	22	41	21	21	83	10
2	திருவேட்களம்	11	-	-	11	-	10	-	10	-
3	திருநெல்வாயில் (சிவபுரி)	-	11	-	11	-	-	-	-	-
4	திருக்கழிப்பாலை (காரைமேடு)	-	11	11	22	23	9	10	42	10
5	திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்)	-	-	11	11	-	-	-	-	-
6	திருமயேந்திரப்பள்ளி (கோயில் பாளையம்)	-	-	11	11	-	-	-	-	-
7	தென்திருமுல்லைவாயில்	-	11	-	11	-	-	-	-	-
8	திருக்கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை)	-	-	11	11	-	-	-	-	-
9	திருச்சாய்க்காடு (சாயாவனம்)	-	22	-	22	10	-	10	20	-
10	திருப்பல்லவனீச்சரம் (காவிரிப்பூம்பட்டினம்)	11	-	11	22	-	-	-	-	-
11	திருவெண்காடு	-	22	11	33	-	11	10	21	10
12	கீழைத் திருக்காட்டுப்பள்ளி	10	-	-	10	-	-	-	-	-
13	திருக்குருகாவூர் (வெள்ளடை)	-	-	6	6	-	-	-	-	10
14	சீகாழி	39	73	22	134	-	-	-	-	-
	திருச்சிரபுரம் (சீகாழி)	22	11	-	33	-	-	-	-	-
	திருத்தோணிபுரம் (")	11	-	18	29	-	10	-	10	-
	கொச்சைவயம் "	-	20	11	31	-	-	-	-	-
	திருப்பிரமபுரம் "	60	58	45	163	-	-	-	-	-
	திருப்புறவம் "	22	-	11	33	-	-	-	-	-
	சண்பை நகர் "	10	-	11	21	-	-	-	-	-
	திருப்பூந்தராய் "	-	10	22	32	-	-	-	-	-
	திருவெங்குரு "	11	-	10	21	-	-	-	-	-
	திருவேணுபுரம் "	10	20	-	30	-	-	-	-	-
	திருப்புகலி "	22	43	22	87	-	-	-	-	-
	திருக்கழுமலம் "	44	-	34	78	11	-	-	11	10
15	திருப்புகலியும் திருவீழிமலையும்	11	-	-	11	-	-	-	-	-
16	திருக்கோலக்கா	11	-	-	11	-	-	-	-	10
17	திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்)	-	11	-	11		9	10	19	-
18	திருக்கண்ணனார் கோயில் (குறுமாணக்குடி)	11	-	-	11	-	-	-	-	-
19	திருக்கடைமுடி (கீழையூர்)	11	-	-	11	-	-	-	-	-
20	திருநின்றியூர்	10	-	-	-	-	10	-	-	18
21	திருப்புன்கூர்	11	-	-	11	-	-	-	-	10
22	திருப்புன்கூரும் திருநீடூரும்	-	-	-	-	-	-	10	10	-
23	திருநீடூர்	-	-	-	-	-	-	-	-	11

எண்	தலம்	திருஞான சம்பந்தர்				திருநாவுக்கரசர்				சுந்தரர்
		1	2	3	மொத்தம்	4	5	6	மொத்தம்	7
24	திருஅன்னியூர்	11	-	-	11	-	19	-	19	-
25	திருவேள்விக் குடியும்= திருத்துருத்தியும்	-	-	-	-	-	-	-	-	10
26	எதிர்கொள்பாடி (மேலத்திருமணஞ்சேரி)	-	-	-	-	-	-	-	-	11
27	திருமணஞ்சேரி	-	11	-	11	-	10	-	10	-
28	திருக்குறுக்கை (கொருக்கை)	-	-	-	-	14	-	-	14	-
29	திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு, மேலைக்காழி)	-	11	-	-	-	-	-	-	11
30	திருக்குரக்குக்கா	-	-	-	-	-	10	-	10	-
31	திருவாழ்கொளிபுத்தூர் (திருவாளப்புத்தூர்)	11	11	-	22	-	-	-	-	12
32	திருமண்ணிப்படிக்கரை (இலப்பைப்பட்டு)	-	-	-	-	-	-	-	-	10
33	திருஓமாம்புலியூர்	-	-	10	10	-	-	9	9	-
34	திருகானாட்டுமுள்ளூர் (கானாட்டம் புலியூர்)	-	-	-	-	-	-	-	-	11
35	திருநாரையூர்	-	11	22	33	-	10	10	20	-
36	திருக்கடம்பூர் (மேலைக் கடம்பூர் கடம்பைக்காரர் கோயில்)	-	11	-	11	-	21	-	21	-
37	திருப்பந்தணைநல்லூர்	-	-	10	10	-	-	10	10	-
38	திருக்கஞ்சனூர்	-	-	-	-	-	-	10	10	-
39	திருக்கோடிக்கா	-	11	-	11	10	7	8	25	-
40	திருமங்கலக்குடி	-	11	-	-	10	10	-	20	-
41	திருப்பனந்தாள்	-	-	11	11	-	-	-	-	-
42	திருஆப்பாடி	-	-	-	-	10	-	-	10	-
43	திருச்சேய்ஞலூர்	11	-	-	11	-	-	-	-	-
44	திருந்துதேவன் குடி	-	-	11	11	-	-	-	-	-
45	திருவியலூர் (திருவிசையநல்லூர்)	-	-	11	11	-	-	-	-	-
46	திருக்கொட்டையூரும் திருவலஞ்சுழியும்	-	-	-	-	-	-	10	10	-
47	திருஇன்னம்பர்	-	-	11	11	20	10	10	40	-
48	திருப்புறம்பயம்	-	11	-	11	-	-	13	13	-
49	திருவிசயமங்கை	-	-	11	11	-	10	-	10	-
50	திருவைகாவூர் (வில்வவனம்)	-	-	11	11	-	-	-	-	-
51	திருவடகுரங்காடு துறை	-	-	10	10	-	-	-	-	-
52	திருப்பழனம்	11	-	-	11	30	10	10	50	-
53	திருவையாறு	33	23	-	56	83	20	21	124	11
54	திருநெய்த்தானம் (தில்லைத்தானம்)	11	-	-	11	20	10	20	50	-
55	திருப்பெரும்புலியூர்	-	11	-	11	-	-	-	-	-
56	திருமழபாடி	-	11	22	33	-	-	17	17	10
57	திருப்பழுவூர் (கீழப்பழூர்)	-	11	-	11	-	-	-	-	-
58	திருக்கானூர்	11	-	-	11	-	9	-	9	-
59.	திருப்பேரன்பிலாந்துறை (அன்பில்)	11	-	-	11	-	10	-	10	-
60	திருமாந்துறை	-	11	-	11	-	-	-	-	-
61	திருப்பாற்றுறை	11	-	-	11	-	-	-	-	-
62	திருவானைக்கா		10	11	21		10	20	30	10

எண்	தலம்	திருஞானசம்பந்தர்				திருநாவுக்கரசர்				சுந்தரர்
		1	2	3	மொத்தம்	4	5	6	மொத்தம்	7
63	திருப்பைஞ்ஞீலி	-	-	11	11	-	10	-	10	11
64	திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி)	11	-	-	11	-	-	-	-	12
65	திருஈங்கோய்மலை	11	-	-	11	-	-	-	-	-
2	காவிரித் தென்கரைத் தலங்கள் 127									
66	திருவாட்போக்கி (ஐயர்மலை இரத்தினகிரி)	-	-	-	-	-	10	-	10	-
67	திருக்கடம்பந்துறை (குளித்தலை)	-	-	-	-	-	10	-	10	-
68	திருப்பராய்த்துறை	11	-	-	-	-	11	-	11	-
69	திருக்கற்குடி (உய்யக் கொண்டான் திருமலை)	11	-	-	11	-	-	10	10	10
70	திருமுக்கீச்சரம் (உறையூர் திருச்சி)	-	11	-	11	-	-	-	-	-
71	திருச்சிராப்பள்ளி	11	-	-	11	-	4	-	4	-
72	திருவெறும்பியூர் (திருவெறும்பூர்)	-	-	-	-	-	10	10	20	-
73	திருநெடுங்களம்	11	-	-	11	-	-	-	-	-
74	மேலைத்திருக்காட்டுப்பள்ளி (திருக்காட்டுப்பள்ளி)	-	-	11	11	-	-	-	-	-
75	திருவாலம்பொழில்	-	-	-	-	-	-	9	9	-
76	திருப்பூந்துருத்தி (திருப்பந்துருத்தி)	-	-	-	-	10	10	10	30	-
77	திருக்கண்டியூர்	-	-	11	11	10	-	-	-	-
78	திருசோற்றுத்துறை	11	-	-	11	20	11	10	41	10
79	திருவேதிகுடி	-	-	11	11	10	-	-	10	-
80	திருத்தென்குடித்திட்டை (திட்டை)	-	-	11	11	-	-	-	-	-
81	திருப்புள்ளமங்கை (பசுபதி கோயில்)	11	-	-	11	-	-	-	-	-
82	திருச்சக்கரப்பள்ளி	-	-	11	11	-	-	-	-	-
83	திருக்கருகாவூர்	-	-	10	10	-	-	11	11	-
84	திருப்பாலைத்துறை	-	-	-	-	-	11	-	11	-
85	திருநல்லூர்	11	11	11	33	11	-	11	22	-
86	திருஆவூர்ப்பசுபதீச்சரம் (ஆவூர்)	11	-	-	11	-	-	-	-	-
87	திருசத்திமுற்றம் (சத்திமுத்தம்)	-	-	-	-	10	-	-	10	-
88	திருப்பட்டீச்சரம்	-	-	11	11	-	-	-	-	-
89	பழையாறை (ஆறைவடதளி)	-	-	-	-	-	10	-	10	-
90	திருவலஞ்சுழி	-	22	11	33	-	10	1	11	-
91	திருக்குடமூக்கு (குடந்தை)	-	-	11	11	-	10	-	10	-
92	திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் (நாகேசுவரசுவாமி கோயில்)	-	-	-	-	-	-	11	11	-
93	திருக்குடந்தைக்காரோணம் (மகாமகக் குளக் கரையிலுள்ள வடக்கரைக் கோயில்)	11	-	-	11	-	-	-	-	-
94	திருநாகேச்சரம்	-	22	-	22	10	10	10	30	11
95	திருவிடைமருதூர்	55	11	-	66	10	17	20	47	10

எண்	தலம்	திருஞானசம்பந்தர்				திருநாவுக்கரசர்				சுந்தரர்
		1	2	3	மொத்தம்	4	5	6	மொத்தம்	7
96	திருத்தென்குரங்காடுதுறை (ஆடுதுறை)	-	11	-	11	-	11	-	11	-
97	திருநீலக்குடி (தென்னலக்குடி)	-	-	-	-	-	10	-	10	-
98	திருவைகல்மாடக்கோயில்	-	-	11	11	-	-	-	-	-
99	திருநல்லம் (கோனேரிராஜபுரம்)	11	-	-	11	-	10	-	10	-
100	திருக்கோழம்பம்	-	11	-	11	-	11	-	11	-
101	திருவாவடுதுறை	-	-	11	11	20	10	21	51	15
102	திருத்துருத்தி	-	11	-	11	10	-	-	10	10
103	திருவழுந்தூர் (தேரழுந்தூர்)	-	11	-	11	-	-	-	-	-
104	திருமயிலாடுதுறை	11	-	11	22	-	11	-	11	-
105	திருவிளநகர்	-	11	-	11	-	-	-	-	-
106	திருப்பறியலூர் (கீழப்பரசலூர்)	11	-	-	11	-	-	-	-	-
107	திருச்செம்பொன்பள்ளி (செம்பொனார் கோயில்)	11	-	-	11	10	10	-	20	-
108	திருநனிபள்ளி (புஞ்சை)	-	11	-	11	9	-	-	9	11
109	திருவலம்புரம் (பெரும்பள்ளம்)	-	-	11	11	10	-	10	20	11
110	திருத்தலைச்சங்காடு	-	11	-	11	-	-	-	-	-
111	திருஆக்கூர்	-	11	-	11	-	-	10	10	-
112	திருக்கடவூர்	-	-	11	11	20	10	-	30	10
113	திருக்கடவூர்மயானம்	-	7	-	7	-	8	-	8	10
114	திருவேட்டக்குடி	-	-	11	11	-	-	-	-	-
115	திருத்தெளிச்சேரி	11	-	-	11	-	-	-	-	-
116	திருத்தருமபுரம்	11	-	-	11	-	-	-	-	-
117	திருநள்ளாறு (திருநள்ளார்)	11	11	11	33		10	10	20	10
118	திருநள்ளாறும் திருஆலவாயும்	11	-	-	11	-	-	-	-	-
119	திருக்கோட்டாறு	-	11	11	22	-	-	-	-	-
120	திருஅம்பர் பெருந்திருக்கோயில் (அம்பர்)	-	-	11	11	-	-	-	-	-
121	திருஅம்பர் மாகாளம் (கோயில் திருமாகாளம்)	11	11	11	33	-	-	-	-	-
122	திருமீயச்சூர்	-	11	-	11	-	-	-	-	-
123	திருமீயச்சூர் இளங்கோயில்						10		10	
124	திருதிலதைப்பதி	-	11	-	11	-	-	-	-	-
125	திருப்பாம்புரம்	11	-	-	11	-	-	-	-	-
126	திருச்சிறுகுடி	11	-	-	11	-	-	-	-	-
127	திருவீழிமிழலை	77	-	77	154	20	21	42	83	10
128	திருவீழிமிழலையும் திருப்புகலியும்	11	-	-	11	-	-	-	-	-
129	திருத்துருத்தியும் வேள்விகுடியும்	-	-	11	11	-	-	-	-	-
130	திருத்துருத்தி	-	-	-	-	-	-	-	-	10
131	திருவன்னியூர்	11	-	-	11	-	10	-	10	-
132	திருக்கருவிலிக் கொட்டிட்டை	-	-	-	-	-	10	-	10	-
133	திருப்பேணு பெருந்துறை (திருப்பெருந்துறை)	11	-	-	11	-	-	-	-	-
134	திருநறையூர்ச் சித்தீச்சுரம்	22	11	-	33	-	-	-	-	11

எண்	தலம்	திருஞான சம்பந்தர்				திருநாவுக்கரசர்				சுந்தரர்
		1	2	3	மொத்தம்	4	5	6	மொத்தம்	7
135	திருஅரிசிற்கரைப்புத்தூர் (அளகாப்புத்தூர்)	-	11	-	11	-	10	-	10	11
136	திருச்சிவபுரம்	33	-	-	33	-	-	8	8	-
137	திருக்கலையநல்லூர் (சாக்கோட்டை)	-	-	-	-	-	-	-	-	11
138	திருக்கருக்குடி (மருதாந்த நல்லூர்)	-	-	11	11	-	-	-	-	-
139	திருவாஞ்சியம்	-	11	-	11	-	7	-	7	10
140	திருநன்னிலத்துப் பெருங் கோயில் (நன்னிலம்)	-	-	-	-	-	-	-	-	11
141	திருக்கொண்டீச்சரம்	-	-	-	-	10	10	-	20	-
142	திருப்பனையூர்	11	-	-	11	-	-	-	-	10
143	திருவிற்குடி வீரட்டம்	-	10	-	10	-	-	-	-	-
144	திருப்புகலூர்	11	11	-	22	24	10	10	44	11
145	திருப்புகலூர் வர்த்த மானேச்சரம்	-	11	-	11	-	-	-	-	-
146	திருஇராமனதீச்சரம்	-	-	10	10	-	-	-	-	-
147	திருப்பயற்றூர்	-	-	-	-	10	-	-	10	-
148	திருச்செங்காட்டங்குடி	10	-	10	20	-	-	10	10	-
149	திருமருகல்	-	11	-	11	-	10	-	10	-
150	திருச்சாத்தமங்கை	-	-	11	11	-	-	-	-	-
151	திருநாகைக்காரோணம் (நாகை)	11	11	-	22	18	10	11	39	11
152	திருச்சிக்கல்	-	11	-	11	-	-	-	-	-
153	திருக்கீழ்வேளூர்	-	11	-	11	-	-	10	10	-
154	திருத்தேவூர்	-	11	11	22	-	-	-	-	-
155	திருப்பள்ளியின் முக்கூடல்	-	-	-	-	-	-	10	10	-
156	திருவாரூர் அரநெறி	-	-	-	-	11	-	10	21	-
157	திருவாரூர்	11	22	11	44	88	22	98	208	63
158	திருவாரூர்ப் பரவையுண் மண்டளி (துலா நாயனார் கோயில்)	-	-	-	-	-	-	-	-	10
159	திருவிளமர்	-	-	11	11	-	-	-	-	-
160	திருக்கரவீரம் (கரையபுரம்)	11	-	-	11	-	-	-	-	-
161	திருப்பெருவேளூர் (காட்டூர் ஐயன்பேட்டை)	11	-	-	11	10	-	-	10	-
162	திருத்தலையாலங்காடு	-	-	-	-	-	-	10	10	-
163	திருக்குடவாசல் (குடவாசல்)	-	21	-	21	-	-	-	-	-
164	திருச்சேறை	-	-	11	11	9	10	-	19	-
165	திருநாலூர் மயானம்	-	11	-	11	-	-	-	-	-
166	திருக்கருவாய்க் கரைப்புத்தூர் (ஆண்டாள் கோயில்)	-	-	-	-	-	10	-	10	-
167	திருஇரும்பூளை (ஆலங்குடி)	-	10	-	10	-	-	-	-	-
168	திருஅரதப்பெரும்பாழி (அரித்துவார மங்கலம்)	-	-	11	11	-	-	-	-	-
169	திருஅவளிவநல்லூர்	-	-	11	11	10	-	-	10	-
170	திருப்பரிதிநியமம் (பரிதியப்பர் கோயில்)	-	-	11	11	-	-	-	-	-
171	திருவெண்ணியூர் (கோயில் வெண்ணி)	-	11	-	11	-	11	-	11	-

எண்	தலம்	திருஞானசம்பந்தர்				திருநாவுக்கரசர்				சுந்தரர்
		1	2	3	மொத்தம்	4	5	6	மொத்தம்	7
172	திருப்பூவணூர்	-	-	-	-	-	11	-	11	-
173	திருப்பாதாளேச்சரம் (பாம்பணி பாமணி)	11	-	-	11	-	-	-	-	-
174	திருக்களர்	-	11	-	11	-	-	-	-	-
175	திருச்சிற்றேமம் (ஏழிலூர் நேமம் சிற்றாம்பூர்)	-	-	11	11	-	-	-	-	-
176	திருவுசாத்தானம் (கோயிலூர்)	-	-	11	11	-	-	-	-	-
177	திருஇடும்பாவனம்	11	-	-	11	-	-	-	-	-
178	திருக்கடிக்குளம்	-	11	-	11	-	-	-	-	-
179	திருத்தண்டலைநீணெறி (தண்டலைச்சேரி)	-	-	8	8	-	-	-	-	-
180	திருக்கோட்டூர்	-	11	-	11	-	-	-	-	-
181	திருவெண்டுறை	-	-	11	11	-	-	-	-	-
182	திருக்கொள்ளம்பூதூர்	-	-	11	11	-	-	-	-	-
183	திருப்பேரெயில் (ஓகைப்பேரெயில்)	-	-	-	-	-	11	-	11	-
184	திருக்கொள்ளிக்காடு	-	-	11	11	-	-	-	-	-
185	திருத்தெங்கூர் (திருத்தங்குர்)	-	11	-	11	-	-	-	-	-
186	திருநெல்லிக்கா	-	11	-	11	-	-	-	-	-
187	திருநாட்டியத்தான்குடி	-	-	-	-	-	-	-	-	10
188	திருக்காறாயில் (திருக்காறைவாசல்)	-	11	-	11	-	-	-	-	-
189	திருக்கன்றாப்பூர்	-	-	-	-	-	-	9	9	-
190	திருவலிவலம்	11	-	-	11	-	-	11	11	-
191	திருக்கைச்சினம் (கச்சினம்)	-	10	-	10	-	-	-	-	-
192	திருக்கோளிலி (திருக்குவளை)	-	11	-	11	-	20	-	20	10
193	திருத்தென்திருவாய்மூர்	-	11	-	11	-	10	10	20	-
194	திருமறைக்காடு	11	21	-	32	20	9	10	39	10
195	திருஅகத்தியான்பள்ளி	-	11	-	11	-	-	-	-	-
196	திருக்கோடிக்குழகர் (குழகர் கோயில்)	-	-	-	-	-	-	-	-	10
3	தொண்டை நாட்டுத் தலங்கள் 32									
197	திருக்கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம்)	10	11	22	43	30	21	20	71	20
198	திருக்கச்சி மேற்றளி (திருமேற்றளி)	-	-	-	-	10	-	-	10	10
199	திருஓணகாந்தன்தளி	-	-	-	-	-	-	-	-	10
200	திருக்கச்சி அனேகதங்காவதம்	-	-	-	-	-	-	-	-	10
201	திருக்கச்சி நெறிக்கரைக்காடு (காலிமேடு, காலீசுவரன் கோயில்)	-	-	11	11	-	-	-	-	-
202	திருக்குரங்கணில் முட்டம்	11	-	-	11	-	-	-	-	-
203	திருமாகறல்	-	-	11	11	-	-	-	-	-
204	திருவோத்தூர் (செய்யாறு)	11	-	-	11	-	-	-	-	-
205	திருவன்பார்த்தான்பனங்காட்டூர் (திருப்பனங்காடு)	-	-	-	-	-	-	-	-	10
206	திருவல்லம்	10	-	-	10	-	-	-	-	-
207	திருமாற்பேறு (திருமால்பூர்)	20	-	-	20	10	20	10	40	-
208	திருவூறல் (தக்கோலம்)	11	-	-	11	-	-	-	-	-
209	திருஇலம்பையங்கோட்டூர்	11	-	-	11	-	-	-	-	-

எண்	தலம்	திருஞானசம்பந்தர்				திருநாவுக்கரசர்				சுந்தரர்
		1	2	3	மொத்தம்	4	5	6	மொத்தம்	7
210	திருவிற்கோலம் (கூவம்)	-	-	11	11	-	-	-	-	-
211	திருவாலங்காடு (பழையனூர் ஆலங்காடு)	12	-	-	12	10	-	10	20	10
212	திருப்பாசூர்	-	11	-	11	-	11	10	21	-
213	திருவெண்பாக்கம் (திருவுளம் பூதூர்)	-	-	-	-	-	-	-	-	11
214	திருக்கள்ளில் (திருக்கள்ளம்)	11	-	-	11	-	-	-	-	-
215	திருக்காளத்தி	-	-	20	20	-	-	11	11	10
216	திருவொற்றியூர்	-	-	11	11	23	10	10	43	32
217										
218	திருவலிதாயம் (டி.வி.எஸ். பாடி)	11	-	-	11	-	-	-	-	-
219	வட திருமுல்லைவாயில்	-	-	-	-	-	-	-	-	11
220	திருவேற்காடு	11	-	-	11	-	-	-	-	-
221	திருமயிலாப்பூர்	-	11	-	11	-	-	-	-	-
222	திருவான்மியூர்	-	11	10	21	-	10	-	10	-
223	திருக்கச்சூர் ஆலக்கோயில்	-	-	-	-	-	-	-	-	10
224	திருவிடைச்சுரம்	11	-	-	11	-	-	-	-	-
225	திருக்கழுக்குன்றம்	10	-	-	11	-	-	2	2	10
226	அச்சிறுபாக்கம்	11	-	-	11	-	-	-	-	-
227	திருவக்கரை	-	-	11	11	-	-	-	-	-
228	திருஅரசிலி (ஒழிந்தியாப்பட்டு)	-	10	-	10	-	-	-	-	-
229	திருவிரும்பைமாகாளம்	-	11	-	11	-	-	-	-	-
4	**நடுநாட்டுத் தலங்கள் 22**									
230	திருநெல்வாயில் அரத்துறை (திருவட்டத்துறை)	-	11	-	11	-	10	-	10	10
231	திருத்தூங்கானை மாடம் (பெண்ணாடம்)	11	-	-	11	3	-	-	3	-
232	திருக்கூடலையாற்றூர்	-	-	-	-	-	-	-	-	10
233	திருஎருக்கத்தாம்புலியூர் (இராஜேந்திரப்பட்டனம்)	10	-	-	10	-	-	-	-	-
234	திருத்தினைநகர் (தீர்த்தனகிரி)									10
235	திருச்சோபுரம் (தியாகவல்லி)	11	-	-	11	-	-	-	-	-
236	திருவதிகை வீரட்டானம்	11	-	-	11	82	22	43	147	10
237	திருநாவலூர்	-	-	-	-	-	-	-	-	11
238	திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)	32	10	19	61	-	-	10	10	21
239	திருநெல்வெண்ணெய்	-	-	11	11	-	-	-	-	-
240	திருக்கோவலூர்	-	11	-	11	-	-	-	-	-
241	திருவறையணிநல்லூர் (திருஅறங்கண்ட நல்லூர்)	-	11	-	11	-	-	-	-	-
242	திருவிடையாறு	-	-	-	-	-	-	-	-	10
243	திருவெண்ணெய் நல்லூர்	-	-	-	-	-	-	-	-	10
244	திருத்துறையூர்	-	-	-	-	-	-	-	-	11
245	திருவடுகூர் (ஆண்டார் கோயில்)	11	-	-	11	-	-	-	-	-
246	திருமாணிகுழி	-	-	11	11	-	-	-	-	-
247	திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்)	-	11	-	11	10	-	-	10	-
248	திருமுண்டீச்சரம்	-	-	-	-	-	-	10	10	-
249	திருப்புறவார் பனங்காட்டூர் (பனையபுரம்)	-	10	-	10	-	-	-	-	-

எண்	தலம்	திருஞானசம்பந்தர் 1	2	3	மொத்தம்	திருநாவுக்கரசர் 4	5	6	மொத்தம்	சுந்தரர் 7
250	திருவாமாத்தூர்	-	22	-	22	-	11	10	21	11
251	திருவண்ணாமலை	-	22	-	22	10	20	-	30	-
5	பாண்டி நாட்டுத் தலங்கள் 14									
252	திருஆலவாய்	10	11	77	98	10	-	11	21	-
253	திரு ஆப்பனூர்	11	-	-	11	-	-	-	-	-
254	திருப்பரங்குன்றம்	11	-	-	11	-	-	-	-	11
255	திருஏடகம்	-	-	10	10	-	-	-	-	-
256	திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை)	11	-	-	11	-	-	-	-	-
257	திருப்புத்தூர் (திருப்பத்தூர்)	11	-	-	11	-	-	10	10	-
258	திருப்புனவாயில்	-	-	11	11	-	-	-	-	10
259	திருஇராமேச்சுரம்	-	-	22	22	11	-	-	11	-
260	திருவாடானை	-	11	-	11	-	-	-	-	-
261	திருக்கானப்பேர் (காளையார் கோயில்)	-	-	11	11	-	-	-	-	10
262	திருப்பூவனம்	11		11	22	-	-	11	11	8
263	திருச்சுழியல்	-	-	-	-	-	-	-	-	10
264	திருக்குற்றாலம்	11	11	-	22	-		-	-	-
265	திருநெல்வேலி	-	-	11	11	-	-	-	-	-
6	கொங்கு நாட்டுத் தலங்கள் 7									
266	திருஅவிநாசி	-	-	-	-	-	-	-	-	10
267	திருமுருகன்பூண்டி	-	-	-	-	-	-	-	-	10
268	திருநணா (பவானி)	-	11	-	11	-	-	-	-	-
269	திருக்கொடிமாடச் செங்குன்றம் (திருச்செங்கோடு)	11	-	-	11	-	-	-	-	-
270	திருவெஞ்சமாக்கூடல்	-	-	-	-	-	-	-	-	10
271	திருப்பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி)	-	11	-	11	-	5	-	5	10
272	திருக்கருவூர் ஆனிலை (கரூர்)	-	11	-	11	-	-	-	-	-
7	வட நாட்டுத் தலங்கள் 5									
273	நொடித்தான் மலை (கயிலாயம்)	-	-	-	-	-	-	-	-	10
274	திருஇந்திர நீலத் திருப்பதம்	-	11	-	11	-	-	-	-	-
275	திருஅனேகதங்காவதம்	-	11	-	11	-	-	-	-	-
276	திருக்கேதரம்	-	11	-	11	-	-	-	-	10
277	திருக்கயிலாயம்	11	-	11	22	10	-	30	40	-
278	திருமயேந்திரமும் திருவாரூரும்	-	-	11	11	-	-	-	-	-
8	ஈழநாட்டுத் தலங்கள் 2									
279	திருக்கோண மலை	-	-	10	10	-	-	-	-	-
280	திருக்கேதீச்சரம்	-	11	-	11	-	-	-	-	10
9	மலைநாட்டுத் தலம் 1									
281	(ஸ்ரீசைலம்) திருப்பருப்பதம்	11	-	-	11	10	-	-	10	10
10	துளுவநாட்டுத் தலம் 1									
282	திருக்கோகரணம்	-	-	11	11	-	-	10	10	-

சிவசிவ

பதிகங்கள் கொண்ட திருமுறைகள்

எண்	பதிகம்	பாடல்	1	2	3	4	5	6
1	திருநீலகண்டம்	அவ்வினைக்கிவ்வினை	10	-	-	-	-	-
2	கோளறு பதிகம்	வேயுறுதோளி பங்கன்	-	11	-	-	-	-
3	திருக்ஷேத்திரக்கோவை	ஆரூர் தில்லையம்	-	11	-	-	-	-
4	தனித்திருவிருக்குறள்	கல்லால் நீழல்	-	-	11	-	-	-
5	நமச்சிவாய பதிகம்	காதலாகிக் கசிந்து	-	-	11	-	-	-
6	பஞ்சாக்கர பதிகம்	துஞ்சலும் துஞ்சலில்லாத	-	-	11	-	-	-
7	திருப்பாசுரம்	வாழ்க அந்தணர்	-	-	12	-	-	-
8	திருஅங்கமாலை	தலையே நீ வணங்காய்	-	-	-	12	-	-
9	ஆருயிர்த் திருவிருத்தம்	எட்டாந்திசைக்கும்	-	-	-	11	-	-
10	குறைந்த திருநேரிசை	வென்றிலேன் புலன்களைந்தும்	-	-	-	10	-	-
11	குறைந்த திருநேரிசை	தம்மானங் காப்பதாகி	-	-	-	6	-	-
12	திருசரக்கறை	விசையும் விசைப் பெரும்பாகா	-	-	-	11	-	-
13	சிவனெனுமோசை	சிவனெனுமோசை	-	-	-	10	-	-
14	தசபுராணம்	பருவரையொன்று	-	-	-	11	-	-
15	தனித்திருநேரிசை	தொண்டனேன் பட்டதென்னே	-	-	-	10	-	-
		மருளபா மனத்தனாகி	-	-	-	10	-	-
		கடும்பகல் நட்டமாடி	-	-	-	8	-	-
16	தனித்திருவிருத்தம்	வெள்ளிக்குழைத்துணி போலும்	-	-	-	10	-	-
		பவளத்தடவரை போலும்	-	-	-	11	-	-
17	நமச்சிவாய பதிகம்	சொற்றுணைவேதியன்	-	-	-	10	-	-
18	நினைந்த திருநேரிசை	முத்தினை மணியை	-	-	-	10	-	-
19	பசுபதி திருவிருத்தம்	சாம்பலைப் பூசி	-	-	-	8	-	-
20	பாவநாசப் பதிகம்	பற்றார் சேர்	-	-	-	11	-	-
21	விடந்தீர்த்த பதிகம்	ஒன்றுகொலாம் அவர் சிந்தை	-	-	-	10	-	-
22	ஆதிபுராணத் திருக் குறுந்தொகை	வேதநாயகன் வேதியர் நாயகன்	-	-	-	-	10	-
23	இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை	புக்கணைந்து புரிந்தலரிட்டு	-	-	-	-	11	-
24	உள்ளத்திருக் குறுந்தொகை	நீறலைத்தோர் மேனி	-	-	-	-	10	-
	கால பாசத் திருக் குறுந்தொகை	கண்டுகொள் ளரியானை	-	-	-	-	11	-
25	சித்தத் தொகைத் திருக் குறுந்தொகை	சிந்திப்பார் மனத்தான்	-	-	-	-	30	-
26	தனித்திருக்குறுந் தொகை	ஒன்று வெண்பிறைக் கண்ணி	-	-	-	-	10	-
		மாசில் வீணையும்	-	-	-	-	10	-
		ஏயிலானை யெனிச்சையகம்	-	-	-	-	9	-

எண்	தலம்	பாடல்	1	2	3	4	5	6
27	தொழற் பாலதே என்னும் திருக்குறுந்தொகை	அண்டத்தான அமரர்	-	-	-	-	11	-
28	பாவநாசத் திருக்குறுந் தொகை	பாவமும் பழி பற்றற	-	-	-	-	10	-
29	மறக்கிற்பனே என்னும் திருக்குறுந்தொகை	காசனைக் கனலை	-	-	-	-	10	-
30	மனத்தொகைத் திருக்குறுந்தொகை	பொன்னுள்ளத் திரள் பொன்சடை	-	-	-	-	10	-
31	அடைவுத்திருத் தாண்டகம்	பொருப்பள்ளி வரைவிலா	-	-	-	-	-	11
32	க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம்	தில்லை சிற்றம்பலமும்	-	-	-	-	-	11
33	தனித்திருத் தாண்டகம்	அப்பன் நீ அம்மை நீ	-	-	-	-	-	10
		ஆமயந் தீர்த்து அடியோனை	-	-	-	-	-	11
34	நின்ற திருத்தாண்டகம்	இருநிலனாய்த் தீயாகி	-	-	-	-	-	10
35	பலவகைத் திருத்தாண்டகம்	நேர்ந்தொருத்தி யொரு பாகத்	-	-	-	-	-	10
36	திருவினாத் திருத் தாண்டகம்	அண்டங்கடந்த சுவடு முண்டோ	-	-	-	-	-	11
37	மறுமாற்றுத் திருத் தாண்டகம்	நாமார்க்கும் குடியல்லோம்	-	-	-	-	-	10

தேவார வைப்புத் தலங்கள்

வைப்புத் தலம்

ஒரு தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் போற்றிப் பாடும்பொழுது அதே திருப்பாட்டில் வேறொரு தலத்தில் உறையும் பிரானையும் சேர்த்துப் பாடும் மரபு உண்டு. அத்தலமே வைப்புத்தலம் எனப்படும்.

வைப்புத் தலங்களை எண்ணும்பொழுது சிலர் பரிதிநியமம், கொடுமுடி போன்ற பிற தலங்களையும் எண்ணியுள்ளனர். அவை பாடல் பெற்ற தலங்கள்.

இந்நிரலில் 255 வைப்புத் தலங்கள் உள. (1982 புது தில்லியில் பதிப்பிக்கப் பெற்ற அபிதாம சிந்தாமணியில் 246 வைப்புத் தலங்கள் காணப்படுகின்றன.)

எண்.	தலம்	திரு. ஞா.	திரு. நா.	சுந்.
1.	அகத்தீச்சுரம்		✓	
2.	அக்கீச்சுரம்		✓	
3.	அண்ணல்வாயில்		✓	
4.	அசோகந்தி		✓	
5.	அத்துங்குடி	✓		
6.	அத்தமனமாலை		✓	
7.	அத்தி	✓		
8.	அத்தீச்சுரம்		✓	
9.	அமுதனூர்	✓		
10.	அயனீச்சுரம்		✓	
11.	அரணநல்லூர்		✓	
12.	அரிச்சந்திரம்		✓	
13.	அளப்பூர்		✓	✓
14.	அழைப்பள்ளி		✓	✓
15.	அறப்பள்ளி	✓		
16.	அறைமேற்றளி			✓
17.	ஆடகேச்சுரம்		✓	
18.	ஆழியூர்		✓	✓
19.	ஆழைப்பள்ளி	✓	✓	

எண்.	தலம்	திரு. ஞா.	திரு. நா.	சுந்.
20.	ஆன்பட்டி		✓	
21.	இடவை		✓	
22.	இடைக்குளம்		✓	
23.	இடைத்தானம்		✓	
24.	இடைப்பள்ளி	✓		
25.	இராப்பட்டீச்சுரம்		✓	
26.	இளங்கோயில்		✓	
27.	இளமர்		✓	
28.	இறைக்காடு		✓	
29.	இரும்புதல் ஆலூர்க் கூற்றம்		✓	
30.	இறையான்சேரி		✓	
31.	இளையான்குடி			✓
32.	ஈசனூர்			✓
33.	உஞ்சேனைமாகாளம்		✓	
34.	உஜ்ஜைனி	✓	✓	
35.	உஜ்ஜை மாகாளம்		✓	
36.	உண்ணீர்		✓	
37.	உதயமாலை		✓	
38.	உருத்திரகோடி		✓	
39.	ஊற்றத்தூர்		✓	
40.	எங்களூர்			✓
41.	எச்சில் இளமர்		✓	
42.	எழுமூர்		✓	
43.	எமநல்லூர்		✓	
44.	ஏமகூடமலை		✓	
45.	ஏமப்பேறூர்		✓	
46.	ஏயீச்சரம்		✓	
47.	ஏர்		✓	
48.	ஏமூர்		✓	
49.	ஏறனூர்			✓
50.	ஓரேடகம்		✓	
51.	கச்சிப்பலதாளி		✓	
52.	கச்சிமயானம்		✓	
53.	கச்சையூர்			✓

எண்.	தலம்	திரு. ஞா.	திரு. நா.	சுந்.
54.	கஞ்சாறு		✓	✓
55.	கடங்களூர்			✓
56.	கடம்பை இளங்கோயில்		✓	
57.	கடைக்குடி		✓	
58.	கண்ணை		✓	
59.	கந்தமாதனமாலை		✓	
60.	கரபுரம்		✓	
61.	கருகல்குரல்			✓
62.	கருந்திட்டைக்குடி		✓	
63.	கருப்பூர்			✓
64.	கருமாரி		✓	
65.	கழுநீர்க்குன்றம்		✓	
66.	களந்தை			✓
67.	காட்டூர்	✓		✓
68.	காம்பீலி		✓	
69.	காரிகரை			✓
70.	காவம்			✓
71.	காளிங்கம்		✓	
72.	காறை		✓	
73.	காற்றூர்	✓		
74.	கிழையம்	✓		
75.	கிள்ளிகுடி	✓		
76.	கீழையில்	✓		
77.	குக்குடேச்சரம்		✓	
78.	குடப்பாக்கில்	✓		
79.	கிழைவழி			✓
80.	குணவாயில்	✓	✓	
81.	குண்டையூர்			✓
82.	குத்தங்குடி	✓		
83.	குமரி		✓	
84.	குயில் ஆலந்துறை			✓
85.	குரங்குத்தளி			✓
86.	குருக்கேந்திரம்			✓
87.	குருத்தங்குடி	✓		

எண்.	தலம்	திரு. ஞா.	திரு. நா.	சுந்.
88.	குன்றியூர்	✓	✓	
89.	குன்றையூர்			✓
90.	கூந்தலூர்		✓	
91.	கூரூர்	✓		
92.	கூழையூர்		✓	
93.	கூறனூர்			✓
94.	கைம்மை			✓
95.	கொங்கணம்		✓	
96.	கொங்கு		✓	
97.	கொடுங்கோளூர்		✓	
98.	கொண்டல்		✓	✓
99.	கொல்லிமலை		✓	
100.	கொழுநல்			✓
101.	கோட்டுக்கா		✓	✓
102.	கோணம்			✓
103.	கோர்த்திட்டை		✓	✓
104.	சடைமுடி	✓		
105.	சாணக்குடி		✓	
106.	சித்தவடம்		✓	
107.	சிவப்பள்ளி		✓	
108.	சிறப்பள்ளி	✓		
109.	செங்குன்றூர்	✓		
110.	செந்தில்		✓	
111.	செம்மங்குடி		✓	
112.	சேலூர்	✓		
113.	சேற்றூர்		✓	
114.	சையமலை		✓	
115.	சோமேசம்		✓	
116.	ஞாழல்கோயில்		✓	
117.	தகடூர்			✓
118.	தக்களூர்	✓	✓	
119.	தஞ்சாக்கை			✓
120.	தஞ்சை		✓	✓
121.	தஞ்சை தனிக்குளம்		✓	

எண்.	தலம்	திரு. ஞா.	திரு. நா.	சுந்.
122.	தண்டங்குறை			✓
123.	தண்டந்தோட்டம்			✓
124.	திருத்தவத்துறை (லால்குடி)		✓	
125.	தவப்பள்ளி		✓	
126.	தளிச்சாத்தங்குடி		✓	
127.	தாழையூர்			✓
128.	திங்களூர்			✓
129.	திண்டீச்சுரம்		✓	
130.	திரிபுராந்தகம்		✓	
131.	திருக்குளம்		✓	
132.	திருமலை			✓
133.	திருவண்குடி	✓		
134.	திருஆதிரையான்பட்டினம்			✓
135.	திருஆலந்துறை	✓		
136.	திருவேட்டி		✓	
137.	துடையூர்		✓	
138.	தெள்ளாறு		✓	✓
139.	தென்களக்குடி		✓	
140.	தென்னூர்			✓
141.	தேங்கூர்			✓
143.	தேசனூர்			✓
143.	தேரூர்		✓	
144.	தேவனூர்		✓	
145.	தேவன்குடி	✓	✓	
146.	தேவீச்சரம்		✓	
147.	தேறனூர்			✓
148.	தேனூர்	✓	✓	
149.	தோமூர்		✓	
150.	நங்களூர்			✓
151.	நந்திகேசுவரம்		✓	
152.	நம்பனூர்			✓
153.	நல்லக்குடி		✓	
154.	நல்லாற்றூர்		✓	
155.	திருநற்குன்றம்	✓		

எண்.	தலம்	திரு. ஞா.	திரு. நா.	சுந்.
156.	நாகளேச்சரம்		✓	
157.	நாங்கூர்			✓
158.	நலனூர்			✓
159.	நாலாறு			✓
160.	நாற்றானம்			✓
161.	நியமல்லூர்		✓	
162.	நியமம்		✓	
163.	நிறைக்காடு		✓	
164.	நிறையனூர்			✓
165.	நின்றவூர்			✓
166.	நீலமலை			✓
167.	நெடுவாயில்	✓	✓	
168.	நெய்தல்வாயில்		✓	
169.	பஞ்சாக்கை			✓
170.	படம்பாக்கம்			✓
171.	பட்டி		✓	
172.	பந்தையூர்			✓
173.	பரப்பள்ளி		✓	
174.	பழையாறு		✓	
175.	பன்னூர்			✓
176.	பாசனூர்			✓
177.	பாட்டூர்			✓
178.	பாதாளம்		✓	
179.	பாவநாசம் (பொதியமலை)		✓	
180.	பாற்குளம்		✓	
181.	பிடிவூர்		✓	
182.	பிரம்பில்		✓	
183.	பிறையனூர்		✓	
184.	புதுக்குடி		✓	
185.	புரிச்சந்திரம்		✓	
186.	புரிசை			✓
187.	புலிவலம்		✓	
188.	திரிபுவனம்		✓	
189.	புற்குடி		✓	

எண்.	தலம்	திரு. ஞா.	திரு. நா.	சுந்.
190.	பூங்கூர்		✓	✓
191.	பூந்துறை		✓	✓
192.	பூழியூர்	✓		
193.	பெருந்துறை		✓	
194.	பெருரூர்		✓	
195.	பேராவூர்		✓	
196.	பேரூர்	✓	✓	✓
197.	பேறனூர்		✓	
198.	பொய்கைநல்லூர்		✓	
199.	பொருப்பள்ளி		✓	
200.	பொன்னூர்			✓
201.	போற்றூர்	✓		
202.	மகேந்திரமலை		✓	
203.	மகாமேரு		✓	
204.	மாகோதை			✓
205.	மணற்கால்		✓	
206.	மக்கீச்சுரம்		✓	
207.	மணிக்கோயில்		✓	
208.	மணிமுத்தம்		✓	
209.	மத்தங்குடி	✓		
210.	மந்தாரம்		✓	
211.	மாண்டீச்சுரம்	✓		
212.	மறையனூர்			✓
213.	மாகாளம்		✓	
214.	மாகாளேச்சரம்		✓	✓
215.	மாகுடி		✓	
216.	மாகோணம்			✓
217.	மாதானம்		✓	
218.	மாத்தூர்	✓		
219.	மாயூரம்	✓		
220.	மாந்தி		✓	
221.	மாரிபம்		✓	
222.	மாவூர்		✓	
223.	மாறன்பாடி			✓

எண்.	தலம்	திரு. ஞா.	திரு. நா.	சுந்.
224.	பிறைக்காடு			✓
225.	மிழலை			✓
226.	முதல்வனூர்			✓
227.	முந்தையூர்			✓
228.	மூவலூர்		✓	
229.	மூழையூர்		✓	
230.	வஞ்சி	✓		
231.	வடபேறூர்			✓
232.	மொக்கணி		✓	
233.	வடமாகறல்	✓		
234.	வரந்தை	✓		
235.	வரிஞ்ஞை			✓
236.	வழுவூர்	✓	✓	
237.	வளவி		✓	
238.	வளைகுளம்		✓	
239.	வன்னி		✓	
240.	வாதவூர்	✓		
241.	வாரணாசி	✓	✓	
242.	விடங்களூர்			✓
243.	விடைவாய்க்குடி		✓	
244.	விந்தமாமலை		✓	
245.	விவீச்சுரம்		✓	
246.	விராடபுரம்		✓	
247.	விளத்தூர்		✓	
248.	விளைத்தொட்டி		✓	
249.	வெகுளீச்சரம்		✓	
250.	வெள்ளாறு	✓	✓	✓
251.	வேங்கூர்		✓	✓
252.	வேதம்		✓	
253.	வேதீச்சுரம்		✓	
254.	வேலனூர்			✓
255.	வேளார் நாட்டு வேளூர்			✓

திருவாசகத் தலங்கள்

எண்.	தலம்	பயின்ற பதிகம்
1.	அண்ணாமலை	4-149, 7-18, 8-10
2.	அரிகேசரி	4-190
3.	அவிநாசி	50-7
4.	அழகர்பாலை	2-98
5.	ஆரூர்	2-73, 4-147, 5-81, 11-2, 19-1, 39-1
6.	ஆனைக்கா	8-19
7.	இடைமருது	2-75, 4-145, 13-2, 38-9, 43-2
8.	இலங்கை	18-2
9.	ஈங்கோய் மலை	2-84, 4-158
10.	உத்தரகோசமங்கை	2-48, 120, 6-1.20, 48, 13-19, 16-19, 19-3
11.	ஏகம்பம்	2-77, 4-151, 9-4,5, 13-14
12.	ஐயாறு	2-85, 4-148, 8-13, 9-1, 25-8
13.	ஓரியூர்	2-68
14.	கடம்பூர்	2-83, 4-160
15.	கல்லாடம்	2-11
16.	கவைத்தலை	4-186
17.	கழுக்குன்று	2-89, 4-191, 30-17
18.	கழுமலம்	2-88
19.	குடநாடு	2-27
20.	குவைப்பதி	4-187
21.	குற்றாலம்	2-91, 4-156, 39-3
22.	கோகழி	1-3, 4-157, 8-2, 48-1,5
23.	சந்திரதீபம்	2-97
24.	சாந்தம்புத்தூர்	2-31
25.	சிராப்பள்ளி	4-154 (மட்டுவார் முதல் மங்கை யாளை ஓர் பாகம் வைத்த 42 - 2)
26.	சிவபுரம்	1-63, 94, 4-216, 9-17, 13-16, 19-3, 25-9, 28-1.10, 45-5, 6, 8
27.	தில்லை	1-90, 2-127, 4-192, 7-12, 8-5, 9-19, 10-11, 12-9, 13-1, 4, 14, 40-1.10, 5-1, 2,
	புலியூர்	2-141, 145
	அம்பலம்	12-17, 13-10, 35.3, 38-6
	பொன்னம்பலம்	21-1.10

28.	துருத்தி	2-86, 31-3
29.	தேவூர்	2-71
30.	தென்னாடு	4-164, 8-6, 7
	தென்னன்	17-3, 18-17, 36-4, 7, 43-9, 47-4
	சேரலன் சோழன்	18. 7
31.	நந்தம்பாடி	2-21
32.	பஞ்சப்பள்ளி	2-13
33.	பட்டமங்கை	2-63
34.	பனையூர்	2-87
35.	பாண்டி நாடு	1-90, 2-118, 8-10, 11, 15, 19, 9-5, 9
36.	பாண்டூர்	2-70
37.	பெருந்துறை	1-15, 2-54, 3-68, 8-1.10, 15, 18, 19, 18-2, 20-1.10, 22-1.10, 23-1.10, 28-1.10, 29-1.10, 30-1.6, 34-1.10, 38-7, 39-2, 42-3,5, 43-1.10
38.	பேணுபெருந்துறை	8-10, 8-19
39.	பூதலம்	2-134
40.	பூவணம்	2-50, 4-192
41.	பூவலம்	2-57
42.	மகேந்திரம்	2-9, 19, 100, 43-9
43.	மதுரை	2-48, 4-90, 43-10, 36-2
44.	மொக்கணி	2-33 (கொள்ளுப்பை என்பாரும் உள். கொங்குநாட்டு வைப்புத் தலம்)
45.	வாஞ்சியம்	2.79
46.	வாதவூர்	2.63
47.	வெண்காடு	2.60
48.	வேலம்புத்தூர்	2.29

திருவிசைப்பா, திருப்பல்லாண்டுத் தலங்கள்
(9ஆம் திருமுறை)

9-ஆம் திருமுறையில் தேவாரம் பெற்ற தலங்கள்

1. கோயில் (தில்லை)
2. திருவீழிமிழலை
3. திருவாவடுதுறை
4. திருப்பூவணம்
5. திருவிடைமருதூர்
6. திருவாரூர்

தனித்தலங்கள்

1. திருவிடைக்கழி
2. திருக்களந்தை
3. திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்
4. திருமுகத்தலை
5. திரைலோக்கிய சுந்தரம்
6. திருச்சாட்டியக்குடி
7. தஞ்சை
8. கங்கை கொண்ட சோழபுரம்

11ஆம் திருமுறைத் தலங்கள்

1. திருஆலவாய் (மதுரை)
2. திருவாலங்காடு
3. திருச்சிற்றம்பலம் (தில்லை)
4. தென்குடந்தைக் கீழ்க்கோட்டம்
5. திருவையாறு
6. திருவாரூர்
7. திருத்துருத்தி
8. திருக்கோடிக்கா
9. திருவிடைவாய்
10. திருநெடுங்களம்
11. திருக்குழித் தண்டலை
12. திருவானைக்கா
13. திருப்புண்ணியங்கானல்
14. திருஅம்பர்மாகாளம்
15. திருச்சாய்க்காடு
16. திருவாச்சிரம்
17. திருசிராமலை
18. திருவாய்ப்பாடி
19. திருக்கச்சி ஏகம்பம்

20. திருமழபாடி
21. திருப்பனந்தாள்
22. திருவொற்றியூர்
23. திருமறைக்காடு
24. திருக்கடவூர் மயானம்
25. திருமாந்துறை
26. திருக்கயிலை
27. திருக்காளத்தி
28. திருஈங்கோய் மலை
29. திருவலஞ்சுழி
30. திருஅண்ணாமலை

பன்னிரு திருமுறை விளக்கம்

1. 1, 2, 3 திருமுறைகள் — 1. திருஞானசம்பந்தர் தேவாரம் (திருக்கடைக்காப்பு எனக் கூறுவர்)

1ஆம் திருமுறை	136 பதிகங்கள்	1469 பாடல்கள்
2ஆம் திருமுறை	122 பதிகங்கள்	1331 பாடல்கள்
3ஆம் திருமுறை	125 பதிகங்கள்	1347 பாடல்கள்
	383 பதிகங்கள்	4147 பாடல்கள்

தற்பொழுது 3ஆம் திருமுறையில் கிடைக்கப் பெற்றவை

3.1.	திருவிசைவாய்	11
3.2	திருக்களியன்னவூர்	11
		4169

தேவாரம்

1. தே+ஆரம் = தெய்வத்தைக் குறிக்குஞ் சொல்
ஆரம் - மாலை.
இறைவனுக்குச் சார்த்தப் பெறும் வாடாத சொன் மாலை
2. தே+வாரம் = தெ = தெய்வத்தைக் குறிக்குஞ் சொல்
வாரம் - அன்பு. இறைவன் மீது அன்பொழுகப் பாடப்படும் பாடல்களின் தொகுதி

2. 4, 5, 6 திருமுறைகள் — 2. திருநாவுக்கரசு தேவாரம்

ஆதியில் உள்ளதாகக் கூறுபவை	49000 பாடல்கள்
இன்று உள்ளவை	312 பதிகங்கள்

4ஆம் திருமுறை திருநேரிசை	1070 பாடல்கள்	113 பதிகங்கள்
5ஆம் திருமுறை திருக்குறுந்தொகை	1015 பாடல்கள்	100 பதிகங்கள்
6ஆம் திருமுறை திருத்தாண்டகம்	980 பாடல்கள்	99 பதிகங்கள்
மொத்தம்	3065 பாடல்கள்	312 பதிகங்கள்

மொத்த பதிகங்கள் 312. தலப் பதிகங்கள் 275.
பொதுப் பதிகங்கள் 37

3.	7ஆம் திருமுறை	3. சுந்தரர் தேவாரம் (திருப்பாட்டு எனவும் கூறுவர்)
	ஆதியில் உள்ளதாகக் கூறுபவை	3800
	இன்று உள்ளவை	1026
	மொத்த பதிகங்கள் 84	
4.	8ஆம் திருமுறை (656)	
	1. திருவாசகம்	4. மாணிக்கவாசகர்
	2. திருக்கோவையார் (400)	
	திருவாசகம் (திருவைந்தெழுத்தின் விளக்கம்) இதன் மூலப் பொருள் சிவனே! திரு தெய்வத்தைக் குறிப்பது வாசகம் - செஞ்சொல் ஆகுபெயரால் திருவைந்தெழுத்தினை உணர்த்திற்று.	
5.	9ஆம் திருமுறை	
	1. திருவிசைப்பா	5. திருமாளிகைத் தேவர் 6. சேந்தனார் 7. கருவூர்த் தேவர் 8. பூந்துருத்தி நம்பிகாடநம்பி 9. கண்டராதித்தர் 10. வேணாட்டடிகள் 11. திருவாலியமுதனார் 12. புருடோத்தமநம்பி 13. சேதிராயர்
	2. திருப்பல்லாண்டு	6. சேந்தனார்
	(இவ்வாசிரியர்கள் காலம் 9, 10, 11, ஆம் நூற்றாண்டுகள்)	
6.	10ஆம் திருமுறை	14. திருமந்திரம் 3047
	'முன்னிய அப்பொருள் மாலை தமிழ் மூவாயிரம் சாத்தி' சேக்கிழார் சுவாமிகள்	
7.	11ஆம் திருமுறை	
	1. திருமுகப் பாசுரம்	15. திருஆலவாய் சடையார்
	1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஒன்று	

2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டு 3. திருவிரட்டை மணிமாலை 4. அற்புதத் திருவந்தாதி	16. காரைக்கால் அம்மையார்
1. க்ஷேத்திரத் திருவெண்பா	17. ஐயடிகள் காடவர்கோன்
1. பொன்வண்ணத்தந்தாதி 100 2. திருவாரூர் மும்மணிக் கோவை 30 3. திருக்கயிலாய ஞான உலா 1	18. சேரமான் பெருமாள் நாயனார்
1. கயிலை பாதி காளத்திபாதி அந்தாதி 100 2. திருஈங்கோய் மலை எழுபது 70 3. திருவலஞ்சுழி மணிக்கோவை 15 4. திருஎழுகூற்றிருக்கை 1 5. பெருந்தேவபாணி 1 6. கோபப்பிரசாதம் 1 7. கார்எட்டு 8 8. போற்றித் திருக்கலிவெண்பா 9. திருமுருகாற்றுப்படை 1 10. திருக்கண்ணப்பர் தேவர்மறம் 1	19. நக்கீரதேவர்
1. திருக்கண்ணப்பதேவர் திருமறம்1	20. கல்லாட தேவர்
1. மூத்த நாயனார் இரட்டை மணிமாலை 20 2. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை 37 3. சிவபெருமான் திருவந்தாதி 100	21. கபிலதேவர்
1. சிவபெருமான் திருவந்தாதி 100	22. பரண தேவர்
1. சிவபெருமான் மும்மணிக் கோவை 30	23. இளம்பெருமான் அடிகள்
1. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை 23	24. அதிரா அடிகள்
1. கோயில் நான்மணி மாலை 40 2. திருக்கழுமலமும் மணிக்கோவை 30	

3. திருவிடை மருதூர் மும்மணிக் கோவை 30
4. திருஏகம்ப முடையார் திருவந்தாதி 100
5. திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது 10

25. பட்டினத்துப் பிள்ளையார்

---

1. திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை 20
2. கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 70
3. திருத்தொண்டர் திருவந்தாதி 89
4. ஆளுடைப் பிள்ளையார் திருவந்தாதி 100
5. திருச் சண்பை விருத்தம் 11
6. ஆளுடைப்பிள்ளையார் மும்மணிக் கோவை 30
7. ஆளுடைப் பிள்ளையார் திருவுலா மாலை 1
8. ஆளுடைப் பிள்ளையார் திருக்கலம்பகம் 49
9. ஆளுடைப் பிள்ளையார் திருத்தொகை 1
10. திருநாவுக்கரசு தேவர் திருஏகாதச மாலை 11

26. நம்பியாண்டார் நம்பிகள்

12ஆம் திருமுறை
திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) 4286

27. சேக்கிழார் சுவாமிகள்

பன்னிரு திருமுறை ஆசிரியர் 27
பன்னிரு திருமுறை நூல்கள் 76
திருப்பாடல்கள் 18, 350

நவக்கிரகங்களும் அவர்களின் தேவியாரும்

1.	சூரியன்	உஷா, ப்ரத்யுஷா
2.	சந்திரன்	ரோகிணி
3.	அங்காரகன்	சக்தி
4.	புதன்	ஞானசக்தி
5.	குரு	தாரா
6.	சுக்ரன்	சுகீர்த்தி
7.	சனி	நீலா
8.	ராகு	சிம்ஹி
9.	கேது	சித்தரலேகா

மெய்கண்ட சாத்திரங்கள் 14 உம் ஆசிரியர்மார்களும்

எண்.	சாத்திர நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	குலம்
1.	திருவுந்தியார்	திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்	வேளாளர்
2.	திருக்களிற்றுப்படியார்	திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்	வேளாளர்
3.	சிவஞானபோதம்	திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர்	வேளாளர்
4.	சிவஞானசித்தியார்	திருத்துறையூர் அருள்நந்தித்தேவர்	ஆதிசைவர்
5.	இருபா இருபஃது	,,	,,
6.	உண்மை விளக்கம்	திருவதிகை மனவாசகம் கடந்த நாயனார்	சைவ அந்தணர்
7.	சிவப்பிரகாசம்	கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்	தீட்சதர்
8.	திருவருட்பயன்	,,	,,
9.	வினாவெண்பா	,,	,,
10.	கொடிக்கலி	,,	,,
11.	போற்றிப் பஃறொடை	,,	,,
12.	நெஞ்சு விடு தூது	,,	,,
13.	உண்மைநெறி விளக்கம்	,,	,,
14.	சங்கற்ப நிராகரணம்	,,	,,

நான்மறை (வடமொழி)

1. இருக்கு, 2. யஜூர், 3. சாமம், 4. அதர்வணம்

சிவனைப் போற்றும் புராணங்கள்

1. சிவபுராணம், 2, இலிங்கப் புராணம், 3. ஸ்கந்த புராணம், 4. மார்க்கண்டேய புராணம், 5. அக்னி புராணம், 6. மதஸ்பபுராணம், 7. கூர்ம புராணம்

உபநிடதங்கள் 18

1. ஈசம்	2. மாண்டுக்யம்	3. மைத்திரீ
4. கடம்	5. ஸ்வேதாஸ்வதம்	6. பைங்கலம்
5. ஜாபநூலம்	8. வஜ்ரசூசிகம்	9. ப்ருஹதாரண்யகம்
10. கௌஷிதகி	11. தைத்திரியம்	12. ஐதேரேயம்
13. ப்ரச்சனம்	14. முண்டகம்	15. சாந்தோக்யம்
16. கபாலம்	17. கைவல்யம்	18. ககனம்

அறுபத்து மூவர் தொகுப்பு

ஆதி சைவர்	4	மரபு அறியாதவர்	1
அந்தணர்	15	பாணர்	1
அரசர்	11	மீனவர்	1
வணிகர்	6	வேடர்	1
வேளாளர்	13	சான்றார்	1
மாமாத்திரர்	1	சாலியர்	1
இடையர்	2	செக்கார்	1
குயவர்	1	ஏகாலியர்	1
	53	ஆதிதிராவிடர்	1
		கணக்கர்	1
53+10 = 63			10

திருக்கூட்டத்தார் ஒன்பதின்மர்

ஆதிசைவர்	1	1. முப்போதும் திருமேனி தீண்டுவார்
அந்தணர்	1	2. தில்லைவாழ் அந்தணர்
மரபறியா எழுவர்	7	3. பொய்யடிமை யில்லாத புலவர்
		4. பத்தராயப் பணிவார்
	9	5. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்
		6. திருவாரூர்ப் பிறந்தார்
		7. முழுநீறு பூசியவர்
		8. அப்பாலும் அடிச்சார்ந்தார்
		9. பரமனையே பாடுவார்

நாயன்மார் பகுப்பு

[3]வாளால் மகவரிந்து ஊட்ட வல்லேன்
அல்லன் [1]மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன்
அல்லன் தொண்டு செய்து
[2]நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேன்
அல்லன்

என மிக அழகாகப் பட்டினத்தடிகளார், அடியார் பெருமையைப் பாடிப் போந்தார். இச்செய்தியைக் குருலிங்க சங்கமங்களான் முத்தி பெற்றவர் என்பர். காண்போம்.

1. குருவருளால் முத்தி பெற்றவர் 12

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
2. திருநாவுக்கரசு சுவாமிகள்
3. குலச்சிறைநாயனார்
4. பெருமிழலைக் குறும்பர்
5. அப்பூதியடிகள்
6. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்
7. திருமூலர்
8. சோமாசிமாறர்
9. கணநாத நாயனார்
10. நெடுமாறர்
11. மங்கையர்க்கரசியார்
12. திருநீலகண்ட யாழ்ப்பாணர்

2. சிவலிங்கத்தால் முத்தி பெற்றவர் 30

1. எறிபத்தர்
2. கண்ணப்பர்
3. குங்குலியர்
4. அரிவாட்டாயர்
5. ஆனாயர்
6. மூர்த்தியார்
7. முருகனார்
8. உருத்திரபசுபதியார்
9. திருநாளைப்போவார்
10. சண்டேசுரர்
11. திருநீலநக்கர்
12. நமிநந்தியடிகள்
13. ஏயர்கோன் கலிக்காமர்
14. தண்டியடிகள்
15. சாக்கியர்
16. சிறப்புலியார்
17. சேரமான் பெருமாள்
18. கூற்றுவர்
19. அதிபத்தர்
20. கலியர்
21. ஐயடிகள் காடவர்கோன்
22. கணம்புல்லர்
23. காரியார்
24. வாயிலார்
25. கழற்சிங்கர்
26. செருத்துணையார்
27. புகழ்த்துணையார்
28. கோட்புலியார்
29. பூசலார்
30. கோச்செங்கர்

3. சிவனடியாரை வழிபட்டு முத்தி பெற்றவர் 19

1. திருநீலகண்டர்
2. இயற்பகையார்
3. இளையான்குடிமாறர்
4. மெய்ப்பொருளார்
5. விறன்மிண்டர்
6. அமர்நீதியார்

7. ஏனாதிநாதர்
8. மானக்கஞ்சாறர்
9. திருக்குறிப்புத் தொண்டர்
10. காரைக்காலம்மையார்
11. மூர்க்கர்
12. சிறுத்தொண்டர்
13. புகழ்ச்சோழர்
14. நரசிங்கமுனையரையர்
15. கலிக்கம்பர்
16. சத்தியார்
17. முனையாடுவார்
18. இடங்கழியார்
19. நேசர்

சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பெற்றதால் பெருமை கொண்டவர் சடையனார், இசைஞானியார்

12+30+19+2 = 63

4. மறக்கருணை கொண்ட வன்தொண்ட அடியார்கள்

அறுபான்மும்மை நாயன்மாரில் சிலர் மறக்கருணை கொண்டு செயல்பட்டனர். இப்பெருமக்களைத் திருக்களிற்றுப் படியார் எனும் சாத்திர நூல் வன்தொண்டர் எனக் குறிக்கும். சிவபிரானையோ சிவனடியார்களையோ அவமதித்த செயல் செய்தவர்களை இவ்வடியார்கள் தண்டித்த வரலாற்றைப் பெரிய புராணம் கூறும்.

1. சண்டேசர் - தன் தந்தை காலை வெட்டியவர்
2. சிறுத்தொண்டர் - தன் ஒரே மகனை வாளால் அறுத்தவர்
3. இயற்பகையார் - உறவினர்களை வெட்டி வீழ்த்தியவர்
4. கழற்சிங்கர் - தன் மனைவியின் கையைத் துண்டித்தவர்
5. செருத்துணையார் - அரசியின் மூக்கை அறுத்தவர்
6. சத்தியார் - சிவப்பகைவர்களின் நாக்கை அறுத்தவர்
7. எறிபத்தர் - பூக்குடலையைச் சிதைத்த பட்டத்து யானையை வெட்டியவர்
8. மானக்கஞ்சாறர் - தன் மகளின் கூந்தலை அரிந்தவர்.

5. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்தில் வாழ்ந்தோர்

1. சிறுத்தொண்டர்
2. குங்குலியக் கலையனார்
3. திருநாளைப்போவார்
4. திருநீலநக்கர்
5. அப்பூதி அடிகளார்
6. நெடுமாறனார்
7. மங்கையர்க்கரசியார்
8. குலச்சிறையார்
9. முருகன்
10. திருநீலகண்டனார்

6. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் காலத்திற்கு முன்னிருந்தோர்

1. கோச்செங்கண்
2. புகழ்ச்சோழர்
3. சண்டேசுவரர்
4. கண்ணப்பர்
4. காரைக்கால் அம்மையார்
6. மூர்த்தி நாயனார்
7. கூற்றுவ நாயனார்
8. ஐயடிகள்
9. கணம்புல்லர்
10. அரிவட்டாயர்
11. நமிநந்தியடிகள்
12. சாக்கியர்
13. எறிபத்தர்
14. அமர்நீயார்
15. புகழ்த்துணையார்
16. தண்டியடிகள்
17. திருமூலர்

7. (திருஞானசம்பந்தர் - அப்பர்) இவ்விருவர் காலத்திற்கும் இடைப்பட்டவர்

1. கோட்புலியார்
2. ஏயர்கோன் கலிக்காமர்
3. சேரமான் பெருமாள்
4. பெருமிழலைக் குறும்பர்
5. சடையனார்
6. இசைஞானியார்
7. விறன்மிண்டர்
8. வாயிலார்
9. முனைநமுவார்
10. இடங்கழியார்
11. இயற்பகையார்
12. இளையான்குடி
13. போகர்
14. மெய்ப்பொருள்
15. திருநாளைப்போவார்
16. ரணாதி
17. திருநீலக்கண்டர்
18. அணையிலர்
19. ருத்திர பசுபதி
20. திருக்குறிப்புத் தொண்டர்
21. கணநாதர்
22. பூசலார்
23. காரி
24. எரிபத்தர்
25. கலிக்கம்பர்
26. கலியர்
27. சத்திநாயனார்

8. சுந்தரர் காலத்தில் வாழ்ந்தோர்

1. சடையனார்
2. இசைஞானியார்
3. நரசிங்கநாயர்
4. கோட்புலியார்
5. ஏயர்கோன் கலிக்காமர்
6. மாணக்கஞ்சாறர்
7. பெரும்புலை
8. சோமாசி
9. சேரமான் பெருமாள்
10. கழற்சிங்கர்
11. சிறுத்துணை
12. விறல்மிண்டார்

அறுபான் மும்மை நாயன் பற்றிய விளக்கம்

திருத்தொண்டரின் திருப்பெயர்	குலம்	ஊர்	மாதம்	நட்சத்திரம்	செய்த செயற்கரிய செயல்	வரலாறு கூறும் பெரியபுராண செய்யுள் எண்ணிக்கை
1. இசைஞானியார்	ஆதிசைவர்	திருநாவலூர்	சித்திரை	சித்திரை	சுந்தரரைப் பெற்று வளர்த்த தாயார்	1
2. சிறுத்தொண்டர்	மாமாத்திரர்	திருச்செங் காட்டங்குடி	சித்திரை	பரணி	அடியாராக வந்த சிவனார்க்குத் தன் ஒரே மகனை அறுத்துச் சமைத்து உணவு செய்தார்	88
3.திருக்குறிப்புத்தொண்டர்	ஏகாலியர்	காஞ்சி	சித்திரை	சுவாதி	காலந்தவறியதால் துணி தோய்க்கும் கல்லில் தலையை மோதிக் கொள்ளச் சென்றது	128
4. திருநாவுக்கரசர்	வேளாளர்	திருவாய்மூர்	சித்திரை	சதயம்	தமிழ் மறை தந்தது. நஞ்சு தீண்டி இறந்த மகவினை உயிருடன் எழுப்பியது	429
5. மங்கையர்க்கரசியார்	அரசியார்	மதுரை	சித்திரை	உரோகிணி	திருஞானசம்பந்தரை அழைத்து வந்து பாண்டி நாட்டில் சைவத்தை நிலை நாட்டியது	3
6. விறன்மிண்டார்	வேளாளர்	செங்குன்றூர்	சித்திரை	திருவாதிரை	திருத்தொண்டர் தொகை பாடக் காரணமாய் இருந்தது	11
7. கழற்சிங்கர்	அரசர்	-	வைகாசி	பரணி	சிவபூசைக்குரிய மலரை மோந்த தம் மனைவியின் கையை வெட்டியது	13
8. சோமாசிமாறன்	அந்தணர்	திருஅம்பர்	வைகாசி	ஆயில்யம்	கழற்றிற்றறிவார் பார்க்க வேள்வி செய்தல் சுந்தரரின் திருவடிக்குப் பக்தி கொண்டது	6

திருத்தொண்டரின் திருப்பெயர்	குலம்	ஊர்	மாதம்	நட்சத்திரம்	செய்த செயற்கரிய செயல்	வரலாறு கூறும் பெரியபுராண செய்யுள் எண்ணிக்கை
9. திருஞானசம்பந்தர்	அந்தணர்	சீகாழி	வைகாசி	மூலம்	தமிழ் மறை தந்தது. ஞானப்பால் குடித்தமை, எலும்பைப் பெண் ஆக்கியது	1256
10. திருநீலகண்ட யாழ்ப்பாணர்	பாணர்	திருஎருக் கத்தம்புலியூர்	வைகாசி	மூலம்	சம்பந்தருடன் சென்று யாழ் தொண்டு புரிந்தது	12
11. திருநீலநக்கர்	அந்தணர்	சாத்தமங்கை	வைகாசி	மூலம்	பாணர்க்கு வேதிகையில் இடம்தந்தது சம்பந்தர் திருமணத்தை நடத்தி முத்தி.	38
12. முருகநாயனார்	அந்தணர்	திருப்புகலூர்	வைகாசி	மூலம்	மலர்த் தொண்டு	14
13. நமிநந்தியடிகள்	அந்தணர்	ஏமப்பேரூர்	வைகாசி	பூசம்	தண்ணீரால் விளக்கு எரித்தது	33
14. அமர்நீதியார்	வணிகர்	பழையாறை	ஆனி	பூரம்	கோவணத்திற்காகத் தம்மையும், சொத்துக்களையும், குடும்பத்தையும் சிவனுக்கு அளித்தது	49
15. ஏயர்கோன் கலிக்காமர்	வணிகர்	பெண்ணாடம்	ஆனி	ரேவதி	சுந்தரர்பால் சினங் கொண்டு, பின்னர் நண்பரானது.	409
16. கூற்றுவநாயனார்	அரசர்	களந்தை	ஆடி	திருவாதிரை	அம்பலவாணரின் திருவடியையே தம் முடியாகக் கொண்டு ஆடியது	9
17. சுந்தரமூர்த்தி	ஆதிசைவர்	திருநாவலூர்	ஆடி	சுவாதி	தமிழ் மறைதந்தது. முதலையுண்ட பாலகனை வரவழைத்தது.	பல இடங்கள்

திருத்தொண்டரின் திருப்பெயர்	குலம்	ஊர்	மாதம்	நட்சத்திரம்	செய்த செயற்கரிய செயல்	வரலாறு கூறும் பெரியபுராண செய்யுள் எண்ணிக்கை
18. சேரமான் பெருமாள் (கழற்றிற்றறிவார்)	அரசர்	கொடுங்களூர்	ஆடி	சுவாதி	சுந்தரரின் தோழர் அவருடன் விண் சென்றார்	175
19. கலியர்	செக்கார்	திருவொற றியூர்	ஆடி	கேட்டை	விளக்கு எரிக்க எண்ணெய் இன்மையால் இரத்தம் எடுக்க முயன்றது.	17
20. கோட்புலியர்	வேளாளர்	நாட்டியத் தான்குடி	ஆடி	கேட்டை	சிவபூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரை கொல்ல முயன்றது.	13
21. பெருமிழலைக் குறும்பர்	-	பெருமிழலையூர்	ஆடி	சித்திரை	சுந்தரர் கயிலை செல்லுதலையறிந்து, யோகத்தால் தாமும் சென்றது.	11
22. மூர்த்தி நாயனார்	வணிகர்	மதுரை	ஆடி	கார்த்திகை	சந்தனக் கட்டை கிட்டாமையால் கையையே அரைத்தது	49
23. புகழ்ச்சோழர்	ஆதிசைவர்	உறையூர்	ஆடி	கார்த்திகை	பகைவனின் அறுபட்ட தலையில் சடைகண்டு உயிர் நீத்தமை.	40
24. செருத்துணையார்	வேளாளர்	தஞ்சை	ஆவணி	பூசம்	சிவபூசைக்குரிய மலரைக் கழற்சிங்கர் மனைவி மோந்து பார்க்க அவர் மூக்கை அறுத்தது.	7
25. இளையான்குடி மாறர்	வேளாளர்	இளையான் குடி	ஆவணி	மகம்	மழை பெய்தபோதும் விதைத்த நெல்லை அரித்துவந்து அடியார்க்கு அமுது செய்தமை.	27
26. அதிபத்தர்	மீனவர்	நாகை	ஆவணி	ஆயில்யம்	பொன் மீனையும் இறைவனுக்கு அளித்தல்	20

திருத்தொண்டரின் திருப்பெயர்	குலம்	ஊர்	மாதம்	நட்சத்திரம்	செய்த செயற்கரிய செயல்	வரலாறு கூறும் பெரியபுராண செய்யுள் எண்ணிக்கை
27. புகழ்த்துணையார்	அந்தணர்	செருவிலி புத்தூர்	ஆவணி	ஆயில்யம்	சிவபூசை செய்ய இறைவன் காசு கொடுத்தமை.	7
28. குலச்சிறையார்	கணக்கர்	மணமேற் குடி	ஆவணி	அனுஷம்	பாண்டி நாட்டில் சைவம் புத்துயிர் பெற்றமை.	11
29. குங்குலியக் கலையனார்	அந்தணர்	திருக்கடவூர்	ஆவணி	மூலம்	மாங்கல்யம் விற்று குங்குலியம் வாங்கியது; சாய்ந்த லிங்கத்தை நிமிர்த்தியது.	35
30. உருத்திரபசுபதி	அந்தணர்	திருத் தலையூர்	புரட்டாசி	அசுவனி	அல்லும் பகலும் குளத்து நீரில் நின்று ஸ்ரீ ருத்தம் ஓதியமை.	10
31. ஏனாதிநாதர்	சான்றார்	எயினூர்	புரட்டாசி	உத்திராடம்	திருநீறு அணிந்து போர் புரியாது அவனால் கொலையுண்டது.	42
32. திருநாளைப்போவார்	ஆதி திராவிடர்	ஆதனூர்	புரட்டாசி	உரோகணி	தில்லைகாண வேட்கை. தீப்புகுந்து உருமாறி இறைவன் அடிசேறல்	37
33. நரசிங்கமுனையார்	அரசர்	-	புரட்டாசி	சதயம்	சிவவேடங் கொண்ட தூர்த்தனையும் போற்றல்	9
34. திருமூலர்	இடையர்	சாத்தனூர்	ஐப்பசி	அசுவனி	மூலன் உடலினுள் புகுந்து 3000 ஆண்டுகள் வாழ்ந்து திருமந்திரம் தந்தது.	28

திருத்தொண்டரின் திருப்பெயர்	குலம்	ஊர்	மாதம்	நட்சத்திரம்	செய்த செயற்கரிய செயல்	வரலாறு கூறும் பெரியபுராண செய்யுள் எண்ணிக்கை
35. நெடுமாறன்	அரசர்	மதுரை	ஐப்பசி	பரணி	சம்பந்தர் தந்த திருநீறால் கூன் நீங்கப் பெற்றமை	10
36. இடங்கழியார்	அரசர்	கொடும் பாளூர்	ஐப்பசி	கார்த்திகை	அடியார்களுக்காக நெல் திருடியவர்களுக்கு மேலும் பொருள் தந்தது.	11
37. சத்திநாயனார்	வேளாளர்	வரிஞ்சியூர்	ஐப்பசி	பூசம்	சிவனடியார்களை இகழ்வாரின் நாவினை அறுத்தது.	7
38. பூசலார்	அந்தணர்	திருநின்றவூர்	ஐப்பசி	அனுஷம்	மனத்திலேயே கோயில் கட்டி திருக் குடமுழுக்கு செய்தது.	18
39. ஐயடிகள் காடவர்கோன்	அரசர்	காஞ்சி	ஐப்பசி	மூலம்	அரசுரிமையை வெறுத்து தல யாத்திரை மேற்கொண்டு க்ஷேத்திர வெண்பா பாடியது.	9
40. ஆனாய நாயனார்	இடையர்	மங்கலவூர்	கார்த்திகை	அஸ்தம்	ஆனிரை மேய்க்கும் பொழுதுகூட புல்லாங்குழலில் திருவைந்தெழுத்தினைப் பாடியது.	42
41. கணம்புல்லர்	அந்தணர்	திருச்சி	கார்த்திகை	கார்த்திகை	முடியால் விளக்கு எரித்தமை	9
42. சிறப்புலியார்	அந்தணர்	திருஆக்கூர்	கார்த்திகை	பூராடம்	அடியார்களுக்கு அன்னமும், பொருளும் ஈதல்	6
43. மெய்ப்பொருளார்	அரசர்	திருக் கோவிலூர்	கார்த்திகை	உத்திரம்	தன்னை கொல்ல வந்த சிவவேட தாரியையும் போற்றியது.	24

திருத்தொண்டரின் திருப்பெயர்	குலம்	ஊர்	மாதம்	நட்சத்திரம்	செய்த செயற்கரிய செயல்	வரலாறு கூறும் பெரியபுராண செய்யுள் எண்ணிக்கை
44. மூர்க்க நாயனார்	வேளாளர்	திருவேற்காடு	கார்த்திகை	மூலம்	சூதாடலால் கிட்டும் பொருளை அடியார்களுக்கு அளித்தல்	12
45. இயற்பகையார்	வணிகர்	பூம்புகார்	மார்கழி	உத்திரம்	அடியார் விரும்பியபடி தன் மனைவியையே அவருக்குத் தந்தது.	36
46. சடையனார்	ஆதிசைவர்	திருநாவலூர்	மார்கழி	திருவாதிரை	சுந்தரரின் தந்தை	1
47. சாக்கியர்	வேளாளர்	திருச்சங்கமங்கை	மார்கழி	பூராடம்	மறவாது லிங்கத் திருமேனியில் கல்லெறிந்தது.	18
48. மானக்கஞ்சாறர்	வேளாளர்	கஞ்சானூர்	மார்கழி	சுவாதி	மகளின் தலை முடியை அறுத்துப் பிறர்க்கு ஈந்தது	37
49. வாயிலார்	வேளாளர்	மயிலாப்பூர்	மார்கழி	ரேவதி	மானசீக சிவபூசை	10
50. அரிவட்டாயர்	வேளாளர்	கணமங்கலம்	தை	திருவாதிரை	சிவநிவேதனப் பொருளை சித்தியால் தம் கழுத்தை அறுத்துக் கொண்டது.	23
51. அப்பூதியடிகள்	அந்தணர்	திங்களூர்	தை	சதயம்	மகன் இறந்ததை மறைத்து அப்பருக்கு அமுது படைக்க எண்ணியது.	45
52. கலிக்கம்பர்	வணிகர்	பெண்ணாடம்	தை	இரேவதி	பழைய வேலையாள் அடியார் வேடத்தில்வர வணங்கியது	10
53. சண்டேசுரர்	அந்தணர்	திருச்சேய்ஞலூர்	தை	உத்திரம்	அபிஷேகக் குடப்பாலைச் சிதைத்த தந்தையின் கால்களை வெட்டியது.	60
54. கண்ணப்பர்	வேடர்	உடுப்பூர்	தை	மிருகசீரிடம்	காளத்தியப்பனுக்குக் கண் அப்பியது	186

திருத்தொண்டரின் திருப்பெயர்	குலம்	ஊர்	மாதம்	நட்சத்திரம்	செய்த செயற்கரிய செயல்	வரலாறு கூறும் பெரியபுராண செய்யுள் எண்ணிக்கை
55. திருநீலகண்டர்	குயவர்	சிதம்பரம்	தை	விசாகம்	இளமையில் மனைவியைத் தீண்டாது இல்லறம் நடத்தியது.	44
56. எறிபத்தர்	வேளாளர்	கரூர்	மாசி	அஸ்தம்	பூக்கடலையை இழுத்துச் சிதறச் செய்த பட்டத்து யானையைக் கொன்றது.	57
57. காரிநாயனார்	அரசர்	திருக்கடவூர்	மாசி	பூராடம்	கோவை பாடி, பொருள் பெற்று ஆலயப்பணி புரிந்தது.	5
58. கோச்செங்கண்	அரசர்	-	மாசி	சதயம்	சிலந்தியாக இருந்து மன்னனாக மாறி பல ஆலயங்கள் கட்டியது	18
59. கணநாதர்	அந்தணர்	சீகாழி	பங்குனி	திருவாதிரை	சம்பந்தரை வழிபட்டு கயிலை அடைந்தது	7
60. காரைக்கால் அம்மையார்	வணிகர்	காரைக்கால்	பங்குனி	சுவாதி	மாம்பழம் பெற்றது. பேய் உருவங் கொண்டது.	66
61. தண்டியடிகள்	அந்தணர்	ஆரூர்	பங்குனி	சதயம்	குளப்பணி செய்து கண் பெறல் சமணரை வென்றது. சைவத்தை நிலை நிறுத்தியது.	26
62. நேசநாயனார்	சாலியர்	காம்பீலி	பங்குனி	உரோகிணி	அடியார்க்கு ஆடை வழங்கியது.	5
63. முனையாடுவார்	வேளாளர்	திருநீடூர்	பங்குனி	பூசம்	கூலிக்குப் போர் செய்து அடியார் வழிபாடு ஆற்றியது.	6

திருத்தொண்டரின் திருப்பெயர்	குலம்	ஊர்	மாதம்	நட்சத்திரம்	செய்த செயற்கரிய செயல்	வரலாறு கூறும் பெரியபுராண செய்யுள் எண்ணிக்கை
மாணிக்கவாசகர்	அந்தணர்	திருவாதவூர்	ஆனி	மகம்	திருவாசகம், திருக்கோவையார் பாடியது.	-
சேக்கிழார் சுவாமிகள்	வேளாளர்	குன்றத்தூர்	வைகாசி	பூசம்	பெரியபுராணம் பாடியது	
			சந்தான குரவர்			
மறைஞானசம்பந்தர்	அந்தணர்	இடையார்	ஆவணி	உத்திரம்	சாத்திர நூல் தந்தது...	
உமாபதி சிவாச்சாரியார்	ஆதிசைவர்	தில்லை	சித்திரை	அஸ்தம்	சாத்திர நூல் தந்தது....	
அருணந்தி சிவாச்சாரியார்	அந்தணர்	திருத் துறையூர்	புரட்டாசி	பூரம்	சாத்திர நூல் தந்தது..	
மெய்கண்டார்	வேளாளர்	பெண் ணாடம்	ஐப்பசி	சுவாதி	சாத்திர நூல் தந்தது...	

வணக்க நிலைகள்

ஏகாங்க நமஸ்காரம்	-	ஒருறுப்பு வணக்கம்
துவிதாங்க நமஸ்காரம்	-	ஈருறுப்பு வணக்கம்
திரிவிதாங்க நமஸ்காரம்	-	மூவுறுப்பு வணக்கம்
பஞ்சாங்க நமஸ்காரம்	-	ஐந்துறுப்பு வணக்கம்
அஷ்டாங்க நமஸ்காரம்	-	எட்டுறுப்பு வணக்கம்
சாஷ்டாங்க நமஸ்காரம்	-	நிலந்தோய வீழ்ந்து வணங்கல்

அட்டமா சித்திகள்

1. அணிமா - உடலை அணுபோன்று சிறியதாக்குதல்
2. மகிமா - மேருபோல் பெரியதாக்கல்
3. லகிமா - காற்றைப் போல் இலேசாக்குதல்
4. கரிமா - பளுவாக்குதல்
5. பிராப்தி
6. பிராகாமியம் - கூடு விட்டு கூடு பாய்தல்
7. வசித்துவம் - அனைவரையும் தன்வயப்படுத்துதல்
8. ஈசத்துவம் - விரும்பிய அனைத்தையும் அனுபவித்தல்

அட்டாங்க யோகங்கள்

1. இயமம், 2. நியமம், 3. ஆதனம், 4. பிராணாயாமம், 5. பிராத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி

அட்ட வீரட்டம்

பூமன் சிரங்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை
மாமன பறியல் சலந்தரன் விற்குடி மாமவழுவூர்
காமன் குறுக்கை யமன்கட வூரிந்தக் காசினியிற்
றேமன்னு கொன்றையுஞ் திங்களுஞ் சூடிதன் சேவகமே

காவிரியின் கரைக்கண்டி வீரட் டானங்
    கடவூர்வீ ரட்டானங் காமருசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம்
    வியன்பறியல் வீரட்டம் விடை யூர்த்திக் கிடமாம்
கோவல்நகர் வீரட்டங் குறுக்கைவீ ரட்டங்
    கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி
நாவில்நவின றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
    நமன்தமருஞ் சிவன்தமரென் றகல்வர் நன்கே.

(அடைவுத் திருத்தாண்டகம் 2)

	தலம்	செயல்
1.	திருக்கண்டியூர் (திருவையாறு அருகே)	பிரமன் சிரத்தைக் கொய்தது
2.	திருக்கடவூர் (மயிலாடுதுறை அருகே)	காலனை உதைத்து அழித்தது
3.	திருவதிகை (திரிப்பாதிரிப் புலியூர்)	முப்புரத்தை அழித்தது
4.	திருவழுவை (வைப்புத்தலம்) (மயிலாடுத்துறை - திருவாரூர் வழுவூர்)	யானையை உரித்தது
5.	திருப்பறியலூர் (பரசலூர்) (செம்பொனார் கோவிலிருந்து தென்மேற்கே 2 கி.மீ.)	தக்கன் வேள்வியை அழித்தது
6.	திருக்கோவலூர் (திருக்கோயிலூர் நகர்முன்)	அந்தகாசுரனை அழித்தது
7.	திருக்குறுக்கை (கொருக்கை) (திருமணச் சேரியிலிருந்து தெற்கே 5 கி.மீ.)	மன்மதனை எரித்தது.
8.	திருவிற்குடி (பிருந்தை மயானம்) (திருவாரூருக்கு வடக்கே 5 கி.மீ.)	சலந்தாசுரனை அழித்தது.

அட்ட மூர்த்தங்கள்

இயற்கையையே இறைவனாக வழிபட்டவர்கள் நம் முன்னோர்கள். அதனால் அவனுக்கு இயற்கைப் பொருள்களையே உருவமாகவும் கூறுவார்கள்.

நிலம், நீர், தீ, காற்று, வானம், சூரியன், சந்திரன் இவற்றுடன் ஆன்மா சேர அமைந்துள்ள எண் பொருள்களாக இறைவன் உறைகின்றான். அவன் அட்டமூர்த்தி என்பது தத்துவக் கொள்கை.

நிலம்	-	திருவாரூர் (காஞ்சி என்றும் கூறுவர்)
நீர்	-	திருவானைக்கா
தீ	-	திருவண்ணாமலை
காற்று	-	திருக்காளத்தி
ஆகாயம்	-	சிதம்பரம்
சூரியன்	-	திருச்சிராப்பள்ளி
சந்திரன்	-	மதுரை
ஆன்மா	-	திருப்பெருந்துறை (கரூர்) என்றும் கூறுவர்.

எண்ணளவைகள்

எல்லாம் வல்ல இறைவனை அறிய எண்வகை அளவைகளாகச் சாத்திர நூல்கள் கூறுகின்றன.

1. காட்சி - கண்ணால் காணல்
2. அனுமானம் - அனுமானித்தல். புகையிருந்தால் தீ உண்டு எனத் தீர்மானித்தல்
3. உவமானம் - நாட்டு ஆ, காட்டு ஆ போல இருக்கும் என உவமித்துக் கூறல்.
4. ஆகமம் - சான்றோர் வாய்மொழி
5. அருத்தாபத்தி - ஒன்றினால் பிறிதொன்றை அறிதல்
   பகல் உண்ணான் பருத்திருப்பான் என்றால்
   அவன் இரவில் உண்பான் என முடிவெடுத்தல்.
6. அபாவம் - முன் இல்லை; பின்னில்லை; ஒன்றினால் ஒன்றில்லை ஒரு காலத்தும் இல்லை என்றெல்லாம் கூறல்.
7. ஐதீகம் - 'இம்' மரத்தில் பேய் உள்ளது எனக் கூறல்
8. சம்பவம் - ஆயிரத்தில் நூறு உண்டென்று கூறல்.

ஆதாரங்கள் எட்டு

சிலர் இப்படி என்பர்	பிறர் இங்ஙனம் என்பர்	முருகனுக்கு
1. மூலாதாரம் - குதஸ்தானம் - காஞ்சி	மூலாதாரம் - உந்தி - ஆரூர்	திருப்பரங்குன்றம்
2. சுவாதிட்டானம் - குதத்துக்கும் நாடிக்கும் இடையிலுள்ள - அக்னி அண்ணாமலை	சுவாதிட்டானம் - வயிறு - ஆனைக்கா	திருச்செந்தூர்
3. மணிபூரகம் - நாபி. நீர். ஆனைக்கா	மணிபூரகம் - இருதயம் - அண்ணாமலை	திருவாவினன் குடி
4. விசுத்தி - கண்டம். விண். சிதம்பரம்	விசுத்தி - நெற்றி - காசி	குன்றுதோறாடல்
5. அநாகதம் - இருதயம். வாயு. காளகத்தி	அநாகதம் - கழுத்து - சிதம்பரம்	திருவேதகம்
6. ஆஞ்ஞை - புருவமத்தி - மனம் - காசி	ஆக்ஞை - வாய் - காசி	பழமுதிர் சோலை
7. சகஸ்ரம் - தலை - மதுரை.	பிரமம் - தலை - கயிலை	
8. ---	துவாதசாந்தம் - மதுரை	

இப்படியும் கூறுவர் சிலர்.

தலை - கயிலாயம், நெற்றி - கேதாரம், புருவம் - காசி, கண் - திரியம்பகம், வலக்கை - ஓங்காரம், இடக்கை - பீம சங்கரம், மார்பு - உஜ்ஜையினி, இருதயம் - சிதம்பரம்.

பஞ்ச பூதத் தலங்கள்	பஞ்சேந்திரியங்கள்
நிலம் - திருவாரூர்	மெய் - உணர்ச்சி
நீர் - திருவானைக்கா	வாய் - பேசல், சுவையறிதல்
தீ - திருவண்ணாமலை	கண் - பார்த்தல்
காற்று -திருக்காளத்தி	மூக்கு - முகர்தல்
விண் - சிதம்பரம்	செவி -கேட்டல்

பஞ்சாட்சரம் (திருவைந்தெழுத்து)

1. தூல பஞ்சாட்சரம் - நமசிவய
2. சூட்சும சாட்சரம் - சிவயநம
3. ஆதி சாட்சரம் - சிவயசிவ (முத்தி பஞ்சாட்சரம், இருதலை மாணிக்கம்)
4. காரண சாட்சரம் - சிவசிவ
5. மகாகாரண சாட்சரம்- சி (உரிய பீஜ மந்திரங்களைக் கூட்டி உபதேசித்தல்)

சிவமூர்த்தங்களின் ஐந்து நிலைகள்

1. பைரவர் - வக்ரமூர்த்தி
2. தட்சிணாமூர்த்தி - சாந்த மூர்த்தி
3. பிட்சாடணர் - வசீகர மூர்த்தி
4. நடராசர் - ஆனந்த மூர்த்தி
5. சோமாஸ்கந்தர் - கருணா மூர்த்தி

பஞ்ச பிரம்மத் தலங்கள்

நடுவில் மூலத்தானமும், நான்கு பக்கங்களில் சிவலிங்கங்களும் அமையப் பெற்ற தலமே பஞ்ச பிரம்மத் தலமாம். திருப்புகலூர், திருவாரூர், மாகாளம்.

பஞ்ச லிங்க க்ஷேத்திரங்கள்

முத்தி லிங்கம் - கேதாரம்
வரலிங்கம் - நேபாளம்
போகலிங்கம் - சிருங்கேரி

ஏகலிங்கம் காஞ்சி (கா. பிர்மா, அஞ்சித - பூஜிக்கப்பட்டது. பிர்மாவால் பூஜிக்கப்பட்ட தலம் - காஞ்சி)
மோட்சலிங்கம் - சிதம்பரம்

ஸ்தல விருட்சமாக வாழையைக் கொண்ட தலங்கள்

1.	திருப்பழனம்	5.	திருக்கஞ்சனூர்
2.	திருபைஞ்ஞீலி	6.	திருக்கழுக்குன்றம்
3.	திருக்குடவாயில்	7.	திருமருகல்
4.	திருத்தேவூர்	8.	குடவாசல்

ஸ்தல விருட்சமாக பனையைக் கொண்ட தலங்கள்

1.	திருப்பனந்தாள்	4.	திருப்பனையூர்
2.	செய்யாறு	5.	புறவார்பனங்காட்டூர்
3.	திருமழபாடி	6.	திருவன் பார்த்தான் பனங்காட்டூர்

ஸ்தல விருட்சமாக மூங்கிலைக் கொண்ட தலங்கள்

1.	திருச்சி	3.	திருவெண்ணெய்நல்லூர்
2.	திருநெல்வேலி	4.	திருப்பாசூர்
5.	திருவேட்களம்		

பஞ்ச ஆரண்யத் தலங்கள்

அ. வனத்தலங்கள்
1. முல்லை வனம் - திருக்கருகாவூர் - அதிகாலை
2. பாதிரிவனம் - அவளிவநல்லூர் - காலை
3. வன்னிவனம் - அரதைப் பெரும்பாழி - பகல் (அரித்துவார மங்கலம்)
4. பூளைவனம் - இரும்பூளை (ஆலங்குடி) - மாலை
5. வில்வனம் - திருக்கொள்ளம்பூதூர் - இரவு

(திருச்சி மாவட்டத்தில் இதேபோல் காலைக் கடம்பர், மதியம் சொக்கர், அந்தி - ஈங்கோய் நாதர் என்ற பழக்கம் உண்டு. கடம்பர் - குளித்தலை, மதியம் - ஐயர்மலை, அந்தி - ஈங்கோய் மலை)

ஆ. காட்டுத் தலங்கள்
1. இலந்தைக்காடு - திருவெண்பாக்கம்
2. மூங்கில்காடு - திருப்பாசூர்

3. ஈக்காடு - திருவேப்பூர்
4. ஆலங்காடு - திருவாலங்காடு
5. தர்ப்பைக்காடு - திருவிற்கோலம்

பஞ்ச சபைகள்

1. திருவாலங்காடு - இரத்தினசபை
2. சிதம்பரம் - பொன்சபை
3. மதுரை - வெள்ளி சபை
4. திருநெல்வேலி - தாமிர சபை
5. திருக்குற்றாலம் - சித்திர சபை

சப்தவிடத்தலங்கள்
(பிடங்கம் - உளி. உளிபடாது தோன்றியவராதவால் விடங்கர்)

1. திருவாரூர் - வீதிவிடங்கர் - அஜபா நடனம்
2. திருக்கோளிலி (திருக்குவளை) - அவனிவிடங்கர் - பிரமா நடனம்
3. திருக்காறாயில் - ஆதிவிடங்கர் - குக்குட நடனம்
4. திருவாய்மூர் - நிலவிடசங்கர் - கமல நடனம்
5. திருமறைக்காடு - புவனி விடங்கர் - உறப்பாச நடனம்
6. திருநாகைக்காரோணம் (நாகை) - சுந்தர விடங்கர் - பாராவதரங்க நடனம்
7. திருநள்ளாறு - நக விடங்கர் - சதசன்மத்த நடனம்

ஏழுவகைக் கோயில்கள்

1. ஆலக்கோவில்
2. ஞாழற்கோவில்
3. கொகுடிக்கோவில்
4. இளங்கோவில்
5. மணிக்கோவில்
6. கரகக் கோயில்
7. பெருங்கோயில்

சித்தர்கள்

செயற்கரிய செயல்களைச் செய்து வியப்பில் ஆழ்த்துவோரே சித்தர்கள். இச்சித்தர்கள் பெரிய மகான்களாகவும், ஆனால் பார்வைக்குப் பித்தர் போலவும் காணப்படுவர். முன்னர் பதினெண் சித்தர்கள் இருந்ததாகக் கூறுவார்கள். அவர்கள் சமாதி கொண்ட இடங்களைக் கீழ்க் காண்க. (இன்றும் இது போன்ற பல மகான்கள் அங்குமிங்குமாக உலவி வருகின்றனர். அப்பெருமக்களை அடையாளங்கண்டு வணங்கி பெருமை பெறுக.)

சித்தர்	வாழுமிடம்
1. திருமூலர்	சிதம்பரம்
2. இராமதேவர்	அழகர் மலை
3. கும்பமுனி	திருவனந்தபுரம்
4. இடைக்காடர்	திருவண்ணாமலை
5. வான்மீகர்	எட்டுக்குடி
6. பாம்பாட்டிச் சித்தர்	விருத்தாசலம்
7. குதம்பைச் சித்தர்	மயிலாடுத்துறை
8. கமலமுனி	திருவாரூர்
9. தன்வந்தரி	வைத்தீஸ்வரன் கோயில்
10. போகர்	பழநி
11. மச்சமுனி	திருப்பரங்குன்றம்
12. கொங்கணவர்	திருப்பதி
13. பதஞ்சலி	இராமேஸ்வரம்
14. நந்தி	காசி
15. காங்கேயர் (கருவூர்த்தேவர்)	கரூர்
16. கோரக்கர்	பொய்யூர்
17. சட்டைமுனி	ஸ்ரீரங்கம்
18. சுந்தரானந்தர்	மதுரை

அண்மையில் வாழ்ந்தவர்

1. வள்ளலார்	சத்தியஞானசபை (வடலூர்)
2. இரமணர்	ரமணாஸ்ரமம் (திருவண்ணாமலை)
3. பாம்பன் சுவாமிகள்	திருவான்மியூர்
4. பட்டினத்தடிகள்	திருவொற்றியூர்
5. வள்ளிமலை சுவாமிகள்	வள்ளி மலை
6. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்	திருவாமாத்தூர் (விழுப்புரம்)
7. திருமாளிகைத் தேவர்	திருவாவடுதுறை
8. சதாசிவப் பிரமேந்திரர்	நெரூர் (கரூர் அருகில்)

காசிக்குச் சமமான தலங்கள்

1. திருவெண்காடு
2. திருவையாறு
3. மயிலாடுதுறை
4. திருவிடைமருதூர்

5. திருச்சாய்க்காடு
6. திருவாஞ்சியம் (கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகளில் கோயில் குளத்தில் நீராடல் சிறப்பு)

அறுவகை

இலிங்கங்கள் யாரால் அமைக்கப் பெற்று பூஜை செய்யப் பட்டனவோ அவர்கள் பெயராலேயே அந்த லிங்கங்கள் அழைக்கப் படுகின்றன.

தானே தோன்றிய லிங்கம்	-	சுயம்புலிங்கம்
தேவர்களின் பூஜிக்கப்பட்டது	-	தைவிக லிங்கம்
முனிவர்களால் பூஜிக்கப்பட்டது	-	ஆரிட லிங்கம்
மனிதர்களால் பூஜிக்கப்பட்டது	-	மானுட லிங்கம்
அசுரர்களால் பூஜிக்கப்பட்டது	-	ஆசுர லிங்கம்
நீர் நிலைகளில் இருந்து கிடைத்தது (அல்லது)	-	பாண லிங்கம்
அம்பிகையால் பூஜிக்கப்பட்டது	-	தேவிக லிங்கம்

ஐந்துவகை லிங்கங்கள்

மானிடலிங்கத்தினினும் உயர்ந்து ஆரிடலிங்கம்.

அதனினும் உயர்ந்தது விஷ்ணு போன்றவர்களால் பூஜிக்கப் பெற்ற தைவிக லிங்கம்.

அதனினும் உயர்ந்தது விநாயகர், முருகன் போன்றோரால் ஸ்தாபிக்கப்பெற்ற காணலிங்கம்.

அதனினும் உயர்ந்தது சுயம்புலிங்கம்.

சிவபிரானுக்குரிய ஐந்து முகங்களும் பெயர்களும்

1.	ஈசான முகம்	-	அனைத்தையும் ஆளல் (மேல் நோக்கி)
2.	தத் புருஷ முகம்	-	காத்தல் (கிழக்கு நோக்கல்)
3.	அகோர முகம்	-	அழித்தல் (தெற்கு நோக்கல்)
4.	வாம முகம்	-	விளக்குதல் (வடக்கு நோக்கல்)
5.	சத்யோஜாதமுகம்	-	தோற்றுவித்தல் (மேற்கு நோக்கல்)

சிவனாரின் திருவடிகள்

பெருமானின் திருவடிகளைப் போக, யோக, வேக வடிவம் என மூவகைப்படுத்தலாம். யோகியாக எழுந்தருளிய உயிர்களுக்கு யோகத்

தையும் இதைப் புரிவதற்கான ஞானத்தையும் தரும். இத்திருவடிவமே தட்சிணாமூர்த்தி வடிவம்.

சிவனின் வண்ணம்

சிவனார் தழல் வண்ணமேனியர்; சிவந்த வண்ணர்; அதனால் சிவன் எனப்பட்டார். 'சிவன்' எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியம்மான், 'சிவன் என்னும் செம்மேனிப்பேராளன்' எனத் திருமுறை புகழ்ந்து கூறும். இவருக்கு மூன்று நிலை.


அரூப நிலை	-	*உருவம் அற்ற நிலை*
ரூப நிலை	-	*உருவ நிலை*
ரூபா ரூப நிலை	-	*அருவுருவம்*

(சிவலிங்கமே அருவுருவ நிலையாம்.)

பன்னிரு ஜோதிலிங்கங்கள்

1.	மல்லிகார்ச்சுனம்	- ஸ்ரீசைலம்	- ஆந்திரா
2.	திரியம்பகலிங்கம்	- திரியம்பகம்	- ஆந்திரா
3.	இராமலிங்கம்	- இராமேஸ்வரம்	- தமிழ்நாடு
4.	வைத்தியநாதலிங்கம்	- வைத்திய நாதம்	- மகாராஷ்டிரம்
5.	பீமசங்காரலிங்கம்	- பீம சங்காரம்	- மகாராஷ்டிரம்
6.	குஸ்மேஸ லிங்கம்	- குஸ்மேஸம்	- மகாராஷ்டிரம்
7.	நாகேஸ்வரலிங்கம்	- நாகேசம்	- மகாராஷ்டிரம்
8.	மாகாளலிங்கம்	- உஜ்ஜைனி	- மத்தியப் பிரதேசம்
9.	ஓங்கார லிங்கம்	- ஓங்காரம்	- மத்தியப் பிரதேசம்
10.	விஸ்வேஸ்வர லிங்கம்	- விஸ்வேஸம் (காசி)	- உத்திரப் பிரதேசம்
11.	கேதார லிங்கம்	- கேதாரம்	- உத்திரப் பிரதேசம்
12.	சோமநாத லிங்கம்	- சோமநாதம்	- குஜராத்

இலிங்கங்கள்



சிவ - பாவங்களைப் போக்கல்; லிங்கம் - குறி, சின்னம்.
சி - ஈசுவரன்; வ - சக்தி
விஸ்வரூபம் - உலக வடிவினன்
விஸ்வாந்தர்யாமி - உலகம் தோன்ற நிமித்த காரணன்
விஸ்வாதிகன் - உலக இயக்கத்திற்கு உள்ளிடையாய் இருப்பவன்.

'உலகமாகி வேறாய் உடனுமாய்' (சிவஞான சித்தியார்)

சிவன் :

ஏகனாக, எல்லாமாக, எங்கும் நிறைந்தவனாக வடிவற்றவனாக, நின்மலனாக, ஆதியும் அந்தமும் சுற்றும்; முதல், நடு, ஈறு ஆகியவற்றைத் தன்னுள் கொண்டும், அனைத்தும் அவனிடமிருந்தே தோன்றி அவனுக்குள்ளேயே சங்கரிக்கின்றன.

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
நாணாது நேடியாமல் நான்முகனும் காணா நடுச்
சேணாகும் தழற் பிழம்பாய் தோன்றியது தெளிந்தாராய்
(சேக்கிழார் 3648)

லிங்கம் அறுவகைப்படும் என்றும் ஐந்துவகை என்றும் கூறுவர்.

ஆதி சங்கரர் கயிலையிலிருந்து கொண்டு வந்த ஐந்து லிங்கங்களைத் தாபனம் செய்த இடங்கள்

1. திருக்கேதாரம் - முக்தி லிங்கம்
2. நேபாளிலுள்ள நீலகண்டம் - வரலிங்கம்
3. சிதம்பரம் - மோட்சலிங்கம்
4. சிருங்கேரி - போகலிங்கம்
5. காஞ்சி - யோக லிங்கம்

இலிங்க வழிபாட்டுப் பயன்

1. கருங்கல்லினால் ஆன சிவலிங்கத்தை வணங்க - 1000 ஆண்டுகள் சிவ உலகில் வசிப்பர்
2. இரத்தினத்தால் ஆன சிவலிங்கத்தை வணங்க - மகாலட்சுமி வீட்டில் வசிப்பார்.
3. உலோகத்தால் ஆன சிவலிங்கத்தை வணங்க - அறங்கள் செய்த புண்ணியம் கிடைக்கும்.
4. பவளத்தினால் ஆன சிவலிங்கத்தை வணங்க - குறையா செல்வம் கிடைக்கும்.
5. மண்ணினால் ஆன சிவலிங்கத்தை வணங்க - விரும்பியது கிட்டும்.

ஐந்தொழில் உணர்த்தும் ஆனந்த ஆடல்



படைத்தல் (சிருஷ்டி) காத்தல் (திதி), அழித்தல் (சம்ஹாரம்), மறைத்தல் (திரோசனம்), அருளல் (அனுக்கிரஹம்) எனும் ஐந்தொழில்களையும் ஒரு சேர காட்டும் ஆடல் வல்லானின் ஆடலே ஆனந்தத் தாண்டவம். (ஆனந்தத் தாண்டவ புரம் என்பதே ஆனை தாண்டாபுரம் என சொல் வழக்கில் மருவிற்று)

இவ்வாடலை விளக்கமாகக் காண்போம்.

சி - உடுக்கை - படைத்தல்
வ - வீசுகரம் - அமைப்பு காத்தல்
ய - அபயகரம் - அக்கினி - அழித்தல்
ந - ஊன்றியதாள் - மறைத்தல்
ம- தூக்கியஅடி - அருளல்

எண்.	தொழில்	ஊர்	சபை	தாண்டவம்
1.	படைத்தல்	திருநெல்வேலி	தாமிர சபை	காளிகா தாண்டவம்
2.	காத்தல்	மதுரை	வெள்ளியம்பலம்	சந்தியா தாண்டவம்
3.	அழித்தல்	இருள் சூழ்ந்த நள்ளிரவில் ஆடிய		சங்காரத் தாண்டவம்
4.	மறைத்தல்	திருக்குற்றாலம்	சித்திர சபை	திரிபுரத் தாண்டவம்
5.	அருளல்	திருவாலங்காடு	இரத்தினசபை	ஊர்த்துவத்தாண்டவம்
	ஐந்தொழில்	சிதம்பரம்	பொன்சபை	ஆனந்தத் தாண்டவம்

ஆடல் வல்லானின் அற்புத சபைகள் மேற்கண்ட ஊர்களிலும் மேலும் பேரூர், திருவெண்காடு, லால்குடி போன்ற தலங்களிலும் சிறப்பு உண்டு.

வழிபாட்டு நிலைகள்

1.	ஆசனம்	2.	பாத்யம்	3.	ஆச்சமனம்
4.	அர்க்கியம்	5.	அபிஷேகம்	6.	வஸ்திரம்
7.	கந்தம்	8.	மலர்	9.	தூபம்
10.	நைவேத்தியம்	11.	தாம்பூலம்	12.	தர்ப்பணம்
13.	சாமரம்	14.	நமஸ்காரம்	15.	பிரதட்சணம்
16.	விஜர்சனம்				

சிவபூசை

சமயம், விசேடம், நிருவாணம், அபிஷேகம் என நால்வகை தீட்சை பெற்று முடித்து சைவ அனுட்டானத்தோடு வாழ்பவரிடம் சிவதீட்சை பெறல் வேண்டும். நிருவாண தீட்சை பெற்றவரே சிவபூசை செய்ய உரிமை பெற்றவராவர்.

சிவபூசை மூன்று வகைப்படும். விரிவாகக் காண்போம்.

1. **சாங்கம் :** அபிஷேகம், பாத்யம், ஆசனம், வஸ்திரம், ஆபரணம், சந்தனம் சாத்துதல் போன்ற பூசை முறைகள்
2. **உபாங்கம் :** கற்பூர தீபம், தூபம், குடை, சாமரம், சிரட்டல், திரு முறை, திருமுறை ஓதல், வாத்திய இசைக் கருவிகள் இசைத்தல்.
3. **பிரத்யங்கம் :** நைவேத்தியம், அதன் பின்னர் சுக்குக் கலந்த தண்ணீரைப் படைத்து, கற்பூரம் காட்டல்

1. பிரதோஷம்

ப்ர -அளவு கடந்த, தோஷம் - தீமை.

பாற்கடலைக் கடைந்தபோது முதன் முதலில் ஆலகால நஞ்சு தோன்றியது. உலகிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் அளவு கடந்த தொல்லை தோன்றிய காலம். மக்கள் துயர் நீங்க நஞ்சினை எடுத்து சிவபிரான் அமிழ்து போல் உண்டார். இறைவன் வயிற்றினுள் அனைத்து உயிர்களும் இருப்பதால் நஞ்சு வயிற்றினுள் சென்றால் எல்லா உயிர்களும் அழிந்து விடுமே என்ற அச்சத்தால் அம்மை அப்பனின் கழுத்தினை இறுகப் பிடித்தார். நஞ்சு உள் செல்லவில்லை. கண்டத்தில் நின்றது.

2. பிரதோஷ காலம்

சுக்கில பட்சம் (வளர்பிறை), கிருஷ்ண பட்சம் (தேய்பிறை) என்னும் இரண்டு பட்சங்களிலும் வருகின்ற திரியோதசி திதியில் சூரிய அஸ்தமனத்திற்கு மூன்றே முக்கால் நாழிகைக்கு முன்னிருந்து விண்ணில் நட்சத்திரங்கள் தோன்றும் வரை உள்ள காலம் (மாலை சுமார் 4.45 முதல் 6.30) பிரதோஷ காலமாகும். (அமாவாசை, பௌர்ணமி நாள்களின் முன்னே மூன்றாம் நாளில் பிரதோஷம் வரும்)

3. பிரதோஷ கால தரிசனம்

பிரதோஷ வேளையில் சிவபிரானுக்கும், நந்தி தேவருக்கும் நடக்கும் அபிஷேகம், அலங்காரம், தூப - தீப வழிபாடுகளைக் கண்டும் பின்னர் ரிஷப வாகனத்தில் அம்மையுடன் ஐயன் கூடிய சந்திர சேகர மூர்த்தியாய் அலங்கரித்து வேதபாராயணம் தேவாரப் பாடல்கள், மங்கல

வாத்தியங்கள் என்ற முறையில் மூன்று சுற்றுக்கள் சுற்றி வர வேண்டும். அல்லது இங்ஙனம் சுற்றி வரும்போது தரிசிப்பவர் பிரதோஷ கால முழுப் பயனையும் பெறுவர் என்பது உறுதி.

4. பிரதோஷ மகிமை

பிரதோஷ காலம் சூரியன் மறைவுடன் தொடங்குகின்றது. எல்லாம் வல்ல சிவ பரம்பொருளைத் தியானம் செய்து வணங்குதற்குரிய காலம் இதுவே. உலகம் ஒடுங்கும் மாலைப் பொழுதே இறைவனோடு நாம் ஒடுங்க நல்ல நேரமாகும்.

பிரதோஷ வேளையில் சிவபிரான் உலக சக்தி முழுவதையும் தன் வசம் ஒடுக்கி ஆனந்தத் தாண்டவம் புரியும் வேளையில் நாம் அவனைப் போற்றி வணங்கி நற்கதி அடைவோம்.

இவ்வேளையில் திருநீலகண்டப் பதிகம், நமச்சிவாயப் பதிகங்கள், சிவபுராணம், நஞ்சுண்ட தேவாரப் பகுதிகளைப் பாராயணம் செய்தல் சிறப்பு.

முவ்வகைப் பிரதோஷங்கள்

1. **உத்தமப் பிரதோஷம் :** சூரியன் உதயமானது முதல் மறுநாள் சூரிய உதயம் வரை திரியோதசி திதி இருந்தால் அந்நாள் உத்தமப் பிரதோஷம்.
2. **மத்திமப் பிரதோஷம் :** சூரியன் மறைந்த நேர முதல் மறுநாள் சூரியன் மறையும் வரை திரியோதிசி திதி இருந்தால் அது மத்திமப் பிரதோஷம் ஆகும்.
3. **அதமப் பிரதோஷம் :** சூரியன் மறைவிற்குப் பின்னால் திரியோதிசி வந்து மறுநாள் இருபத்தைந்து நாழிகைக்குள் இத்திதி மறையுமானால் அது அதமப் பிரதோஷமாம்.

நந்தி தேவர்

சைவ சித்தாந்த சாத்திர உபதேசம் செய்தருளிய சந்தான சாரியார்களுள் தலைவராவார் சிவபிரான். அவர் அருள் பெற்றவரே நந்தி தேவர்.

இப்பெருமான் திருக்கோயிலின் முன்னே யிருப்பதோடன்றி சிவபிரான் சந்நிதிக்கு நேர் முன்னாகவும் எழுந்தருளியிருப்பார். இவரிடம் முதலில் அனுமதி பெற்றே திருக்கோயிலுக்குள் செல்ல வேண்டும். கோயில் வழிபாடு முடிந்து இல்லம் செல்லும் ,பொழுது அந்நந்தி தேவரைக் கையெடுத்துக் கும்பிட்டு வணங்கி வரல் வேண்டும்.

இந்நந்தியம்பெருமான் பற்றிய பல செய்திகளைக் காண்போம்.

1. நந்தியெம்பெருமான் திருமணம்

பங்குனி மாத வளர்பிறை புனர்பூசநட்சத்திரத்தன்று நந்தியெம் பெருமானுக்கும் சுயசாம்பிகை தேவிக்கும் திருமழபாடியில் திருமணம் நிகழ்வுறும். இத்திருமணத்தை அத்தல மக்கள் தங்கள் இல்லத் திருமணமாக நினைத்து இன்றும் கொண்டாடி மகிழ்கின்றனர்.

2. நந்தி விலகி இருக்கும் தலங்கள் :

1. திருப்புன்கூர், 2. திருப்பூந்துருத்தி, 3. பட்டீஸ்வரம்

3. நந்தி இறைவனை நோக்காது இறைவன் பார்க்கும் திசையையே பார்க்கும் தலங்கள் :

1. திருவலம், 2. வடதிருமுல்லை வாயில்,
3. திருவோத்தோர் (செய்யாறு) 4. பெண்ணாடம், 5. திருவைகாவூர்.

4. நந்தி நின்ற திருக்கோலம் - திருமாற் பேறு (திருமால்பூர்)

5. நந்திக்குக் கொம்பு ஒடிந்த தலம் - திருவெண்பாக்கம்

6. நந்தி இறைவனுக்குப் பின்னும் உள்ள தலம்- திருக்குறுக்கை வீரட்டம்

7. நந்தியின் வாயிலிருந்து எப்பொழுதும் தண்ணீர் விழுந்து கொண்டிருக்கும் தலம் - திருவூறல் (தக்கோலம்) தற்பொழுது இல்லை.

8. நந்தி சங்கமத் தலம் - கூடலையாற்றூர், பவானி

9. நந்தி சற்று சாய்வு - திருப்பூவணம்.

10. நந்தி முகம் திரும்பிய தலம் - கஞ்சனூர்.

11. நந்தியின் உடல் துளைக்கப்பட்டுள்ள தலம் - திருவெண்காடு

தற்காலத்தில் காரைக்குடி அருகேயுள்ள வேந்தன்பட்டி சிவன் கோயிலுள்ள நந்திதேவரின் திருமேனியில் பசு நெய் நித்தமும் அபிஷேகம் செய்யப் பெறுகிறது. அவர் திருமேனியில் சார்த்தப் பெறும் நெய்யில் ஈ, எறும்பு, கொசு, புழு, பூச்சிகள் போன்ற எதுவும் இன்றளவும் நெருங்குவதில்லை. அம்மட்டோ! அந்நெய் எத்துணை நாட்கள் ஆனாலும் கெடாமல் இருப்பது அதிசயத்திலும் அதிசயம்.

சிவராத்திரி

1. மாதந்தோறும் வருவது மாத சிவராத்திரி : கிருஷ்ண பட்சம் சுக்கில பட்ச சதுர்த்தி தினங்களில் வருவது.

2. பட்ச சிவராத்திரி : தை மாதத்தில் கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் வருவது.

3. யோக சிவராத்திரி : சோம வாரத்தில் பகல் இரவு இரு பொழுது களில் அமாவாசை இருந்தால் யோக சிவராத்திரி.
4. ஆண்டுதோறும் மாசி மாதத்தில் கிருஷ்ணபட்ச சிவராத்திரியே மகா சிவராத்திரி.

அன்று சிவபூசை செய்வார் ஒன்று கூடி ஆலயத்திலும், தனித்தும் அவரவர்கள் இல்லங்களிலும் ஆறுகால பூசை செய்வர்.

சிவராத்திரியின் தொடக்கம் :

பாற்கடலைக் கடைய மேருவை மத்தாக்கி வாசுகியைக் கயிறாக்கி பண்டு பாற்கடலை தேவர்களும், அசுரர்களும் கடைய முதன் முதலில் ஆலகால நஞ்சு தோன்றியது. சிவபிரான் தானே அந்நஞ்சினை எடுத்து உண்டு உலகங்காத்தார். இச்செயலைப் போற்றும் முகத்தான் மூவுலக மக்களும் ஒன்றுகூடி தங்களின் அனைத்துப் பணிகளையும் விடுத்து சிவ பரம்பொருளைப் போற்றி, வ்ணங்கி வழிபாடாற்றினார். அன்று தொடங்கியதே சிவராத்திரியின் முதல் நாள்.

திருநீறு

ஆவின் சாணத்தின் மூலம் பெறப்படுவதே திருநீறு. மற்றயவை திருநீறு அன்று.

இத்திருநீறே மந்திரமாவது என்றார் திருக்காழி வள்ளல்.

(முன்பின் அறியாதார், சிவதீட்சை பெறாதார் போன்றோரிடம் திருநீறு பெறல் கூடாது. திருக்கோயில்களில் ஆதிசைவர்கள் தரும் திருநீற்றை அவர்கள் சிறாராய் இருப்பினும் பெறல் வேண்டும். மிகுந்த பக்தியுடன் இடக்கை கீழேயும், வலக்கை மேலுமாக வைத்து மிகுந்த பௌவியமாகப் பெற்று நெற்றியில் 'சிவ சிவ' எனக் கூறி பூசுதல் வேண்டும். வாயினால் கையிலுள்ள விபூதியை ஊதுதலோ கண்ட இடங்களில் தட்டுதலோ கூடாது. மிகுந்திருப்பின் கால்கள் படாத ஓரிடத்தில் வைக்கலாம்.)

எவ்வேளைகளிலெல்லாம் விபூதியை அணியலாம் எனப் பார்ப்போம்.

1. உறங்கச் செல்லும் முன் உறங்கி எழுந்த பின்னும்
2. காலைக் கடன் முடித்தபின்
3. நறுநீராடி இறைவனை வணங்கச் செல்லும் முன்
4. சூரியன் தோன்றும்பொழுதும் மறையும் பொழுதும்
5. உணவு அருந்தும்முன்
6. நல்ல பணிகள் செய்யத் தொடங்கும் முன்.

இத்திருநீற்றைத் தண்ணீரில் குழைத்துக் கிழக்கு முகம் நோக்கி நின்று 'சிவ சிவ' என்றோ திருநீற்றுப் பதிகத்தையோ ஓதிக் கொண்டு, (சைவ அனுட்டானமுள்ளவர் தங்கள் அனுட்டான முறையில்)

1. உச்சந்தலை, 2. நெற்றி, 3. மார்பு, 4. தொப்புள், 5. வலது முழந்தாள், 6. இடது முழந்தாள், 7. வலத்தோள், 8. இடத்தோள், 9. வலப்பக்க முழங்கை, 10. இடப்பக்க முழங்கை, 11. வலப்பக்க மணிக்கட்டு, 12. இடப்பக்க மணிக்கட்டு, 13. வலப்பக்க விலா, 14. இடப்பக்க விலா, 15. கழுத்து, 16. நாடிக்கு நேர் பின்புறம்

நெற்றியில் மார்பில் 6 அங்குலம் பிற இடங்களின் மூன்று அங்குலமும் இருத்தல் வேண்டும்.

ருத்ராட்சம்

ருத்தரனின் கண்களின்று இரக்கத்தால் விழுந்த கண்ணீர்த் துளிகளே ருத்ராட்சம் என்பர். இந்த ருத்ராட்சம் ஐந்து வகைப்படும். முற்றிய ருத்ராட்சத்தைத் தேனில் குழைத்துச் சாப்பிட தீராத காய்ச்சலும் நீங்கும். நன்கு முற்றிய ருத்ராட்சத்தில் செப்புக் காசினை வைத்தால் அது சுற்றும். இதற்குக் காரணம் ருத்ராட்சத்திலிருந்து வெளிப்படும் மின் சக்தியே யாம். அதனால் சான்றோர், சிவனடியார்கள் ருத்ராட்சம் அணிகின்றனர். ருத்ராட்சம் உடலில் பட்டுத் தேய்வதாலும், நீராடும் போது ருத்ராட்சத்தில் பட்ட தண்ணீர் உடல்மீது படுவதாலும் நல் ஆரோக்கியம் கிடைக்கிறது. இது பல முகங்களில் கிட்டும்.

1. வெண்ணிற மணி. 2. கயில நிறமணி (கருமை கலந்த பொன்நிறம்), 3. செந்நிறமாமணி, 4. பொன்னிறமணி 5. கருநிற மணி

சிவசின்னங்கள்

திருநீறு, ருத்ராட்சம், பணிவு, திருவைந்தெழுத்தினை உச்சரித்தல்

சிவன் கோயிலில் வழிபடும் முறை

திருநீறு அணிந்து, மேல்துண்டினை இடுப்பினில் சுற்றிக் கட்டி திருவைந்தெழுத்தினைக் கூறிக் கொண்டு நந்தியெம்பெருமானிடம் கோயிலினுள் செல்ல அனுமதி வேண்டி வணங்கி உட்செல்ல வேண்டும். தமிழ்த் திருமுறைகளைக் கூறிக் கொண்டே கொடிமரம் சென்று வணங்கிய பின் விநாயகரை வழிபட்டு, தலையில் குட்டிக் கொண்ட, தோர்ப்பிக் கரணங்கள் (தோர்பி - காது. காதுகளை கைகளாற் பிடித்துக் கொண்டு) போட்டுவிட்டு, கந்தன் சந்நிதி வணங்கி வழிபட வேண்டும். பின்னர் ஒவ்வொரு சந்நிதியும் சென்று வணங்கி இறைவன் சந்நிதி சென்று அமைதியாக நின்று வழிபட்டு, இறைவி, ஆடல் - வல்லான் சண்டிகே

சுவரர், கால பைரவர், நாயன்மார், நவக்கிரகங்கள் சந்நிதி சென்று பின்னர் கோயிலினை குறைந்தது மூன்று முறை வலமாக வந்து மீண்டும் கொடி மரம் அருகே வந்து நிலந்தோய வீழ்ந்து வணங்கி, சற்று நேரம் அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும். பின்னர் இல்லம் சென்று அங்கு அமர்ந்த பின்னர்தான் கால்களைக் கழுவ வேண்டும். (கோயிலினுள் கொடிமரம் அல்லாது வேறு எங்கும் கீழ் வீழ்ந்து வணங்குதல் கூடாது. ஆலயத்தில் அவன் பெருமையையே நினைக்க வேண்டுமல்லாது வீண் பேச்சுக்களைப் பேசுதலும், எண்ணங்களை அலைய விடுதலும் கூடாது). சண்டேசுவரர் மீது நூல் போடுவதும், கையைத் தட்டுவதும் பாவமாகும். (சிவலிங்கத்திற்கும் நந்திதேவருக்கும் இடையே போவதும், வருவதும் குற்றம்.) கைகளைக் கூப்பி; சூலுற்ற பெண்ணின் கால்களில் விலங்கு பூட்டப்பட்டு, தலையில் எண்ணெய்க்குடம் சுமந்து நடந்தால் எப்படி நடப்பாளோ அந்த முறையில் நடந்து வலம் வர வேண்டும்.

இறைவனும் ஐம்பூதமும்

	1. மணம்	2. சுவை	3. ஒளி	4. ஊறு	5. ஓசை
நிலம்	✓	✓	✓	✓	✓
நீர்	×	✓	✓	✓	✓
தீ	×	×	✓	✓	✓
காற்று	×	×	×	✓	✓
ஆகாயம்	×	×	×	×	×

இப்பண்புகள் இறைப்பண்புகள். இறைவன் இப்பண்புகளால் உள்ளான் என்கின்றது திருவாசகம்.

பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

இக்கருத்து அப்பர் பிரானின் திருக்கற்குடிப் பதிக 6ஆம் திருமுறை 3ஆம் திருத்தாண்டகத்திலும் காணப்படுகிறது.

சிவபிரானை வழிபட்டு உய்வு பெற்ற விலங்குகள், பறவைகள் போன்ற பிற உயிரினங்கள்

சிங்கம் - திருநல்லூர்
யானை - திருக்குற்றாலம், மதுரை, காளையார் கோவில், திருவானைக்கா, திருக்காளத்தி
காளை - திருவையாறு
பசு - ஆவூர், செய்யாறு, ஆவடுதுறை, கரூர், பட்டீஸ்வரம்

குதிரை	-	சீயாத்தமங்கை
ஆடு	-	திருவாடானை
பன்றி	-	சிவபுரம்
கழுதை	-	கரவீரம்
குரங்கு, அணில்,		
காகம்	-	குரங்கணில் முட்டம்
முயல்	-	திருப்பாதிரிப் புலியூர்
நாரை	-	நாரையூர், மதுரை
கரிக்குருவி	-	மதுரை, வலிவலம்
மயில்	-	மயிலாடுதுறை, மயிலாப்பூர்
கருடன் (ஜடாயு)	-	வைத்தீஸ்வரன் கோயில், சிறுகுடி
நண்டு	-	திருந்துதேவன்குடி, திருநீடூர்
வண்டு	-	ஸ்ரீசைலம், திருவண்டுறை, வாழ்கொளிபுத்தூர்
தேனீ	-	நன்னிலம்
ஆமை	-	திருமணஞ்சேரி
எறும்பு	-	திருவெறும்பூர்
பாம்பு	-	காளத்தி, திருப்பாம்புரம், குடந்தை, குடந்தைக் கீழ்க்கோட்டம்
சிலந்தி	-	ஆனைக்கா
எலி	-	திருமறைக்காடு
ஈ	-	ஈங்கோய் மலை

ஓம் (அ உ ம்)

அ எனும் எழுத்து வயிற்றுப் பகுதியிலிருந்து சக்தியுடன் எழுகிறது.
உ எனும் எழுத்து தொண்டையிலிருந்து எழுகிறது.
ம் எனும் மெய்யெழுத்து உதடுகளை மூடி முடித்து வைக்கின்றது.

தொடக்கம், இசை, முடிவு என்ற மூன்று நிலைகளைக் கொண்டது.

புற்றிலுள்ள பெருமானுக்கு ஆசொரிந்த பாலிடங்கள்

சுயம்புவாகப் புற்றினுள் இருந்த லிங்கப் பெருமானை அறிந்த ஆ தானே பால்சொரிந்த தலங்களில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் தலங்கள். அத்தலங்கள் பசுபதீச்சுரம் எனவும் அழைக்கப்படும்.

1. நேபாளத் தலைநகர் - காட்மாண்டு
2. கருவூர் ஆனிலை
3. திருப்பந்தனை நல்லூர்
4. திருக்கொண்டீச்சுரம்
5. ஆவூர்

பிரபலமாக வழங்கும் நவக்கிரகத் தலங்கள்

1.	திருநள்ளார்	-	சனி
2.	திருவெண்காடு	-	புதன்
3.	கஞ்சனூர்	-	சுக்கிரன்
4.	வைத்தீஸ்வரன் கோயில்	-	செவ்வாய்
5.	நாகேஸ்வரம்	-	இராகு
6.	கீழப்பெரும்பள்ளம்	-	கேது
7.	சூரியனார் கோவில்	-	சூரியன்
8.	ஆலங்குடி	-	குரு
9.	திங்களூர்	-	சந்திரன்

திருநெல்வேலி மக்கள் தங்கள் பகுதியைச் சுற்றியுள்ளதாகக் கூறப்படும் நவக்கிரகத் தலங்கள்

1.	ஸ்ரீவைகுண்டம்	-	சனி
2.	தென்திருப்பேரை	-	புதன்
3.	சேர்ந்தமங்கலம்	-	சுக்கிரன்
4.	கோட்ட நல்லூர்	-	செவ்வாய்
5.	குன்றத்தூர்	-	இராகு
6.	இராஜபதி	-	கேது
7.	பாபநாசம்	-	சூரியன்
8.	முறப்பநாடு	-	குரு
9.	சேரன்மாதேவி	-	சந்திரன்

புலியூர் என வழங்கப்படும் தலங்கள்

1.	பெரும்பற்ற புலியூர்	-	சிதம்பரம்
2.	திருப்பெரும்புலியூர்	-	திருநெய்த்தானம் அருகில்
3.	ஓமாம் புலியூர்	-	காட்டுமன்னார்குடிஅருகில்
4.	திருப்பாதிரிப் புலியூர்	-	கடலூர்
5.	திருஎருக்கத்தம்புலியூர்	-	இராஜேந்திரபட்டினம் (இன்றைய வழக்கு)

ஒரு பழைய புத்தகத்தில் (தாள் எடுத்தாலே கிழியும்) இருந்து பழம் பெரும் புலவர் திரு. அப்துல் கபூர் அவர்களின் ஓர் அருமையான பாடல். சமய ஒற்றுமைக்குப் பண்டியிருந்த ஒற்றுமை. பன்னிரண்டு ராசிகளை ஏழே சீரில் பாடிய அதி அற்புதம். அதனையே அப்படியே தருகின்றேன்.

7க்குள் 12

ஆடுசே வீணை அலவனரி பெண்துலைதேள்
நீடுவிற்சு ருக்குடம் னே (திரு. அப்துல் கபூர்)

ஆடு	-	மேஷம்	சே	-	ரிடபம்
வீணை	-	மிதுனம்	அலவன்	-	கடகம்
அரி	-	சிம்மம்	பெண்	-	கன்னி
துலை	-	துலாம்	தேள்	-	விருச்சிகம்
வில்	-	த்னுசு	சுரு	-	மகரம்
குடம்	-	கும்பம்	மீன்	-	மீனம்

நம்நாட்டில் நிகழ்வுறும் பிரபலமான விழாக்களும் அவை நடைபெறும் இடங்களும்

திருவாதிரை	-	சிதம்பரம், ல்ால்குடி
சித்திரைத் திருவிழா	-	மதுரை
மகாமகம்	-	கும்பகோணம்
பூசம் (தை)	-	பழநி, வடலூர்
அமாவாசை	-	கோடிக்கரை, பூம்புகார், இராமேஸ்வரம்
ஆடிப்பூரம்	-	இராமேஸ்வரம்
பங்குனி உத்திரம்	-	திருப்பரங்குன்றம்
கார்த்திகை தீபம்	-	திருவண்ணாமலை
சனிப்பெயர்ச்சி	-	திருநள்ளார்
குருப் பெயர்ச்சி	-	ஆலங்குடி, திட்டை
கந்த சஷ்டி	-	திருச்செந்தூர்
நந்திதேவர் திருமணம்	-	திருமழபாடி
வைகுண்ட ஏகாதசி	-	ஸ்ரீரங்கம்

விளக்கின் ஐந்து முகங்கள்

1. அன்பு
2. அறிவு
3. உறுதி
4. நிதானம்
5. பொறுமை

அந்தக்காலக் கணக்கு

இயல்பாக கை விரல்களால் ஏற்படும் 'சொடக்' அல்லது கண் இமைக்கும் காலமே மாத்திரை.

இம் மாத்திரை அளவினை காஷ்டை என்பர்.

30 காஷ்டை	-	1 கலை
10 கலை	-	1 நாழி
1 நாழி	-	24 நிமிடங்கள்
2 நாழி	-	1 முகூர்த்தம்
ஒரு வினாடி	-	3.75 காஷ்டைகள் உள.

ஔவைக் கிழவி நம் கிழவி, அமிழ்தின் இனிய சொற்கிழவி இத்தமிழ்க் கிழவி கூறிய ஒரு பாடல் விநாயகர் வணக்கம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலரால் நோக்கு உண்டாம் மேனிநுடுங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

இப்பாடலுக்கு மேலெழுந்தவாரியான பொருள்

யானை முகத்தவனைத் தப்பாமல் என்றும் வணங்கி வருபவர் களுக்கு நல்ல வாக்கு, நல்ல மனம், இலட்சுமி தேவியின் நல்ல பார்வை ஆகிய இம் மூன்றும் கிட்டும்.

இப்பாடலில் மறைந்துள்ள மற்றொரு பொருளையும் காண்போம். நீண்ட நாள் வாழ்தற்குரிய அருமருந்தான காயகல்பம் செய்யும் முறையைப் பாட்டி கூறுகின்றார்கள்.

1. துப்பார்திருமேனி - திரு அடைமொழி. துப்பு - குப்பை மேனி. இச்செடி எங்கும் முளைத்திருக்கும்.
2. தும்பிக்கையான் பாதம் - ஆனைநெருஞ்சி
3. மாமலர் - தாமரை

குப்பைமேனி இலை, ஆனைநெருஞ்சி இலை, ஓரிதழ் தாமரை இவற்றைச் சம அளவில் எடுத்து பனங்கற்கண்டு, பசுநெய், தேன் ஆகிய மூன்றுடன் சேர்த்துச் செய்ய கிடைப்பதே காயகல்பம். இம்மருந்தை உண்டால் நல்ல வாக்கு வன்மை பெறும். நல்ல மனம் உண்டு (உடலில் எந்த இடையூறும் வராது.) நல்ல நோக்கு - நல்ல பார்வை கிட்டும், மேனி நுடங்காது - உடல் தொய்வு ஏற்படாது.

எனவே இரண்டிற்கும் வழிகாட்டிய ஔவையாரைப் போற்றி வாழ்வோம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்து மூன்று நாயன்மார்கள் படங்கள்



1. சுந்தரர்



2. திருநீலகண்டர் யாழ்பாணர்



3. இயற்பகையார்



4. இளையான் குடிமாறர்



5. மெய்ப்பொருள் நாயனார்



6. விறன்மீண்ட நாயனார்



7. அமர்நீதி நாயனாா



8. எறிபத்தர்



9. ஏனாதிநாதர்



10. கண்ணப்பர்



11. குங்குலியக்கலயர்



12. மானக்கஞ்சாறர்



13. அரிவாட்டயர்



14. ஆனாயர்



15. மூர்க்கிநாயனார்



16. முருகநாயனார்



17. உருத்திரபசுபதி



18. திருநாளைப்போவார்



19. திருக்குறிப்புத்தொண்டர்



20. சண்டேசுவரர்



21. திருநாவுக்கரசர்



22. குலச்சிறையார்



23. பெருமிழைக் குறும்பர்



24. காரைக்கால் அம்மையார்



25. அப்பூதியடிகள்



26. திருநீலக்கர்



27. நமிநந்தியடிகள்



28. திருஞானசம்பந்தர்



29. ஏயர்கோன் கலிகாமர்



30. திருமூலநாயனார்



31. தண்டியடிகள்



32. திருநீலகண்ட நாயனார்



33. மூர்க்கர்



34. சோமாசிமாறர்



35. சாக்கியர்



36. சிறப்புலிநாயனார்



37. சிறுத்தொண்டர்



38. கழறிற்றறிவார்



39. கணநாதர்



40. கூற்றுவநாயனார்



41. புகழ்ச்சோழர்



42. நரசிங்க முனையரையர்



43. அதிபத்தர்







46. சத்திநாயனார்



47. ஐயடிகள் காடவர்கோன்



48. கணம்புல்லர்



49. காரிநாயனார்



50. நெடுமாற நாயனார்



51. வாயிலார்





53. கழற்சிங்கர்



54. இடங்கழிநாயனார்



55. செருத்துணை நாயனார்



56. புகழ்த்துணை நாயனார்



57. கோட்புலி நாயனார்



58. பூசலார் நாயனார்



59. நேச நாயனார்



60. மங்கையர்க் கரசியார்




61. காச்செங்கட் சோழர்



62. சடைய நாயனார்



63. இசைஞானியார்


சகுந்தலை நிலையம்